# சிறப்பு மலர்




175 ஆவது

ஆண்டு நிறைவு

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 175 ஆவது ஆண்டு நிறைவு

# மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

# 2007

## யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



மல்லாகம் பதியில் ஆரம்பக் கல்விக் கூடமாகத் திகழும்
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய அன்னையின் 175 ஆவது
ஆண்டின் நிறைவை எண்ணி மகிழ்வுறுகின்றோம். எண்ணிறைந்த
கல்விமான்களையும், சமூக சேவையாளர்களையும் உருவாக்கித்
தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று விளங்கும் எமது
அன்னையின் சிறப்பினையும் வரலாற்றினையும் ஆவணப்படுத்தும்
நோக்குடன் இம்மலரினை மல்லாகம் பழம்பதி விநாயகரின் பாதார
விந்தங்களை வணங்கி பாடசலையில் எழுந்தருளியிருக்கும்
சித்திவிநாயகரினதும் கல்விக்கு அதிபதியாம் கலைவாணியினதும்
அருட்கடாட்சம் வேண்டி அவர்தம் பாதக்கமலங்களுக்கு
இம்மலரினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**175 ஆவது ஆண்டு மலர்**
**வெளியீட்டுக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் மகுட வாசகம்

### "கல்வியே கருந்தனம்"

**நோக்கக் கூற்று**

எல்லோருக்கும் கல்வி என்ற அரசின் கொள்கைக்கு அமைவாக நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எழுகின்ற பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடிய வகையில் சிறந்த மனிதனாக வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுதல்.

**பணிக்கூற்று**

பெற்றோர்களின் அபிலாசைகளுக்கும், பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கும் ஏற்ற வகையில் கல்வி அதிகாரிகளினதும் சுற்றுநிருபங்களினதும் வழிகாட்டலுக்கு அமைவாக பாடசாலையில் உள்ள வளங்களின் மூலம் உச்சப்பயன்களைப் பெறத்தக்க வகையில் திட்டமிடுவதுடன் மேலும் தேவையான வளங்களைப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் நிறுவனங்கள் மூலம் ஒருங்கிணைத்து முறையான பாடவிதானத்தினூடாகவும், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வாழ்க்கை வளம்பெறத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



### திரு.மாணிக்கம் ஆனந்தகுமார்
B.A, Dip.in.Edu.,
S.L.P.S 2-II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்த்திடுவோம் எங்கள் வண்டமிழ்ச் சாலையை
வளர் இளம் சிறுவர் நாம் கூடி
அருளொடு விளங்கிடும் ஐங்கரனைத் தினம்
அன்புடன் நாம் என்றும் துதிப்போம்
பெருமைகள் அளித்திடும் பெற்றோரைப் பேணியே
பெரியோர்கள் மனங்களில் நிற்போம்.

(வாழ்த்திடுவோம்)

பல்கலை ஓங்க நற்பண்புகள் வளர்ந்திடப்
பாலர்கள் நாம் இங்கு நல்
கல்வியைக் கனிஷ்ட வித்தியாசாலையில்
களிப் பொடு கருத்தினிற் கொள்வோம்.

(வாழ்த்திடுவோம்)

மல்லாக மக்களின் மனங்களில் உறைந்திடும்
மழலை நற் செல்வர்கள் நாமே
பல்லாண்டு காலங்கள் பாரினிற் சிறந்த நற்
பயன்பெற மகிழ்வுடன் உழைப்போம்.

(வாழ்த்திடுவோம்)

வாழிய வாழிய எங்கள் நற்கழகம்
வாணியின் அருளுடன் நீடு
வளர தமிழ் கலை வளம் பொங்கி
வாழிய எங்கள் கலைத்தாய்
வாழ்க வாழ்க வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே!

முத்து.....

அன்னை மடியில் அரவணைத்து - பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி - உள்ளத்தில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்.

முத்து ....

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

முத்து....

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே - நல்ல
கட்டுப் பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணியேற்ற - ஞாலம்
போற்றும் சமுகத்தை நாம் படைப்போம்.

முத்து.....

இயற்றியவர்
சங்கீதபூஷணம் பொன். வாமதேவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்த ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா வுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துமே.

மனோன்மணீயம்
பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்க்குழு உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 175 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டுக் குழு

| | |
|---|---|
| காப்பாளர்: | சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்<br>(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) |
| துணைக்காப்பாளர்கள்: | திரு. மு. அருளையா அவர்கள்<br>(இளைப்பாறிய அதிபர், யா/மல்லாகம் கனிஷ்டவித்தியாலயம்)<br>திரு.மா.ஆனந்தகுமார் அவர்கள்<br>(அதிபர், யா/மல்லாகம் கனிஷ்டவித்தியாலயம்)) |
| தலைவர்: | திரு.சீ. அமரசிங்கம் அவர்கள்<br>(ஆசிரியர்) |
| உபதலைவர்: | திரு. அ. இரத்தினசிங்கம் அவர்கள்<br>(இளைப்பாறிய பிரதி அதிபர், யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்) |
| செயலாளர்: | திரு.சி. சிவனேஸ்வரன் அவர்கள் (ஆசிரியர் ) |
| உபசெயலாளர்கள்: | திரு வ. மதிவண்ணன் அவர்கள்<br>(பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்)<br>திரு. பொ. சுகீந்திரன் (பழைய மாணவர் சங்கச் செயலாளர்) |
| பொருளாளர் | செல்வி த. ஜெயரதி அவர்கள்<br>(ஆசிரியர், பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பொருளாளர்) |
| உபபொருளாளர் | திரு. சி. விக்னராஜா அவர்கள்<br>(இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர்) |
| மலராசிரியர் | திருமதி தவனேஸ்வரி சிவகுமார் அவர்கள் (ஆசிரியர்) |
| துணை மலராசிரியர்கள் | செல்வி ஞானலக்சுமி நமசிவாயம் அவர்கள்<br>(இளைப்பாறிய ஆசிரியை)<br>திரு. மு. தேவகுமார் அவர்கள்<br>(பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர்) |
| உறுப்பினர்கள் | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய ஆசிரியர்கள் |
| ஆலோசனையும் வழிகாட்டலும் | பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்களாக.....


| | | |
|---|---|---|
| 1) | ஆசிச் செய்திகள் | 01–42 |
| 2) | அதிபர் அறிக்கை | 43–50 |
| 3) | பாடசாலையின் வரலாறு | 51–58 |
| 4) | அதிபர்கள் வரிசையிலே | 59–62 |
| 5) | கல்வி | 63 |
| 6) | கல்வியின் நோக்கமும் சமுதாயத் தொண்டும் | 64–67 |
| 7) | கலைஞர்களது உணர்வுகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ள அஜந்தாக் குகை ஓவியங்கள் | 68–72 |
| 8) | விழுமியக் கல்வி | 73–76 |
| 9) | ஆரம்பக்கல்வித்துறையை எமது பிரதேசத்தில் வளர்ச்சியுறச் செய்வதற்கான பிரயோகங்கள் | 77–80 |
| 10) | மார்பகப் புற்றுநோய் | 81–84 |
| 11) | கல்வியில் மாற்றங்களும் இற்றைப்படுத்தலும் | 85–88 |
| 12) | காசுப்பாய்ச்சல் கூற்று | 89–98 |
| 13) | சரித்திரப் பேரறிஞர் திரு.வி.கனகசபைப்பிள்ளை அவர்கள் | 99–100 |
| 14) | வாழ்நாள் முழுவதும் கல்வி | 101–105 |
| 15) | ஊரும் சதமல்ல உற்றுப்பெற்ற பேரும் சதமல்ல | 106–108 |
| 16) | ஆரம்பக் கல்வியும் அதன் நோக்கமும் | 109–110 |
| 17) | திருந்திய உள்ளம் | 111–113 |
| 18) | ஆசிரிய வாண்மை | 114–123 |
| 19) | கல்வி வாழ்க்கைக்காக: சீவியத்திற்காக அல்ல | 124–126 |
| 20) | உடற்பயிற்சியின் முக்கியத்துவம் | 127–128 |
| 21) | மாணவனது பூரண வளர்ச்சியிற் பாடசாலையின் பங்கு | 129–133 |
| 22) | கலைத்திட்டச் செயற்பாட்டினூடாக மாணவனின் வாசிப்புத்திறனை வளர்த்தெடுக்கலாம் | 134–135 |
| 23) | பாடசாலைகளில் நூலகங்களின் பயன்பாடு | 136–137 |
| 24) | ஒரு நல்லாசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள் | 138–140 |
| 25) | இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்ப, இடைநிலைப் பாடசாலை மட்டக் கலைத்திட்டமும் அபிவிருத்தியும் | 141–144 |
| 26) | தகவல் தொழில் நுட்பத்தின் இணையம் | 145–146 |
| 27) | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயக் கலைமகள் முன்பள்ளியின் தோற்றமும் வளர்ச்சியும் | 147–149 |
| 28) | ஒழுக்கமும் கல்வியும் | 150–151 |
| 29) | மாணவர் ஆக்கங்கள் | 152–170 |
| 30) | 2007ஆம் ஆண்டில் தரம் ரீதியாக முதன்மை நிலை பெறும் மாணவர்கள் விபரம் | 171 |
| 31) | சாதனை வீரன் | 172 |
| 32) | புலமைப் பரிசில் பரீட்சை | 173–174 |
| 33) | பாடசாலையின் சங்கங்கள் | 175 |
| 34) | பாடசாலை அதிபர்களின் சேவை விபரம் | 176 |
| 35) | ஆசிரியர் குழாம் –2007 | 177–178 |
| 36) | பாடசாலை வரைபடம் | 179–180 |
| 37) | நன்றிகள் | 181–182 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

*"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்"*

கல்வியில்லாதவன் கண்ணில்லாதவனென ஆன்றோர் கூறியுள்ளனர். கல்வி கற்பது ஞானத்திற்கேதுவான அறிவு வளர்ச்சிக்கே என்பது உ.வே.சுவாமிநாதையரது வாதம். கல்விக்குகந்தவையாகப் பெறும் நூல்கள் சொல்நயம், பொருள்நயம்படத் தக்கதான தரவுகளே கூடியிருத்தல் வேண்டும். ஓர் குறிக்கோளையடைவதற்கான கல்வி, காலத்தால் மறைந்துவிடும். எனவேதான் இயற்கையோடு இணைந்து, சமய வழிபாட்டுடன் கூடிய கல்விதான் நிலைத்து நிற்குமென்பது ததீசி முனிவரது கூற்று. அப்போதுதான் மனிதன் மனிதனாக வாழவும், ஒழுக்கசீலராக உலாவவும் ஏதுவாகுமெனப் பல ரிஷிவர்க்கங்கள், உபநிஷதங்கள் மூலம் அறியத்தருகின்றார்கள்.

சிறப்போடு வாழ்வை உயரிய அந்தஸ்த்தில் உயர்த்திவிடவே கல்விக்கூடங்கள் மனிதர்கட்காக எழுந்தன. இத்தகைய கல்லூரிகளில் முன்பு, கம்பரையும், வள்ளுவரையும், அகநானூறு – புறநானூறு எனும் தொகை நூல்களையும், சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் காப்பியங்களையும், இதிகாச புராணங்களையும், நீதிநூல்களையும், ஆரம்ப நிலையிலிருந்து படிப்படியாகச் சிறார்கட்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்து, காலஞ்செல்லச்செல்ல, தகுந்த பெருமகனாக மனிதன் உயர்வு பெற்றுப் பேரறிஞனாக வாழவும் உதவுகின்றன. ஸ்கந்தவரோதயாக்கல்லூரி. இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி மற்றும் பிற பல கல்லூரிகளில் இவ்வாறு செயற்பட்டதனால்தான் ஏராளமான அறிஞர்கள் இன்றும் வாழ்வை நேர்சீராக்கி உலகிற்கோர் உதாரண புருஷர்களாக வலம் வருகிறார்கள். இந்த வரிசையில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமும் சிறார்களை மேற்கூறிய பண்பாடுகளோடு இணைந்துகொண்டு கல்வியைக் கற்பதற்கு உறுதுணை புரிவதை அவதானிக்க முடிகிறது. இவ்வித்தியாலய மாணவமாணவிகள் வித்தியாலயத்திற்குப் போகும்போதும், அங்கிருந்து திரும்பும்போதும், அவர்களது நடைஉடை பாவனை, ஒழுங்குகள் யாவும் மெச்சத்தக்கன. ஆலய வாசலிற்கூட ஓர்கணம் நின்று தரிசித்துவிட்டே போகிறார்கள். இச்சிறார்களிடம் சிலவேளைகளில் யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாஷிப்பதுமுண்டு. அழகாகவும், சுருக்கமாகவும் பதில் தருவார்கள். இவ்வாறெல்லாம் பழக்கத்தில் வரஉதவிய நல்லாசிரியர்களை உண்மையிற் போற்றவே வேண்டும்.

175 ஆம் ஆண்டு நிறைவுவிழா நிகழும்போது, ஆசிரியர்களது துணைகளோடு நல்லறம் வளர்க்கும் சிந்தனைக்கேற்ப, கல்விமூலம் பாண்டித்தியம்பெற்று மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மாணவமாணவிகள் ஈழநாட்டின் மேதைகளாக விளங்கவேண்டுமென யான் ஆசீர்வதித்து, இதற்காக மாவைக் கந்தனிடமும் பிரார்த்திக்கின்றேன்.

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீன கர்த்தா - பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

பெருமைமிக்க வலிவடக்குப் பிரதேசத்தில் மல்லாகம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் தனது 175 ஆவது ஆண்டு நிறைவு மலரினை வெளியிடுவதையும், பரிசளிப்பு விழாவினையும் கொண்டாடுவதையிட்டு நான் ஆனந்தமும், பெருமையும் அடைகிறேன்.

மல்லாகம் என்னும் கிராமத்திற்கு தனது நீண்ட அயராத உழைப்பினால் பெருமைசேர்க்கின்ற ஒரு கல்விச்சாலையாக இப்பாடசாலை விளங்கி வருகின்றது. அமெரிக்க மிஷனரிமார்களால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கிறிஸ்தவ தமிழ்ப் பள்ளிகளில் ஒன்றாக இப்பாடசாலை விளங்குவது மேலும் இப்பாடசாலைக்குப் பெருமையினைக் கொடுக்கின்றது.

சிறு கொட்டிலில் ஒரு சிறுதொகை மாணவர்களுடனும், ஒரு சில ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று பல்வேறு வளங்களைக் கொண்டு விளங்குவதற்குக் காரணம் எல்லோரதும் உழைப்பாகும்.

ஒரு கட்டிடத்திற்கு நல்ல அடித்தளம் எவ்வளவு முக்கியமோ அதேபோல் கல்வி பயிலும் மாணவர்களிற்கு நல்ல அடித்தளத்தினையிட்டு வருடா வருடம் புலமைப்பரீட்சைப் பெறுபேற்றுக்கும், மற்றும் ஏனைய பெறுபேற்றுக்கும் அடித்தளம் இட்டுக்கொண்டிருக்கின்ற, வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் பாராட்டி நிற்கிறேன்.

தொடர்ந்தும் இவர்கள் யாவரும் அர்ப்பணிப்புடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட்டு சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தொடர்ந்து நற்பிரஜைகளையும், நற்பண்புள்ள கல்விப்பரம்பரையையும் உருவாக்க வேண்டும் என்றும், இவ்வுணர்வு பூர்வமான, நெஞ்சைவிட்டு அகலா நிறைவு மலரினை வெளியிடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது இறையாசிகளை வேண்டி நிற்கிறேன்.

அருட்திரு. ம. கான்ஸ்போவர்,
பங்குத்தந்தை,
(புனித சவேரியார் ஆலயம்
குளமங்கால், மல்லாகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

எங்கள் யாழ் மண்ணில் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தவர்களை நாம் மறக்க முடியாது. இன்று யாழ் குடாநாட்டுக்குள்ள ஒப்பற்ற ஒரு பெருமை கல்வியின் சிறப்பினாலேயே நிலை பெற்றிருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியிலே மிகக் கண்ணியமாகப் பேணப்பட்டது பாடசாலைகளும் கல்லூரிகளும் ஆகும். இந்த வகையில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் யாழ் மண்ணில் முதன்மை பெறுகிறது. குறிப்பிட்டுச் சொன்னால் இங்கு ஆரம்பக் கல்வி கற்றவர்கள் பலர் கடந்த காலங்களில் எங்கள் மண்ணை அலங்கரித்துள்ளார்கள். பணிவாக நானும் அறியத் தருவது இப்பாடசாலைதான் எனது ஆரம்பக் கல்விக்கு அடித்தளமாக அமைந்தது. கல்வியையும் கற்பித்தலையும் உயிராக நேசித்த ஆசிரியப் பெருமக்கள் சிலரை என்றும் என் உள்ளத்தில் இருத்தி வழிபடுகிறேன். இந்த நினைப்பு வளர்ந்து கொண்டே போகிறது. வலிகாமம் வடக்கில் தரம் உயர்ந்த ஒரு ஆரம்ப பாடசாலையாக இது விளங்குவது குறிப்பிடத்தக்கது. வழிபாட்டுத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும், கல்வித்துறையிலும் மிகவும் அக்கறை காட்டி வருகின்ற இன்றைய அதிபரையும், ஆசிரியர்களையும், பாடசாலைச் சமூகத்தையும் மனமுவந்து பாராட்டுகிறேன். மேலும் இந்நிலை நீடிக்க வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P

தலைவர்,

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பழமையும் பெருமையும் மிக்க யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1832 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல சான்றோர்களை உருவாக்கி, பெருமையுடன் விளங்குகிறது. அன்றுதொட்டு இன்று வரையும் அளப்பரிய கல்விச்சேவையைச் சமூகத்திற்கு வழங்கி வருவதுடன் மல்லாகம் பிரதேசத்தில் சிறந்ததொரு ஆரம்பப் பாடசாலையாக விளங்குகிறது.

இவ் வித்தியாலயத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அதிபரும் தங்களின் சேவையை மதித்துக் கடமையுணர்வுடன் செயலாற்றும் ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள். வித்தியாலயத்தின் பழையமாணவர்களும், நலன் விரும்பிகளும் காட்டும் அக்கறை பாடசாலையின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைகின்றது. மலரினை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ள அதிபர் திரு. மா. ஆனந்தகுமார் அவர்களும், மலர் வெளியீட்டுக்குழுவினரும் பாராட்டுக் குரியவர்கள்.

175ஆவது ஆண்டிற் காலடி பதிக்கும் இவ்வித்தியாலயம் சகல வளங்களும் பெற்றுக் கல்விச் சேவையில் தலைசிறந்த பாடசாலையாக மிளிர்ந்து சாதனைகள் பல படைக்கவேண்டுமென வாழ்த்தி, இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.ப.விக்னேஸ்வரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப்பணிமனை.
வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மல்லாகம் பகுதியிலேயே முதலாவதாகக் கல்விப்பணியாற்ற 1832 ஆம் ஆண்டில் 10 மாணவர்களுடன் ஆரம்பமான இப்பாடசாலையானது இன்று சுமார் 230 மாணவர்களுக்குக் கல்விப் பணியாற்றும் அறிவுக் களஞ்சியமாக இருப்பதையிட்டு மனதாரப் பாராட்டுகின்றேன்.

இப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு இந்நிலைக்குத் தரமுயர்த்திய கடந்தகால அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகளை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

175 ஆண்டு காலக் கல்விப்பணியில் பல நற்பிரஜைகளை உருவாக்கிய இக் கல்வி நிலையமானது தொடர்ந்தும் பல கல்விமான்களை உருவாக்கிடவும் இப்பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள், கல்விகற்கும் மாணவர்கள், பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டுவரும் பாடசாலைச் சமூகத்தினரின் எதிர்கால நல்வாழ்வுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

திரு.க. முரளிதரன்.
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் தனது கல்விப்பணியில் 175 ஆவது அகவை நிறைவை ஒட்டி வெளியிடப்படுகின்ற மலர்வெளியீட்டுக்கு எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சமூகம்சார் கலை, கலாச்சார விழுமியங்களைக் கலந்து, ஆரம்பக் கல்வி அறிவூட்டி, தூர நோக்கு, விசாலமான சிந்தனைத் திறன், பன்முகப் பார்வைத்திறன், ஆன்மீக ஒழுக்க மரபுசார் விழுமியங்களின் கட்டுக் கோப்புக்களை அடையாளம் காணல், போன்ற ஆளுமைப் பரிமாணங்களுக்குரிய அடித்தளத்தை மாணவர்களின் இளமைப்பருவப் புத்தெழுச்சி பொங்கி, பிரவாகிக்கின்ற, பிஞ்சு உள்ளங்களில் விதைத்து அதன் தொடர்வளர்ச்சிகள் ஏனைய இடைநிலைப் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்களில் பெறுபேறுகளை வெளிக்கொணர்வதற்கும், அவர்களின் ஆற்றுகைத் திறன்கள், வெளிப்பாட்டுத்திறன்கள், இயைபாக்கத்திறன்கள், சமூகமட்டத்திற்குள் மடங்கிப் போகாமல் தேசிய, சர்வதேச மட்டத்திற்கு வியாபித்துச் செல்வதற்குரிய கலங்கரை விளக்காக இப்பாடசாலை செயற்பட்டு வந்துள்ளது என்றால் மிகையாகாது.

நீண்டநெடிய கல்விப் பயணத்தில் பழையமாணவர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் தற்போதைய மாணாக்கர்களின் நெஞ்சங்களில் இப்பாடசாலை பதித்த தடங்களின் வெளிப்பாடுகளைத் தாங்கி, இம்மலர் வெளிவருவது கல்வி அன்னைக்குப் புகழ்சூட்டும் மலர்மாலை ஆகும்.

சமகால நிகழ்வுகள் மக்களின் வாழ்வாதார அம்சங்களில் சீர்குலைவுகளை ஏற்படுத்தியுள்ள போதிலும், தனது வரலாற்று நிகழ்வின் மைல்கல் நிகழ்வினை ஒத்திப்போடாமல் மலர் ஆக்க முயற்சியினை செவ்வனே நிறைவேற்றுவதில் பங்குபற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள் உட்பட, இப்பாடசாலைசார் கல்விச் சமூகத்தினர் அனைவருக்கும் இறைவனின் நல்லாசிகள் கிட்டுவதாக.

திரு.சு. சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
கல்வி நிர்வாகம்,
வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

வித்தியாலயங்கள் தேவாலயங்களுக்கு அண்மித்திருக்கும்போது சிறாரின் கல்வி "பண்பு பொதிந்ததாய்" அமையும் எனச் சான்றோர் உணர்ந்தமையாலேயே அநேக பாடசாலைகள் ஆலயங்களுடன் இணைந்து செயற்பட்டன; வளர்ந்தன.

அவ்வகையில் மல்லாகம் பழம்பதி விநாயகரின் அரவணைப்பில் வளர்ந்துவரும் வித்தியாலயங்களில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

இன்று பாடசாலையின் வளாகம் புதுப்பொலிவுடன் பற்பல இடமெங்கும் கல்வித்தேவியின் ஒளிவீசும் அமைப்புக்களுடன் விளங்குகிறது. இது பிள்ளை நேயப்பாடசாலைக்கு மெருகூட்டும் ஒரு செயலாகும். இச் செயற்பாடு சிறார்களைக் கவர்ந்து கற்றற் செயற்பாட்டினைத் துரிதப்படுத்தும் கடந்தகாலக் கல்வி, இணைப்பாடச் செயற்பாட்டுப் பெறுபேறு இதற்கான சான்றாகும். 175ஆவது ஆண்டைக் கொண்டாடும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் மேலும் பல சிறப்புக்களைப் பெறவேண்டும். அவற்றை எப்போதும் பெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதற்காக அயராது உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரையும் இம் மலரினை வாழ்த்தும் வேளையில் மனதார வாழ்த்துகிறேன்.

திரு. ச. கைலாசநாதன்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175 ஆம் ஆண்டு நிறைவுப் பெருவிழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். 1832 ஆம் ஆண்டு அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்ற பெயரில் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்விக்கூடம் இன்று பல்துறையிலும் வளர்ச்சிபெற்று கம்பீரப் பொலிவுடன் மிளிர்கின்றது. இவ்வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவமணிகள், பெற்றோர்கள் இந்த வேளையில் பாராட்டப்பட வேண்டியவர்கள். 2005 ஆம் ஆண்டு தொட்டு சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவனத்தின் அனுசரணையுடன் பிள்ளை நேயப்பாடசாலைத் திட்டத்தின்கீழ் நாங்கள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை இங்கு மேற்கொண்டோம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சமூகப் பங்களிப்புடன் அவை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. இந்த நீண்டகால வளர்ச்சியில் இவையும் ஒரு மைல் கல்லாக அமைந்தது என்று நினைவு கூரும்போது அது எனக்கு மிகுந்த மன நிறைவைத் தருகின்றது.

உட்கட்டுமான வளர்ச்சி மட்டுமன்றி வகுப்பறைகளிலே பிள்ளைகளின் கல்வித்திறனும் வளர்ச்சி கண்டு வருகின்றது. பரீட்சைப் பெறுபேறுகள் இவற்றைப் துல்லியமாக எடுத்து இயம்புகின்றன. இன்று பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவர்கள், எதிர்காலத்தில் கல்வி கற்கப் போகின்ற மாணவர்கள் அனைவரினதும் பிரகாசமான நல்வாழ்வுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுடன், இக்கல்விக்கூடம் மேன்மேலும் வளர்ச்சிபெற்று பிரகாசிக்க எனது இனிய நல்வாழ்த்துக்கள்.

டாக்டர். அ. பேரின்பநாதன்.<br>
*திட்ட முகாமையாளர் (கல்வி),*<br>
*சிறுவர் பாதுகாப்பு இலங்கை (நிறுவனம்),*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

மல்லாகம் கிராமத்தின் மத்தியில் அமைந்து, இளம் உள்ளங்களின் அறிவுக் கண்களுக்கு ஒளியூட்டும் நிலையமாக "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதற்கிணங்க, மானிட வாழ்க்கைக்கு வளமூட்டும் நல்ல கல்விப் பணி செய்துவரும், நீண்ட வரலாற்றுப் பெருமைமிக்க ஓர் ஆரம்பப் பாடசாலைதான் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

இவ் வித்தியாலயத்திற் கல்வி கற்ற பலர் இன்று பல்வேறு அரச, தனியார் நிறுவனங்களில் உயர் பதவியில் இருப்பதும், நற்பிரஜைகளாக வாழ்வதும், இப் பாடசாலையின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அரும்பணியாற்றிய அதிபர்களும், ஆசிரியர்களும் போற்றப்பட வேண்டியவர்கள்; நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

இன்றைய சூழ்நிலையில் பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியில், தற்போதைய அதிபர், திரு. மா. ஆனந்தகுமார் அவர்களின் அர்ப்பணிப்பும், தெளிந்த சிந்தனையும் கொண்ட வழிநடத்தலில், இப்பாடசாலை பல்வேறு வழிகளிலும் முன்னேறி வருகின்றது. பௌதீக வசதிகள் பெருகியுள்ளன. மாணவர் தொகை அதிகரித்துள்ளது; கல்வி அடைவுகள் உயர்ந்துள்ளன; புலமைப் பரிசிற் பெறுபேறுகள் அதிகரித்துள்ளன. பன்முக ஆளுமை கொண்டவர்களாக மாணவர்கள் உருவாக்கப் படுகின்றனர். ஆசிரியர்கள் மனநிறைவோடு நிறைவான பணிசெய்கின்றனர்.

இந்நிலையில் தமது 175 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதும், அதனை ஒட்டி இம்மலரை வெளியீடு செய்வதும் பொருத்தமானதே. இதற்காக அயராது உழைக்கும் அதிபரையும், தோளோடு தோள் நின்று உழைக்கும் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும் பாராட்டுகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

திரு.சி. மாதவகுமாரன்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி)
வலிகாமம் கல்வி வலயம், மருதனார் மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வலிகாமம் கல்விவலயத்தில் 175ஆவது நிறைவு விழாக்காணும் யா /மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திற்கு ஒரு மகத்தான தனித்துவம் உண்டு. அதனைப் பேணிப்பாதுகாக்கும் பெருமை அதிபர், திரு. மா. ஆனந்தகுமார் அவர்களையே சாரும். இவ் விழாவின் சிறப்பில் இப் பாடசாலை வளாகத்துள் இயங்கிவரும் கலைமகள் முன்பள்ளியும் சிறப்புப் பெறுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். 05.03.1997 ஆம் ஆண்டு 25 பிள்ளைகளுடனும் ஒரு ஆசிரியருடனும் ஆரம்பிக்கப்பட்ட இம் முன்பள்ளி இன்று வளர்ச்சியடைந்து மூன்று ஆசிரியர்களாக அதிகரித்து 60 பிள்ளைகளுடன் இயக்கிக்கொண்டிருக்கின்றது. அத்துடன் ஆங்கிலக் கல்வியை அறிமுகம் செய்ய ஆங்கில ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இம்முன்பள்ளி தெல்லிப்பழைக் கோட்டத்தில் முன் மாதிரியான பாடசாலையாகத் திகழ்கின்றது. குடும்பமட்ட, கோட்ட மட்ட, வலயமட்ட விளையாட்டுப்போட்டிகள், பேச்சுத்திறன் போட்டிகள், கலை நிகழ்வுகள் போன்ற வற்றில் இங்குள்ள மழலைகள் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒரு பிள்ளையின் முதற் பாடசாலை தாயின்மடி, அடுத்து அப்பிள்ளை வீட்டுக்கு வெளியே முதல் அனுபவம் பெறும் கற்றல்நிலையம் முன்பள்ளியாகும். எதை அறிய வேண்டும். எதைத் தெரிய வேண்டும் என்பதை முன்பள்ளி தீர்மானிக்கின்றது. அற்புதமும், அதிசயமும் நிறைந்த இந்த முக்கியமான இளமைக் காலத்தில் பயமற்ற, போட்டியற்ற, மகிழ்ச்சியான, கலகலப்புடைய கற்றல் சூழ்நிலைக்கேற்ப இம் முன்பள்ளியில் அதிபரின் முயற்சியால் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுமுற்றமும், பூங்காவும் மழலைகளின் ஆனந்தமான செயற்பாட்டிற்கும் ஆளுமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்அபிவிருத்திக்கும் பெரும் உந்துசக்தியாக அமைந்துள்ளது. அத்துடன் இப்பாடசாலையின் ஆண்டு ஒன்றுக்கான வித்துக்களாகவும் அமைந்துள்ளனர்.

சிரித்தமுகமும், செந்தண்மை மிக்க வாழ்வும் செயற்றிறனும் கொண்ட "ஆனந்தம்" அவர்களின் காலத்தில் இவ் விழாவை இப்பாடசாலை காண்பது பெருமைக்குரியது. இன்று A - 9 நெடுஞ்சாலையில் இவரது முயற்சியாற் கட்டப்பட்ட மூன்று மாடிகளுடன் கூடிய கனகராயன்குளம் மகாவித்தியாலயம் இன்று ஆனந்த குமார் அவர்களின் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. வளர்க இவரது ஆற்றலும் பெருமையும்.

திரு.சி. குகனேசன்
உதவிக்கல்விப் பணிப்பாளர்
(ஆரம்ப பிள்ளைகல்வி அபிவிருத்தி)
வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உயிர்நாடியாக விளங்குவது கல்விச் செல்வமாகும். அத்தகைய கல்வியை வழங்குவதில் நீண்டகாலமாக அறாத் தொடர்புடன் செயற்பட்டுவந்த கல்வி நிறுவனம் யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் ஆகும். அந்தக் கலைக்கோவில், தனது அரிய பணியில் இவ்வருடம் 175 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. அதன் பொருட்டு நடைபெறுகின்ற விழாவுக்கு எனது நல்லாசிகளை மனப்பூர்வமாக வழங்குகின்றேன். யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வியானது ஆங்கில ஆட்சியாளரால் நிறுவனமயப்படுத்தப்பட்டுப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது உருவான ஒரு சில முதன்மைப் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்ற ஔவைப்பிராட்டியின் வரிகளுக்கொப்ப தில்லையம்பலச் சட்டம்பியாரின் மனதில் உருக்கொண்டு, அமெரிக்கன் மிஷனரிமாரின் ஆதரவுடன் மல்லாகம் நீதிமன்ற வீதியில் 1832 ஆம் ஆண்டு பத்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது அமெரிக்கன் மிஷன் பாடசாலையாகும். இதுவே இன்று சுமார் இருநூற்று முப்பது மாணவர்களுடனும் பதினைந்து ஆசிரியர்களுடனும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமாகப் பெருவளர்ச்சி பெற்றிருப்பது மனதிற்கு மகிழ்வைத் தருகிறது.

1953 இல் க.பொ.த. சாதாரண வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு இப்பாடசாலையானது தரமுயர்ந்த போதிலும், 1972 இல் மல்லாகம் மகாவித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது. இருப்பினும், மீண்டும் பாடசாலை முன்னர் அமைந்திருந்த இடத்திலேயே ஆரம்ப வகுப்புகளைக் கொண்டதாக "மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்" என்னும் பெயருடன் இயங்கி வருகிறது. இன்று வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பழைக் கோட்டத்தில், ஆரம்ப வகுப்புகளில் இவ்விரண்டு பிரிவுகளைக் கொண்ட பாடசாலை இதுவேயாகும். பெற்றோரது அக்கறை, அதிபரது அர்ப்பணிப்புமிக்க நிர்வாகம், மாணவர்களது ஊக்கம், ஆசிரியர்களின் அயராத உழைப்பு ஆகியனவே இப்பாடசாலையின் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கபலமாக அமைந்துள்ளன. நீண்டதொரு கல்விப்பாரம்பரிய விருட்சமான இவ்வித்தியாலயம், எத்தனையோ சிறார்களுக்குக் கல்வி புகட்டிய தாய்வீடு. இங்கு கற்றவர்கள் உலகின் நாலாதிசைகளிலும் புகழ்மிக்க பணிகளால் உயர்ந்து நிற்பார்கள் என நிச்சயம் நம்பலாம். இன்று பாடசாலைச் சமூகத்தினர் ஒன்றிணைந்து தமது அன்னையின் 175 ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாடுகின்றனர். அதற்காகச் சுறுசுறுப்புடன் இயங்கும் அதிபரும், ஆசிரியர்களும் போற்றுதற்குரியவர்கள். பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை, பெற்றோர், நலன்விரும்பிகள் என்ற வகையில் பல்துறை அளாவிய நிலையில் விழாவின் பணிகள் நடைபெறுகின்றன. மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் மேன்மேலும் கல்விப் பணியாற்றி நீடூழிவாழ வாழ்த்துகிறேன். "அன்னயாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்" என்னும் பாரதியின் பாடலடிகளை நெஞ்சில் இருத்தி, எனது ஆசியை வழங்கி, நல்லருள் கிட்டுமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. வி. ஆ. இராமச்சந்திரன்,
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி)
வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் 1832 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது 2007 ஆம் ஆண்டில் 175 ஆவது அகவையில் தடம் பதித்துள்ளது. இதன் வயதே இதன் பழமையினையும், பெருமையினையும் பறைசாற்றி நிற்கின்றது. இதன் நீண்ட காலப் பணியில் எத்தனையோ கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் பிரசவித்து மக்கள் சேவைக்காகவும் மகேசன் சேவைக்காகவும் வழங்கியுள்ளது. இன்றும் வழங்கி வருகின்றது. நாளையும் வழங்கி வரும் என்பது திண்ணம்.

இவ்வாறாகப் பழமை வாய்ந்த இப்பாடசாலையின் வரலாற்றினை எழுத்து மூலமாக ஆவணப்படுத்தும் முயற்சிகள் இதுவரையும் கைகூடவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்நிலையில் தற்பொழுது அதிபராகக் கடமை புரிந்து வரும் திரு. மா. ஆனந்தகுமாராகிய நானும் பாடசாலைச்சமூகமும் சேர்ந்து 175 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஒரு மலர் ஒன்றினை வெளியிடுவதன் மூலம் ஆவணப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளோம். வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர், முன்னாள் அதிபர்கள், முன்னாள் பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், மல்லாகம்வாழ் மக்கள், வர்த்தகர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரதும் ஒத்துழைப்பில் வெளிவருகின்ற இந்த மலர் அனைவரதும் கைகளிலும் தவழ்ந்து மணம் பரப்பித் தனது சாதனைகளை எல்லோரும் அறியச் செய்வதுடன் தொடர்ந்தும் சாதனைகள் படைக்க எமது பாடசாலையில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சித்தி விநாயகரின் அருளும் கலைவாணியின் அருட்கடாட்சமும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."

திரு. மா. ஆனந்தகுமார்
அதிபர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, யா/ மல்லாகம் மகா வித்தியாலத்துடன் 1972ம் ஆண்டு இணைக்கப்பட்டு அதன் ஒரு பிரிவாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. அப்பொழுது திரு.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் அதிபராக இருந்தார். 1976ம் ஆண்டு இப் பாடசாலையின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பகுதித்தலைவராக அமர்த்தப்பட்டேன். 1979ம் ஆண்டு ஜனவரி மாதம் யா/மல்லாகம் மகாவித்தியாலத்திலிருந்து பிரிந்து யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலம் என்ற பெயருடன் தனித்தியங்கும் பாடசாலையாக செயற்பட அங்கீகாரமளிக்கப்பட்டபோது நான் அதிபராகப் பொறுப்பேற்றேன். அவ்வேளை 320 மாணவர்களையும் 10 ஆசிரியர்களையும் கொண்டதாக விளங்கியது.

இப்பாடசாலை மேலோங்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன் செயற்பட்டு, அனைவரினதும் பூரண ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது. பாடசாலைக்கான இரண்டு கட்டடங்கள் 1979லும், 1980லும் கட்டிமுடிக்கப்பெற்று, மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 1981 ம் ஆண்டு ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு வட்டாரக் கல்வி அதிகாரி, திரு பொ.சிவஞானசுந்தரம் அவர்களும், சைவப்பெரியார், ஜே.பி,ஆர்.என். சிவப்பிரகாசம் அவர்களும் திறந்துவைத்தனர். 1983ம் ஆண்டு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு.சு.ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் முயற்சினால் நொறாட் நிறுவனத்தின் உதவியுடன் மின்சார வசதியும் நீர் இறைக்கும் வசதியும், ஏற்படுத்தித் தரப்பட்டது. மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், கல்வி மேம்பாட்டுக்கா கவும் வருடாவருடம் பெற்றோர் தினவிழா, கலை விழா, பரிசளிப்புவிழா, நடைபெற்றன. அத்துடன் 1979ல் சர்வதேச சிறுவர் ஆண்டு தினம், கைப்பணி உபகரணக் கண்காட்சியும், கலை விழாவும் வெகுசிறப்பாக நடைபெற்றன. இவ்வாறாக வளர்ச்சியடைந்து கொண்டு வந்த பாடசாலை இப்போது முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாக விளங்கி வருவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலும், பெருமுயற்சியுமே இதற்குக் காரணமாகும்.

இப் பாடசாலையின் **175**வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மலரினை வெளியிட முன்வந்த அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு, பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, "மலர்" மலர்ந்து மணம் பரப்ப எனது வாழ்த்துக்களைக் கூறி இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

திரு.ச.வேலாயுதபிள்ளை
ஓய்வு பெற்ற அதிபர்,
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்,
மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் நூற்றுஎழுபத்தைந்தாவது வயதில் கன்னி மலராக வெளியிட இருப்பதை முன்னிட்டுக் கல்வி உலகம் களிப்படைவதுடன் நானும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையின் வரலாற்றை வெளியிடப் பலமுறை முயன்றபோதும் காலம் கனியவில்லை. பாடசாலைச் சமூகம் இந்நூலை வெளியிட முன்வந்தமைக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மலர்க்குழுவினர் எல்லோருக்கும் எனது பாராட்டுக்கள் .

கல்வி உலகில் அன்றுமுதல் இன்றுவரை சகல துறைகளிலும் முதன்மை பெற்று விளங்கும் மேற்படி வித்தியாலயம் தனது வரலாற்றையும், மாணவர் சமூகத்திற்கு உதவும் பல தகவல்களையும் தாங்கி 175 ஆவது ஆண்டைக் கொண்டாடும் வைபவத்தில் இந் நூலை வெளியிடுவதையிட்டு எல்லாம் வல்ல பழம்பதி விநாயகரை வணங்கி எனது நல்வாழ்த்துக்களை முன் வைக்கின்றேன்.

"முருகநாமம்"
மல்லாகம்

திரு.மு. அருளையா,
இளைப்பாறிய அதிபர்,
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் நூற்று எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிற் பெருமிதம் அடைகின்றேன்.

1832 இல் வித்திடப்பட்ட வித்தியாலயம் இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்து அறிவொளி பரப்பும் ஆலயமாக மிளிர்கின்றது. ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம் இன்று பல கட்டடங்களைத் தன்னகத்தே கொண்டு பல்வளமும் பெற்றுத் தரணி புகழத் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

கல்வி என்பது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிவகுக்கின்றது. எனவே 175 ஆண்டுகள் கல்விப்பணிபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்களது அர்ப்பணிப்பானது சேவையின் மகத்துவத்தின் அடிப்படையில் பல்லாயிரக் கணக்கான புத்திஜீவிகளை உருவாக்கிக்கொண்டு வருகின்றது. இவ்வித்தியாலயம். கல்விக்கு மேலாக விழுமியம் சார்ந்த பண்புகளுடன் செயற்பட்டுத் தனது பெருமையை விளங்க வைத்துக் கொள்கிறது எனலாம்.

இவ்வித்தியாலய அன்னை மேன்மேலும் கல்விப் பணிபுரிந்து, சீரிய வழியில் நின்று, ஆயிரம் காலத்துப் பயிராக அறிவொளிபரப்ப எனது நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கல்வி வானில் ஒளிரும் தீபமாகத் திகழ்ந்து, நானிலம் போற்றும் நற்பிரஜைகளை உருவாக்கி, பல்வளமும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து'

*செல்வி சி. கெங்காமலர்தேவி*
*ஓய்வு பெற்ற அதிபர்,*
*யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

பாடசாலைக் கல்வி ஆரம்பித்த காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலே இப் பாடசாலையும் ஒன்றாகும். அக்காலம் தொட்டே சான்றோர் பலரை உருவாக்கி பெருமை கொண்டது இப்பாடசாலை. அதுமட்டுமன்றி, பல பட்டப்படிப்புகள் இப் பாடசாலையில் நடைபெற்றிருக்கின்றன. இன்றும் இப் பாடசாலை 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வருடா வருடம் பல மாணவர்களைச் சித்தியடைய வைத்து வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்த வருடம் 175 ஆவது அண்டு நிறைவைக் கொண்டாடுவதுடன், மலர் வெளியீடு நடாத்துவதையும் அறிந்து பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையில் சிறிதுகாலம் அதிபராகக் கடமையாற்றியவன் என்ற வகையில் இந்த மலரை வெளியிட உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன் 175 ஆவது அகவை கண்ட யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் சாதனைகள் பல படைத்து பல்லாண்டு காலம் கல்விப் பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*திரு.ச. சிவானந்தராசா*
*அதிபர்*
*யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமானது தனது வளர்ச்சிப் பாதையில் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளியிடும் இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு மாணவனுக்கு ஆரம்பக்கல்வியின்போது இடப்படும் அத்திவாரமே அவன் எதிர்காலத்தில் உயர் கல்வியிற் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளத் துணை புரிகிறது. இத்தகைய சிறந்த அத்திவாரத்தை இடுவதற்காகக் காலந்தோறும் சிறந்த அதிபர், ஆசிரியர்கள் இப்பாடசாலையிற் கற்பித்து மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியமையும் நாம் மறந்து விடமுடியாது.

நான் வெளிமாவட்டப்பகுதி உட்பட்ட பல்வேறு பாடசாலைகளிற் கடமையாற்றியபோதும், மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திற் கற்பித்த காலமே எனது கற்பித்தல் அனுபவத்தில் மறக்க முடியாத காலமாகும். கள்ளங்கபடமற்ற சின்னஞ்சிறு பிள்ளைகளுடன் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபடும்போது கற்பித்தலில் இறைபணிபுரிவதான உணர்வினை ஏற்படுத்தியது.

இப்பாடசாலையின் வளர்ச்சியினையும், சாதனைகளையும் எழுத்துருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, இப்பாடசாலை மேன்மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திரு.அ. இரத்தினசிங்கம்
ஓய்வு பெற்ற பிரதி அதிபர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

அன்னையர் தந்த மைந்தற்கு அறிவு ஒளி ஊட்ட என்று தோற்றத்திலும், கல்வி ஏற்றத்திலும், துரித மாற்றத்திலும் மல்லையில் நீதிமன்ற வீதியில் போற்றற்குத் தக்கதான புகழுடன் தோன்றி நின்றான்.

*நிகரற்ற அறிவு தந்து நிறைவு தந்து*
*நீண்டகாலச் சரித்திரத்தைப் படைத்து நின்று*
*நிலையான மலராகப் புகழும் தந்து*
*மங்களமாய்க் கல்லூரிப் பெயரும் தாங்கி*
*மிகநல்ல கலைகளெல்லாம் சுவையாற் கொண்டு*
*மெல்லியலார் பெற்றெடுத்த வீரமைந்தன் போல*
*மேதினியில் மிடுக்கான நடையும் போட்டு*
*அன்புடனே பண்புடனே ஆசி நல்க.*
*அருணனைக் கண்ட அம்புஜமாய் அலர்ந்தான் அம்மா.*
*புத்தம் புதுமலராய் வருக வருக என்று*
*புன்னகையாற் கரம் நீட்ட வருக அம்மா,*
*அன்பாக அதிபருடன் குழாமும் மற்றும்*
*ஆசிரியர், அறிவு பெற்றார் தாமும் கூடி*
*உன்னை உயர்த்தி நல்லாய் உலகிற்கீய*
*ஓயாது ஒளி வீசும் மலராய் உள்ளாய்*
*நின்பெருமை பேசுதற்கு உலகம் தன்னில்*
*நிறைவான பேர்களுண்டு அதனால் நாமும்*
*அன்புடனே கரம் நீட்டி அழைக்கின்றோம் - நாம்*
*ஆவலுடன் எம் கரத்தில் அமர்க அம்மா.*

செல்வி.ஞானலட்சுமி நமசிவாயம்.
பழைய மாணவி
இளைப்பாறிய ஆசிரியை,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் தனது 175 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடும் அதன் பரிசளிப்புவிழாவும், இறைவனுடைய திருவருளால் இடம்பெற இருப்பதை முன்னிட்டு எனது ஆசியுரையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இக் கல்லூரியில் நான் 1947 ஆம் ஆண்டு எனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினேன். எனது சொந்த அனுபவங்கள் சிலவற்றையும் அங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள், ஊழியர்கள் பற்றியும் இங்கு குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். மல்லாகம் ஒரு சிறிய அமைதியான கிராமம். குறிப்பிட்டுச் சொல்வதற்கு செல்வந்தர்கள் இல்லை. ஆனால் விவசாயமும் அதனைச் சார்ந்த தொழில்வளம் கொண்ட கிராமம். ஆகவே இங்கு கல்வி கற்ற மாணவர்களில் தொண்ணூற்றைந்து வீதமான மாணவர்கள் சாதாரண வருமானமுள்ளவர்களின் பிள்ளைகளாவர். எனது வீட்டுச் சூழலில் உள்ளவர்கள் எல்லோரும் பாடசாலைக் குச் சென்றுவிட்டால் எனக்குக் கூடி விளையாட ஆட்கள் இல்லாதபடியால் நான் பெற்றோருடன் அடம்பிடித்து மூன்று வயதிலேயே பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினேன். அப்போது தொடக்க வகுப்பை அரிவரி பந்தி என்று அழைப்பர். அப்போது நான் பாடசாலைக்கு முதல் எடுத்துச் சென்ற உபகரணம் என்ன வென்றால் ஒரு மண் சரை. அப்போது கதிரை மேசை எங்களுக்கு வழங்கப்பட வில்லை. ஆகவே நிலத்தில் இருந்து மண்ணைப் பரப்பி, அதில் அ, ஆ. என்று சுட்டுவிரலால் (ஆள்காட்டிவிரல்) எழுத ஆரம்பித்தோம். ஆசிரியர் (பெயர் ஞாபகம் இல்லை) எங்கள் விரலைப் பிடித்து எழுத ஆரம்பித்து வைப்பார். பின்பு நாம் எழுத வேண்டும்.

எழுத்துக்களைத் திரும்பத் திரும்ப எழுத வேண்டும். இங்கு சிறு பிழைவிட்டால் அந்த ஆசிரியை எங்கள் விரலை நிலத்தில் ஊண்டி அழுத்தித் தண்டனை தரும் போது, விரல் வலித்து அழுத காலமும் உண்டு. இக்காலகட்டத்தில் மாணவர்களின் உடைகள் அணிவதில் கட்டுப்பாடு கிடையாது. பெற்றோர் அவரவர் வசதிக்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு உடுத்திவிடுவர். ஆண்பிள்ளைகள் வேட்டி, காற்சட்டை அணிவர். ஏன் சிலர் சாரம் உடுத்து வருவதும் உண்டு. ஆனால் பாதணி போட்ட பிள்ளைகள் என் நினைவில் இல்லை. பெண்பிள்ளைகள் சட்டை பாவாடை அணிவர். பருவம் அடைந்த மாணவிகள் நீண்ட பாவாடையும் அரைத்தாவணியும் போட்டு வருவர். அப்படி அரைத்தாவணி போடுவது எவ்வளவு அழகு. ஆனால் அது இப்போ காண்பது அரிது. நான் கற்ற பொழுது திரு. தேவசகாயம் என்பவர்தான் அதிபர். உப அதிபர் திரு.பொன்னுத்துரை. ஆசிரியர்கள் பிள்ளைகளின் கல்வியில் அர்ப்பணிப்புடன் சேவை புரிபவர்கள். நாங்கள் பாடசாலைக்குச் செல்லும்போது புத்தகங்கள் மட்டுமல்ல, பனம் குருத்துக்களும் கொண்டு செல்வோம். அங்கு பெட்டி, பாய், நீற்றுப்பெட்டி, கடகம் இளைக்கக் கற்றுத் தந்தனர். அப்போது அதற்கு பொறுப்பாக இருந்த ஆசிரியை செல்லமகேஸ்வரி. அவரை நாங்கள் பன்னக்கா ரீச்சர் என்று அழைப்போம். இதனால் எமக்கு இப்பவும் பாய், பெட்டி இழைக்கும் தகுதி உண்டு. இன்று அந்தக் கலை அருகிக்கொண்டு வருகிறது. மதியவேளை எங்களுக்குப் பாணும் சம்பலும் தரப்படும். இதைத் தயாரிப்பதற்கு ஒரு வயோதிபர் இருப்பார். பெயர் முருகேசு. அவரின் ஒரு கால் துண்டிக்கப்பட்டிருந்தபடியால் அவர் நொண்டி நொண்டித் தான் நடப்பார். அவருக்குச் சரியாகப் பேசவும் வராது. காதும் கேட்காது. ஆகவே அவருடன் குறும்புகள் செய்வோம். ஆனால் அவர் எங்களுடன் அன்புடன் பழகுவார். திரு. தேவசகாயம் என்பவர்தான் அதிபர். அவர் கம்பீரமான தோற்றம் கொண்டவர். வெள்ளை வேட்டி நசனல் உடுத்து வருவார். அவை கசங்காமல் தூய வெள்ளை நிறமாக இருக்கும். அவருடைய நல்ல நிர்வாகத்தினால் பாடசாலை சுமுகமாக இயங்கியது. அன்புடன் பழகுவார். ஆனால் கோபம் வந்தால் தடிமுறிய முறிய எங்களுக்கு அடிவிழும். அவர் கந்தோருக்கு வெளியில் வரும்போது எல்லா மாணவர்களும் தங்கள் தங்கள் வகுப்பறையில் ஒழுங்காக இருப்பார்கள். அவரின் அனுசரணையுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலையில் கிறிஸ்தவ பாடம் கற்பிக்கப்படும். அங்கு பங்கு பற்றுபவர்களுக்கு இனிப்பு, மற்றும் படங்கள் பரிசாகக் கொடுத்தார்கள். பின்பு நத்தார் பண்டிகைக்குச் சிறப்பான விழா எடுப்பார்கள். அப்போது பரிசில்கள் வழங்கப்படும். இப்பாடசாலை கல்வியில் மிகவும் சிறந்து விளங்கியது. பல பதவிகளை வகிக்கும் பெரியோர்கள் இங்கு கல்வி கற்றவர்கள். பண்டித மணிகள் கூட இங்கு உருவாக்கப்பட்டனர். எனது நினைவில் ஞானலட்சுமி நமசிவாயம் ரீச்சர், கனகலட்சுமி ரீச்சர், திருமதி அருளையா அவர்கள் உள்ளனர்.

மேலும் இப்படியான மலர்கள் வெளியிடுவதனால் வருங்கால சந்ததியின ருக்கு நாம் இப்பாடசாலையின் சிறப்புக்கள், நிகழ்வுகள் ஏட்டில் பதிவுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் என்பதில் ஐயமில்லை. இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு 175 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது என்பதை நினைக்கும்போது, 'இப்பாடசாலை இவ்வளவு பழமை வாய்ந்ததா?' எனப் பெருமிதம் அடைகிறேன்.

இப்படிப் பழமை வாய்ந்த பாடசாலையிற் கல்விகற்றதை இட்டு நான் பெருமைப்படுகின்றேன். அதற்கமையத் தற்போதைய அதிபரும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும்பாடுபடுகிறார். அவர் சேவை மேம்பட எனது வாழ்த்துக்கள். இந்த மலரை வெளியிட அவர் எடுத்த முயற்சியை நான் பாராட்டுகின்றேன். மேலும் இப்பாடசாலை சகல துறைகளிலும் சிறந்து விளங்கவும் அதற்கு உந்துகோலாக உள்ள ஆசிரியர் குழாமிற்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக.

திரு.சின்னத்துரை விக்னராஜா
பழைய மாணவன்,
ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 175 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் இந்நன்னாளில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களையும், ஆசியையும் தெரிவிப்பதில் பெருமையும், பெருமகிழ்வும் அடைகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்குப் பிரதேசசபைப் பிரிவில், மக்கள் செறிவாக வாழ்கின்ற சூழலில் கல்வியின் தேவைகருதி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, ஒரு சிறிய விருட்சமாகத் தோன்றி, இன்று பெரிய ஒரு விருட்சமாகப் பல வழிகளில் வளர்ச்சி பெற்றுப் பயன்தருவதைப் பார்க்கும்போது, மனம் குதூகலிக்கின்றது. பல பெரியார்களை, கல்விமான்களை உருவாக்கித்தந்த இவ்வித்தியாலயம் கல்வி, விளையாட்டு, ஒழுக்கம், கட்டுப்பாடு, சமயம் என்பவற்றில் சிறந்து விளங்கி எந்தப் பாடசாலைக்கும் இது இரண்டாவது பாடசாலை அல்ல என்பதை நிரூபித்து நிற்பது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சாதனையாகும்.

175 ஆம் ஆண்டு விழாக்காணும் நேரத்தில் அதிபராகப் பதவி வகிக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ள திரு.மாணிக்கம் ஆனந்தகுமார் அவர்கள் சிறந்த நிர்வாகத்திறனும், ஆளுமையும், ஆற்றலும், மனிதநேயமும் கொண்டவர். இவருடைய காலத்திற் கல்விப் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. அவருடன் அவருடைய ஆசிரியர்கள் குழாமும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றனர்.

இவ் வித்தியாலயத்தை உயர்நிலைக்கு இட்டுச் செல்வதற்காகத் தம்வாழ்வை மெழுகுவர்த்திகளாக அர்ப்பணித்து இவ்வித்தியாலயத்துக்காக அளப்பரிய பல தியாகங்களைப் புரிந்துள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவரையும் வாழ்த்தி, மென்மேலும் இப்பாடசாலைப் பணி வளரப் பங்களிப்பு நல்கவேண்டும் எனவும், விழா மலரைச் செவ்வனே அமைக்கப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், இவ் விழா பெருவெற்றி பெறவேண்டும் எனவும் எனது உளப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வளர்க நும்பணி!

*திருமதி. ஸ்ரீ. மாணிக்கம்*
*செயலாளர்,*
*வலிவடக்குப் பிரதேசசபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் சிரசெனப் போற்றப்படும் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில், மல்லாகம் கிராமத்தில் இயங்கும் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் வெளியிடவுள்ள 175 ஆவது மலருக்கு ஆசிவழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் ஆரம்பத்தில் பத்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டாலும் படிப்படியாக அதிக மாணவர்களையும் ஆசிரியர்களையும் வரவழைத்து, தனது பாடசாலை அந்தஸ்தை உயர்த்துவதில் பெருமையடைகிறது. மேலும் வலிவடக்கு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தங்குமிட வசதிகளையும்,செய்து கொடுத்தது. இடம்பெயர்ந்த மாணவர்களையும் இணைத்து எல்லா மாணவர்களையும் போன்று இவர்களும் கல்வியில் பாதிப்படையாது கல்வி புகட்டப்பட்டமை பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

தற்போது அதிபராகக் கடமையாற்றும் திரு. மா. ஆனந்தகுமார் அவர்களினால் சில புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டும், மின் இணைப்பு இல்லாத பகுதிக்கு மின் இணைப்புப் பெற்றுக்கொடுத்தும், ஒரு பகுதி காணி கொள்முதல் செய்தும், அதில் மேல்மாடி கட்டடம் கட்டுவதற்கு அனுமதியும் பெற்றுள்ளார். புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய மாணவர்களைச் சித்திபெறவும் செய்துள்ளார். இவரது சிறந்த பணிகள் மூலம் மேலும் பாடசாலை உயர்ந்துநிற்பதில் பெருமையடைகிறது.

எதிர்காலத்தின் சிறப்பை நிலைநாட்ட வல்லதாகிய இம் மலர் மிகச் சிறப்பாக மலர்ந்து மணம் பரப்பிப் பயன்தர வேண்டுமென எல்லாம்வல்ல மல்லாகம் பழம் பிள்ளையாரை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

திரு.க.கலியுகவரதன்
கிராம அலுவலர், மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

1832 ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமாரால் "அமெரிக்க மிஷன் பாடசாலை" என்ற பெயரில் மல்லாகம் கிராமிய சூழலில் ஆரம்பிக்கப்பட்ட யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் இன்று 175 ஆண்டுகள் மிகச் சிறப்பான கல்விச் சேவையினை வழங்கியபெருமையினைப் பெறுவதோடு, 175 ஆவது ஆண்டு நிறைவு மலர் ஒன்றினையும் வெளியிட்டுத் தனது வரலாற்றில் தனியான ஒரு முத்திரையையும் பதித்துள்ளது.

"கலட்டிப் பாடசாலை" என இப்பிரதேச மக்களால் அழைக்கப்படும் இவ் வித்தியாலயம் இன்று பிள்ளைநேயப் பாடசாலையாகவும் உயர்வு பெற்றுள்ளது. தெல்லிப்பழைக் குடும்பப் பாடசாலைகளின் தலைமைப் பாடசாலையாக விளங்கும் இதன் அங்கத்துவ பாடசாலையின் அதிபர் என்ற வகையில் இவ் வித்தியாலயத்திற்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் நான் புளகாங்கிதம் அடைகின்றேன்.

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வித் தானம் வழங்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விபயிலும் மாணவர்களையும் வாழ்த்துவதோடு, இவ் வித்தியாலயம் மேலும் பல நூற்றாண்டு காலம் கல்விச் சேவையினை ஆற்ற வேண்டும் என மல்லாகம் பழம் பிள்ளையார் அருளை வேண்டி மனம் நிறைந்து ஆசி கூறுகின்றேன்.

திரு.மு. சொர்ணலிங்கம்,
அதிபர்,
யா/தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கல்வி சிறுவரின் உரிமை. அந்த உரிமையுடன் கல்வியைப் பெற அதற்கு ஏற்ற சூழலில் கல்வி வழங்கும் நிலையம் அமையவேண்டும். அவ்வகையில் அமைந்து பொலிவுடன் விளங்கும் யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் நானும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை முன்வைக்கின்றேன்.

தங்கள் பாடசாலையில் இருந்து இடைநிலைக்கல்வியைப்பெற எங்கள் பாடசாலைக்கு அனுமதிபெற்ற மாணவர்களே நீங்கள் ஆற்றும் பணிக்குச் சாட்சியாவர்.

ஆரம்பக் கல்வியுடன் உயரிய பண்புகளைக் குழைத்து, சிறார்களுக்கு ஊட்டி வளர்த்துவரும் அதிபர், ஆசிரியர் அனைவரையும் இவ் இனிய நாளிலே மனமார வாழ்த்துகின்றேன்.

திரு. மா. நாகேந்திரசீலன்,
அதிபர்,
யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற அமுதவாக்கிற்கமைய திரு. தில்லையம்பலச் சட்டம்பியார் அவர்களால் அமெரிக்கன் மிஷனரிகளின் உதவியுடன் மல்லாக நீதிமன்ற வீதியில் ஆரம்பிக் கப்பட்டது என்பதே வரலாறு. காலத்தின் தேவையறிந்து, கல்வியின் பெருமையுணர்ந்து அந்த உன்னத நோக்கத்தோடு தமிழையும், தன்னவர்களையும், ஊரவர்களையும் வாழ வைக்கும் நோக்கில் இப்பாடசாலையை நிறுவினாரோ, அந்நோக்கம் இன்று வரை நிறைவேறிக் கொண்டு வருவதற்கு, காலநேரம் பாராது கடமையாற்றும் தற்போதைய அதிபரையே சாரும் என்றால் மிகையாகாது. பல சான்றோர்களை உருவாக்கி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சேவையாற்ற வழங்கிய பெருமை இப்பாடசாலைக்கு உண்டு என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இக் கல்வி நிலையம் ஆர்வமுடைய அதிபரையும், அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களையும், பெற்றோர்களின் ஒத்துழைப்பு டனும் பழைய மாணவர்களின் பங்களிப்புடனும் 175 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இத் தினத்தில் சிறந்த சேவையைத் தொடர வேண்டும் என வாழ்த்தி, இறையாசியை வேண்டி நிற்கிறேன்.

நன்றி

திரு.கு. இராசநாயகம்
அதிபர்,
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

## சின்னஞ்சிறு பாலகருக்கு!

சிறந்த கல்வியும் ஒழுக்கமும் – நிலைத்திட
ஆரம்பப்பிரிவின் களமாக இயங்கி
சிறப்புடன் சேவையாற்றுகின்ற
கனிஷ்ட வித்தியாலயமே!
அரிய பணியாற்றிய அதிபர்
ஆசிரியர்களுக்கும், கல்வி கற்கும்
மாணவச் செல்வங்களுக்கும்
எனது ஆசிகள் உரித்தாகட்டும்.

பிள்ளை நேயப் பாடசாலையில்
ஒன்றாக விளங்கும் கனிஷ்ட வித்தியாலயமே!
சீருடனும் சிறப்புடனும் – என்றென்றும்
உன் பணி தொடர – எனது
மனமார்ந்த வாழ்த்துக்கள்.

"வாழ்க வளமுடன்; வளர்க உன்பணி"

மல்லாகம் கனிஷ்ட மாதா தனது 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையும், நிறைவு மலர் வெளியிடுவதையும் அறிந்து எனது மகிழ்ச்சியையும் ஆசியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.பொ.நாகரட்ணம்,
அதிபர்,
யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம், மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

சிறந்த கல்வியறிவும், நல்லொழுக்கமும், நற்பண்புகளும் மிக்க நற்பிரசைகளை உருவாக்குவதற்கான அடி அத்திவாரத்தைத் திறம்பட அமைத்துச் செயற்படுத்திச் சாதனைகள் பல படைத்துவரும் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் இன்று தனது அகவை 175 ஐப் பூர்த்தி செய்து மலர்ஒன்றையும் வெளியிட்டுப் பூரிப்படைந்திருக்கும் இவ்வேளையில் தனது அளப்பரிய சேவைகளை மேலும் பல நூற்றாண்டுகள் தொடர, எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

திரு. க. பத்மநாதன்
அதிபர்,
யா/ கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175 ஆவது அகவை நிறைவில்

# வாழ்த்துச் செய்தி



"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கு இணங்க சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியையும், ஆளுமையையும், நல்லொழுக்கப் பண்புகளையும் செவ்வனே வழங்கி தெல்லிப்பழைக் கோட்டத்தில் தலைசிறந்த ஆரம்பப் பாடசாலையாக விளங்கும் இவ்வித்தியாலயம் 175 ஆவது அகவை அடைவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என்போரின் அயராத முயற்சியினால் தொடர்ந்தும் முன்னேற்றப்பாதையிற் சென்று வெற்றிகள் பல ஈட்டி, சாதனைகள் படைக்கவும், இந்நாளில் வெளியிடப்படும் மலர் சிறப்புறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திருமதி ரோகிணி தயானந்தன்
அதிபர்,
யா/நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மல்லாகம் பதியில் அமைந்து, 175 ஆண்டு காலமாக, சின்னஞ் சிறார்களின் ஆரம்பக்கல்விக்கு அத்திவாரமிட்டுக் கொண்டிருக்கும் யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175 ஆவது அகவையின் நிறைவாக வெளிவருகின்ற மலருக்கு என் ஆசிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையின் வரலாற்றையும் அடிப்படைத் தகவல்களையும் சுமந்துவரும் இம்மலர் மாணவர்களின் எழுத்தாக்கத்திறனை வெளிக்கொணர்வதற்குரிய களமாக அமைந்துள்ளதோடு, கல்விமான்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களையும் தாங்கி வருகின்றது.

எமது வித்தியாலயத்தின் வரலாறு, அது படைத்த சாதனைகள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினுடைய வாழ்வியற் கோலங்களைப் பற்றி இன்றைய சந்ததியினரும், எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்வதற்குச் சான்றாக இம்மலர் அமையும் என எண்ணுகின்றேன்.

எமது வித்தியாலயம் மேன்மேலும் பல சாதனைகள் படைத்துப் புகழ்பெற வேண்டும் எனக் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதி தேவியின் பாதம் பணிந்து, வெளிவருகின்ற மலர் சிறப்பாக மலர்ந்து, தமிழ் மணம் பரப்ப வேண்டும் என இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

திருமதி பா. தவக்குமார்
பிரதி அதிபர்
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

இந்து சமுத்திர திலகமெனத் திகழ் இலங்கைத் தீவில், சிகரமென மிளிரும் யாழ்ப்பாணம், மல்லாகத்தில், நீதிமன்ற வீதியில் அமைந்துள்ளது மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம். இது இன்று பொலிவுடன் மூன்று கட்டடங்களோடு கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றது.

இவ்வித்தியாலயம் இப்பிரதேசத்திலுள்ள சிறார்கள், இளைஞர்கள் கல்வியை மேற்கொள்ள ஒரு வரப்பிரசாதகமாக இருந்து வருகிறது. ஆதியில் இது தற்காலிகக் கொட்டிலில் அமெரிக்கன் மிஷன் முகாமையாளரால் கி.பி 1832இல் ஆரம்பிக்கப்பட்டு பத்து மாணவர்களுடன், மல்லாகத்தைச் சேர்ந்த அறிவுடைப் பெரியவராய் நின்று ஆசிரியர் பணியைத் தொண்டாகச் சேவையாற்றிய, எமது குடும்ப உறவினருமாகிய அதிபர் திரு.ந.தில்லையம்பலம் தலைமையிலும் வலுப்பெற்ற பாடசாலையாக விருத்தியடைந்தது. இதனைத் தொடர்ந்து காலக் கிரமத்தில் உயர்கல்வியை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு வளர்ச்சியடைந்த காலம், இப்பாடசாலையின் பொற்காலமென போற்றப்படுகின்றது.

எனினும், இலங்கை அரசாங்கத்தின் கல்வி நிர்வாக நடைமுறையினால், இன்று தரம் ஐந்து வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஆரம்பப் பாடசாலையாக இது மிளிர்கின்றது. இவ் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் தங்கள் ஆரம்பக் கல்வியை மட்டுமன்று, நல்லறிவு, நற்பழக்க வழக்கங்களைக் கூட இவ் வித்தியாலயம் மூலம் பெற்றுக் கொள்கிறார்கள் என்பது போற்றுதற்குரியதாகும்.

எதிர்காலச் சந்ததியின் எழில்மிகு வாழ்வுதனைப் படைக்க எதிர்கொண்டு, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் ஊடாக, மாணவர் சமுதாயத்துக்குக் குருவழி காட்டியாக நின்று, கல்விச் சேவையாற்றிச் சென்ற முன் அதிபர்களுக்கும், ஆசிரியர் குழாத்துக்கும் பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியையும் தெரிவிக்கின்றோம். மேலும், ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் இவ்வித்தியாலயத்தின் மாணவர்களை எதிர்கால நற்பிரஜைகளாக உருவாக்குவதற்குப் பாடசாலை கல்விச் செயற்பாடுகளைத் தளராது மேற்கொண்டு, இவ்வுயர்ந்த பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றிவரும் இன்றைய அதிபர் அவர்களையும், ஆசிரியர் குழாத்தையும், கல்விச் சமூகத்தினர் அனைவரையும் அகவை 175 நிறைவில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய விழாவின் போது மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றோம். நல்லாசிகளையும் தெரிவிக்கின்றோம்.

இவ் வித்தியாலயம் பல வளர்ச்சிகளைக்கண்டு பல்லாண்டு காலம் சேவையாற்ற இறைவன் அருள் புரிவாராக. ஆசிரியர், பெற்றோர் நல்லுறவு; கல்வி வளர்ச்சிக்கு வித்தாகும்; கல்வியையும், ஒழுக்கத்தையும் மேம்படுத்த முடியும்.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் சேவை நிலைக்க வேண்டும். வாழ்க இவ்வித்தியாலயம், மேலும் வளரட்டும் அதன் சேவை, ஓங்கட்டும் அதன் புகழ், நிலைக்கட்டும் அதன் ஆயுள்,

தமிழ் என்பது அன்பேதான்!
என்றும் வேண்டும் இன்ப அன்பு!

திரு.ஏ.சீ. விஜயராசசிங்கம்
ஓய்வுபெற்ற கணித முதன்மை
ஆசிரியரும், சமாதான நீதிவானும்
'ஜீவபதி', நீதிமன்ற வீதி,
மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம். இப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளியாகும் இம் மலர் சிறப்பாக மலர வேண்டும் என ஆசீர் வதிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

175 ஆண்டுகளாகப் பல்லாயிரக்கணக்கான சிறார்களைக் கல்வி உலகில் மேல் நிலையை அடைய வைத்தது இவ்வித்தியாலயம். கல்விப் பணியில் இவ் வித்தியாலயம் மேலும் வளர உதவுவது அனைவரதும் கடமையாகும்.

இந் நூல் வெளியிடுவதற்கு முன்வந்து செயற்பட்ட அதிபர், ஆசிரியர், பாடசாலை நிர்வாகம், மற்றும் ஒத்துழைப்பை நல்கியோர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இந்நூலின் வெளியீட்டுக்கு எனது ஆசியை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.பொ. சகீந்திரன்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் நூலிற்கு ஆசியுரை வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பாடசாலையானது 175 ஆண்டுகளைக் கடந்து பல புத்திஜீவிகளை இவ் உலகிற்குக் கொடுத்துத் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலும், மாணவர்களின் கல்வித் திறமையும் முக்கிய காரணமாக அமைகின்றது. பல மாணவர்களைப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்து, அயராது துணிவுடனும் திறமையுடனும் செயற்பட்டு, கல்விப் பணியைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதுடன், பல துறைகளிலும் தங்களை ஈடுபடுத்தி, பாடசாலையின் வளர்ச்சியை மென்மேலும் உயர்த்தி வருவது பாராட்டுவதற் குரியதாகும்.

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமானது தொடர்ந்தும் சமுதாயத்தின் அறிவை விருத்திசெய்ய ஒவ்வொரு செயற்பாட்டையும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல எனது நல் ஆசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சி.செல்வராசா
முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மல்லாகம் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வியைச் சிறார்களுக்கு ஊட்டுகின்ற அறிவுக்கூடமாக யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் விளங்குகின்றது. இப்பாடசாலையானது எமது பிரதேசத்தின் ஆணிவேராகத் திகழுகின்றமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி மல்லாகம் பிரதேசத்தில் பழமைமிக்க பாடசாலை என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டு எண்ணிறைந்த கல்விமான்கள் சமூக, சமய சேவையாளர்களையும் உருவாக்கியுள்ளமை யாவரும் அறிந்ததொன்றாகும். இப்பாடசாலை 175ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ள இந்த வேளையில் அதற்கு மகுடம் வைத்தாற்போல் மலரினையும் வெளியிடுவது மேலும் இப்பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்றது.

திரு.வ.மதிவண்ணன்,<br>
செயலாளர்,<br>
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்". "எம் கடன் பணி செய்து கிடப்பதேஎமக்கு இறைவிட்ட வழி" எனும் நிறைமொழிக்கிணங்க பல இடையூறுகளும் நெருக்கடிகளும் நேர்ந்தபோதிலும் அவை அனைத்தையும் விலக்கழித்து, யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175ஆவது வருட நிறைவு மலராக வெளிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இம்மலர் எமது பாடசாலையின் பன்னெடுங்கால வரலாற்றை தாங்கி வெளிவருவதாக அமைகின்றது. இம்முயற்சியில் முன்னின்ற ஒவ்வொரு இதயங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியையும், நல்லுணர்வையும் தெரிவித்துக் கொள்வதுடன், இம்முயற்சி பூரணமாக நிறைவுபெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி, மீண்டும் எமது பாடசாலை அதிபர், மலர்க்குழு, கல்விச்சமூகம் சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.சீ.அமரசிங்கம்,
மலர்க்குழுத்தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

மல்லாகம் பிரதேசத்தில் ஆரம்பக்கல்விக்கான அடித்தளத்தை மிகவும் உறுதியான முறையில் வழங்கிக் கொண்டிருப்பது யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமாகும். இத்தகைய சிறப்புமிகு இப்பாடசாலை இன்று நூற்று எழுபத்தைந்து ஆண்டு நிறைவை கொண்டாடுவதை இட்டு மல்லாகம் கிராமமே பேருவகை அடைகின்றது எனலாம்.

சிறுவர்களுக்குக் கல்விச் செல்வத்தை அளித்துக் கொண்டிருக்கும் இவ்வித்தியாலயத்தின் வரலாற்றினையும், சிறப்பினையும் கூறஇவ்வித்தியாலயத்தில் பயின்று இன்று பல பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் அறிஞர்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு மனிதனின் வாழ்வில் ஆரம்பக்கல்வி எந்தளவு சிறப்பானதாக அமைகின்றதோ அந்தளவுக்கு அவன் உயர்வான ஒரு மனிதனாக மிளிர்வான் என்பதில் ஐயமில்லை. இத்தகைய அறிவுக் களஞ்சியமாக விளங்கும் இப்பாடசாலை வரலாற்றைத் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டும் என்ற பேரார்வம் எமது அதிபருக்கு ஏற்பட்டதினாலேயே இன்று இம்மலர் எம்முன் எழுந்துள்ளது எனலாம்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்று இம்மலருக்கு முற்றும் பொருந்தும் என்பது எமது சிந்தனையாகும். அக்கால அறிஞர்களின் ஊருக்கு நற்பணியாற்ற வேண்டும் என்பதன் செயல்வடிவமே மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமாகும். காலமறிந்து இப்பாடசாலை வரலாற்றைத் தொகுக்கும் நோக்குடன் வெளிவருவதே இம்மலராகும். ஒரு பாடசாலையின் வரலாற்றைத் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டியது அனைவரதும் கடனாகும். இந்த வகையில் எமது பாடசாலை திரு.மா.ஆனந்தகுமார் அவர்களினதும், பாடசாலைச் சமூகத்தினரதும் பெருமுயற்சியினாலும் ஆர்வத்தினாலும், உழைப்பினாலும் இம்மலர் இன்று உங்கள் முன் மலர்ந்து மணம் வீசுகின்றது.

இம்மலரினை வெளியிடுவதற்கு உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தினர், நலன்விரும்பிகள் அனைவரதும் ஒத்துழைப்புடன் இம்மலர் வெளிவருவது மகிழ்விற்குரிய செய்தியாகும்.

இவ்வித்தியாலயத்தின் பணிகளையும், கல்விசார் கருத்துக்களையும், எடுத்துக்கூறும் இம்மலரின் மூலம் யாவரும் பயனடைவர் என்பது திண்ணம். இவ்வாறான ஒப்புயர்வற்ற பணி மூலம் இம்மலர் சிறப்பாக வெளிவருகின்றது எனலாம். இப்பாடசாலை என்ன நோக்கத்துக்காகக் கட்டி எழுப்பப்பட்டதோ அந்த நல்நோக்கம் நிறைவேற இம்மலரின் வெளியீடும் அமையும் என எண்ணுகிறேன்.

இம்மலர் கற்பவருக்கும், சிந்திப்பவருக்கும் விருந்தாக அமையும் என நம்புகின்றேன். வாடாமலராய் நின்று மணம் வீச எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

திருமதி தவனேஸ்வரி சிவகுமார்,<br>
ஆசிரியை,<br>
மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் - ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் 175ஆவது அகவை நிறைவு மலர் வெளியீடும் பரிசளிப்பு விழா அறிக்கையும் –2007

எமது வித்தியாலயத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களையும், கல்விக்கதிபதியான கலைவாணியின் பாதக் கமலங்களையும் வணங்கி அதிபர் அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எங்கள் வித்தியாலயத்தின் ஒரு படிக்கல்லாக அமையப்போகும் இன்றைய நிகழ்ச்சியில் எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் பொதுவாக எமது நன்றியும் வணக்கமும் உரியனவாயினும் சிறப்பாகச் சில பெரியார்களை விழித்து வரவேற்கவேண்டிய கடப்பாடு எனக்குண்டு.

இன்றைய விழாவிற்கு ஆசியுரை வழங்குவதற்கு வருகை தந்திருக்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களே! பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் திருவாளர் ப.விக்கினேஸ்வரன் அவர்களே! சிறப்பு விருந்தினர்களாக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலாளர் திருவாளர் சு.முரளிதரன் அவர்களையும், தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருவாளர் ச.கைலாசநாதன் அவர்களையும், சிறுவர் பாதுகாப்பு நிதிய முன்னாள் கல்விசார் முகாமையாளர் திருவாளர் டாக்டர் அ.பேரின்பநாதன் அவர்களையும், வலிகாம வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் திருவாளர் சி.மாதவகுமார் அவர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இதேபோன்று கௌரவ விருந்தினராக வருகைதந்து 175ஆவது ஆண்டு நிறைவு மலரின் அறிமுக உரையினை நிகழ்த்தவுள்ள செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்களையும் மலர் ஆய்வுரையினை வழங்க வந்திருக்கும் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரும் எனது குருவுமாகிய திருவாளர் சி.சிவலிங்கராசா அவர்களையும் 2007ஆம் ஆண்டு தரம் –5 புலமைப்பரிசில் பரீட்சையிற் சித்தியடைந்த 6 மாணவர்களுக்கும் 100 புள்ளிகளுக்குமேல் புள்ளிகளைப் பெற்ற 10 மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்க வந்திருக்கும் இலங்கை வங்கி காங்கேசன்துறைக் கிளையின் முகாமையாளர், திருவாளர் பே.பிரான்ஸ்லரிஸ் அவர்களையும், மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளையின் முகாமையாளர் திருவாளர் T.சிவகுமார் அவர்களையும் வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் கிராமசேவகர், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவரையும் வரவேற்பதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்பக் கல்விக்கு அத்திவாரமிடும் எமது வித்தியாலயத்திற்கு ஆசியுரை வழங்கவிருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவியும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், பெருமதிப்புமிக்க கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் எமது பாடசாலையில் மிகுந்த பற்றுடையவர். வருடந்தோறும் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிக்கும், பரிசளிப்பு விழாவுக்கும் நிதியுதவி வழங்கி வருகின்றார். அதனைக்கொண்டு இங்கு கல்வி கற்கின்ற மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வறிய மாணவர்களாக இருப்பதால், அவர்களுக்குச் சிறந்த பரிசில்களை வழங்கி விழாவைச் சிறப்பிக்க முடிகிறது.

அடுத்து பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் மதிப்புமிக்க எங்கள் வலயக்கல்விப்பணிப்பாளர், நேர்மையும் சமநிலைநோக்கும் உடையவர்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து ஒரு பால்
கோடாமை சான்றோர்க்கணி"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, தனது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பாரபட்சமின்றிச் செயலாற்றி வருபவர். அத்தகைய பண்புமிக்கவரை எங்கள் பணிப்பாளராகப் பெற்றமை நாம் செய்த தவப்பேறு எனக் கருதுகின்றேன். எங்கள் பாடசாலையைப் பிள்ளைநேயப் பாடசாலையாகத் தெரிவுசெய்ய அனுமதி வழங்கி, ஆரம்பக்கல்விக்கேற்ற கவிநிலைமிக்க ஒரு பிள்ளைநேயப் பாடசாலையாக எமது பாடசாலை திகழ்வதற்கு வழிசெய்தமைக்குப் பாடசாலைச் சமூகம் சார்பில் எனது நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, சிறப்பு விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர், தமது பிரதேசத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடையவர். தமது செயலகம் ஊடாக பாடசாலை மாணவர்களிடையே பல போட்டிகளை நடாத்திப் பரிசில்கள் வழங்கி வருகின்றமை பாராட்டுதற்குரியது.

அடுத்து எங்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஒரு செயற்றிறன் வாய்ந்த பணிப்பாளராவார். அவர் காட்சிக்கு எளியவர், கருணை உள்ளம் படைத்தவர். அடிக்கடி பாடசாலைக்கு வருகைதந்து வேண்டிய ஆலோசனைகள் வழங்குபவர். அவர் தமது ஆளுகைக்கு உட்பட்ட பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்றார். இதற்கு எமது பாடசாலையை ஓர் உதாரணமாகச் சுட்டலாம். எமது பாடசாலையை ஒரு பிள்ளைநேயப் பாடசாலையாகத் தெரிவு செய்வதற்குச் சிபார்சு செய்து, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பல பௌதிக வளங்களைப் பெற்றுத்தந்துள்ளார். அத்துடன் எமது ஆசிரியர் ஆளணிக்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களை நியமித்துள்ளமை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது. இவ்வாறே இவர் செய்த பணிகளைத் தொடர்ந்து கூறிக்கொண்டே போகலாம்.

சிறப்பு விருந்தினராக வீற்றிருக்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் முன்னாள் கல்விசார் முகாமையாளர் அவர்கள் மிகவும் உற்சாகமானவர். தான் முகாமையாளராகப் பணியாற்றிய காலப்பகுதியில் இடையிடையே எங்கள் வித்தியாலயத்திற்குத் தரிசனம் தந்து பல வேலைத்திட்டங்களைச் சிறந்தமுறையிற் செய்து தந்துள்ளார். கற்றல் உபகரணங்கள், கணினி போன்றவற்றை வழங்கியதுடன் சிறுவர் பூங்கா ஒன்றையும் அமைத்துத் தந்துள்ளார். இன்று எமது வித்தியாலயம் பிள்ளைநேயப் பாடசாலைக்குரிய அம்சங்கள் பொருந்தப்பெற்றுப் புதுப்பொலிவுடன் மிளிர வழிகோலியவர் எனக் கூறின் அது மிகையாகாது.

அடுத்து, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எங்கள் வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் அவர்கள் எமது பாடசாலைக்கு இடையிடையே வருகைதந்து, அதிபர், ஆசிரியர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி, மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த பணியாற்றுபவர். தான் பாடசாலைக்கு விஜயம் செய்கின்றபோது இங்குள்ள குறைபாடுகளையும், தேவைகளையும் அவதானித்து அதனை வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எடுத்துக்கூறி அவற்றை நிறைவுசெய்து தருபவர். இதனால் நாம் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல வழிகாட்டியவர் என்ற வகையில் அவரையும் பாராட்டுகின்றேன்.

கௌரவ விருந்தினராக வருகைதந்து மலர் அறிமுக உரையினை நிகழ்த்தவுள்ள ஆறு திருமுருகன் அவர்கள் சமயத் தொண்டாலும், தமிழ்த் தொண்டாலும் எங்கள் மத்தியில் உயர்ந்து விளங்குபவர். அத்தகைய பெருமைமிக்கவர், இன்று எங்கள் வித்தியாலயத்தில் மலர்கின்ற மலருக்கு அறிமுகவுரை வழங்குவதையிட்டு நாம் பேருவகையடைகின்றோம்.

அடுத்து, மலர் ஆய்வுரையினை நிகழ்த்தவிருக்கும் கௌரவ விருந்தினர் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அவர்கள் இரக்க சிந்தையும், மலர்ந்த முகமும் உடையவர். தனது அறிவுப்புலமையால் தான் மட்டுமன்றித் தன்னுடன் கூட உள்ளவர்களையும் மகிழ்விக்கும் ஆற்றல் படைத்தவர். மாணவச் செல்வங்களுக்காகப் பல நூல்களை எழுதி வெளியிட்டு வருபவர். இத்தகைய பெருமைமிக்க பேராசிரியர், எங்கள் வித்தியாலயத்தின் வரலாற்று ஆவணமாகத் திகழப்போகின்ற 175ஆவது அகவை நிறைவு மலருக்கு ஆய்வுரை வழங்க வந்திருப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கௌரவ விருந்தினர்களாக வீற்றிருக்கும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, காங்கேசன்துறைக் கிளையின் முகாமையாளர்கள், எங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிற் சிரத்தைமிக்கவர்கள். வருடாந்தம் எமது வித்தியாலயத்தில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்து வருவது பாராட்டத்தக்க விடயம். அதுமட்டுமன்றி தங்கள் வங்கியிற் கணக்கை ஆரம்பிக்கும் மாணவர்களிற்குத் தாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட்டு மாணவர்களின் சேமிப்பினை ஊக்குவிப்பதோடு ஆசிரியர்களின் சேமிப்பினையும் ஊக்குவிப்பது என்றும் பாராட்டத்தக்கது.

### எங்கள் வித்தியாலயம்

எமது வித்தியாலயம் ஆங்கிலேயரின் வருகையின்போது அமெரிக்கன்மிஷன் என்ற பெயருடன் சிறிய கல்வி நிலையமாக 1832இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பெரு விருட்சமாக வளர்ச்சியடைந்து புகழ்பெற்று வருவது யாவரும் அறிந்த உண்மை. தனது வரலாற்றைப் பேணும் ஆவணமாக 175ஆவது அகவை நிறைவை முன்னிட்டு இன்று மலர் ஒன்றினை வெளியிடுவது பாடசாலை வரலாற்றில் தடம்பதித்த ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதலாம்.

### அயராது உழைக்கும் ஆசிரியர்கள்

பாடசாலையின் நிர்வாகமும் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்புடனும், புரிந்துணர்வுடனும் செயற்படும் ஆற்றல்மிக்க ஆசிரியர்களே பாடசாலையைத் தாங்கி நிற்கும் தூண்களாக விளங்குகின்றனர். நல்லதொரு விழுமியப் பண்புமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்க அயராது சேவையாற்றும் ஆசிரிய மணிகளே பாடசாலையின் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். ஆங்கில ஆசிரியை திருமதி ஜெ.பாலகிருஸ்ணராஜா இடமாற்றம் பெற்றுச்செல்ல அவ்விடத்திற்குத் திருமதி ச.நகுலேஸ்வரன் ஆசிரியை நிரந்தர நியமனம் பெற்றுள்ளார். திரு.சீ.அமரசிங்கம் அவர்கள் ஆசிரியர் குழாத்திற் புதிதாக இணைந்துள்ளார். 11நிரந்தர ஆசிரியர்களும் 3 தற்காலிக இணைப்புப்பெற்ற ஆசிரியர்களுடன் முன்பள்ளி ஆசிரியைகளாகச் செல்வி இ.பரஞ்சோதி, செல்வி.த.ரங்கேஸ்வரி. செல்வி.மா.ஊர்மிளா, பழைய மாணவர் சங்கத்தினரால் நியமிக்கப்பட்ட தற்காலிக ஆங்கில ஆசிரியை செல்வி.சி.ஜஜிதா ஆகியோருடன் மொத்தமாக 18 ஆசிரியர்கள் ஆசிரிய அணியினராகக் கடமையாற்றுகின்றனர்.

### மாணவர்கள்

தற்பொழுது பாடசாலையில் 230 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுடன் முன்பள்ளியிற் கல்வி பயிலும் 50 மாணவர்களுமாக மொத்தம் 280 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். தற்பொழுது மாணவர்களின் தொகை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### தரம் – 5 புலமைப்பரிசில்

ஆரம்பக் கல்விக்கு அடித்தளமிடும் இவ்வித்தியாலயத்திற் சென்றவருடம் செல்வன் தே.லுஹீரதன், செல்வன் ஆ.வேதாகுலன், செல்வன் க.உமாசுதன், செல்வி.சி.கலைவாணி, செல்வி சி.நளினா, செல்வன் ஸ்ரீ.ரஜீப் ஆகிய ஆறு மாணவர்களும் புலமைப்பரிசில் பரீட்சையிற் சித்திபெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இதனைவிட மேலும் 10 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமை இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து கல்வி போதித்த திருமதி ந.தர்மதயாளன், திருமதி ஜெ.தேவராஜா ஆசிரியைகளுக்குப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைபாடவிதானச் செயற்பாடு**

மாணவர்களுக்குத் தனியே கல்வி அறிவை மட்டுமன்றி, அவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதற்குக், களமாக அமைவது பாடசாலை. அதற்கிணங்கச் சென்றவருடம் நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டியில் ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்ச்சியில் செல்வன் ஆ.வேதாகுலனும், எழுத்தாக்கப் போட்டியிற் செல்வன் க.உமாசுதனும், வாசிப்புப் போட்டியிற் செல்வி சி.கலைவாணியும், பேச்சுப் போட்டியிற் செல்வி சி.மதுஷனாவும் கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடங்களைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இம்மாணவர்களை வழிப்படுத்திய வகுப்பாசிரியர்களுக்கும், பொறுப்பாசிரியர்களாக செயற்பட்ட திருமதி.யோ.வ.தயாளன், திருமதி ந.தர்மதயாளன் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள்.

அதேபோன்று ஆங்கிலதினப்போட்டியில் Poem கூறுதல் நிகழ்ச்சியில் செல்வன் ஆ.வேதாகுலனும், Copy writing போட்டியிற் செல்வன் க.கயவரனும் கோட்டமட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றதோடு, தரம் 3, 4ஐச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கில நாடகப் போட்டியிற் கோட்டமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இம்மாணவர்கள் வெற்றிபெற உறுதுணையாகச் செயற்பட்ட ஆங்கில ஆசிரியைகள் திருமதி.ச.நகுலேஸ்வரன், செல்வி சி.ஜஜிதா ஆகியோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கையெழுத்துச் சஞ்சிகை ஆக்கப்போட்டியிற் பாலர் கீழ்ப்பிரிவுக்குரிய "சுத்தம் பேணிச் சுகமே வாழ்வோம்" என்ற சஞ்சிகை கோட்டமட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பாலர் மேற்பிரிவுக்குரிய "அணையாத தீபங்கள்" என்ற சஞ்சிகை, கோட்டமட்டத்தில் மூன்றாம் இடத்தையும், வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுப் பாடசாலையின் புகழை வெளிக்கொணர்ந்துள்ளன. இவ்வாறு மாணவர்கள் கையெழுத்துச் சஞ்சிகையை ஆக்குவதற்குப் பொறுப்பாசிரியராகச் செயற்பட்ட செல்வி நா.திபாஜினி ஆசிரியைக்கும் உறுதுணையாகச் செயற்பட்ட ஏனைய ஆசிரியர்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

அதுமட்டுமன்றி, தெல்லிப்பழைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அவர்கள் நடாத்திய போசாக்குவாரக் கண்காட்சியில், தரம் 5 மாணவர்கள் முதலாம் இடம் பெற்றனர். அதேபோன்று ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணக் கண்காட்சிப் போட்டியில், தரம் 5 ஆசிரியை திருமதி ந.தர்மதயாளனும், தரம் 1 ஆசிரியை திருமதி கி.ம.தவலிங்கமும் கோட்டமட்டத்தில் முதலாம் இடம் பெற்றது மட்டுமன்றி, வலயமட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

**மன்றங்கள்**

சமயமன்றம் மாணவர்களிடையே சமயகுரவர் குருபூசை, நவராத்திரி விழா, நவராத்திரிப் போட்டி, நீதிநூற் போட்டி, சமய கலாசாரப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி விஜயதசமி அன்று பரிசில்களை வழங்கி வருகின்றது. மாணவர் மன்றம் மாதந்தோறும்கூடி மாணவர்களது பல்வேறுபட்ட ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாகப் பல கலைநிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. இதன் மூலம் முத்தமிழ்த் திறன்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

ஆசிரியர்களின் நலன்களில் அக்கறை காட்டி வரும் இச்சங்கம், ஆசிரியர்களின் மங்கல அமங்கல நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றது. இடமாற்றம், ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டு விழாவைச் சிறப்பாகநடாத்திவருகின்றதோடு, ஏழை மாணவர்களுக்கும் உதவி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் நலன்புரிச்சங்கம், இலங்கை வங்கி, காங்கேசன்துறைக்கிளையில் நடைமுறைக்கணக்கை ஆரம்பித்து வரவு செலவு விபரங்களைப் பேணி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

பாடசாலையின் அபிவிருத்தி, சிரமதான நிகழ்வு, இணைபாடவிதானச் செயற்பாடுகளிற் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மிகவும் கடமையுணர்வுடன் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், திரு.வ.மதிவண்ணன் அவர்களும், உபசெயலாளர் திரு.வை.பாலச்சந்திரன் அவர்களும், ஏனைய உறுப்பினர்களும் அக்கறையுடன் செயற்பட்டு வேலைத்திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்குக் கைகொடுத்தமை பாராட்டத்தக்கது.

**பழைய மாணவர் சங்கம்**

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலைக்குப் பலவித செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது. அந்த வகையில் எமது வித்தியாலயத்தின் பழைய மாணவராகிய மதிப்புமிக்க துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பணிகள் மறக்க முடியாதவைகளாகவும், நன்றிக்குரியவைகளாகவும் அமைந்துள்ளன. அதேபோன்று ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் திருவாளர் S.விக்னராஜா அவர்களின் பணிகளும் பாராட்டுதற்குரியதாகும். இவர் மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்காக, ஆசிரியர் ஒருவரை நியமித்து மாதம் 1500 ரூபா சம்பளம் வழங்கி, ஞாயிற்றுக்கிழமை தோறும் வகுப்பு நடாத்தி வருவது பாராட்டிற்குரியது. அத்துடன் பழையமாணவர் சங்கச் செயலாளர் திரு.பொ.சகீந்திரன் அவர்கள் பாடசாலைக்குரிய பல வேலைகளைச் செய்துதவியமை பாராட்டத்தக்கது.

**பாடசாலைத் தேவைகள்**

யான் இப்பாடசாலையில் 01.09.2005இல் அதிபராகப் பொறுப்பேற்ற வேளையில், ஆசிரிய ஆளணியினர் எழுவர் (7) நிரந்தர ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். 234 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். அப்போதைய பாடசாலையின் தோற்றம் வகுப்பறைகள் திறந்த வகுப்பறைகளாகவும், பாடசாலையைச் சூழவுள்ள எல்லைகள் சாதாரண வேலிகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டும், பாடசாலையின் முற்றம், கல்லும் குழியுமாகக் காணப்பட்டதுடன், சமையல் அறை பூரணப்படுத்தப்படாமல் காணப்பட்டது. அன்றைய நிலையில் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டிற்கு ஆசிரியவளம் பற்றாக்குறையாகக் காணப்பட்டதும் ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். இவையனைத்தும் குறுகிய காலத்தில் மாற்றமடைந்து காணப்படுவது யாவரும் அறிந்ததே. எனது சேவைக்காலத்தில் இப்பாடசாலையினை ஒரு பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தியை மையமாகக் கொண்டு கட்டி எழுப்புவதே எனது குறிக்கோளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் திறந்த வகுப்பறைகளாகக் காணப்பட்ட பாடசாலைக் கட்டடம், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவி மூலம் பாதுகாப்பான வகுப்பறைகளாக அமைக்கப்பட்டதுடன், பாடசாலையின் எல்லைகள் மதில் கட்டிப் பாதுகாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் மண்டபத்திலுள்ள வகுப்பறைகள் தனியறைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் வகுப்பாசிரியர்களுக்கும் உருக்கு அலுமாரி வழங்கியதன் மூலம் கற்றல், கற்பித்தல் உபகரணங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் வசதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் தொலைக்காட்சிப் பெட்டி, கட்புல செவிப்புல சாதன இயக்கிகள், வீடியோ டெக், டிவீடி பிளேயர், கணினி போன்றவற்றின் மூலம் மாணவர்களின் கட்புல செவிப்புல விருத்தி அடைவதற்கு ஏற்றதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை முற்றத்தில் காணப்பட்ட கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு குழிகள் மண்ணால் நிரப்பப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது. எமது பாடசாலையின் பழைய மாணவன் திரு.கிரி அவர்கள் குறைந்த செலவில் அழகிய ஓவியங்களை வரைந்து பாடசாலையினை அழகுபடுத்தியுள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

எமது பாடசாலையின் பௌதிக வளங்கள் பற்றாக் குறையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. வகுப்பறைப் பற்றாக்குறை காணப்படுவதுடன் ஆசிரியர், மாணவர்களுக்கான தளபாடங்களும் தேவையாகவுள்ளன. நூலகத்திற்குத்தேவையான அலுமாரிகளும், தளபாடங்களும் பற்றாக் குறையாக இருப்பதுடன் நூலக அறை பாதுகாப்பாக சீர் செய்யவேண்டி உள்ளது. அத்துடன் மாணவர்களுக்குரிய விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவதற்காக நாம் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கு, அயற்பாடசாலை விளையாட்டு மைதானத்திற்குச் செல்லவேண்டியுள்ளது. சின்னஞ் சிறார்களை நீண்டதூரத்திற்கு வாகன நெரிசல்களுக்கு மத்தியில் அழைத்துச் செல்வது கடினமானதொன்றாகும். எனவே, எமது பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இன்றியமையாதது என்பது வெளிப்படை உண்மையாகும் எமது இத்தேவைகளை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், இவை தொடர்பாக உகந்த நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என நம்பிக்கை கொள்கின்றேன்.

**பரிசளிப்பு விழாவுக்கான அன்பளிப்புக்கள்**

பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கெனத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் மதிப்புமிக்க கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் ஒவ்வொரு வருடமும் நிதியுதவி வழங்கி வருவது பாராட்டிற்குரியது. இவ்வருடமும் பரிசளிப்பு விழாவுக்கென 10,000/- ரூபாவினை வழங்கியுள்ளமை நன்றிக்குரியது. மேலும் எங்கள் பாடசாலை ஆசிரியர் திருமதி ந.தர்மதயாளன் அவர்கள் தனது தந்தை திரு.மா.நவரத்தினம் நினைவாக 3000/- ரூபாவும், திரு.கா.சிவபாலன் அவர்கள் 500/- ரூபாவும், திரு.த.தவச்செல்வன் அவர்கள் 1000/- ரூபாவும், K.நவீந்திரன் அவர்கள் 500/- ரூபாவும், ராஜாகொம்ளெக்ஸ் உரிமையாளர் திரு.ஆ.இராஜசிங்கம் அவர்கள் 500/- ரூபாவும், திரு.ஆறுமுகநாதன் 1000/- ரூபாவும், திரு.எஸ்.ஸ்ரீஸ்கந்தவேல் 1000/- ரூபாவும் வழங்கியுள்ளனர். பழைய மாணவியும், கலைமகள் முன்பள்ளி ஆசிரியையான செல்வி இ.பரஞ்சோதி அவர்கள் தனது பெற்றோர் திரு.திருமதி.இளையதம்பி ஞாபகார்த்தமாக 500/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாவும் செல்வி த.ரங்கேஸ்வரி அவர்கள் தனது தந்தை திரு.தங்கராசா அவர்களின் நினைவாக 500/– ரூபாவினையும் அன்பளிப்பாக வழங்கிச் விழாவை சிறப்பித்துள்ளனர்.

இப்பாடசாலையில் மாணவர் வழிபாட்டிற்கென வழிபாட்டுத்தலம் ஒன்று தற்போதைய அதிபர் திரு மா.ஆனந்தகுமார் அவர்களின் மாமியார் அமரர் திருமதி.இராசா பாக்கியம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது மகன் திருவாளர் இராசா இராமச்சந்திரன் அவர்களின் 150 000/– ரூபா நிதி அனுசரணையுடன் அமைக்கப்பட்டு 30.05.2007 இல் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருவாளர் ச.கைலாசநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதேபோன்று பாடசாலையில் நடைபெறுகின்ற கலைநிகழ்வுகளின்போது பயன்படுத்தக் கூடிய வகையில் தற்பொழுது பிரதி அதிபராகக் கடமையாற்றும் திருமதி பாக்கியலக்சுமி தவக்குமார் அவர்கள் கலைநிகழ்வுகள் நடைபெறும் அரங்கத்திற்குரிய திரைச்சீலையினை 20 000/– ரூபா பெறுமதியில் செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இத்திரைச்சீலை 175ஆவது ஆண்டு நிறைவுமலர் வெளியீட்டு நாளான இன்று முதற் தடவையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இவ்விழாவுக்கு வேண்டிய மண்டப ஒழுங்கு, மண்டப அலங்காரம் என்பவற்றை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பழைய மாணவர் சங்கத்தினரும், பெற்றோர்களும் செய்துதவியுள்ளனர். அத்துடன் 175ஆவது அகவை நிறைவு மலரினை வெளியிட ஆக்கங்கள் தந்துதவிய கல்வியாளர்களுக்கும், நிதியுதவி, விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகர்களுக்கும், அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களை விற்பனை செய்துதவிய எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் மலரினை சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய யாழ்ப்பாணம் கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது பாடசாலைச் சமூகம் சார்பில் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் மலரினை சிறந்த முறையில் வெளியிட முன்னின்று உழைத்த மலர்க்குழுத் தலைவர் திரு.சீ.அமரசிங்கம் ஆசிரியருக்கும், செயலாளர் திரு.சி.சிவனேஸ்வரன் ஆசிரியருக்கும், மலராசிரியர் திருமதி சி.தவனேஸ்வரி ஆசிரியைக்கும், அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களை விற்பனை செய்து நிதி சேகரித்துதவிய எமது வித்தியாலய முன்னாள் பிரதி அதிபர் திருவாளர் அ.இரத்தினசிங்கம் அவர்களுக்கும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு பொ.சகீந்திரன் அவர்களுக்கும், மலர்க்குழுவினருக்கும் எனது நன்றிகள்.

அடுத்து இவ்விழா சிறப்பாக நடைபெறச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு எனது உரையினை நிறைவு செய்து அமைகின்றேன்.

நன்றி

அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (யா/அமெரிக்கன் மிசன்)

# பாடசாலையின் வரலாறு



திரு.மு.அருளையா
இளைப்பாறிய அதிபர்
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்

19ஆம் நூற்றாண்டு ஆரம்ப காலத்தில் இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சி நிலவிய காலம். அக்காலத்தில் இலங்கைக்கு வந்த அமெரிக்கர் யாழ் குடாநாட்டுக்கும் காலடி எடுத்து வைத்தனர்.

அப்போது யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் தலைதூக்கி நின்ற காலம். ஆனால், கல்வி அறிவு பின்தங்கிக் காணப்பட்டது. ஒரு சில கல்வி நிறுவனங்கள் (திண்ணைப் பள்ளி) மட்டும் இருந்தன. இதில் வசதி படைத்தவர் களுக்கு மட்டும் வாய்ப்பு ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் அமெரிக்கன் மிஷன் மதகுருமார் யாழ்குடா நாட்டின் சில குறிப்பிட்ட இடங்களில் தங்கியிருந்து, அங்குள்ள கள நிலைகளை ஆராய்ந்து, தமது சமயத்தைப் பரப்ப வழி சமைத்தனர். இதன் அடிப்படையில் பின்தங்கிய மக்களுக்கு கல்வியைப் போதிப்பதற்குச் சிறுசிறு கொட்டில்கள் அமைத்து வந்தனர். இது யாழ் மக்களின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

1816ஆம் ஆண்டு அமெரிக்கன் மிஷன் சங்கத்தைச் சேர்ந்த வண பிதா டானியல் பூவர், வண பிதா எட்வேட் வாறென் ஆகியோர் தெல்லிப்பழையை வந்து அடைந்தனர். அவர் களின் விடாமுயற்சியால் தமது மதப்பணியையும், கல்விப்பணியையும் ஆரம்பித்தனர். இதன் முதல் கட்டமாக தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம் போன்ற இடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வரிசையில் மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமைந்த, ஒரு காணியில் 1817ஆம் ஆண்டில் சிறு கொட்டில் அமைத்து கல்வி ஊட்டும் நோக்கில் சமயம் பரப்ப ஆரம்பிக்கப் பட்டது. இதனால் மல்லாகம் கிராம மக்கள் பலமுறை கொட்டில்களை எரித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். சலிப்புற்ற பூவர் மல்லாகத்தில் வசித்து வந்த திரு.நா.தில்லையம் பலம் என்பவரின் அனுசரணையைப் பெற்று, தமது முயற்சியை 1832 ஆம் ஆண்டு தற்போது அமைந்துள்ள வளவில் சிறு கொட்டிலை மீண்டும் அமைத்து திரு.நா.தில்லையம்பலம் அவர்களைப் பொறுப்பாக நியமித்துத் தமது பணியை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் பத்து மாணவர்களுடன் ஆரம்பித்த அமெரிக்க மிஷன் பாடசாலை படிப்படியாக வளர்ச்சிபெற்றதால் உதவி ஆசிரியராக திருமதி.தையல்நாயகி தில்லையம்பலம் நியமிக்கப்பட்டார். இதனால் இவர்கள் இருவரும் சேர்ந்து மக்களைக் கவர்ந்து எடுத்தமையால் மல்லாகம் கிராம மக்களின் எதிர்ப்பு படிப்படியாக மறைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சேவையில் பற்றுக்கொண்ட மக்கள் இவரை "தில்லையம்பலச்சட்டம்பியார்" என அன்புடன் அழைத்தனர்.

இப்பாடசாலையின் அமைவிடம் கல்லுகள் நிறைந்த பள்ளமும், மேடுமாக இருந்தமையால் இதனை மக்கள் "கலட்டிப் பாடசாலை" எனப் புனைபெயர் சூட்டி அழைத்தனர் (இன்றும் அப்பெயர் வழக்கத்தில் உள்ளது).

திரு.நா.தில்லையம்பலம் அதிபர் இளைப்பாறிய பின் திரு.எஸ்.அம்பலவாணர் அவர்கள் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று சிறிது காலத்தில் இளைப்பாறியபின், திரு.ஏ.அமிர்தவாசகம் அதிபர் அவர்கள் 13.12.1926 தொடக்கம் 31.10.1935வரை பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றார். அவரைத்தொடர்ந்து திரு.அ.த.வைத்திலிங்கம் அதிபர்அவர்கள் 01.11.1935 தொடக்கம் 31.12.1945 வரை நற்பணி புரிந்து வந்தமையால் வளர்ச்சி அடைந்து 156 மாணவர்களையும் 6ஆசிரியர்களையும் கொண்டு விளங்கியது.

இவர் இளைப்பாறியபின் திரு.ஜே.தேவசகாயன் அதிபர் அவர்கள் 11.01.1946 தொடக்கம் 31.12.1970 வரை சேவை யாற்றினார். இவருக்கு உதவிஅதிபராக பண்டிதர் ச.பொன்னுத்துரை அவர்களும் பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்தமையால் இக்காலம் இப்பாடசாலையின் "பொற்காலம்" எனக் குறிப்பிடலாம்.

அப்போது இருந்த வடமாகாணப் பாடசாலைகள் மட்டத்தில் இப்பாடசாலையும் பல துறைகளிலும் முதன்மை பெற்று விளங்கியது. அத்துடன் 1953 ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. சாதாரண வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட துடன் வருடா வருடம் நல்ல பெறுபேற்றையும் பெற்று விளங்கியது.

மாணவர்கள் கல்வி கற்பதற்கு நல்ல வசதிகள் தேவையெனக் கருத்திற் கொண்டு கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் 110'x20' அளவுடைய கட்டிடம்ஆறுமாத காலத்திற் கட்டிமுடிக்கப்பட்டது. இன்று இக்கட்டிடம் "தேவசகாயம்" மண்டபமாக புதுப் பொலிவுடன் விளங்குகின்றது.

இலங்கைத் தமிழாசிரியர் சங்க வட மானிலச் செயலாளராகக் கடமையாற்றிய தமிழ் அறிஞர் பண்டிதர் ச.பொன்னுத்துரை அவர் களும், அதிபர் ஜே.தேவசகாயம் அவர்களும் 1955ஆம் ஆண்டு மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அப்போதைய கல்வித் திட்டத்திற்கு அமைவாக உயர் கல்வி நிறுவன வகுப்புக்களை ஆரம்பித்தனர். இந்நிறுவனத்தில் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர். பண்டிதர், சைவப்புலவர், லண்டன் க.பொ.த உயர்தர தேர்வு, பட்டத்தேர்வு ஆசிரியர் புதுமுக வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

இந்நிறுவனத்தில் கல்வியூட்டிய ,அறிஞர்கள் எதுவித பொருளாதார நோக்கமும் இன்றி, சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தமை குறிப்பிடத்தக்கது, இந் நிறுவனத் தில் கல்வியூட்டிவர்கள் பண்டிதர் ச.பொன்னுத் துரை, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் க.நாகலிங்கம், பண்டிதர் சி.சின்னத் துரை, பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை, பண்டிதர் சி.நமசிவாயம், பண்டிதர் செ.துரைசிங்கம், நவாலியூர் காசி, நாகரத்தினம் பண்டிதரும் சைவப்புலவரும் சிறப்புக்கலைமாணியுமாகிய மு.கந்தையா, வித்துவான் சைவப்புலவர் ச.கந்தசுவாமி, மாவை கு.பாலசுந்தரக்குருக்கள் ஆகியோர் ஆவர். இங்கு தமிழ் இலக்கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம், சமஸ்கிருதம், சைவசமயம் ஆகிய பாடங்கள் புகட்டப்பட்டது. முதன்முதலாக 1964 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பண்டிதர் பரீட்சையில் த.இராசரத்தினம், கு.மனோன் மணி, த.அன்னலட்சுமி, இ.இராசபூபதி, சி.பொன்மணி, க.ஜெயமணி, க.பரமேஸ்வரி ஆகியோரும் சைவப்புலவர் தேர்வில் கு.மனோன்மணி முதன்மைச்சித்தி பெற்றமை சிறப்பம்சமாகும்.

சமஸ்கிருதத் தேர்வில் சி.குணரத்தினம் சி.பொன்மணி, த.அன்னலட்சுமி, வே.சண்முக லிங்கம் ஆகியோர் சித்தியடைந்தனர். லண்டன் பட்டத்தேர்வில் காரை செ.சுந்தரம்பிள்ளை, புவனேஸ்வரி, செல்வரத்தினம், லீலாவதி, சுபத்திராதேவி, அ.நாகரத்தினம், கதிர்காம நாதன், கந்தசாமி, மயில்வாகனம், குண ரத்தினம், கனகமணி ஆகியோர் லண்டன் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையிற் கல்விக் கொள்கை காலத்துக்குக் காலம் மாறி விஞ்ஞான பாடத்திற்கு முதன்மை அழித்தமையால், காலப் போக்கில் இந்நிறுவனம் மூடப்பட்டது.

இப்பாடசாலை 1961 ஆம் ஆண்டு வரை அமெரிக்கன் மிஷன்மாரின் நிர்வாக கட்டமைப்பில் இருந்து வந்தமை சகலரும் அறிந்த விடயமாகும். 1.1.1961 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டது.

31.12.1970 வரை இப்பாடசாலையில் ஏழாலைக் கிராமத்தைச் சேர்ந்தோரும், அமெரிக்கன் மிஷன் சமயத்தைச் சார்ந்தோரும் அதிபர்களாகக் கடமையாற்றியமை குறிப்பிடத் தக்கது.

31.12.1970 ஆம் ஆண்டு திரு .ஜே.தேவ சாகயன் அதிபர் அவர்கள் இளைப்பாறிய பின், 1.1.1971 ஆம்ஆண்டு தொடக்கம் 31.12.1972 வரை திரு .த. இராசரத்தினம் அதிபர் அவர்கள் கடமையாற்றினார்.

கல்வி அமைச்சினால் முன் வைக்கப் பட்ட பாடசாலைகள் புனரமைத்தலின்படி 01.01.1972 ஆம் ஆண்டு தொடக்கம் மல்லாகம் மகா வித்தியாலத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது. அப்போது முதலாம் தரம் தொடக்கம் க.பொ.த. சாதாரண வகுப்புவரை 412 மாணவர்களும் 14ஆசிரியர்களும் மேல்வகுப்பு தளபாடங்கள், பாடசாலைக்குரிய சகல ஆவணங்களும், மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் திரு.க.சிவ சுப்பிரமணியம் அவர்களிடம் கையளிக்கப் பட்டன. இதனால் 1832 ஆம் ஆண்டு தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரை யா/மல்லாகம் அமெரிக்கன் மிஷன் என்ற பெயருடன் இயங்கி வந்த இப்பாடசாலை 01.01.1972 ஆம் ஆண்டு மல்லாகம் மகா வித்தியாலய ஆரம்ப பாடசாலை யாகப் பெயர் மாற்றப்பட்டது.

மல்லாகம் மகா வித்தியாலய அதிபரின் மேற்பார்வையில் ஆரம்ப பாடசாலை அதிபர்களாக திரு வீ.கனகசபாபதி, திரு.S.இம் மானுவேற்பிள்ளை, செல்வி.S.நன்னித்தம்பி திரு.ச.வேலாயுதபிள்ளை ஆகியோர் கடமை யாற்றினார்கள்.

இக்கால கட்டத்தில் ஆரம்ப பாட சாலைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு காங்கேசன்துறை கல்வி வட்டா ரத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளைத் தனித்துவமாக இயங்கவைக்கும் நோக்குடன் 1979 ஆம் ஆண்டு, யா/யூனியன் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையை யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி எனவும், யா/நடேஸ் வராக்கல்லூரியின் ஆரம்ப பாடசாலையை யா/நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலம் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மல்லாகம் மகா வித்தியாலய ஆரம்ப பாடசாலையை, யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் எனவும் பிரித்து, தனித்தனி அதிபர்களின் நிர்வாகத்தில் கையளிக்கப்பட்டது.

இதன் வழியில் 1.1.79 ஆம் ஆண்டு யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முதல் அதிபராக திரு.சு.வேலாயுதபிள்ளை நியமிக்கப் பட்டார். அப்போது 250 மாணவர்களுடனும் 8 ஆசிரியர்களுடனும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் காலத்தில் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கமாக 1980 ஆம் ஆண்டு முதன்முதலில் பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலைக்கு என ஒரு பாடசாலைக்கீதம் வடிவமைக்கப்பட்டு இன்றும் அதனைக் கைக் கொண்டு வருகிறார்கள். அத்துடன் பரிசளிப்பு விழா நிதியும் ஆரம்பிக்கப்பட்டது. இதில் வரும் வருட வட்டியில் பணம் செலுத்தியோர் பெயரில் மாணவர்களுக்குப் பரிசுப்பொருட்கள் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் மல்லாகம் கிராமச் சங்கத்தலைவர் திரு.சு.ஸ்ரீபாஸ்கரன் உதவியுடன் மின் இணைப்புப் பெறப்பட்டது.

1980 ஆம் ஆண்டு 30'x18' அடி அளவு கொண்டகட்டடமும் 1981 ஆம் ஆண்டு 40'x20' அடி அளவுகொண்ட கட்டடமும் கல்வித் திணைக்கள உதவியுடன் அமைக்கப்பட்டன. காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தில் ஆரம்ப பாடசாலைகளில் ஒன்றாக பல்துறைகளில் முதன்மை பெற்று விளங்கியது.

திரு சு. வேலாயுதபிள்ளை அதிபர் 21.01.1986 ஆம் ஆண்டு தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமையால், அவரின் இடத்திற்கு திரு.மு.அருளையா அதிபர் அவர்கள் 21.01.86 தொடக்கம் 31.01.96 வரை கடமையாற்றினார். பாடசாலை ஆவணங்களுடன் சப்றா நிறுவ னத்தில் வைப்பிலிட்ட பரிசளிப்பு விழா நிதி 4000/= ரூபாவும் அப்போது 342 மாணவர் களுடனும் 6 உதவி ஆசிரியர்களுடனும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் காலத்தில் கரடு முரடான கற்களைக் கொண்ட நிலப்பரப்பை மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு.சு ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் உதவியைப் பெற்று, குளமண் கொட்டி, மேற்படி நிலப்பரப்பு ஓரளவு சமப்படுத்தப்பட்டது.

மாணவர் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட்ட அளவுக்கு உப பாட விதானத்தி லும் கவனம் செலுத்தப்பட்டது. முதன் முதலில் மாணவர்கள் ஆசிரியர்களை மூன்று இல்லங் களாய் வகுத்து 1986 ஆம் ஆண்டு விளை யாட்டுப் போட்டி மிகச்சிறப்பாக நடாத்தப் பட்டது.ஆண்டுதோறும் (இடம் பெயரும் வரை) ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆண்டுதோறும் பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் கொண்டாடப்பட்டது.

1987 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவின்போது மேற்படி பாடசாலையிற் கடமையாற்றிய அதிபர்களின் திருவுருவப் படங்களையும், பிரதான மண்டபத்திற்கு "தேவசகாயன்" மண்டபம் என்ற பெயரையும் சட்டத்தரணி திரு.நமசிவாயம் அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டது. அத்துடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் வாசிப்புத் திறன் வளர்க்கப்படும் நோக்கமாக நூல்களை சேகரித்து வைப்பதற்கு திரு.சு.ஸ்ரீபாஸ்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஒரு அலுமாரியை அன்பளிப்புச் செய்தார்.

1987 ஆண்டு இந்திய இராணுவ நடவடிக்கை காரணமாக காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு இப்பாடசாலை புகலிடம் கொடுத்ததோடு இடம் பெயர்ந்த பாடசாலைகளாகிய யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் ம. வி, யா/தையிட்டி கணேச வித்தியாலயம், யா/ மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம். யா/வறுத்தலை விளான் அ.மி பாடசாலைகளுக்கு கற்றல், கற்பித்தல் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக இடநெருக்கடி களைக் கருத்திற்கொண்டு குளமங்கால் கத்தோலிக்க திருச்சபைப் பாதிரியார் 7000 ரூபா அன்பளிப்புச் செய்ததோடு பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்களின் உதவியுடன் மேற்குப் புறத்தில் 60'x20' அடி கொண்ட ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இக்கட்டடம் 2.11.1988 அம் ஆண்டு பிரதம கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய உயர் திரு. கு. சோமசுந்தரம் அவர்களாலும் மாணவரின் விளையாட்டுப் பூங்கா, வட்டாரக் கல்வி அதிகாரி திரு.சண்முகராசா அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் 540 மாணவர்களும் 18 உதவி ஆசிரியர்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேஆண்டு 1.09.95 இல் "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் புகலிடம் பெற்று, அங்கு 350 மாணவர்களுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கையில் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்று, யா/மட்டுவில் தெற்கு அ.மி. பாடசாலையில் மாணவர்கள் அற்ற நிலையில் 10ஆசிரியர்களுடன் தற்காலிகமாக இயங்கியது. அவ்வேளை திரு.மு.அருளையா அதிபர் அவர்கள் 31.01.1996 ஆம் ஆண்டு இளைப்பாறினார். அந்தக் கால கட்டத்தில் உப அதிபராக இருந்த திருமதி ஸ்ரீ. புஸ்பநாதன் அவர்களிடம் 01.02.96 இல் கையிற் கொண்டு சென்ற சில ஆவணங்களும், நிதி சம்பந்தமான ஆவணங்களும், கையளிக்கப்பட்டதுடன்.தேசிய சேமிப்பு வங்கியில் பரிசளிப்பு விழா வைப்பு நிதியான 22000 ரூபாவும், சப்றா நிறுவனத்தின் வைப்பிலிருந்த 9700/= ரூபாவும் கையளிக்கப் பட்டது. நாட்டின் சூழ்நிலை காரணமாக அவர் 28.02.96 ஆம் ஆண்டு வன்னிக்குச் சென்றமை யால் செல்வி சி.கெங்காமலர்தேவி 01.03.1996 தொடக்கம் 13.12.2004 வரை அதிபராகக் கடமையாற்றினார்.

அவரின் ஆரம்ப காலம் ஒரு நெருக்கடியான நேரம் 11.03.96 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஏப்பிரல் வரை மட்டுவில் சரஸ்வதி வித்தியாசாலையில் உதவி ஆசிரியர் களுடன் கடமையாற்றினார். மீண்டும் யாழ் குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர்ந்து வந்தனர். இதன் பயனாக யாழ் குடாநாட்டில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது.ஆனால் மல்லாகம் சந்திக்கு அப்பால் மக்களைக் குடியிருக்க அனுமதிக்கவில்லை. இதனால் சொந்த இடத்தில் பாடசாலையைத் தொடர முடியாமல் யா/இராமநாதன்கல்லூரியில் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுடன் இணைந்து ஒரு ஆசிரியருடனும் 10 மாணவர்களுடனும் சேவையாற்றி வந்தார். 6.01.1997 ஆம் ஆண்டு சொந்த இடமாகிய யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் வைத்தனர். அப்போது இங்கு கட்டடத்தைத் தவிர எந்த ஒரு பொருட்களும் இருக்கவில்லை.

அதிபரின் முயற்சியாலும் வலிகாமம் கல்வி வலய உதவியுடனும், அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் உதவியுடனும் படிப்படியாக வளர்ச்சி அடைந்தது. மீண்டும் பாடசாலை தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம், கல்விவலயம், போன்றவற்றில் கல்வியிலும் பிற வேலைத் திட்டங்களிலும் முதன்மை பெற்று விளங்கியது.

இவரின் முயற்சியால் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் பாடசாலையின் முன்புற எல்லைக்கு மதில் அமைக்கப்பட்டது. பிரதான மண்டபத்தின் தென் பகுதியில் 20 அடி நீளமான மேடை அமைக்கப்பட்டும், மாணவரின் கல்வி அபிவிருத்திக்காக நீள மேசைகள், வாங்குகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யூனிசெவ் ஸ்தாபன உதவியுடனும் மருதனார்மட வலயக் கல்வித் திணைக்கள உதவியுடனும் 40'x20' அடி கட்டடத்தை மாதிரி வகுப்பறையாக மாற்றி அமைக்கப்பட்டது. சுகாதார வசதியை ஏற்படுத்தும் நோக்கில் மாணவர்களுக்கு மலசலகூடம் அமைக்கப்பட்டது. அத்துடன் மாணவர்கள் விளையாடி மகிழ்வதற்கு "சறுக்கீஸ்" அமைக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு மாணவர்கள் இலகுவாக நீர்பெறும் நோக்குடன் கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தண்ணீர்த்தாங்கியும், முன்கேற்றும், நூலகத்திற்கு என ஒரு அலுமாரியும் தனது சொந்தப் பணத்தில் அன்பளிப்புச் செய்தார்.

இப்பாடசாலையில் கடமையாற்றிய இளைப்பாறிய ஆசிரியை திருமதி செல்வராணி நடராசா அவர்களால் பாடசாலைப் பெயர் முன் வளைவு அன்பளிப்புச் செய்யப்பட்டது. விளையாட்டுப் போட்டி வைப்புநிதியாக திரு .சி. விக்கினராஜா 25000ரூபா அன்பளிப்புச் செய்தார்.

பாடசாலையின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள 3/4 பரப்புக் காணியைப் பாடசாலையுடன் வாங்கிச் சேர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டு பணம் சேகரிக்க முன்வந்தபோது, இப்பாடசாலையில் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியை செல்வி ஞானலக்சுமி நமசிவாயம் அவர்கள் 10,000ரூபா அன்பளிப்புச் செய்து ஆரம்பித்து வைத்தார். இதனால் மொத்தமாக 32,330/=ரூபா சேர்க்கப்பட்டது.

மேற்படி காணியை வாங்குவதற்குப் பணம் போதாமையினால், திரு.சி.விக்கினராஜா அவர்கள், தனது சொந்தப் பணத்தில் வாங்கித் தருவதற்கு முன்வந்தமையால், சேகரிக்கப்பட்ட பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியாக நிரந்தர வைப்புச் செய்யப்பட்டது.

கனடாவில் வசிக்கும் திரு.தர்மரட்ணம் பழைய மாணவர்கள் நிதியாக 50740/= ரூபாவைச் சேகரித்து அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவரின் நிர்வாகத் திறமையினால் இப்பாடசாலை பழைய நிலைக்கு வளர்ந்தமை போற்றுதற்குரியது ஆகும்.

இவர் 14.12.2004 ஆம் ஆண்டு இளைப்பாறினார். இவரின் இடத்திற்கு திரு.ச.சிவானந்தராஜா அதிபர் அவர்கள் 15.12.2004 தொடக்கம் 15.08.2005 வரை கடமையாற்றினார். இவரிடம் பாடசாலை ஆவணங்களுடன் பரிசளிப்பு விழா நிரந்தர வைப்பு நிதியாக 22000ரூபாவும், அதன் வட்டி 56020 ரூபாவும், சப்றா நிறுவன வைப்பு நிதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3787/= ரூபாவும், விளையாட்டு வைப்பு நிதியாக 25000/= ரூபாவும், பாடசாலை அபிவிருத்தி நிதியாக 85000/= ரூபாவும், பழைய மாணவர் சங்க நிதியாக ரூபா 24,593.68 சதமும் கையளிக்கப்பட்டது.

திரு.த.சிவானந்தராஜா மாணவர்களின் நன்மை கருதி சமையல் அறை அமைக்க ஆரம்பித்த சமயம் 15.08.2005 ஆம் ஆண்டு பதவி உயர்வுடன் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் செல்லும்போது, உப அதிபராக கடமையாற்றிய திருமதி பா.தவக்குமார் அவர்களிடம் பாடசாலை ஆவணங்களையும் பொறுப்பையும் ஒப்படைத்துச் சென்றார்.

நிரந்தர அதிபராக திரு.மா. ஆனந்தகுமார் அவர்கள் 01.09.2005 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவர் மாணவர்களின் கல்வி வளர்ச்சியுடன் பாடசாலை வளங்களையும் வளர்க்க முற்பட்டார். ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்களின் உதவியுடன் பாடசாலை முன்முற்றத்தில் உள்ள கற்களைக் கிளறி எடுத்து, களிமண் நிரப்பி, சிறந்த விளையாட்டு மைதானமாக்கினர். திரு. ச. சிவானந்தராஜா தொடங்கிய 20'x20' அளவுடைய சமையற் கட்டடத்தைப் பூரணப்படுத்தியதுடன் 10'x10' அளவுடைய கணினி அறையும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பிடம், நீர் விநியோக விஸ்தரிப்பும் அமைக்கப்பட்டன. இடம்பெயர்ந்த பாடசாலைகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிசெய்ய முன்வந்தபோது, எமது பாடசாலைக்கும் சில நிறுவனங்களின் உதவி கிடைத்தது. யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் முன் இருந்த 30'x20' அளவுடைய முதலாம் ஆண்டு வகுப்பறை நவீன கற்பித்தலுக்கு அமைவாக மாற்றி அமைக்கப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் 110'x20' அளவுகொண்ட பிரதான மண்டபம் மூடிப் பாதுகாப்புச் செய்யப்பட்டது. கிழக்கு மேற்கு தெற்குப் பக்கத்திற்கு 300அடி நீளமான மதில் நிர்மாணிக்கப்பட்டது. மாணவர்கள் ஆரோக்கியமாக விளையாடு வதற்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய முற்றம் அமைக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தின் பிள்ளை நேயப் பாடசாலையாக எமது பாடசாலையைத் தெரிவுசெய்து சில உதவிகளைச் செய்ய முன்வந்தது. அதன் பயனாகக் கணினி, T.V டெக், நூலகஅலுமாரி 2, இரும்பு அலுமாரி 8, ஆகியன வழங்கப்பட்டன.

P.S.G.D நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் 90'x25' அடி விஸ்தீரணம் கொண்ட இருமாடிக் கட்டடம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போதுள்ள அசாதாரண நிலை காரணமாக இடை நிறுத்தப்பட்டது.

பாடசாலையின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள 3/4 பரப்புக் காணியை வாங்குவதற்கு வழி அமைத்த முன்னாள் அதிபர் செல்வி சி.கெங்காமலர்தேவியின் முயற்சியை, இலங்கை வங்கி முகாமையாளர் திரு.சி.விக்கினராசா அவர்களின் நிதி உதவியுடன் தற்போதைய அதிபர் நிறைவு செய்துள்ளார்.

திரு. மா.ஆனந்தகுமார் அவர்களின் மாமியாராகிய இராசா பாக்கியம் ஞாபகார்த்தமாக இராசா இராமச்சந்திரனின் அன்பளிப்புடன் பாடசாலையில் 1 1/2 லட்சம் ரூபா செலவில் மாணவர்களின் சமய மேம்பாட்டுக்காக வழிபாட்டுத்தலம் ஒன்று அமைக்கப்பட்டது.

பாடசாலையின் பிரதிஅதிபர் திருமதி பா.தவக்குமார் அவர்கள் ரூ 20,000/= செலவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைக்குரிய திரைச்சீலை ஒன்றினைப் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக முன்னாள் அதிபர்கள் முயற்சி செய்தும் கைகிட்டாதுபோன பாடசாலையின் வரலாற்று நூலை 175 ஆம் ஆண்டை முன்னிட்டு வெளியிட முன்வந்த பெருமை இவரிற்கு உரியதாகும்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பித்த காலம் தொடக்கம் மேற்படி பரீட்சையில் ஒருவர், இருவர் என்ற ரீதியில் படிப்படியாக வளர்ச்சியடைந்து 2007 ஆம் ஆண்டு ஆறு மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்கும் நோக்கமாக இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர் திரு.சி.விக்னராஜா அவர்கள் தனது பணத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒரு ஆங்கில ஆசிரியரை அழைத்து வகுப்பு நடாத்தி வருகிறார் என்பது பாராட்டத்தக்க தாகும்.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழாவிற்கு நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடக் கூடிய பெருமையாகும்.

இப் பாடசாலைக்கு ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை பலதுறைகளிலும் உதவியளித்த கொடை வள்ளல்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடாவிட்டாலும் என்றும் அவர்களுக்கு இப்பாடசாலைச் சமூகம் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவர்.

இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்களில் பலர் பண்டிதர், சைவப்புலவர், பட்டதாரி ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள் இன்னும் பலதுறை சார்ந்த நிறுவனங்களில் உயர் பதவிகள் வகித்து வருவது கூடிய பெருமையாகும்.

அமெரிக்கன் மிஷனறியினரால் 1832 ஆம் ஆண்டு 10 மாணவர்களுடனும் ஒரு ஆசிரியரு டனும் சிறு கொட்டிலுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 175 ஆவது ஆண்டு வளர்ச்சியில் 230 மாணவர்களையும் 15ஆசிரியர்களையும் தன்னகத்தேகொண்டு ஆல விருட்சமாக விளங்குகின்றது. இதற்கு அன்று தொட்டு இன்று வரை சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களுடன், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை எடுத்து விளக்கி நிற்கின்றது. இவ்வித்தியாலம் மேலும் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று விளங்க இறைஅருள் கிட்டுவதாக இவ் வித்தியாலயத்தின் வரலாற்றை முன்வைப்பதற்கு "காங்கேசன் கல்வி மலர்", பாடசாலையுடன் தொடர்புடையவர்களின் ஆதரவுடன் பூர்த்தி செய்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள் வரிசையிலே



திருமதி நந்தினி தர்மதயாளன்
மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

*மல்லாகம் நீதிமன்ற வீதியிலே*
*மல்லாகம் அமெரிக்கன்மிஷன் எனும்*
*கல்வி நிலையமாகக் கொட்டிலிலே*
*கால் பதித்த ஆண்டு அதாம்*
*ஆயிரத்து எண்ணூற்று முப்பத்திரண்டாம்!*
*மிஷனரிகள் வழி வழி வந்துமே*
*மிளிர்ந்து, விளங்கிய பின்பு....*
*ஆயிரத்துத் தொள்ளாயிரத்தில் பொலிவு பெறத்*
*தொடங்கிய துவே கல்வி வளம்*
*ஆரம்ப அதிபராம்* **திருவாளர் நா. தில்லையம்பலம்**
*அவர்களின் மகத்தான சேவைதனை*
*பெற்றிட்ட கல்விச்சாலை*
*இரண்டாம் அதிபராக* **திருவாளர்**
**எஸ். அம்பலவாணர்** *அவர்களை*
*சிறிது கால அதிபராக ஏற்றுக்கொண்டதுவே,*
*சிறப்புடனே் கடமையாற்றிய அதிபரும்*
*மாற்றம் பெறுங்கால்*
*மூன்றாம் அதிபராய்* **திருவாளர்**
**என். எ. அமிர்தவாசகம்** *அவர்கள்*
*நன்றாய்ப் பணியதனை ஆற்றியே*
*தொடரும் கல்விதனை வளர்த்திட்டு*
*ஒன்பதாண்டுகள் சேவையை வழங்கியே*
*நல்லதிபராய் பெயர் பெற்றே*
*ஓய்வதனைத் தேடிக் கொண்டார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாம் அதிபராக **திருவாளர்**
**அ.த. வைத்திலிங்கம்** அவர்களாம்
கல்வி வளர்ச்சிக்கு உயிரூட்ட
கல்விச் சாலையில் காலடி பதித்து
கலைகள் பல கற்பித்து
பதினோர் ஆண்டுகள் பணியதனை
பண்புடனே முடித்திட்டு....
ஐந்தாம் அதிபராம் **திருவாளர்**
**ஜே. தேவசகாயன்** அவர்களிடம்
பக்குவமாய் ஒப்படைத்தார் பொறுப்பதனை
உயர்திரு தேவசகாயனாம்
சேவை மனப்பாங்கு உடையவராம்
உயரிய கல்வியதனை வளர்த்திட்ட
உத்தமரார் வழியிலே
இருபத்தைந்து ஆண்டுகள்
அயராது உழைத்த பண்பாளன்
உயர்ந்த பணியதனை முடித்திட்டு
ஓய்வு பெற்ற வேளையிலே....
ஆறாம் அதிபராம் **திருவாளர்**
**த. இராஜரட்ணம்** அவர்களால்
சிறிது காலம் பணியதனைப் பெற்ற பள்ளியுமே
ஏழாம், அதிபராம் **திருவாளர்**
**சி. சுப்பிரமணியம்** எனும்
சீராளன் கையினிலே
சிறப்புடனே ஒப்படைத்தார்
ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்றிலே
மல்லாகம் மகா வித்தியாலயத்துடனே
இணைக்கப்பட்ட ஆரம்ப பாடசாலையில்
எட்டாண்டுகள் அரிய பணி ஆற்றியுமே
ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்பதிலே
ஆரம்ப இடத்தினை அடித்தளமாக்கிய
ஆரம்ப பாடசாலை ஆகிய
"மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் அதிபர் **திருவாளர்**
**ச.வேலாயுதபிள்ளை** அவர்கள்
கரம் கிடைக்கப்பெற்ற வரமாகும்
கல்வி வளம் மெருகேற
கருத்துடனே காத்து வந்த
நல்லதிபர் நலம் காத்து
ஏழாண்டுகளில் சேவைதனை
நிறைவேற்றியதன் பின் பொறுப்பதனை
ஒன்பதாம் அதிபராம் **திருவாளர்**
**மு. அருளையா** அவர்களிடம்
அன்புடனே ஒப்படைத்தார்.
பொறுப்பதனை பொறுப்பேற்ற அதிபரும்
பொறுமையுடன் நிர்வகிக்கும்
பொறுப்புணர்வு மிக்கவராம்
பல கலைகளிலும் திறமையுடன்
பங்குபற்றி வெற்றி கொண்ட
பாடசாலையை உருவாக்கிய அவர்
பத்தாண்டுகள் அளப்பரிய சேவையினை
பள்ளிக்கே அர்ப்பணித்த உத்தமர்
ஓய்வு பெற்ற வேளையிலே...
பத்தாம் அதிபராம் **திருமதி**
**அ.ஸ்ரீபுஸ்பநாதன்** அவர்களிடம்
திருப்தியுடன் ஒப்படை.த்தார்.
ஒரு மாத காலத்தால்
இடம்பெயரும் நிலை ஏற்படவே
பதினோராம் அதிபர் **செல்வி**
**சி. செங்கமலர்தேவி** அவர்களிடம்
பண்புடனே ஒப்படைத்தார்.
தரப்பட்ட பொறுப் பதனை
தரத்துடனே நிறைவேற்றும்
தன்னலமற்ற சேவையினை
ஒன்பதாண்டுகள் நிறைவேற்றியே
ஓய்வதனைப் பெற்ற நல்லதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டாம் அதிபராம் **திருவாளர்**
**ச. சிவானந்தராசா** அவர்களிடம்
சிறப்புடனே ஒப்படைத்தார்.
பொறுப்பேற்ற பொறுப்பதனை
செவ்வனே செய்து முடிப்பதற்குள்
இடமாற்றம் கிடைக்கப் பெறவே
பதின்மூன்றாம் அதிபராம் **திருவாளர்**
**மா. ஆனந்தகுமார்** அவர்களிடம்
பணிவுடனே ஒப்படைத்தார்
பணியதனைப் பொறுப்பேற்றுப்
பல அபிவிருத்திகளை வளம்படுத்தும்
அதிபரின் சேவைகளைப்
பெற்றுக் கொண்டிருக்கின்ற
பாடசாலைச் சமூகம் அவர் பணிதொடர
விநாயகப் பெருமான் கலைவாணி அருளுடன்
வாழ்த்தி நிற்கின்றோம்.

- ☐ படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகுக்குள் நுழையக்கூடாது. மனிதன் உலகத்திலே வாழலாம் ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக் கூடாது.
- ☐ ஒருவன் எப்போதும் உண்மையினையே பேசுகின்றவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனைக் காண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**"வீடு பெற நில்"**

உலக அன்னையாகிய ஔவைப்பிராட்டியார் பாலர் தொடக்கம் மகா பண்டிதர் இறுதியாக மனிதவர்க்கம் பயனடையும் பொருட்டு, 'வீடு பெற நில்' என்ற அருமந்த மந்திரத்தை உபதேசஞ் செய்தருளியிருக்கின்றார்.

**வீடு**

'விடுதல்' என்ற தொழிற் பெயர், விகுதிகெட்டு முறனீண்டு வீடு என நின்றது. அறியாமை வஞ்சகம் என்கின்ற பந்தங்கள் விடப்பட வேண்டியவைகள். அவற்றை விடுதலே வீடு ஆம். அது தான் மோட்சம் எனவும் முத்தியெனவும் உரைக்கப்படும்.

**நில்**

ஒ மனிதனே எங்கே நின்றாலும் நில்; எத்தொழிலைச் செய்தாலும் செய்; வீடு பெற நில்; வீடு பெறச் செய். இந்த உலகம் போக போக்கியங்கள் இந்த உடம்பு அனைத்தும் பந்தங்களைப் போக்குதற்குக் கிடைத்தவைகள். அவைகளை வலிந்து உதறித்தள்ளுதலுங் கூடாது; அதனையே பற்றுக் கோடு என்று இறுகக் கட்டியணைத்தலுங் கூடாது. அவைகளைத் தந்தவன் கருத்தையறிந்து, அவற்றை உபயோகிக்கும் முறையில் உபயோகித்தலே வீடு பெற நிற்றற்கு வழியாம். வீடு பெற நிற்றலையே வேத நெறி நிற்றலென்பர்.

"நில்லா உலகில் நிற்பார் நிற்க; நில்லோம் இனி நாம் செல்வோமே" என்ற திருவாசகத்தில் சிவலோக யாத்திரைக்கு உடன் வரப் பக்குவமில்லாதாரை, யாத்திரிகர், 'நிற்பார் நிற்க' என்கின்றனர். 'நாங்கள் செல்லுகின்றோம்' 'நீங்கள் நின்று வாருங்கள்' என்பது கருத்து. நிற்க என்பதில் 'நில்' என்பது வேதநெறியாகிய 'வீடு பெற நில்' என்பதில் வரும் 'நில்' என்பதேயாம். நிற்கும் முறையில் நின்றால் ஒரு நாளைக்குச் சிவலோக யாத்திரையைத் தொடர முடியும் என்பதாம்.

"கற்பவை கற்க"
"கசடறக் கற்க"
"கற்றபின் அதற்குத்
தக நிற்க"

என்ற தொடர்பு பட்ட தொடர்களில் இறுதியில் வரும் 'நில்' என்பது, 'வீடு பெற நில்' என்பதில் 'நில்' என்பதேயாம். கல்வி, மக்களுக்கு நிற்கும் முறையில் நிற்பதைத் தெட்டத் தெளியக் காட்டுவதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் நோக்கமும் சமுதாயத் தொண்டும்.



கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P),
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

நமது நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது கல்வி. கல்லுதல் என்பது அகழுதல் என்ற பொருளில் அமைகிறது. உள்ளத்திலுள்ள மாசுகளை நீக்கித் தூய்மையாக்குவதற்குத் துணைபுரிவதே கல்வி.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்றார் வள்ளுவர். தீயதன் தெறலையும் நல்லதன் நலனையும் பகுத்துணர வைப்பதற்குத் தூண்டுவது கல்வி. அதன் பயன் ஆண்டவனுடைய திருவடியில் நம்மைச் சேர்த்தலில் முடிகிறது. வள்ளுவப் பெருந்தகையும் இதனை விளக்கவே,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

என்று பாடியருளினார். கல்வியின் பயன் கற்றலிற் தொடங்கி, நிற்றலில் முடிய வேண்டும். இடையிலே கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்று படிகளும் அமைந்திருக்கின்றன. இந்தத் தெளிவுதான் சமய வாழ்வுக்கும் சமூகசேவைக்கும் எம்மைச் செலுத்துகிறது. சமுதாயத் தொண்டு என்பது ஆண்டவன் வழிபாட்டை ஒட்டி நிற்பதுதான். தெய்வ நம்பிக்கையில்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலை செய்யாது. நீதி உயிரற்றுப் போகும். பண்பாடு புகைந்துவிடும். எனவே வழிபாட்டிற் சிறந்தது சமுதாய நலனைச் சிந்தித்துச் செயலாற்றுதலே. இரண்டு வகையிற் கல்வியை நாம் பெறுகின்றோம். உலகத்தில் ஏற்படும் அனுபவத்தின் மூலமும் நூல்களின் வாயிலாகவும் பெறுவது ஒருவகை. உள்ளுணர்வின் மூலம் சிந்தித்து அறிவைத் தேடிக் காண்பது இரண்டாவது வகை. இவ்விரண்டுஞ் சேர்ந்தால் பிறர் நலத்தையே சிந்தனை செய்யத் தூண்டும். முடிவில் இறை நலத்திற்கு ஆளாக்கும். தக்கது இன்னது என்றும் தகாதது இன்னது என்றும் பகுத்துணர வைக்கும் "தக்கதின்ன தகாதன இன்னதென் றொக்க உன்னலராயின் உயர்ந்துள்ள மக்களும் விலங்கே" என்றார் கம்பர். தக்கனவற்றைச் சிந்திப்பவன் எல்லோரும் இன்புற்றிருக்கவே நினைப்பான்.

"அனைத்துயிரும் ஒன்றென் றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதா பேதம்
பொய் வஞ்சம் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாராகில்
செய்தவம் வேறொன்றுண்டோ"

என்றார் ஒரு பெரியவர். "நீடிய பிணியால் வருந்துவோரைக் கண்டு உளம் நெகிழ்ந்தேன்" என்றார் இராமலிங்கவள்ளலார். மனிதன் தோன்றிய காலந்தொட்டே சமயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமும் இணைந்தும் பிணைந்தும் வந்திருக்கின்றன. சமய வாழ்வுதான் மனிதன் வாழ வேண்டிய வாழ்வு. அது உயிருக்கு ஒளியையும், பாதைக்குத் தீபத்தையும், உள்ளத்துக்குத் தூய்மையையும் அளிக்கும். தனக்குத்தானே நற்சான்று பகர்வது சமய அனுபவம். இதனால் பேசும் பேச்சும், நினைக்கும் எண்ணமும், ஆற்றும் செயலும் புனிதமடைகின்றன. மக்களுக்குப் பயனுள்ள பணியைச் செய்வதே சமயத்தின் கடமை என்றார் காந்தியடிகள். அவர்களின் கருத்துப்படி இந்துசமயம் என்பது சத்தியத்தைப் பின்பற்றிச் செல்வதற்கு அமைந்த ஒரு மார்க்கமாகும். புத்தரின் அறத்தையும், சைனரின் அகிம்சையையும், யேசுவின் தியாகத்தையும், முகமதுவின் புனிதத்தையும் அடக்கியிருப்பது இந்துமதம். கல்வியின் உண்மைப் பயன், பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலிலுந் தங்கியுள்ளது. அன்பினாலே உலகை ஆட்சி செய்யலாம் என்பதைப் புத்தாண்டுத் தினத்திலே நாம் சிந்தையிற் கொள்ளவேண்டும். பாப்பாவுக்கு வாழும் முறைமையை எடுத்துக்காட்டிய பாரதியாரும்,

"உயிர்களிடத்தி லன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வைரமுடைய நெஞ்சு வேண்டும் - இது
வாழும் முறைமையடி பாப்பா."

என்று பாடினார். நம் முன்னோர்கள் பரந்த சொல்லும், பரந்த செயலும் பரந்த எண்ணமும் உடையவர்களாய் வாழ்ந்தார்கள். "பிற்றை நிலை முனியாது கற்றல் வேண்டும்" என்ற கொள்கை அன்றிருந்தது. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பினான். சங்க காலத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட புலவர்களை வள்ளல்கள் ஆதரித்தார்கள். புலவர் பாடும் புகழையே பெரும் புகழாகக் கொண்டார்கள் மனிதர்கள். புலவர்களும் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடினாரில்லை. வேண்டிய நேரங்களில் அறிவுரை நல்கியும் நீதியை எடுத்துரைத்தும் அரசர்க்கு அறிவுரை கூறினர் புலவர்கள். கல்வியென்பது நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளர்வதாகும். இன்று கற்றார் மத்தியிலே எத்தனையோ ஊழல்களை நாம் காண்கின்றோம். அதற்கு மாறாகக் கல்லாத பேர்களே மிக நல்லவர்கள் என்று சொல்லக் கூடிய நிலையிலும் பலர் வாழ்கின்றனர்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

கற்பன வெல்லாவற்றையும், காண்பன வெல்லா வற்றையும், கேட்பன வெல்லா வற்றையும் உண்மை அறிவுக்குரியன என்று நாம் கருதிவிடக் கூடாது. நல்லனவற்றையும் அல்லனவற்றையும் பிரித்துணர வைப்பதே உண்மையறிவாகும்.

இத்தகைய அறிவைக் கொண்டு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் யாவை? முதலில் எமது குற்றத்தை நாம் உணர்ந்து திருந்திக் கொள்ள வேண்டும். அடுத்தபடியாகத் தன்னலமற்ற முறையிற் சமுதாயத்துக்கு பணி புரியவேண்டும். இந்தச் செம்மை வாழ்வுதான் இது போன்று வேண்டற்பாலது. இளம் பெரும் வழுதி என்ற அரசன் சொல்வதைக் கவனிப்போம்.

"உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் அன்று தொட்டு இன்றுவரை வாழ்ந்து கொண்டு வருகிறதென்றால் அதற்குக் காரணம் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் ஒரு சிலராவது வாழ்வதாற்றான் என்பதை அவ்வரசன் எடுத்துப் பாடியதைப் புறநானூற்றிற் காண்கின்றோம். இவற்றிலும் பார்க்கத் தமிழனுடைய இலட்சிய வாழ்வுக்கு வேறு என்ன தேவை? இன்றைய இளைஞர்களே வருங்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள். அவர்களுக்கு "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற மனப்பாங்கு உண்டாக வேண்டும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த நோக்கு ஏற்பட வேண்டும். "நாமிருக்கும் நாடு நமது" என்ற அபிமானம் இடம்பெற வேண்டும். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கும் அருள்நெறி தோன்ற வேண்டும்.

காலத்துக்குக் காலம் நாயன்மார்களும் அடியார்களும் தோன்றிச் சமூகப் பணியாற்றினர். பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கி மக்களைப் பட்டினியினின்றும் காத்தவர்கள் அப்பரும் சம்பந்தருமாவர். மக்களின் உடற்பிணியையும் உயிர்ப்பிணியையும் போக்கும் வைத்தியர்களாக அவர்கள் விளங்கினர். விடத்தினால் நலிந்தார்க்கும் நோயினால் மெலிந்தார்க்கும் அடியார்களால் விமோசனம் கிடைத்தது.

இவ்வாறு சமய குரவர்கள் அனைவரும் பொதுப்பணி செய்து உயிர்களின் நல்வாழ்வுக்காக இறைவன் அருளை வேண்டிப் பாடினர். திருமருகலிலே ஞான சம்பந்தப் பெருமான் வணிகப் பெண்ணின் துயர் கண்டு இறைவனை நோக்கிப் பாடினார்.

"சடையாய் எனுமால் சரணீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே"

பெருமானே, இவள் இவ்வாறு புலம்பி அழுவது உனக்குச் சித்தமா? உமது திருவருளுக்கு இது தகுமா? என்று கேட்டார். உலக சேமமே அடியார் கண்ட இன்பமாகும். சமுதாயத்தைப் பொறுத்த வரையிற் பெரும் தொண்டாற்றிய மகளிர் பலரை நாம் பெரியபுராணத்திற் காணமுடிகிறது. பெண்மையைப் போற்றிய நாகரிகம் தமிழ் நாகரிகம்; சேக்கிழார் தமிழ் நாகரிகத்தை விளக்கவந்த சைவத் தமிழ் புலவர். அவர் பெண்களுக்குப் பெருஞ் சிறப்பளித்துப் பாடியுள்ளார். காரைக்காலம்மையார் சமுதாயத்துக்கு வழங்கிய பக்திப் பனுவல்களும் மங்கையர்க்கரசியார் வீட்டையும் நாட்டையும் மூடியிருந்த கேட்டைப் போக்கிய செயற்திறனும் திலகவதியாராற்றிய திருத்தொண்டுகளும் சைவத் தமிழுலகத்தால் மறக்கமுடியாதவை. இத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்மக்களை இடைக்காலச் சமுதாயம் போதிய அளவிற் போற்றவில்லை. இதனால் பெண்மக்கள் இழிநிலையடைந்தமையோடு நாடும் இழிநிலையடைந்து விட்டது. இதனைப் போக்குவதற்குத் துடித்தவர் பாரதி. "பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா" என்று உரத்துக் குரல் கொடுத்தார். தமது கவிதைப் படைப்புக்களான "புதுமைப்பெண்", "பெண்கள் விடுதலை", "பாஞ்சாலி சபதம்" என்பவற்றில் பெண்ணின் பெருமை பற்றி எடுத்துக் காட்டினார்.

"ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்
நாணமு மச்சமு நாய்கட்கு வேண்டுமாம்
ஞானம் நல்லறம் வீரம் சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்துப் பழைமையும் பாரதியின் புதுமையும் ஒன்றாக மிளிரக் கூடிய பெண் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் உலக நாடுகளெங்கணுஞ் சென்று புதுமை களைக் கொணர்ந்து தாய்நாட்டிற் பரப்ப வேண்டும். மெய்ஞ் ஞானத்தையும் விஞ்ஞானத் தையும் இணைக்க வேண்டும். அதனை நாட்டிலே நன்மை பயக்கும் வழிகளில் இடம் பெறச் செய்ய வேண்டும். ஏழைகளின் இருதயங்களே எம் பெருமானின் திருக்கோவில் களாக விளங்குகின்றன. ஈசன் ஏழைக்கு ரொட்டி உருவில் வருகின்றான்'. என்பது மேலைநாட்டுப் பழமொழி. எனவே எழைகளைப் போற்றுதல் இறைவனைப் போற்றுதலுக்குச் சமனாகும். இவ்வாண்டுத் தொடக்கத்தில் ஏழைகள் பணியை இறைபணியாகக் கொள்வோ மாக. நாம் நல்லவர்களானால் நாடு நல்லதாக விளங்கும். அவரவர் உள்ளத்தினுயர்விலே தான் உயர்ச்சியுந் தங்கியுள்ளது. அற்ப செயல் புரிந்து வெற்றி பெறுவதிலும் பார்க்க பெருஞ் செயலாற்றித் தோல்வி காணினுந் தவறில்லை யன்றோ.

*"கான முயலெய்த அம்பினில் யானை*
*பிழைத்தவேல் ஏந்தல் இனிது"*

என்றார் வள்ளுவப் பெருந்தகை. சிறுவர்களாயினும் பெரியவர்களாயினும் பெருநோக்கு உடையவர்களாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும். கற்பன கற்று நிற்க வேண்டும். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரைப் போற்ற வேண்டும். பழமையின் அத்திவாரத்திலே புதுமையை எழுப்ப வேண்டும். பெண்மக்கள் சமூகத்திற் பெரும்பணியாற்றிப் பேரிடம் வசிக்க வேண்டும். வாழ்க்கை வளம் எல்லோர்க்கும் சமமாக வாய்க்க வழிகாண வேண்டும். மற்றும் அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்பும் குடி கொள்ளவேண்டும். இத்தகைய நற்கல்வி மூலமாக சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு வழிசெய்வதே மனித வாழ்க்கையின் குறிக் கோளாகும்.

அந்தக் குத்துவிளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன.
அவை எரிந்தாலென்ன, அணைந்தாலென்ன?
அந்தப் படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்து விட்டது. அது எரிந்து கொண்டிருந்தவரை குத்துவிளக்கு களுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குக்கு ஊற்றும் எண்ணெயை இறைவன் ஊற்றாமல் விட்டுவிட்டான்.

**கண்ணதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களது உணர்வுகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ள அஜந்தாக் குகை ஓவியங்கள்



திரு.வீ. கருணலிங்கம்
SP.Trd.Art., B.A., P.G.DE (Merit),
விரிவுரையாளர்,
ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

மனித இனத்தினுடைய நீண்ட வரலாற்றில் ஓவியக் கலைக்கே தனி இடம் கிடைத்திருக்கின்றது. அந்த வரிசையிலே இந்தியக்கலையில் ஓவியக்கலையிலும் அதிக செல்வாக்குச் செலுத்தியிருப்பதனை அக்கால ஓவியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. வாழ்வின் நடைமுறைகளையும், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் பௌத்த மதத்தினூடாக வெளிக்கொணர்ந்துள்ள தன்மையில் இந்தியக் கலைஞர்களுக்கே பெருமை சேர்ப்பதாக காணப்படுகின்றன. இவ் ஓவியங்களை ஆய்வுக்குட்படுத்திய ஆய்வாளர் களும் பலநிலைகளில் சிந்தித்தும் உணர்ந்தும் வெளிப்படுத்தியிருக்கின்ற நிலைமையினை ஆய்வாளர்கள் மத்தியிலே ஒரு அகல்விரி சிந்தனையைத் தூண்டி உள்ளது. ஓவியங்கள் இருக்கவேண்டிய அம்சங்களோடு கலைஞனது சிந்தனைத் திறத்தாலும், மனோதைரியத்தி னாலும் ஓவியங்களைப் படைத்திருக்கின்ற தன்மையில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

அத்தகைய ஓவியக் கலையில் அஜந்தா ஓவியக் கலையானது மிகவும் உன்னதமான நிலையில் ஆராயப்பட்டு வருகிறது. இக்குகைகளானவை ஓர் அருவியை அடுத்துள்ள செங்குத்தான கற்பாறையில் குடையப்பட்டுள்ளன. அவற்றைக் குடைவதற்கு ஏற்ற பொருத்தப்பாடுகளையும் திட்ப நுட்பங்களையும் முற்கூட்டியே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒழுங்கான செயன் முறையாக அமைந்துள்ளது என்பது குகை களைப் பார்வையிட்ட ஆய்வாளர்களது கருத்து நிலைகளில் இருந்து அறியமுடிகின்றது. பாறையின் மீது ஏறிச் செல்லும்போதே பல குகைகளில் வாயில்கள் காணப்படும். கோயில் களும் குகைகளுமாக 29 காணப்படுகின்றன. இவற்றை இணைப்பதற்குப் பாதைகளும் படிகளும் இருக்கின்றன. இவை வெவ்வேறு காலங்களில் அதாவது கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டுவரை உள்ளடக்கப்பட்டவை களாகக் கருதப்படுகின்றன. இக்குகைகளில் குப்தர் கால ஓவியங்களையும் வாகடக மன்னர் கால ஓவியங்களையும் காணமுடிகிறது.

குகைகளில் ஓவியங்களை வரைவதற்கும், அவை நீண்டகாலம் நிலைத் திருக்கக்கூடியதாகவும், கலைஞர்கள் கையாண்டுள்ள முறைகளில் எவ்வளவு தூரம் அவர்களது சிந்தனை ஓட்டம் புலப்பட்டிருந்தன என்பதனையும் இவ்ஓவியங்கள் மூலம் பேச வைத்துள்ளனர். ஐவகையான நிறங்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளமையும் அதாவது செங்காவி, மஞ்சட்காவி, புகைக்கறுப்பு, கந்தகக் கனிமகியின் நீலம், வெள்ளை ஆகியன கலந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணங்களாகப் பூசப்பட்டிருந்தன. பாறையின் மீது பூசப்பட்ட முதல் வண்ணப்பூச்சு உமியும் பிசினும் சேர்ந்த களிமண்ணாலானது. இதற்கு மேல் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. ஓவிய நுட்ப முறையாகப் புள்ளிகள், கோடுகள் மூலமாக வர்ணமுறை பயன்படுத்தப்பட்டிருந்தது. இத்தகைய தன்மைகளோடு கலைஞன் தன்னைச் சுற்றியுள்ள வாழ்க்கையையும் மிக்க அழகு வாய்ந்த இயற்கைக் காட்சிகளையும் ஆழ்ந்த அனுதாபத்துடனும் நுகர்வுணர்வுடனும் கூர்ந்து கவனித்திருக்கின்றான் என்பது புலப்படுகின்றது. தாவரங்கள் விலங்குகளின் வாழ்க்கை அவன் கவனத்தை மிகவும் தூண்டியிருக்கிறது. இதனைப் பிரசித்தி பெற்ற குகைகளாக விளங்கும் முதலாம், இரண்டாம், பத்தாம், பதினாறாம், பதினேழாம் இருபத்தேழாம் குகைகள் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ள தன்மையில் இருந்து அறியமுடிகின் றது.

அஜந்தாவின் முதலாம் குகையானது விகாரமாகும். இங்கு வரையப் பட்டுள்ள ஓவியங்கள் குப்தர் காலத்தைச் சேர்ந்தவை யாகும். இது வைணிகம் என்னும் ஒரு முறையைச் சார்ந்த ஓவியமாகவும் கருதப்படுகின்றது. அவலோகிதேசுவரர் (போதிசத்துவர்) எனும் அழகிய ஓவியப் படைப்பானது அங்க இலட்சணப் பொலிவோடு பார்ப்போரில் ஒருவித உணர்வைத் தூண்டு வனவாகவும் சாந்தம், அமைதி வெளிப்படும் வகையில் ஓவியத்தைப் பரிமாணப்படுத்தியி ருக்கின்ற இயல்பு, கலைஞனின் உள்ளத்தைத் தூண்டி உள்ளது. இளவரசர் சித்தார்த்தரும், யசோதரையும் எனும் ஓவியத்தில் சிறந்த பொருள்களைப் பற்றிப் பல மனோநிலைகளில் நாயகரின் பல்வகைப்பட்ட தோற்றப்பாடுகளை மிகவும் உன்னதமாக ஓவியப்படுத்துவதற்கு ஏற்றவாறு முயன்றுள்ள தன்மை பார்ப்போரது உள்ளத்தினூடாக கலைஞரை உயர்த்திக் கொண்டுள்ளமை தெளிவாகிறது.

மேலும் விதானங்களில் அன்னங்கள், பறவைகள், வித்தியாதர அதிபதிகள், மங்களகரமான சங்குகள், தாமரைகள், அரும்பு முதல் மலர் ஈறாக உள்ள தாமரையுடன் கூடிய நெளிந்து நெளிந்து செல்லும் வேர்த்தண்டுகள், பெரிதாகப் பரந்த தாவர இலைகள், இவற்றைக் காட்டும் நீண்ட ஓவியத் தொடர்களும், கரை ஓவியங்களும், கலைவளம் செறிந்த பல்வகைக் கோலங்களை ஆக்கும் கலைஞனின் திறமையை வெளிக் காட்டுகின்றன. மாரதரிசனக்காட்சியில் போதி மரத்தடியில் மாரனும் அவன் அழகிய மகளிரும் செய்யும் சாகாசங்களால் பாதிக்கப்படாமலும் எதிரிகளின் வலிய படையை எதிர்த்தும் பயமுறுத்தியும் அமைதி குலையாமலும் ஞான ஒளிபெற உறுதி கொண்டவராக நாயகர் சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கின்றமை வியப்பான தொன்றாகும். புத்தரின் வாழ்க்கைக் காட்சிகளைச் சித்தரிக்கும் சிறந்த படைப்புக்கள் முதலாம் குகையில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

சிராவர்த்தியின் அற்புதம், நந்தனின் கதை போன்ற ஓவியங்கள் ஊடாகவும் புத்தருடைய வாழ்க்கை நிகழ்வுகள் வெளிக் காட்டப்படுகின்றன. நந்தனின் கதையிலே புத்தரால் மனமில்லாது மதம் மாற்றப்பட்டான் நந்தன். அரண்மனையில் நீர் மல்கிய கண்களுடன் அவனுக்காக ஏங்கினாள் அவன் அழகிய மனைவி சுந்தரி. அவனும் அவளை விரும்பித் தவிக்கிறான். இங்குள்ள ஓவியம் துயருற்ற சுந்தரியைத் சித்தரித்தி ருப்பது மிகவும் உன்னதமான படைப்பாகும்.

சிபி ஜாதகக் கதையிலே போதி சத்துவர் எவ்வாறு தன் தசையையே புறாவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்திச் சென்ற பருந்துக்காகக் கொடுத்தார் என்பதை முதற்கதை விபரிக்கிறது. சங்கபால ஜாதகக் கதையிலே வருகின்ற ஒரு நிகழ்வானது அதாவது கொடியவர் கூட்டம் தன்னை தொல்லைசெய்ய அமைதியுடன் அனுமதித்தான் ஒரு நாக இளவரசன். இரக்கம் கொண்ட வழிப்போக்கன் அவனைக் காப்பாற்றினான். தனது அழகிய சுரங்க வீட்டில் வழிப்போக்கனை நன்றி உணர்வுடன் இளவரசன் உபசரித்தான். இங்கு நாக அரசனின் மகிழ்நிலையையும் உதவி செய்தவனுக்கு அவன் செலுத்தும் நன்றியுணர் வையும் ஓவியத்தின் மூலம் கலைஞன் வெளிப்படுத்தியுள்ள விதம் அனைவரது உணர்வுகளை மேலும் சிந்திக்கவைத்துள்ளது.

மகாஜனக ஜாதகத்திலே மகாஜனகன் இளவரசி சீவலியை மணந்தான். உலக போகங்களில் அவனை வைத்துக்கொள்ள அவள் எவ்வளவோ முயன்றும் அவன் துறவியாக இருக்க உறுதிபூண்டான். இதன் விளைவாக சீவலி கணவனின் வழியைப் பின்பற்றினாள். இந்நிகழ்வுகளை ஓவியப்படுத்தியுள்ள விதம் ஒவ்வொரு பாத்திரப்படைப்புக்களின் பாவ உணர்வுகளில் இருந்து வெளிப்படுகின்ற தன்மையை ஓவியப்படுத்தியுள்ள விதம் சிறப்பானதாகும்.

சம்பேய ஜாதகத்திலே முற்பிறவியில் சம்பேயன் என்னும் நாக இளவரசனாகப் போதிசத்துவர் பிறந்தார். ஒரு பாம்பாட்டியால் பிடிக்கப்பட்டார். அவர் அரசி சுமணை, வாரணாசி தேசத்து அரசனைத் தனக்காக இதில் தலையிடச் சொல்லி இளவரசனைக் காப்பாற்றினாள். இங்கு ஓவியனின் மனோநிலையும் அவனுடைய தூரிகை அசைவினால் மேற்கொள்ளப்பட்ட ஓவியத்தின் சிறப்பியல்பும் பார்ப்போரது நெஞ்சங்களை ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுவனவாக அமைந்துள்ளது.

அஜந்தாவின் இரண்டாம் குகையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களாக மாயாதேவியின் கனவு, கனவின் கருத்து அறிதல், விண்ணினின்றும் கீழிறங்குதல், பிறப்பு, ஏழு அடிகள் என்பன சித்தரிக் கப்பட்டுள்ளது. ஹம்சஜாதகம், விதுரபண்டித ஜாதகம், ரூரு ஜாதகம், பூரண அவதானம் என்பன ஜாதகக் கதைகளாக விளக்கப் படுகின்றன. அறிவுரை போதிக்கும் பொன் அன்னத்தைக் கனவிற்கண்ட இராணி கேமாவின் கதையைக் கூறுகிறது ஹம்சஜாத கமாகும். தனக்கு அறிவுரை தருவதற்குப் பறவை பிடிப்பவன் பொன் அன்னத்தையும் அதன் தோழியையும் பிடித்துத் தன்னிடம் கொண்டுவர, தன் கணவனான அரசனை அவள் வற்புறுத்தினாள். பொன் அன்னம் அரச கட்டிலில் அமர்ந்து அரசிக்கு அறவுரை கூறுவதை ஓவியம் காட்டுகிறது. இதற்கு முன்னர் பறவை பிடிப்பவன் அன்னத்தைப் பிடிப்பது காட்டப்பட்டிருக்கிறது. பொன் அன்னம் வாழும் தாமரைக்குளம் அழகாகச் சித்தரிக் கப்பட்டுள்ளது.

விதுர பண்டித ஜாதகத்திலே இந்திரப் பிரஸ்த அரசனின் மதிநுட்ப மந்திரியான விதுரபண்டிதனின் அறிவாற்றல் நிறைந்த பேச்சைக் கேட்க விரும்பிய நாக அரசியின் கதையை விளக்குகிறது. இங்கு விதுரபண்டிதனின் இதயத்தை எவனொருவன் கொண்டு வருகிறானோ அவனுக்கு அழகிய நாக இளவரசியான இரந்ததியை திருமணம் செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப் பட்டது. சூதாட்டத்தில் விதுரபண்டிதனின் அரசைத் தோற்கடித்து, விதுரபண்டிதனை பணயமாகப் பெற்று நாக அரசியிடம் அவனைக் கொண்டுவந்து கொடுத்து அவளை மனைவி யாக அடைந்தான் யக்ஷபுன்னாகன். ஓர் ஊஞ்சலில் ஆடும் அழகிய இளவரசி இரந்ததி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதாட்டம், நாக அரண்மனையில் விதுர பண்டிதனின் பிரசங்கம், புன்னாகன் இரந்ததியின் மகிழ்ச்சிகரமான திருமணம் இவற்றால் கதை விரிவாகத் தீட்டப்பெற்றிருக்கின்றது.

புத்தரால் பூரணன் மதம் மாற்றப்படுவதையும் அவன் சகோதரனான பவிலன் காப்பாற்றப்படும் அற்புதத்தையும் விளக்குகிறது. திவ்வியாவதானத்தின் பூரண அவதானக் கதையாகும். இவ் ஒவ்வொரு கதைகளிலும் வருகின்ற பாத்திரப் படைப்புக்களைப் பொருத்தமான முறையிலே அக்கால சமூக வாழ்க்கைப் பின்னணியினையும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும் ஒன்று சேர்க்கக் கூடியவாறு, பல மனோநிலைகளிலும் கூர்ந்து அவதானித்துக் கதையை உயிரோட்டமாகச் சித்தரிக்கின்ற ஓவியனின் வரைதற் பாணி கலைஞனின் மனதை மேன்மேலும் சிந்திக்கத் தூண்டுவனவாக உள்ளது.

16ஆவது குகையிலே வரையப் பட்டுள்ள நந்தனின் கதை, சிராவஸ்தியின் அற்புதம், சுஜாதாவின் நிவேதனம், உழவு விழாவின் நிகழ்ச்சி, பள்ளியில் இளவரசன், மாயாதேவியின் கனவு என்பன கலைஞனின் ஓவிய நுணுக்கங்களைக் கூர்ந்து கவனிக்கையில் ஆழமாக புலப்படுகின்றது. நந்தனின் கதை அவன் மதமாற்றத்தைப் பற்றியது. நந்தனது மதமாற்றத்தையும் தேவகன்னிகளைக் காண புத்தருடன் வானுலகுக்குச் செல்வதையும் இங்குள்ள காட்சிகள் சித்திரிக்கின்றன. மகா உம்மக ஜாதகத்திலே அதாவது ஒரு கிளைக் கதையில் புதல்வனின் புதிர், ஒரு சிறு குழந்தையைத் தன்னுடையதென மனிதனைத் தின்னும் ஓர் அரக்கியும், உண்மைத்தாயும் உரிமை கொண்டாடினர். இவர்கள் சண்டையைத் தீர்க்க மகோசதன் நீதிபதியாக இருந்தார். இவர்கள் இருவரையும் குழந்தையைப் பிடித்து இழுக்கச் சொன்னார் மகோசதன். இதனால் குழந்தை அனுபவித்த கொடிய வேதனையைக் காணத் தாளாது விட்டுக் கொடுத்தவளில் உண்மைத் தாயைக் கண்டார். அவர் கதையிலுள்ள தேர், பஞ்சு நூல் போன்ற புதிர்கள் பிறகு விளக்கப்பட்டுள்ளன.

சுத்த சோம ஜாதகத்தில் வனத்துக்கு வேட்டையாடவந்த வனப்புமிக்க இளவரசனான சுதசனிடம் ஒரு பெண்சிங்கம் எவ்வாறு மையல் கொண்டது என்பதை ஜாதகமாலாவில் விளக்கப்படுகின்றது. உறங்கிக் கொண்டிருந்த இளவரசனின் கால்களை நக்கி அவள் கருவுற்றாள். பிறந்ததும் இந்த இயற்கைப் பிறழ்வு மனிதனைத் தின்னும் அரச குமாரனாகி இறுதியில் இளவரசன் சுத்தசோமனாக மாறிற்று. தூங்கும் இளவரசனின் கால்களை நக்கும் பெண் சிங்கத்தைக் காட்டுகிறது. ஓவியம். மனித, மிருக, மரவின உருவங்களில் பரந்த சிக்கல் வாய்ந்த முழுமையைத் தன்வயப்படுத்தி, தங்கள் கற்பனைக்கு எல்லையற்ற இடம் கொடுத்து, எண்ணிலாக் கோலங்களை உருவாக்கினர் இங்குள்ள இந்திய ஓவியக் கலைஞர்கள்.

17 ஆவது குகையிலே நளகிரியை அடக்குதலும், சங்கிசாவில் கீழிறங்குதலும், சிராவஸ்தியின் அற்புதமும், ராகுலனுடன் சந்திப்பும் மேலும் சிறந்த படைப்புக்களாகும். ஷட்தந்த ஜாதகம், முதலாம் மகாகபி ஜாதகம், ஹஸ்தி ஜாதகம், ஹம்ச ஜாதகம், வெஸ்ஸன் தர ஜாதகம், 2ஆம் மகாகபி ஜாதகம், சுத்தசோம ஜாதகம், சரபமிக ஜாதகம், மச்ச ஜாதகம், மதிபோசக ஜாதகம், சாமஜாதகம், மஹிச ஜாதகம், திவ்வியாவ தானத்தில் இருந்து சிம்மலனின் கதை என்பன விபரிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பிறவியிற் குரங்குக் கூட்டத்தின் தலைவனாகப் பிறந்திருந்த போதிசத்துவரின் கதையை விபரிக்கிறது முதலாம் மகாகபி ஜாதகம். ஒரு காலத்தில் ஆற்றங்கரையில் இனிய மாங்கனிகளைச் சுவைத்துக் கொண்டிருந்தபொழுது வாரணாசிப் பிரமதத்தனின் வில்வீரர்களால் குரங்குகள் தாக்கப்பட்டன. பாலம் அமைத்து ஆற்றைக் கடந்து குரங்குகளைக் காப்பாற்ற விரைவில் ஒரு மூங்கிலை எடுத்து நீட்டினார். ஆனால் இது சிறிது கட்டையாக இருக்கக் கண்டு பாலத்தை நிறைக்கத் தன் உடலையே நீட்டினார். குரங்கின் சிறந்த குணம் அரசனின் நெஞ்சை உருக்கிற்று. அவன் குரங்கிற்கு மரியாதை செய்து தர்மத்தைப்பற்றி அதனிடம் அறவுரை கேட்டான். ஆறு மாங்கனிகள் தொங்கும் பழமரத்தோட்டம் அதிசயமானபாலம், குரங்கின் அறவுரை எல்லாம் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

வெசன்தர ஜாதகத்திலே தன்னிடம் கேட்ட எதையும் வரையாது வழங்கும் சிறந்த இளவரசனின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது. நாட்டின் வழமைக்குக் காரணமாகவிருந்த மதிப்பு வாய்ந்த யானையையுமே அவன் கொடுத்து விட்டான். இதன் விளைவாக அவன் நாட்டினின்றும் மனைவி மக்களுடன் நாடு கடத்தப்பட்டான். இறுதியில் தேர், குதிரைகள், மக்கள், மனைவி உட்பட அவனிடமிருந்த அனைத்தையும் அவன் அளித்தான். நாடு கடத்தப்படுதல். நகரத்தில் இருந்து வெசன்தரன் தேரில் நீங்குதல், வனத்தில் அவன் வாழ்க்கை ஜுஜகன் என்ற கொடிய பிராமணனுக்குத் தன் குழந்தைகளைக் கொடுத்தல், அவர்கள் பாட்டனாரிடம் குழந்தைகளை மீட்டளித்தல். இளவரசனும் இளவரசியும் மகிழ்வுடன் திரும்புதல் இவற்றையெல்லாம் சித்திரங்கள் விளக்கி நிற்கின்றன.

இரண்டாம் மகாகபி ஜாதகத்தில் குரங்கைக் கொல்ல மனிதன் முயன்ற பின்னும் கூட மிகப் பெருந்தன்மையுடன் குரங்கு மனிதனுக்கு வனத்தினின்றும் வெளியே செல்ல வழி காட்டியது. மனிதன் குழியிலிருந்து வெளிவர உதவும் குரங்கையும், மனிதனின் நன்றிகெட்ட தன்மையையும் சித்திரங்கள் விளக்குகின்றன. வாரணாசி அரசனைக் குழியினின்றும் ஒரு கலைமான் தப்புவித்த கதையைச் சொல்லுகிறது சரபமிக ஜாதகம். "மழைபெய்யச் செய்வேன்" என ஆணையிட்டு உரைத்து, மழையின்மையால் மரணமெய்தும் நிலையிலிருந்த தன் சுற்றத்தினரைக் காப்பாற்றிய போதிசத்துவரின் பழங்கதையை விபரிக்கிறது மச்ச ஜாதகம்.

இவ்வாறாக அஜந்தாக் குகைகளில் வரையப்பட்ட ஓவியங்கள் யாவும் ஓவியக் கலைஞர்களது உயர்ந்த படைப்புக்களாகும். இவ் ஒவ்வொரு படைப்புக்களின் ஊடாகவும் அக்காலச் சமூகவாழ்க்கை படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. ஓவியன் தனக்கே உரிய பாணியைப் பின்பற்றி, ஓவிய சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து, சுவைஞனது மெய்யுணர்வைச் சித்திக்கத்தக்க வகையிலே ஓவியக்கலைஞன் ஓவியங்களைச் சித்தரித்திருக்கின்றமை ஓவிய உலகுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. இப் பேசாப் பதுமையாகிய ஓவியங்கள் மூலம் ஓவியக்கலைஞர்களைப் பேச வைக்கின்ற பெருமை அக்கால ஓவியக் கலைஞனையே சாரும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியக் கல்வி



கலாநிதி. செ.திருநாவுக்கரசு
B.A,P.G.D.E (Merit)., Dip.in.Management
M.A(Tamil)., MEd, PhD(Tamil).,
விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

இலங்கையில் எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு மனிதப் பண்புகளின் மேம்பாட்டுக்கான கல்வியினை வழங்குதல் பற்றி அரசு அக்கறை கொண்டு செயற்படுகிறது. பாடசாலைகளில் விழுமியக் கல்வி. பண்பாட்டுக் கல்வி. சமயக்கல்வி. சமாதானக்கல்வி ஆகியவற்றைக் கலைத்திட்டத்தினூடகச் செயற்படுத்தப்படும் நோக்கம் வெற்றி காணுமாயின், அது மனித மேம்பாட்டினை எய்துகின்ற குறிக்கோளினைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கல்விசார் நோக்கில் விழுமியம், பண்பாடு, சமயம், சமாதானம், ஒழுக்கம் என்றவாறு தனித் தனியாக நோக்கப்படினும், இக்கூறுகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவை என்பதும், இவையனைத்துமே நாகரிகமற்ற மானிட சமுதாயத்தின் இன்றி யமையாத உயர் பண்புகளென்பதும். அவற்றின் இணைந்த விருத்தியே உலகில் மனிதனதும் மனிதத்துவத்தினதும் அடையாளமாகும் என்பதும் இங்கு உணரப்படவேண்டியதாகும். மூன்று தசாப்தங்களாக நீடித்து நிற்கும் இன முரண்பாடுகளின் அடிப்படையிலான உள் நாட்டுப் போரும். தாழ்நிலையினை நோக்கிச் செல்லுகின்ற பொருளாதாரச் சூழ்நிலையும், சகிப்புத்தன்மையிலாது. ஐதீகங்களிலும், மரபுகளிலும் தங்கியிருக்கும் உணர்ச்சிவசப்பட்ட கருத்தியல் நிலைகளும் ஒட்டுமொத்தமான முறையில் இலங்கைப்பாடசாலை மாணவர் களிடையேயும். இளைய தலைமுறையினரிடை யேயும் வளர்ந்தோர்களிடையேயும் மனித விழுமியம்சார் பண்புகளைக் கேள்விக்குரிய முறையில் வளர்ச்சிபெறாமற் செய்துள்ளன. தனது பண்பாட்டு விழுமியங்களை இழந்த இனம், தவறவிட்ட இனம் ஒரு போதும் விடுதலைடையமாட்டாது. தேசிய அளவிலுஞ்சரி பிரதேச அளவிலுஞ்சரி இக்கருத்து உண்மை யானதேயாகும். மேலும் நவீன தகவற்றொடர்புச் சாதனங்களின் அபரிதமான வளர்ச்சி, வெகு சனத்தொடர்பு சாதனங்களில் மேலாண்மை ஊடுருவலின் தாக்கம். உலகமயமாதலினால் ஏற்பட்டு வருகின்ற சர்வதேசப் பொதுக்கலாசார முறைமை, பின் நவீனத்துவம் போன்ற எண்ணக்கருக்களின் தாக்கம் முதலானவை களும் ஒரு நாட்டின் தேசிய விழுமியங்களை அறிவதிலும், பேணுவதிலும், அடுத்த சந்ததிக் குக் கடத்துவதிலும் பாரிய தேக்கத்தினை ஏற்படுத்தி உள்ளன. இத்தகு சூழ்நிலையிற் குடும்பம் என்ற அலகிற்கு அடுத்ததாகச் சிலவேளைகளில் முதன்மை பெற்றதாகப் பாடசாலை என்ற அலகே மனித மேம்பாட்டுக் கான செயலொழுங்கினை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடுடையதாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை என்னும் நிறுவனம் மாணவர்களைச் சமூகமயமாக்கலிலும் பண்பாட்டுமயமாக்கலிலும் ஈடுபடுத்துகின்றது. மனித குலத்தின் மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் உகந்த நல்லொழுக்க விழுமியங்களைப் பயிற்றுகின்றது. அறியச்செய்தல் கடைப்பிடிக்கச் செய்தல் அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தச் செய்தல் ஆகிய செயல் ஒழுங்குகள் மூலம் மானுடம் வளர்ச்சியுறப் பணியாற்று கின்றது. ஒரு பாடசாலையினுள் இடம் பெறுகின்ற கற்றல்– கற்பித்தற் செயற்பாடுகள் அனைத்தின் மூலமாகவும் இக்கல்வி புகட்டப்படலாம். கலைத்திட்டத்தின் எல்லாப் பாடங்களினூடாகவும் மனித அபிவிருத்திக் குரிய கல்வி முன்னெடுக்கப்படமுடியும். இருப்பினும் மொழி, சமயம், அழகியல், சமூகவியல் போன்ற பாடங்கள் அகரீதியாகவும் புறரீதியாகவும் மனிதமேம்பாட்டுக் கல்வியைப் போதிப்பதற்கு உகந்தவைகளாகும்.

விழுமியங்கள் (Values) என்பன ஒரு சம்பவத்தை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குச் சார்பாகவோ, எதிராகவோ எடுக்கப்படுகின்ற மனப்பாங்குகளாகும். இது தனிநபர், குழு, நிறுவனம் என்பவை சார்ந்தவைகளாக அமையும். மனித நடத்தை யின் நன்மை, தீமைகளை நிர்ணயிப்பது விழுமியமாகும். விழுமியங்கள் அகவயத் தன்மையும், புறவயத்தன்மையும் ஒருங்கே கொண்டவையாகவும், மனிதர்கள் எடுக்கின்ற தீர்மானங்களுடன் தொடர்புள்ளவையாகவும், தனிநபரினதோ அல்லது சமூகத்தினதோ இலட்சியங்களை முக்கியப்படுத்துவனவாகவும், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மாற்றமுறுவனவாகவும் நிரந்தரத்தன்மையும், மாறுந்தன்மையும் கொண்டனவாகவும் மனிதனது செல்நெறியைக் காட்டும் வெளிச்சம் போன்றும் கலாசாரத்தின் அடிப்படை அம்சமாகவும் விளங்கின்றன.

விழுமிய முறைகள் சமூகத்தில் நிறுவன மயமாக்கப்பட்டுள்ளன. அதேபோல் மனிதனிடத்தும் உள்ளார்ந்த விதமாகத் தன்மயமாக்கப்பட்டுள்ளன. மனிதனின் மனச்சாட்சியே விழுமியத்தின் ஊற்றாகும். "மனத்துக்கண் மாசிலனாதல்" என்றும் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றும் வள்ளுவர் கூறியதும் இதனைத் தான்.

எனவே விழுமியக் கல்வி என்பது, தனிமனிதர்களாலும் சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்ட பெறுமதிவாய்ந்த நடத்தைக் கோலங்கள் பற்றி அறிதலும், பேணுதலும் அவற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் திறன் பெறுதலுமாகும். "அறிவியல் சார்ந்த விழுமியங்களை அளிப்பதே கல்வியின் நோக்கம்" என இந்தியாவின் கோதாரி ஆணைக்குழு கூறியுள்ளது. விழுமி யங்கள் நடைமுறையில் ஒன்றுடனொன்று தொடர்புடைய, ஒரு சமூகத்தின் அல்லது குழுமத்தின் விழுமியங்கள் இன்னொரு சமூகத்தின் அல்லது குழுமத்தின் விழுமியங்களி லிருந்து வேறுபடவும் மாறுபடவும் கூடும். அதே போன்று பல சமூகங்களிடையேயும் பொதுவான விழுமிய அம்சங்களும் உள.

விழுமிய மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளிற் குடும்பம் முக்கியமானது. போர்ச் சூழலும் இலங்கை போன்ற பல நாடுகளில் விழுமியச் சிதைவுகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றன. சகிப்புத்தன்மை, குழுப்பணி, பொதுச்சேவை முதலானவை விழுமியத்தை நெறிப்படுத்துகின்றன. பாடசாலைகள் இவற் றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். "அறிவியல் சார்ந்த அடைவுகளிலும் பார்க்க அறிவியல் சார்ந்த பண்புகளே முதன்மை பெறவேண்டும்" என்ற டாக்டர் ராதாகிருஷ்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் சிந்தனையைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும். நிதிக்கும் விழுமியத்திற்குமான தொடர்பு. தலைமுறை இடைவெளி ஏற்படுத்தும் விழுமிய மாற்றங்கள் நெறிப்படுத்தப்பட்ட சுதந்திரமும் விழுமியம் ஆகிய சூழ்நிலைகளை, விழுமியக் கல்வியைப் பயிற்றும் ஆசிரியர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். தனிமனித, சமூக, ஆன்மீக அடிப்படையில் விழுமியம் பற்றிய அறிவூட்டலும் அனுபவமும் அளிக்கப்படல் வேண்டும். விழுமியக் கல்வியில் ஆசிரியரின் பங்கு மகத்தானதும் பொறுப்பு மிக்கதும் ஆகும். முன் மாதிரியான அனுபவம் மிக்க ஆசிரியர்களாற் கதைகள், கட்டுரைகள், கலை, பண்பாட்டு அம்சங்கள், மறைமுக அனுபவங்கள், கல்விச்சுற்றுலாக்கள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள், அழகியற் செயற்பாடுகள் முதலான பன்முகத்துறைகளினூடாக விழுமியக் கல்வியானது மாணவர்களைச் சென்றடையவேண்டும்.

விழுமியங்களிற் பல வகைகளுள் பண்பாடு, சமயம், சமூகம், பிரதேசம், துறை சார்ந்தவை என்றவாறு இவற்றை நோக்கலாம். குடும்பம் என்னும் வட்டத்திலிருந்து பாடசாலை என்னும் சமூக நிறுவனத்திற்கு முதன்முதலில் வருகின்ற பிள்ளையானது, அங்குதான் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரையும் சந்திக்கின்றது. ஆதலாற்றான் விழுமிய அறிவூட்டலிற் பாடசாலையின் அர்ப்பணிப்புடனான பொறுப்பு மேம்பட்டதாகிறது. அதே வேளையில் ஆசிரியரின் பணிப்பொறுப்பு அதிகரிக்கின்றது. சமூகப்பிறழ்வுகள் நிகழும் போதெல்லாம் ஆசிரியரே குற்றவாளியாக்கப்படுவதும், இதற்கான காரணகர்த்தா அவரேயெனச் சமூகம் கூறுவதும், விழுமியத்திலிருந்து மாணவனொருவன் தவறினால் அது ஆசிரியர் அவனுக்குக் காட்டிய வழிமுறைகளின் தவறெனச் சாற்றுவதும் இயல்பாக நாமறிந்ததே. எனவே, ஆசிரியரானவர் சொல்லிக் கொடுத்துப் பின்பற்றச் செய்யும் நிலைமையைவிடத் தாமே முன்மாதிரியாக நடந்து, அதன்மூலம் விழுமியங்களை மாணவர் பின்பற்றி நடக்கச் செய்ய வேண்டும். உலகமும் ஓர் ஆசிரியரிடமிருந்து இதனையே எதிர்பார்க்கின்றது. நன்னூலிற் கூறப்பட்டுள்ள நல்லாசிரியனின் குணங்களும் இவை தாம்

பாடசாலைகளில் ஒரு தனிப் பாடமாக விழுமியத்தினைக் கற்பித்துவிட இயலாது. எல்லாப் பாடங்களினூடாகவும் விழுமியம் பின்பற்றப்படல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் மாணவரின் அடைவுகள், மனப்பாங்குகள் சார்பாக விழுமியங்கள் பின்புல ஆதிக்கம் செலுத்துகின்றன. இதையுணர்ந்து செயற்படல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக விழுமியங்களினின்றும் விலகியோ, தவறியோ நடப்பதை விழுமியச் சீர்குலைவு எனல் தகும். திரைப்படம், தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, இணையம் முதலான வெகுசனத்தொடர்புச் சாதனங்களும், உலகமயமாதல், யுத்தம், இடப்பெயர்வு, புலப்பெயர்வு, கைத்தொழில்மயமாதல், நகரமயமாக்கல், சமூக முரண் நிலைகள் போன்ற பல்வேறு காரணிகள் விழுமியச் சீர்குலைவுக்குக் காரணமாகின்றன.

மனித விழுமிய மேம்பாட்டுக்கான கல்வியானது பாடசாலைகள் உட்படச் சகல மட்டங்களிலும் ஆரோக்கியமான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய தேவையானது, இன்றைய இலங்கையில் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனூடாக மனித விழுமியங்களை முன்னேற்றலும், ஆன்மீக விருத்தியை ஏற்படுத்தலும் பண்பாட்டைப் பாதுகாத்தலும் அவசியமும் அவசரமாகிறது சமூக விழுமியச் சீர்குலைவைத் தாமதமின்றித்தடுத்தல், ஆசிரியர் மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளைச் சீர்படுத்தல், குடும்ப உறவுகளைப் பொருளுள்ள விதத்தில் பேணுதல், சகல தரத்தினர்க்கும் கல்விபெறும் உரிமையைக் கட்டிக்காத்தல், மனோதத்துவ அடிப்படையில் ஆன்மீக நாட்டத்திற்கான கல்விக் கொள்களைத் தயாரித்தல், தேசிய பிரதேச மட்டங்களில் குறுகிய, நீண்டகாலத் திட்டங்களையுருவத் தொகுதியொன்றினுள் தேசிய, அரசியல் பிரச்சினைகளைப் புகுதிவைத்தல் போட்டியான உலகில் அறநெறிசார்ந்த வாழ்க்கைக்கு வழிகாட்டல் முதலான நோக்கங்களோடு மனித மேம்பாட்டுக்கான விழுமியக் கல்வியைச் செயற்படுத்தல் இன்றியமையாததாகும்.

ஆளிடைத் தொடர்புகளின் சீர்குலைவு, கல்விஅரசியல் மயமாதல், ஆசிரியர் – மாணவர் தொடர்பின் சீர்குலைவு, குடும்பக் கட்டுக்கோப்பின்சீர்குலைவு, போட்டியுலக வாழ்வுக்குறிக்கோள் வளர்ச்சி, சமூகப் பிரச்சினைகள் பாடசாலையினுள் ஊடுருவுதல், விழுமியங்கள் திரிபடைதல், மானுடப்பண்புச் சீர்குலைவு, ஆன்மீகச் சீர்குலைவு ஆகியவை தடுக்கப்படக்கூடிய விதத்தில் விழுமிய மனித மேம்பாட்டுக் கல்விச் செயன்முறைகள் திட்டமிட்டு, நெறிப்படுத்தப்படல் அவசிமானது. தனி மனித ஆளுமை விருத்தியும், சமூக ஆளுமை விருத்தியும் சமமானமுறையில் மேம்பாடடையச் செய்தல் இன்றியமையாதது. இதற்காகச் சிறப்பான வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்வைக்கப்படல் வேண்டும். பாடசாலைகள் இதற்கு பலமாய் நின்று விழுமிய மாண்பினை உயர்த்துதல் வேண்டும்.

தனிதமனித விழுமியங்கள் (Personal Values), சமூக விழுமியங்கள் (Social Values), சமுதாய விழுமியங்கள் (Community values), தேசிய விழுமியங்கள் (National values) சர்வதேச விழுமியங்கள் (International Values) உலகமயமாதல் விழுமியங்கள் (Global Values) ஆகியவற்றின் அடிப்படையில் விழுமியக்கல்வி ஊட்டப்படுதல் இன்றைய தேவையாகும். வகுப்பறைச் செயற்பாடுகளின் போது சிந்தனையைக்கிளறும் முறை, குழுமுறை, கலந்துரையாடல்முறை, நடிப்புமுறை, பிரச்சினையை விடுவித்தல் முறை, களமுறை, தேடல்முறை முதலான பல்வேறு கற்பித்தல் முறைகளையும் விழுமியக் கல்விக்காகப் பயன்படுத்தமுடியும். கூட்டுறவு, தூய்மை, மரியாதை, இரக்கம், கடமை, ஒழுங்கு, கூட்டுணர்வு, சமத்துவம், நட்பு, நம்பிக்கை, நன்றியுணர்வு, நேர்மை, மனிதத்துவம், நீதி, விசுவாசம், பணிவு, கணிப்புக் கொடுத்தல், கீழ்ப்படிவு, தன்னடக்கம், சுயமரியாதை, பொறுமை, உண்மை, சமாதானம், புனிதம், ஆதரவு, உதவுதல், ஒன்றுசேர்தல், நேரக்கட்டுப்பாடு, நாட்டுப்பற்று ஆகிய பண்புகள் யாவும் ஒரு மனிதனதும், சமூகத்தினதும், உலகத்தினதும், மனித குலத்தினதும் மேம்பாட்டுக்குகந்தவைகளாகும். இவற்றைப் பண்பாட்டடிப்படையில், விழுமிய ஒழுக்க அடிப்படையிலும், இணைந்ததாகவும் கற்கவும் கற்பிக்கவும் முடியும். அவற்றின் உள்ளார்ந்த செயற்பாட்டு விருத்தியே உண்மையில் மனித மேம்பாட்டு விருத்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வித்துறையை எமது பிரதேசத்தில் வளர்ச்சியுறச் செய்வதற்கான பிரயோகங்கள்



திரு.எஸ்.கே.யோகநாதன்
B.A.(Hons.)Dip.in Ed (Merit)
M.A.Teacher Education
Cert.in Professional English (Malaysia)
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி

எந்த ஒரு நாட்டின் அபிவிருத்தியிலும் ஆரம்பக்கல்வி மையப்பாத்திரத்தை வகிக்கின்றது. மனித வளர்ச்சிப் பருவங்களில் மிக முக்கிய பருவத்தில் இருக்கும் மாணவர்களே ஆரம்பக் கல்வியைக் கற்கின்றார்கள். நாட்டில் அவர்கள் நற்பிரசைகளாக வாழ்வதற்கும், கல்வியை முன் எடுத்துச் செல்வதற்கும் ஏற்ற அத்தியாவசித் தேர்ச்சிகள் வளர்ச்சியடைய வேண்டியதும் இப்பருவத்திலேயாகும். இவ்வாறான முக்கியத் துவமுடைய ஆரம்பக் கல்வி அதன் தத்துவார்த் தப் பின்னணி, சமூக உளவியற் பிரயோகங்கள் பற்றிய சிந்தனைகள் பலவாறாக இன்று விருத்தியடைந்துள்ளன. ஆனாலும் எமது பிரதேசத்தில் இவ்விருத்தி நிலைகள் பிரயோகிக் கப்படுவது மிகக்குறைவாக இருப்பதுடன் பல தடைக்காரணிகளும் வளர்ந்து வருகின்றன. இந்நிலையில் இருந்து அபிவிருத்திகாணப் பல விரைவான, துணிகரமான நடலடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது.

### தத்துவார்த்தச் சமூகவியலினூடாக வளர்ந்த ஆரம்பக்கல்வி

◈ மானுடவியல் அபிவிருத்திக்குத் தத்து வார்த்தக் கல்வி பல வெளிச்சங்களைக் காட்டி யுள்ளது. மனிதனின் இலட்சியக் குறிக்கோள் களான சுதந்திரம், சமாதானம், சமத்துவம், சமூக நீதி, சக வாழ்வு ஆகிய கருத்தியல்சார் ஆரம்பக் கல்வி, தத்துவார்த்த அறிஞர்களினூடாகவே உலகம் முழுவதுமாகப் பரவியது. கீழைத்தேய இந்துமதத் தத்துவத்தில் "தீமையில் இருந்து நன்மைக்கு அழைத்துச் செல்வது. இருளில் இருந்து ஒளிக்கு அழைத்துச் செல்வது, சாவிலிருந்து சாகாமைக்கு அழைத்துச் செல்வது" ஆரம்பக் கல்வியே என கடோப உபநிடதத்தில் கூறப்படுகின்றது. இவ்வாறு உலகின் ஏனைய மதங்களும் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தைத் தமது மூல நூல்களினூடாக இயம்புகின்றன. தொடர்ந்து மேலைத்தேயக் கிரேக்க அறிஞர்களிற் பிளேட்டோ முதன்முறையாக ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கான கல்விமுறை ஒன்றைப் பரிந் துரைத்தார். அடிப்படையில் இசை, தாளம், அசைவு, விளையாட்டு, கதைகள், உடல் வித்தைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஆரம்பக்கல்வி இருக்கவேண்டும். அது சிறார்களைக் கவர வேண்டும். மேலும் தனது குடியரசு நூலிற் பிளேட்டோ "ஒருபிள்ளையை அழுத்தங்களினால் கற்பிக்க முனைந்தால் அது எவற்றையுமே பெற்றுக்கொள்ளமுடியாத சுயம் இழந்த மனிதனாவான்" எனக் குறிப்பிடு கின்றார், இவரைத் தொடர்ந்து பின்வரும் அறிஞர்கள் கருத்துக்களை இயம்பியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ கெமினியஸ் (1752–1816)– பிள்ளைகளின் இயல்புகளுக்கேற்பக் கல்வி வடிவமைக்கப் பட வேண்டும். தாய்மொழிமூலமாகவே ஆரம்பக்கல்வி வழங்கப்படவேண்டும்.

◈ ஜீன் ஜக் ரூஸோ – (1712–1778) ஆரம்பக் கல்விப் பிள்ளைகளை இயற்கையான விடுதலைக்கு வித்திட்டு, அவர்களுக்கான கல்வியை இயம்பியவர். கருணை, அன்பு, காப்பு, நம்பிக்கை என்பவை மூலமே ஆரம்பக் கல்வி வழங்கப்படவேண்டும்.

◈ பிரெட்றிக் புறோபல் (1782–1852)– ஆரம்பக் கல்விச் சிறார்களின் கல்வி, அவர்களின் உள்ளார்ந்த வளர்ச்சிப் பாங்கினூடாகவே வளர்கின்றது. ஆசிரியர் தோட்டக்காரனாக மாணவர்கள் என்ற பூங்கன்றுகளை நீர்பாய்ச்சி, உரமிட்டு வளர்க்கவேண்டும் என்றார். மொண்டிசோரி – (1870–1952) பிள்ளைமையக் கல்வியே ஆரம்பக் கல்விக் குப் பொருத்தமானது. ஆரம்பக்கல்விப் பிள்ளைகள் சுதந்திரமாக, சுயமாகக் கற்க வழிகாட்டப்படவேண்டும்.

இவர்களுடன் கீழைத்தேய, மேலைத் தேய, பல அறிஞர்கள், தத்துவஞானிகள் ஆரம்பக் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர். மேலும் சிக்மன் பிராய்ட், பியாஜே, யுகொஸ்கி போன்ற அறிஞர்கள் உளவியல் விருத்தியி னூடாகச் சிறார்களின் கல்வி அபிவிருத்தியை மேற் கொள்ளப் பல எடுத்துக்காட்டுக்களையும், மாதிரிக் கற்கைகளையும் தந்துள்ளனர். நடத்தைவாத அறிஞர்கள் சமூகவியல் விஞ்ஞானிகள் என எல்லாக் கல்வியியலா ளர்களும் ஆரம்பக்கல்வியின் முக்கியத்து வத்தை எடுத்தியம்பியுள்ளனர்.

**UNESCO வின் ஆரம்பக்கல்வி பற்றிய கருத்தியல்கள்**

இன்று உலகளாவிய கல்விக்குப் பொறுப்பான அமைப்பாக ஐ.நாவின் ஒரு முக்கிய அம்சமான UNESCO உள்ளது. இது சகல ஆரம்பக்கல்விப் பிள்ளைகளும் தரம் வாய்ந்த அடிப்படைக் கல்வியை இலவசமாகப் பெறுகின்ற உரிமை உடையவர்கள் எனத் தனது பிரகடனத்திற் கூறுகின்றது. மேலும் இருபத்தி யோராம் நூற்றாண்டில் ஆரம்பக்கல்வி: கல்வி யின் தவிர்க்க முடியாத ஓர் அடிப்படையாகும். இப்பருவப் பிள்ளைகளின் பாதுகாப்பு உரிமை, அடிப்படை உரிமைகள், கல்விஉரிமைகள் எல்லோருக்கும் கல்வி என்ற செயற்றிட்டம். என்பவை முற்றுமுழுதாகக் குறிப்பிட்ட அரசாங்கங்களினாற் பேணப்பட வேண்டும். .புதிய நூற்றாண்டில் ஆரம்பக் கல்வியை ஜனரஞ் சகப்படுத்த UNESCO பின்வரும் செயலாற்று கைகளை மேற்கொள்ள வழிகாட்டுகின்றது.

1. உலகின் பல்வேறு பாகங்களிலும், பல்வேறு குழுக்களினதும், பல்வேறு கள நிலை மைக்குத் தக்கதுமான கல்வித் தேவை களைக் கருத்திற்கொண்டு, விசாலமான அளவில் ஆரம்பக்கல்விக் கட்டமைப்பும், கலைத்திட்டப் புத்தாக்கங்களும் அமுலாக் கப்பட வேண்டும்.
2. ஆரம்பக்கல்வியினூடாக முழு அளவிலான ஆளுமை விருத்தி, பிரசைகளுக்கான முழுப் பொறுப்புணர்ச்சி, கலாச்சார ரீதியான முதிர்ச்சி என்பவற்றை மொழித்திறன், கணிதத் தேர்ச்சிகளினூடாக மேற்கொள் ளப்படவேண்டும்.
3. முன்பள்ளி நிறுவனங்களுக்கும், ஆரம்பக் கல்வி நிறுவனங்களுக்கும் இடையில் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளும், தொடர்ச்சிகளும் இருக்க வேண்டும். இதனுடாக இடைவிலகல்கள் தவிர்க்கப்படவேண்டும்.

4. வாழ்நாள் முழுவதற்கும் உதவக்கூடிய அடிப்படைகளை ஆரம்பக்கல்வியினூடாக வழங்கப்படவேண்டும். இது கற்கக் கற்றல் தேர்ச்சியுடன் தொடர்புடையதாகவும் இருக்கின்றது.

5. ஆரம்பக் கல்விப் பாடநெறி புத்தியாலும், கரங்களாலும் புதிய படைப்பாற்றலை வளர்த்தல், முதியோர், ஆசிரியர்களைக் கனம் பண்ணுதல், தம்முடையதும் ஏனையவர்களதும் கலாச்சாரங்களை மதித்தல் என்பவற்றின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறாக உலகம் முழுவதும் ஆரம்பக் கல்வியை விருத்திசெய்யப் பல புதிய செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையிலும் பல்வேறு கல்விச்சீர்திருத்தங்களினுடாக இத்துறை இன்று வளர்ச்சி பெற்றுவருகின்றது. ஆனாலும் எமது பிரதேசத்தில் இத்துறையின் வளர்ச்சி போதுமானதாக இல்லை. ஆரம்பக் கல்வித்துறை வளர்ச்சிக்குப் பல தடைக்காரணிகளும் காணப்படுகின்றன. மேலும் தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக மேலும் பல பிரச்சினைகள் எமது பிரதேச ஆரம்பக்கல்விப் பாடசாலைகளிற் காணப் படுகின்றன.

## எமது பிரதேசத்தில் ஆரம்பக் கல்வித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள்

புதிய கலைத்திட்ட ஆவணங்கள், ஆசிரியர்– கைந்நூல் மாணவர்களுக்காகப் பாடநூல்கள் ஆகியன உரிய காலத்திற் கிடைக்காமை.

- தர உள்ளீட்டு (Quality Inputs) வளங்கள் மற்றும் கலைத்திட்ட சாதனங்கள் உரிய காலத்திற் கிடைக்காமை.
- கலைத்திட்டத்தை அமுலாக்க வசதியாக, செயற்பாட்டறை, விளையாட்டு முற்றம், மூடிய வகுப்பறைகள் முதலிய பௌதிக வளங்கள் ஆகியன பெரும்பான்மையான பாடசாலைகளில் இல்லாமை.
- ஆரம்பக்கல்வித்துறைக்குத் தேர்ச்சிபெற்ற ஆசிரிய வளப் பற்றாக்குறை.
- ஆரம்பக் கல்வித்துறையின் நவீன பிரயோகங்கள் முகாமைத்துவ அம்சங்கள் தொடர்பான அறிவீனங்கள் காணப்படுகின்றமை.
- ஆரம்பக் கல்வித்துறைக் கலைத்திட்டத்தை அமுலாக்கும் முகவரான தேசியக் கல்வி நிறுவகத்திற்கும் எமது பிரதேசப் பாடசாலைகளுக்கும் இடையே இடைவெளி பெரிதாகக் காணப்படல்.
- கல்விஅமைச்சு, மாகாணக்கல்விஅமைச்சு, என்பவற்றினால் வழங்கப்படுகின்ற இத் துறைசார் வழிகாட்டல்கள் தற்காலச் சூழ்நிலை காரணமாகப் போதிய அளவிற் கிடைக்காமை.
- பெற்றோர்கள்,சமூகத்தவர்களிடையே இத்துறையின் முக்கியத்துவம் உணரப் படாமை, ஊடகங்களின் செயலாற்றுகை போதாமை.
- அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளினூடாக மாணவர் கணிப்பீடு தொடர்பான விளக்கமின்மைகள்

இப்பிரச்சினைகளில் இருந்து விரைவாக விடுபடுகின்றபோதே எமது பிரதேசத்தில் ஆரம்பக்கல்வித்துறையை வளர்ச்சியுறச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இதற்கு எமது பிரதேசக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வித்துறை முதன்மை ஆசிரியர், பாடசாலை அதிபர்கள், கல்வியிய லாளர்கள் கூடுதலான பங்களிப்புக்களைச் செய்யவேண்டும்.மேலும் இத்துறை தொடர்பாகப் பல ஆய்வுகளையும் முன்னெடுக்கவேண்டும். ஆய்வுகள் வழியாகவே கல்விச்செயல்முறை யைச் சரியான பாதையில் இட்டுச்செல்லமுடியும். கல்வியியல் ஆய்வுகள் வழியாகவே கலைத் திட்டம் நெறிப்படுத்தப்படுகின்றது .

சமகாலக் கல்வியியல் ஆய்வுகள் வழியாகவே பல பிரச்சினைகள் இனம் காணப் பட்டுத் தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. போதுமான ஆய்வுகள் இன்றி ஆரம்பக் கல்விச் செயன்முறையை விருத்திசெய்ய முடியாது. எனவே ஆரம்பக் கல்வித்துறை ஆசிரியர்கள் இத்துறையை வளர்ச்சியுறச் செய்யச் செயல் நிலை ஆய்வுகளையும் முன்னெடுக்க வேண்டி யுள்ளது. இவ் ஆய்வுகள் வழியாக:

- ஆரம்பக் கல்விப் பாடசாலைகளிற் கலைத் திட்டச் சீர்திருத்தத்தை அமுல்படுத்தத் தடையாகவுள்ள காரணிகளை இனம் காண வாய்ப்புக்கள் கிடைக்கும்.
- புதிய கலைத்திட்டம். கலைத்திட்டம் சார் சாதனங்கள், உட்கட்டமைப்பு என்பவற்றிற் பயன் தரும் சக்தியை மதிப்பிடக்கூடியதாக இருக்கும்.
- எமது பிரதேசப் பாடசாலைகளிற் பயிலும் ஆரம்பக் கல்வி மாணவர்கள் குறித்த தேர்ச்சிகளைப் பெற்றுள்ளார்கள் என்பதை அறியமுடியும்.

ஆரம்பக்கல்வி முகாமைத்துவக் குறைபாடு களை இனம் காணக்கூடியதாக இருக்கும். மேலும் புதிய ஆரம்பக்கல்விச் சீர்திருத்தத்தை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களுக்குத் தேவையான திறன்கள், மனப்பாங்குகளை வழங்கிப் பின்பற்றப்பட்ட பயிற்சித் திட்டங்களின் பொருளடக்கம் நடைமுறைகளின் பயன்பாடுகளை மதிப்பிட்டு அபிவிருத்திக்கான இத்துறைசார் ஆய்வுகள் வழிப்படுத்தும். இதற்குச் சரியான வழிகளைக் காணத் தேசியக் கல்வியற் கல்லூரி, பல்கலைக் கழகங்கள் என்பவற்றின் வழிகாட்டல் உதவிகளையும் பெறமுடியும்.

"நடவாதது என்ன முயற்சித்தாலும் நடக்காது
நடப்பது என்னதடை செய்தாலும் நில்லாது"

*ரமணரிஷி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்பகப் புற்றுநோய் (Breast Cancer)



செல்வி ச. அம்பிகைபாகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்.
தலைவர், உடற்கூற்றியற்துறை, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்
(முன்னாள் பழைய மாணவர் சங்கச் செயலாளர்)

பெண்களின் மார்பகத்தைத் தாக்கும் நோய்களுள் முக்கியமானது மார்பில் உருவாகும் கட்டிகள் ஆகும். இக்கட்டிகளில், புற்றுநோய் அல்லாத கட்டிகள், உதாரணமாக Fiboadenoma, Fibxoadenosis போன்றவையும், புற்று நோய்க் கட்டிகளும் (Cancer) அடங்கும். புற்றுநோய் அல்லாத கட்டிகள் பற்றி அதிகம் பயப்படத் தேவையில்லை. இக்கட்டிகள் பொதுவாகக் கெட்டியானதாகவும், நன்கு வரையறுக்கப்பட்ட தாகவும், அழுத்தும்போது சுயமாக அசையக் கூடியனவாகவும், தனித்தனி யாகவோ, அரிதாக ஒன்றுக்கு மேற்பட்டவை ஒன்று சேர்ந்தோ காணப்படலாம். இவற்றை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுவது நல்லது. யாழ் போதனா வைத்தியசாலையில் 1993–1994 காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எனது ஆய்வில் 108 பெண்களிற் புற்றுநோய் அல்லாத கட்டிகள் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

அடுத்து, மார்பகத்தில் காணப்படும் அடுத்தவகையான புற்றுநோய்க் கட்டிகள் பொதுவாக நடுத்தரவயதுப் பெண்களைத் தாக்குவது அவதானிக்கப்பட்டுள்ளது. உலகில் ஒவ்வொரு வருடமும், கிட்டத்தட்ட 5 இலட்சம் பெண்கள் இவ்வாறான மார்பகப்புற்று நோயாற் பாதிக்கப்படுகின்றனர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நவீன உலகில் வளர்ச்சி கண்டுவரும் பெண் சமூகத்துக்கு இந்நோய் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது. இதனால் மரணம் சம்பவிக்கும் வீதமும் அதிகமாகவே காணப்படு கின்றது. அண்மையில் அமெரிக்காவிற் செய்யப்பட்ட ஆய்வில் 1,85,000 பெண்கள் மார்பகப் புற்றுநோயாற் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இவர்களுள் 1/3 பங்கினர் மரணத்தைத் தழுவியுள்ளனர் எனவும் தெரிவிக்கின்றது. அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்திலும் இவ்வகையான நோயினாற் பாதிப்புறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1997ஆம் ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலையில் 171 பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் காணப்பட்ட தாக இழையவியற் சோதனைகள் நிரூபித்துள் ளன. இது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கணிசமான அதிகரிப்பாகும். இந்நோயுள்ள சிலர் பயம் காரணமாகவோ, அன்றேல் விழிப்புணர்வு இன்மை காரணமா கவோ வைத்தியசாலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கக்கூடும். எனவே யாழ்ப்பாணத்தில் மார்பகப்புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மேற்சொன்ன தொகையை விட அதிகமாகவே இருக்கலாம் என்பது கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக, புற்றுநோய் என்பது சிலவகைக் கலங்களின் அபரிமிதமான கட்டுப்பாடற்ற வளர்ச்சியாகும். இவ்வாறு அபரிமிதமாகப் பெருக்கமுறும் கலங்கள், ஒட்டுண்ணிகள் போற்செயற்பட்டு, சாதாரண கலங்களிலிருந்து தமக்குத் தேவையான போசனையையும், ஒட்சிசனையும் பெறுகின்றன. இதனாற் புற்றுநோய்க்குட்பட்ட நோயாளிக்கு உடற்களைப்பு, மெலிவு, சோர்வு போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன.

மார்பகப் புற்றுநோய் பொதுவாக பெண்களையே தாக்குகின்றது. ஆண்களை இந்நோய் தாக்குவது மிக மிக அரிதாகும்.

**நோயை உருவாக்கும் காரணிகளாக பின்வருவன காணப்படுகின்றன.**

**பரம்பரை-** குடும்பத்தில் தாய்க்கு அல்லது சகோதரிக்கு மார்புப் புற்று நோயிருப்பின் அக்குடும்பத்தில் ஏனைய பெண்களுக்கு இப்புற்று நோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

**வயது** பொதுவாக 45 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இந்நோய் வருகிறது. 20 வயதிற்குட்பட்ட பெண்களைத் தாக்குவது அரிது.

**உணவுப் பழக்க வழக்கங்கள்** அதிக விலங்குக் கொழுப்புகளை உணவாக உட்கொள்பவர்களிலும் மதுபானம் அருந்தும் பெண்களிலும் இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது.

மார்பகப்புற்றுநோய் Dioxine என்னும் இரசாயனப் பொருளின் தாக்கத்தாலும் ஏற்படவாய்ப்புண்டு என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எங்கள் உடற்கலங்களுக்கு இந்த Dioxine மிகவும் கொடிய நஞ்சாகக் கருதப்படுகிறது. பிளாஸ்டிக் பொருட்கள், போத்தல்கள் ஆகியவற்றில் உயர்குளிரூட்டிகளில் சேமிக்கப்படும் நீர், மைக்கிரோ அவன்களில் பிளாஸ்டிக் பாத்திரங்களில் சூடாக்கப்படும் அல்லது சமைக்கப்படும் உணவுகளில் இந்நஞ்சானது தோன்றுவதை அவதானித்ததாக காசில் வைத்தியசாலை உளநலத் திட்டமிடல் முகாமையாளர் எட்வேட் பியூஜிமோட்டோ என்பவர் தொலைக்காட்சிச் செவ்வியின்போது கூறியுள்ளமை கவனிக்கத் தக்கது.

பிள்ளைகள் இல்லாத அல்லது குறைந்த எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெறும் பெண்கள் கூடுதலாக இந்நோயாற் பாதிக்கப்படுகின்றனர். அதேவேளை அதிகளவு குழந்தைகளைப் பெற்று நன்கு பாலூட்டும் தாய்மாருக்கு இந்நோய் மிக மிகக் குறைவாக இருப்பது ஆச்சரியப்படத்தக்கதொன்றாகும்.

பிள்ளைக்குப் பால் கொடுக்காத தாய்மார், மிகக்குறைந்தளவு காலத்துக்குப் பாலூட்டும் தாய்மார் ஆகியோரில் இந்நோய் கூடுதலாகக் காணப்படுகிறது. எனவே நீண்ட காலம் குழந்தைக்குப் பாலூட்டும் தாயானவள் இந்நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும்.

பிந்திப் பூப்படைந்து, முந்தி மாதவிடாய் நின்றுவிடும் பெண்கள் இதன் தாக்கத்திலிருந்து தப்பிக்க வாய்ப்புக்கள் அதிகம்.

கருத்தடை மாத்திரைகளின் பாவனையும் இந்நோயைத் தூண்டும் காரணியாக உள்ளது என்பதனைக் கணவன் மனைவி இருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாத ஒருசில காரணிகளைவிட, பல காரணிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோயின் தாக்கத்தைப் பெண்களிடையே குறைக்கமுடியும்.

மார்பகப்புற்று நோயை ஆரம்பத்தில் இனம் காண்பது அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். மார்பகப்புற்று நோய்க்கான அறிகுறிகளாவன;

1. நோவற்ற கெட்டியான அசையும் தன்மையுள்ள கட்டிகள் பொதுவாக மார்பின் மேற்புற வெளிப்புறப்பகுதிகளிலேயே கூடுதலாகக் காணப்படும்.
2. தோலில் ஏற்படும் நிறமாற்றம் ஆரம்பத்தில் சிவப்பாக இருந்து படிப்படியாக நிறம் மாறும். பெரும்பாலான சமயம் இது தோடம்பழத்தின் தோல் போன்று தோற்றமளிக்கும். சிலவேளை தோலில் மாறாத புண்களும் காணப்படலாம்.
3. மார்பகத்தின் வடிவம், அளவு என்பவற்றை வளர்ந்துவரும் கட்டிகள் மாற்றிவிடுமென்பதால், பாதிக்கப்பட்ட மார்பகம் மற்றையதிலிருந்து வேறுபட்டுக் காணப்படும்.
4. மார்பகத் தோல் இழுபட்டு உள்வாங்கப்பட்டிருக்கும்.
5. மார்பகம் இலகுவில் அசையாது இறுக்கமாக இருக்கும்
6. முலைக்காம்பு உள் நோக்கி இழுக்கப்பட்டிருத்தல், மார்பகத்தின் மயிர்ப்புடைப்புகளில் தடிப்பு இருத்தல், சிலவேளைகளில் முலைக்காம்பிலிருந்து இரத்தம் அல்லது திரவம் வெளியேறலாம்.
7. முலைக்காம்பைச் சுற்றியுள்ள கறுப்பு நிற வட்டப் பகுதி சிவப்பு நிறமாக மாறியிருத்தல்.
8. பாதிக்கப்பட்ட மார்பகப்பகுதி, கமக்கட்டு ஆகியவற்றில் நிணநீர் முடிச்சுகள் வீங்கிப் பெருத்திருக்கும்.

மேலே கூறப்பட்ட எல்லா அறிகுறிகளும் ஒரு நோயாளிக்கு இருக்காது. மாறாக இவற்றில் ஒன்றோ, பலவோ காணப்படலாம். இவ்வாறு காணப்படின் தாமதியாது வைத்திய ஆலோசனை பெறப்படல் வேண்டும். இவ்வாறான அறிகுறிகளை நாம் கவனியாது அலட்சியப்படுத்தினால், நோயின் தாக்கம் அதிகரித்து, முதுகுநோ, கால்களில் நோ, சோம்பல், நிறை குறைதல், மூச்சுவிடக் கஷ்டமாயிருத்தல், தோலில் சிறுசிறு கழலைகள் உண்டாதல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

ஒரு மார்பகத்தில் உருவாகும் கட்டிகளை நாம் ஆரம்பத்தில் கண்டறிந்து சிகிச்சை செய்யாதுவிடின், அது உடலின் ஏனைய பகுதிகளுக்கு இரத்தம், நிணநீர் என்பவை மூலம் பரவி உடலின் வேறு பகுதிகளிலும் புற்று நோயை ஏற்படுத்தும். இதை ஆங்கிலத்தில் Secondaries, அல்லது metastasis என்று கூறுவார்கள். இந்நிலைக்கு உள்ளான நோயாளியைக் காப்பாற்றுவதென்பது இயலாத காரியமாகும். இங்கு மரணம் என்பது தவிர்க்கமுடியாததாகிறது.

இவ்வாறு இந்நிலை ஏற்படாது தவிர்ப்பதற்கு ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு மாதவிடாயின் பின்பும் "சுயமார்பகப் பரிசோதனை", (Self examination of breast) செய்வதன்மூலம் இதனை அறிந்து கொள்ளலாம். இதற்காக வைத்தியசாலை செல்லவேண்டியதில்லை.

மார்பகப்புற்றுநோய் ஆரம்பத்திற் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படின் ஏனைய புற்று நோய்களுடன் ஒப்பிடும்போது நீண்டகால வாழ்வு சாத்தியமானதாகும். இந்நோய் மார்பினை மட்டும் பாதித்திருப்பவர்களில் 75%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவர்கள் 10 வருடங்களுக்குமேல் உயிர் வாழ்கின்றனர். அதேவேளை உள்உறுப்புகளான ஈரல் என்புகளுக்குப் பரவிய நிலையிற் சிகிச்சை பெற்றவர்கள் 5 வருடங்களுக்குக் குறைவாகவே வாழ்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலைநாடுகளில் வருடாவருடம் mammography என்னும் மார்பகப்புற்று நோய் கண்டறியும் கருவி மூலம் பெண்கள் மார்பகத்தைச் சோதனை செய்யும் முறை உள்ளது.

எனவே மார்பகப்புற்று நோயிலிருந்து எமது பெண் சமுதாயத்தைக் காக்க நோய்பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது கற்றறிந்த சமூகத்தவர்களது கடமையாகும்.

## செய்தி நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| ☞ இலங்கை | - | லங்காபுவத் |
| ☞ இந்தியா | - | P.T.I.U.N.I |
| ☞ ஈராக் | - | I.N.A |
| ☞ பிலிப்பைன்ஸ் | - | P.N.A |
| ☞ பாகிஸ்தான் | - | A.P.P |
| ☞ ஜப்பான் | - | கியோடே, கிகி |
| ☞ பிரான்ஸ் | - | A.F.P |
| ☞ இத்தாலி | - | அன்சா |
| ☞ ஜேர்மனி | - | D.P.A.A.D.N |
| ☞ யூகோஸ்லாவியா | - | டான்ஜிக் |
| ☞ ரஷ்யா | - | டாஸ் |
| ☞ எகிப்து | - | மேனா |
| ☞ மொராக்கோ | - | M.A.P |
| ☞ ஸைரே | - | A.Z.P |
| ☞ கானா | - | G.N.A |
| ☞ கியூபா | - | பெரிலா |
| ☞ பிரேசில் | - | A.N |
| ☞ ஆர்ஜென்ரீனா | - | டீலம் |
| ☞ மலேசியா | - | பெர்நமா |
| ☞ ஈரான் | - | இர்னா |
| ☞ அமெரிக்கா | - | CNN, ரொய்ட்டர் |
| ☞ பிரித்தானியா | - | ITN |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் மாற்றங்களும் இற்றைப்படுத்தலும்



திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன்
B.A. (Cey), GDE (merit), Dip. in. Psy 1st. class
Dip. in .Guidance counceling, M.Phil .in .Ed.
உப பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.

கல்வியே ஒரு நாட்டு அபிவிருத்தியின் கருவி என்ற நிலையில் முதன்மை பெறுகின்றது. தேசத்தைக் கட்டி எழுப்புதல் அல்ல; நாட்டு மேம்பாட்டிற்கான அடிப்படைகளைக் கல்வியே கொண்டுள்ளது. கல்வியில் இற்றைப்படுத்தலே முதன்மைக் காரணியாகத் தற்போது உள்ளது. மேலும் எந்த ஒரு துறையிலும் இற்றைப்படுத்தல் இல்லையேல் பின்னடைவுகளே ஏற்படும். கல்வியை இற்றைப்படுத்தலினூடாகப் பின்வரும் மூன்று படிநிலைகளினூடான பிரவேசங்களைச் சர்வதேசக் கல்வி நிறுவகம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

1. கல்வி கிடைக்கப் பெறக்கூடிய அமைப்புக் களை விரிவாக்குகையே கலைத்திட்டங் களை இற்றைப்படுத்துதல்.
2. சம வாய்ப்பும் சம கணிப்பினூடாகச் சர்வதேச நிலைகளுடன் பொருந்துதல்.
3. அறிவின் உன்னதங்களை (Excellence) நோக்கி ஒவ்வொருவரையும் திசைமுகப் படுத்தல்.

உலகில் ஒவ்வொரு பிள்ளையும் தான் சார்ந்த குடும்பச் சூழலுக்கு வெளியே கல்வியைப் பெறுவதற்காக நாடும் அடிப்படை நிறுவனம் பாடசாலையாகும். பொதுக் கல்வியமைப்பில் பாடசாலைகளே முதன்மை இடத்தை வகிக்கின்றன. நாட்டிற்கும் சமூகத்திற்கும் சுமையாகாத, நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பினை நல்கக் கூடிய அதே சமயம் ஆளுமையுடைய பிரசைகளை அளிக்க வேண்டியவையும் பாடசாலைகளே ஆகும். எனினும் எமது நாட்டைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட மகத்தான பணிகளை ஆற்றுவதில் எமது பாடசாலைகள் சோர்வுற்று உயிர்ப்பற்று பல பின்னடைவுகளைக் கொண்டிருப்பதைப் பலரும் விமர்சிக்கின்றனர். குறிப்பாக அரசாங்கப் பாடசாலைகள் முறைசார் கல்வியமைப்புத் தொடர்பான பல கேள்விகளும் கல்வி தனியார் மயமாகிச் சர்வதேச நிலைமை களுடன் பொருந்தும் போக்கில் சென்று கொண்டிருக்கின்றது.


மேல் மாகாணத்தில் ஐம்பத்தொன்றும் மத்திய மாகாணத்தில் பதினாறும், வடமேல் மாகாணத்தில் ஏழும் சப்பிரகமூவாவில் மூன்றும், தென் மாகாணத்தில் நான்கும், ஊவா, வடகிழக்கு மாகாணங்களில் தலா இரண்டும் 1980 ஆம் ஆண்டு 17ஆம் இலக்கச் சட்டப்படி சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கின்றன. நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு பயின்று வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இற்றைப்படுத்தல் கல்விச் செயலாற்றுகையில் இப்பாடசாலைகளின் வேகம் கல்வியமைப்பிலே பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. மேலும் இது தொடர்பான முறையான ஆய்வுகள் வெளிவரின் அதிர்ச்சி தரும் பல தகவல்கள் வெளிவரும். பணம் உள்ளவர்களே படிக்கக்கூடிய வர்க்கமாக மீண்டும் உறுதிப்படுத்துகின்றவையாகச் சர்வதேச பாடசாலைகள் விமர்சிக்கப்படுகின்றன. இதனை மையமாக வைத்து ஏனைய அரசாங்கப் பாடசாலை அமைப்புக்களைத் தரமுள்ளதாக்க வேண்டிய மிக அவசர தேவை இன்று எழுந்துள்ளது. இத்தேவை இன்று வரை புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. இது பாரதூரமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். இத்துடன் இன்றைய மாணவர்கள் பிரத்தியேக தனியார் கல்விக்குச் செல்லுதலும் வேகமாக அதிகரித்து வருகின்றது.

### இலங்கையில் கல்வித் தரத்தின்படி பிரத்தியேகக் கல்விக்குச் செல்லும் மாணவர்கள்




I [illegible] ... நிலைக்குப்பின
iii. இரண்டாம் நிலை iv. சகலதரங்களும்

அட்டவணையின்படி மாணவர் குடித்தொகையில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் நிகழ்வுகள் உயர்ந்தும் – அதிகரித்தும் செல்வதானது நாட்டின் முறை சார்ந்த கல்வி அமைப்புத் தொடர்பான நம்பிக்கையினைக் குறிப்பதாக உள்ளது. மாணவர் குடித்தொகையில் தனியார் கல்வியின் எண்ணிக்கையானது கல்வி மட்டத்துடன் சேர்ந்து ஆரம்ப தரங்களில் 42 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் செலவிலும் இதற்கு இணையான அதிகரிப்புக் காணப்பட்டது.

### பாடசாலைகளை விட்டு வெளியேறியவர்களுக்கான கல்வியும் தொழிலும்

பாடசாலையை விட்டு விலகிய பெருமளவிலான மாணவர்களுக்குத் தொழில் கல்வியை வழங்குவதிலும், பல்கலைக்கழக அனுமதிப் புள்ளி கிடைத்தும் அனுமதி பெறாத அல்லது க.பொ.த. சாதாரணம் / உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான பல்கலைக்கழகப்பட்டத்தையும் அதனோடு இணைந்த தொழிலையும் தொடர் தொழில் வாண்மையையும் வழங்கக்கூடிய மிகப் பெருந்துறையாக இன்று இலங்கையில் தனியார்துறை வளர்ந்துள்ளது. இதற்குச் சாதகமான உத்வேகங்களையும், தரநிர்ணயங்களையும் ஆதரவையும் சர்வதேச வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் வழங்கி வருகின்றன. இவை இலங்கையின் கல்வியமைப்பின் இற்றைப்படுத்துகையில் பாரிய தாக்கங்களையும் வலுவான இடத்தையும் பெறத் தொடங்கியுள்ளன.

இது அரசாங்கத்துறையின் உயர் கல்விப் பல்கலைக்கழகக் கல்விக்குச் சவாலாகவும் தர நிர்ணயப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளன. தேசிய பல்கலைக்கழகங்களில் பயின்றவர்களை விட, தனியார் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்றவர்கள் சிறந்த தேர்ச்சிகளையும் தொழில்களையும் பெற முடிகின்றது. மேலும் க.பொ.த. சாதாரண தரத்தில் / உயர்தரத்தில் சித்திபெற்ற எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழங்களில் குறைந்த கட்டணத்துடன் பகுதிநேர வேலையைச்செய்து, படிக்கக்கூடிய பெருமளவு வாய்ப்புக்களை வழங்கத் தொடங்கியுள்ளன.

**இலங்கையின் கல்வியிற் சர்வதேசம்**

சர்வதேச பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழங்களின் கலைத்திட்டம் உடனடியாகத் தொழில் வாண்மைத் தேவைகளை நிறைவேற்றுவனவாக இருக்கின்றன. இன்று இலங்கையில் பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் உள்நாட்டுத் தேசிய பல்கலைக் கழங்களில் தமது உயர் கல்வியைத் தொடராது, தாம் தெரிவு செய்த கல்வித்துறையில் கிடைக்கக்கூடிய பரந்த வரிசையிலான வாய்ப்புக்களை நாடும் நிலையில் சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் வசதிகளை வழங்குகின்றன. அத்துடன் ஏற்கனவே தொழிலில் உள்ளவர்கள் தமது வாண்மையை விருத்தியாக்கப் பல கற்கை நெறிகளை இப்பல்கலைக் கழகங்களில் பயில்கின்றனர். பாடசாலைக் கல்வி, பட்டதாரி முன்கல்வி, தொழிற்துறை சார்ந்த பரந்த சேவைகளையும், வாய்ப்புக்களையும் இச்சர்வதேசக் கல்விப் பல்கலைக் கழகங்கள் வழங்குகின்றன.

மற்றும் இலங்கையின் உள்ளூர், தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டுப் பல்கலைக் கழங்களுடன் இணைந்து பல வகையான கற்கை நெறிகளை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மேற்கொண்டு வருகின்றன. நேரடியாக மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, தென் கொரியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா தங்களது சர்வதேச கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஊடாகப் பல வகையான பாடநெறிகளை இலங்கையிலும் தமது நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் வழங்கி வருவதுடன் கவர்ச்சிகரமான பரந்துபட்ட சலுகைகளையும் வழங்குகின்றன. பல கண்காட்சிகளையும், வெளியீடுகளையும், வழிகாட்டல் செயலமர்வுகளையும், இன்டர்நெட், வெப்சைட்டுக்களையும் திறந்துள்ளன. இவை மூலமாக இலகுவாக மாணவர்கள் இக் கற்கைகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

உதாரணமாக மலேசியா நாடு தற்போது பல சலுகைகளை அறிவித்து வெளிநாட்டு மாணவர்களை கல்வி – பகுதி நேர தொழில் வசதிகளையும் வழங்கி வருகின்றது. இது தொடர்பாக wwwstudymalaysia.com/ips முகவரியைப் பார்க்க முடியும். இவ்வாறே சிங்கப்பூரில் பயில www.sim.edu.sg தொடர்புகளை ஏற்படுத்தலாம். இவ்வாறு எல்லா நாடுகளிலும் தற்பொழுது வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்து சலுகைகள் வழங்கும் திட்டங்கள் அதிகரித்து வருகின்றன. மேலும் இந்நாடுகளின் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் பல கிளைகளினூடாக சர்வதேசத் தரத்திலான கல்வியையும், தொழில் வாண்மைகளையும் வழங்கி வருகின்றன. இவற்றை எமது மாணவர்களும் பெற பல வழிகாட்டல்களையும் செயலாற்றுகைகளையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இவ்வாறாகக் கல்வியானது இற்றைப் படுத்தலினூடாக சர்வதேச மயமாகிவரும் இன்றைய மிக முக்கியமான செயன்முறையை இலங்கை கணித்து அதற்கேற்ற விதத்தில் தமது கல்வி தொடர்பான பல முகாமைத்துவ அபிவிருத்திச் சீர்திருத்தங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் புதிய நீரோட்டத்தில் இருந்து யாரும் விலக முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பராமரிக்கப்பட்ட வாழ்க்கை முறையை ஏற்படுத்தல் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கி சுய நிறைவை உண்டாக்குதல், மனித வளவிருத்தியில் அனைவரையும் சர்வதேச ரீதியில் பங்குபற்றி கல்வியினூடாக அபிவிருத்தியை ஏற்படுத்தலுக்கான முனைப்புக்களை விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. தனியார் மயமாக்கலில் கல்வியை ஊக்குவித்து, வறியவர்களுக்கு அரச உதவியுடன் இரட்டை முகாமைத்துவ நடைமுறைகளில் எம் நாட்டுக் கல்வியை சர்வதேச தரத்திற்குக் கொண்டுவர வேண்டியுள்ளது.

## சர்வதேச குறியீடுகள்

- ஒலிவ் மரத்தின் இலை - சமாதானம்
- வெண்புறா - சமாதானம்
- சக்கரம் - வளர்ச்சியைக் குறிக்கும்
- தாமரை - பண்பாடு, நாகரிகம்
- கையில் சட்டையில் கறுப்புத்துணி - துக்கம்
- கறுப்புக்கொடி - எதிர்ப்பு
- எலும்பு, நடுவில் மண்டையோடு - ஆபத்து
- சிவப்பு விளக்கு - மருத்துவமனை, ஆபத்து, நிறுத்து
- செஞ்சிலுவை - செஞ்சிலுவை சங்கம், மருத்துவமனை உதவி
- செம்பிறை - அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம்
- கையில் தராசு ஏந்தி, கண்கட்டப்பட்டுள்ள பெண் - நீதி
- சிவப்புக் கொடி - புரட்சி, உலகத் தொழிலாளர்சங்க அமைப்பு
- அரைக்கம்பத்தில் கொடி - இரங்கல்
- தலைகீழாகக் கொடி - துன்பம்
- மஞ்சள் கொடி (கப்பலில் மற்றும்) - தொற்று நோய்
- சிவப்பு முக்கோணம் - குடும்பக் கட்டுப்பாடு
- வெள்ளைக் கொடி - சமாதானம்/பௌத்தர்களின் துக்கம்
- சுண்டு விரலிலும் நடுவிரலிலும் சேர்த்து V அடையாளம் - வெற்றி
- பச்சை விளக்கு - சாதகம், அனுமதி
- மஞ்சள் விளக்கு - ஆயத்தம், தயார் நிலை
- தீப்பந்தம் - ஒலிம்பிக்
- உடைந்த கைவிலங்குடன் இரு கைகள் - விடுதலை
- மேல் நோக்கி செங்குத்தான கொடி - வெற்றி / ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசுப்பாய்ச்சல் கூற்று



கலாநிதி தி. வேல்நம்பி B.Com(Hons), M.Phil in com,AAT
சிரேஷ்ட விரிவுரையாளர்,வணிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**காசுப்பாய்ச்சல் கூற்று:**
Cash flow statement

ஒரு வியாபாரி நிறுவனத்தின் வேறுபட்ட செயற்பாடுகள், நடவடிக்கைகள் என்பவற்றின் கீழ், குறித்த ஒரு நிதியாண்டு காலப்பகுதியில் காசு, காசுக்குச் சமமானவை என்பவற்றினது அசைவை அல்லது பாய்ச்சலை வெளிப்படுத்திக் காட்டும் வகையில் தயார் செய்யப்படும் ஒரு கூற்றே. காசுப்பாய்ச்சல் கூற்று எனப்படும். இக்காசுப்பாய்ச்சற் கூற்றானது ஆரம்பக்காசு மீதிக்கும், இறுதிக்காசு மீதிக்கும் இடையிலான ஒரு இணக்கத்தையும் காட்டுவதாக அமையும்.

காசுப்பாய்ச்சல் என்பது கையிலுள்ள காசு, வங்கி அல்லது ஏனைய நிதி நிறுவனங்களிலுள்ள வைப்புக்கள், காசுக்குச் சமமானவை என்பவற்றின் மீதான அதிகரிப்புக்கள் அல்லது குறைவுகளைக் குறிக்கும்.

### 6.1.1 காசு (Cash)

காசு என்பது கையிலுள்ள காசையும், வங்கியில் கேள்வி வைப்பில் உள்ள காசினையும் குறிக்கும்.

### 6.1.2. காசுக்குச் சமமானவை

Cash equivalent.

முன்னறிவித்தல் எதுவுமின்றி உடனடியாகக் காசாக மாற்றக்கூடிய, மிக உயர்வான திரவத் தன்மைகொண்ட குறுங்கால முதலீடுகளைக் குறிப்பதே காசுக்குச் சமமானவை ஆகும்.

### 6.2 காசுப்பாய்ச்சற் கூற்றின் நோக்கங்கள்

Aims of cash flow statement

காசுப்பாய்ச்சற் கூற்றின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. எதிர்காலத்திற் சாதகமான தேறிய காசுப் பாய்ச்சலை (Positive net cashflows) உருவாக்குவதற்கு நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பீடு செய்வதற்குப் பயன்பாட்டாளர்களுக்கு உதவுதல்.

2. ஒரு கம்பனியானது கடன்களையும், பங்கிலாபங்களையும் கொடுப்பனவு செய்வதற்கான தனது கடப்பாடுகளை எதிர்கொள்ள முடியுமா? – என்பதை மதிப்பீடு செய்தல்.

3. அறிக்கையிடப்பட்ட இலாபத்துக்கும், தொடர்புடைய காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டுபிடித்தல்.

4. குறித்த வருடத்தில் இடம்பெற்ற ஒரு நிறுவனத்தில் பிரதான நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் மீதான தாக்கத்தை மதிப்பிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.3 காசுப்பாய்ச்சல் கணக்கீட்டின் அனுகூலங்கள்

**Advantages of cash flow accounting**

1. காசினை உருவாக்குவதற்கான ஆற்றலை வழங்குதல்
2. கணக்கியல் வழமைகள் கணக்கீட்டு எண்ணக் கருக்கள் என்பவற்றில் தங்கியுள்ள இலாபத்திலும் பார்க்க, காசுப் பாய்ச்சலானது மிகவும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும், பயனுள்ளதாகவும், இருக்கும்.
3. நீண்டகால, குறுங்கால கடன் கொடுத்தோர்கள் நிறுவனத்தின் இலாபகரத் தன்மையிலும் பார்க்க தமது கடனைத் திரும்பிச் செலுத்தும் நிறுவனத்தின் ஆற்றலிலேயே கூடுதலான அக்கறையுடையவர்களாக உள்ளனர். எனவே காசுப்பாய்ச்சல் கணக்கீடு கடன் கொடுத்தோருக்கான தகவல்களைத் தெளிவாக வழங்குகின்றது.
4. காசுப்பாய்ச்சலின் எதிர்வு கூறலானது, இலாப எதிர்வு கூறலிலும் பார்க்க இலகுவானதாகவும், பயனுள்ளதாகவும் அமைகின்றது.
5. காசுப்பாய்ச்சல் அறிக்கையிடலானது முகாமை, பங்குதாரர்கள், கணக்காய்வாளர்கள் போன்ற சகல பயன்பாட்டாளர்களினதும் தேவைகளைத் திருப்தி செய்கின்றது.

### 6.4 காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

**Matters which is included in cash flow statement**

காசுப்பாய்ச்சல் கூற்றின் உள்ளடக்கப்படும் விடயங்களைப் பின்வரும் மூன்று தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கலாம்.

1. செயற்பாட்டு நடவடிக்கைகள்
2. முதலீட்டு நடவடிக்கைகள்
3. நிதியிடல் நடவடிக்கைகள்

#### 6.4.1 செயற்பாட்டு நடவடிக்கைகள்

**Operating Activities**

நிறுவனத்தின் வழமையான செயற்பாட்டோடு தொடர்புடைய விடயங்கள்யாவும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆகும். இதன் மூலம் எழுகின்ற காசுப்பாய்ச்சல் செயற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல் எனப்படுகின்றது. இவ்வாறு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற காசுப்பாய்ச்சலே, காசுப்பாய்ச்சலின் பிரதான குறிகாட்டியாக அமைகின்றது. செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் காசுப்பாய்ச்சலானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு உதவுகின்றது.

1. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிறுவனத்தின் ஆற்றல்
2. நிறுவனத்தின் செயற்பாட்டு இயலளவைப் பேணுதல்
3. பங்கிலாபங்களை வழங்கும் ஆற்றல்
4. வெளியக நிதி வளங்களின்றி புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல்.

**செயற்பாட்டு நடவடிக்கைகளாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.**

1. பொருள் விற்பனைகளிலிருந்து அல்லது சேவை வழங்களிலிருந்து பெறப்படும் பணம்
2. இறைகள், தனியுரிமைக் கட்டணங்கள், கட்டணங்கள் தரகு போன்றவற்றிலிருந்து கிடைக்கும் காசுப் பெறுவனவுகள்.
3. பொருட்கள், சேவைகள் வழங்குனர்களுக்கான காசுக் கொடுப்பனவுகள்
4. ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளும், அவர்கள் சார்பில் மேற்கொள்ளப்படும் காசுக்கொடுப்பனவுகளும்.
5. காப்புறுதிக்கான கட்டுப்பணம், நஷ்ட ஈட்டுக் கோரிக்கைகள் ஆண்டுத் தொகைகள், மற்றும் ஏனைய கொள்கை நன்மைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றுக்கான காசுக்கொடுப்பனவும், காசுப் பெறுவனவும்.

6. வருமானவரி தொடர்பான காசுக் கொடுப்பனவுகளும், மீள்பெறுவனவும்

7. வியாபார நோக்கிலான ஒப்பந்தங்கள் மீதான காசுப் பெறுவனவும், காசுக் கொடுப்பனவும்.

### 6.4.2 முதலீட்டு நடவடிக்கைகள்
### Investing Activities

எதிர்காலத்தில் வருமானத்தையும் காசுப்பாய்ச்சல்களையும் ஏற்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்ட சகல பெறுவனவுகளையும், கொடுப்பனவுகளையும் முதலீட்டு நடவடிக்கைகள் எனலாம். முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற காசுப்பாய்ச்சல்களுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஆதனங்கள், பொறி, உபகரணம், அருவச் சொத்துக்கள், மற்றும் நீண்டகாலச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான காசுக் கொடுப்பனவுகள், இவை மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திச் செலவு, சுயநிர்மாணம் செய்தல் என்பவற்றுடன் தொடர்புபட்டிருக்கலாம்.

2. ஆதனங்கள், பொறி, உபகரணம், அருவச் சொத்துக்கள், மற்றும் நீண்டகாலச் சொத்துக்களை விற்பனை செய்வதனால் பெறப்படும் காசுக் கிடைப்பனவுகள்.

3. வேறு நிறுவனங்களின் பங்குகள், கடன் பத்திரங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கான காசுக் கொடுப்பனவுகளும், அவற்றை விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கும் காசுப் பெறுவனவுகளும்.

4. ஏனைய தரப்பினருக்கக் கொடுப்பனவு செய்த காசு முற்பணங்களும், கடன்களும்.

5. ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்களும், கடன்களும்.

6. எதிர்கால ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்களின் தெரிவு என்பவற்றுக்கான காசுக் கொடுப்பனவுகளும், காசுப் பெறுவனவுகளும்.

### 6.4.3 நிதியிடல் நடவடிக்கைகள்
### Financing Activities.

செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளினால் ஏற்படும் காசுப்பாய்ச்சல் நிதியிடல் நடவடிக்கைகள் எனப்படும். இவை நிறுவனத்தின் நிதியோடு தொடர்புபட்டவையாக இருக்கும். நிறுவனத்தின் மூலதன வழங்குனர்களால் எதிர்காலக் காசோட்டம் மீதான எதிர்வு கூறலை மேற்கொள்வதற்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும். நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற காசுப்பாய்ச்சல்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பங்குகளை அல்லது உரிமை ஆவணங்களை வழங்குவதன் மூலம் பெறப்படும் காசு.

2. உரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகளும், மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள், தொகுதிக்கடன்கள் என்பவற்றை மீட்டுக் கொள்வதற்கெனக் கொடுக்கப்படும் காசுக் கொடுப்பனவுகளும்.

3. தொகுதிக்கடன்கள், மற்றும் குறுங்கால, நீண்டகாலக் கடன்மூலமான காசுப் பெறுவனவுகள்

4. கடன் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான காசுக் கொடுப்பனவுகள்

5. நிதிக்குத்தொகை தொடர்பான பொறுப்புக் களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப் படும் காசுக் கொடுப்பனவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.5 காசுப்பாய்ச்சல் கூற்றுத் தயார் செய்யப் படும் முறைகள்

**Methods of Preparing cashflow statement**

காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயார் செய்வதற்குப் பொதுவாகப் பின்வரும் இரு முறைகள் காணப்படுகின்றன.

1. நேர்முறை அல்லது பெறுவனவுகள், கொடுப்பனவுகள் முறை

   Direct method or Receipt and payment method
2. நேரில் முறை அல்லது ஐந்தொகை முறை

   Indirect method or Balance sheet method.

#### 6.5.1 நேர்முறை Direct method

நிறுவனத்தில் உருவாக்கப்படும் மொத்தக் காசுப் பெறுவனவுகளையும், காசுக் கொடுப்பனவுகளையும் தொகுத்து வெளிப்படுத்தும் அறிக்கையிடல் முறை இதுவாகும். இத்தகைய அறிக்கை இடலிலிருந்து எதிர் காலக் காசுப்பாய்ச்சல் தொடர்பான பயனுடைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவேதான் நேர்முறையிலான அறிக்கையிடல் பெரிதும் விரும்பப்படுகின்றது. இம்முறையின் படியான அறிக்கையிடலுக்குத் தேவையான காசுப் பெறுவனவுகள், காசுக் கொடுப்பனவுகள் பற்றிய தவல்களைப் பின்வரும் மூலங்களி லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. நிறுவனத்தில் கணக்கீட்டு அறிக்கைகள்
2. விற்பனை, விற்பனைக் கிரயம், ஏனைய வருமானக்கூற்று தொடர்பான சீராக்கங்கள்

**நேர்முறையிலான காசுப்பாய்ச்சல் கூற்றின் மாதிரியமைப்பு வருமாறு:**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்ததான காசுப்பாய்ச்சல் | | (****) |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றது | (****) | |
| கடன் கொடுத்தோருக்குக் கொடுத்த காசு | (***) | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | (***) | |
| நிலைய நிர்வாகச் செலவுகள் | (***) | (****) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | | **** |
| செயற்பாட்டிலிருந்தான காசு உருவாக்கம் | (***) | |
| வட்டி செலுத்தியது | (***) | (***) |
| வருமான வரி செலுத்தியது | | **** |
| அசாதாரண விடயத்துக்கு முன்னரான காசுப்பாய்ச்சல் | | **** |
| புவி நடுக்க நஷ்டவீட்டுப் பெறுவனவு | | **** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்ததான தேறிய காசுப்பாய்ச்சல் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்ததான காசுப்பாய்ச்சல் | | |
| நிலையான சொத்து விற்பனை | **** | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | (***) | |
| உப கம்பனி முதலீடு | (***) | |
| முதலீட்டு விற்பனை | (***) | |
| ஏனைய முதலீட்டுக் கொள்வனவு | (****) | |
| பெற்ற பங்கிலாபம் (முதலீட்டு வருமானம்) | | |
| பெற்ற வட்டி | **** | |
| முதலீட்டு நடவடிக்கைகளிற் பயன்படுத்தப்பட்ட காசு | **** | **** |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்ததான காசுப்பாய்ச்சல் | | |
| பங்கு வழங்கல் | **** | |
| நீண்டகாலக் கடன் பெறுவனவுகள் | **** | |
| பங்கு மீட்புக்கான கொடுப்பனவுகள் | (****) | |
| நீண்டகாலக் கடன் தீர்த்தல் | (****) | |
| நிதிக் குத்தகைப் பொறுப்புக்களுக்கான கொடுப்பனவு | (****) | |
| பங்கிலாபம் செலுத்தியது | (****) | |
| நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | **** | **** |
| காசு அல்லது காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | | **** |
| ஆரம்பத்திலுள்ள காசும், காசுக்குச் சமமானவையும் | | **** |
| இறுதியிலுள்ள காசும், காசுக்குச் சமனானவையும் | | **** |

**குறிப்பு:-** நிதியிடல் நடவடிக்கையினுள் காட்டப்பட்டுள்ள பங்கிலாபம் செயற்பாட்டு நடவடிக்கையினுள்ளும் காட்டப்படலாம்.

### 6.5.2 நேரில் முறை Indirect method

நேர்முறை, நேரில்முறை ஆகிய இரு முறைகளிலும் முதலீட்டு நடவடிக்கைகள், நிதியிடல் நடவடிக்கைகள் ஆகிய இரு நடவடிக்கைகளும் எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்படும். செயற்பாட்டு நடவடிக்கைகளில் மட்டுமே இவ்விரு முறைகளிலும் வேறுபாடு காணப்படுகின்றது. எனவே நேரில் முறையிலான மாதிரியமைப்பில் செயற்பாட்டு நடவடிக்கைகள் மட்டுமே தரப்படுகின்றன. ஏனைய இரு நடவடிக்கைகளும் முடிவும் நேர் முறையில் உள்ளது போன்றே அமையும்.

நேரில்முறையில் வரி, பெறுமானத் தேய்வு, முதலீட்டு வருமானம், வட்டிச் செலவுகள் என்பவற்றின் முன்னரான தேறிய இலாபம் மதிப்பிடப்பட்டு, காசும், காசுக்குச் சமனான வையும் தவிர்ந்த ஏனைய நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறைப் பொறுப்புக்கள் தொடர்பான அசைவுகளும் சேர்க்கப்படும். பின்னர் இதிலிருந்து செலுத்தப்பட்ட வட்டி, செலுத்தப்பட்ட வரி என்பன கழிக்கப்பட்டு இச் செயற்பாட்டிலிருந்ததான காசுப் பாய்ச்சலுடன் அசாதாரண விடயங்கள் தொடர்பான காசுப் பாய்ச்சலும் சேர்க்கப்பட்டு மொத்தச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்ததான காசுப் பாய்ச்சல் பெற்றுக்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு நேர் முறையிலுள்ளது போன்று முதலீட்டு, நிதியீட்டு நடவடிக்கைகள் தொடர்பான காசுப் பாய்ச்சல்களும் சேர்க்கப்பட்டு, நேரில் முறையிலான காசுப்பாய்ச்சல் கூற்று அறிக்கையிடப்படும்.

இம்முறையின்படி செயற்பாட்டிலிருந்ததான காசுப்பாய்ச்சலைக் கணிப்பீடு செய்வதற்குப் பின்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வியாபார இருப்புக்கள், கடன்பட்டோர் மீதிகள், கடன் கொடுத்தோர் மீதிகளுக்கிடையிலான மாற்றங்களின் சீராக்கம்.
2. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான வருமதிகள், கொடுப்பனவுகள், முற்பணங்கள் தொடர்பான சீராக்கம்.
3. காசு தொடர்பற்ற பெறுமானத் தேய்வு, பிற்போடப்பட்ட வரி, தேறாத அன்னிய செலாவணி, இலாபம் அல்லது நட்டம் பற்றிய சீராக்கம்.

**நேரில் முறையிலான காசுப்பாய்ச்சற் கூற்றின் மாதிரி அமைப்பு**

(செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்ததான காசுப்பாய்ச்சல்)

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்ததான காசுப்பாய்ச்சல். | | |
| வரி, வட்டி, அசாதாரண விடயங்களுக்கு முன்னரான தேறிய | | |
| இலாபம் | | *** |
| சீராக்கங்கள் | | |
| பெறுமானத்தேய்வு | *** | |
| முதலீட்டு வருமானம் | | |
| வட்டிச் செலவு | (**) | |
| அன்னிய நாணய மாற்று நட்டம் | ** | |
| நிலையான சொத்து விற்பனை நட்டம் (இலாபமாயின் கழிக்குக) | ** | *** |
| தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | *** |
| வியாபார, மற்றும் ஏனைய வருமதிகளின் அதிகரிப்பு | (***) | |
| வியாபார, மற்றும் ஏனைய சென்மதிகளின் குறைவு | *** | |
| இருப்புக்கள் மீதான குறைவு | *** | *** |
| செயற்பாட்டிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | | *** |
| வட்டி செலுத்தியது | (***) | |
| வருமானவரி செலுத்தியது | (***) | (***) |
| அசாதாரண விடயங்களுக்கு முன்னரான காசுப்பாய்ச்சல் | | *** |
| அசாதாரண இலாபம்/நட்டம் | | *** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | | *** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணம் 01:**

சாமினி கம்பனியுடன் தொடர்புடைய பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

30.யூன்.2001 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபநட்டக் கணக்கு.

| | ரூபா "000" |
|---|---|
| மொத்த இலாபம் | 980 |
| செலவுகள் | 475 |
| பெறுமானத்தேய்வு | 255 |
| பங்கிலாபம் | 80 |
| வருடத்துக்கான பகிரப்படாத இலாபம் | 170 |

**30.யூனில் உள்ளபடியான ஐந்தொகைகள்**

| | 2000 "000" | 2001 "000" |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் (கிரயத்தில்) | 3000 | 3500 |
| கழி.திரண்ட பெறுமானத்தேய்வு | 2100 | 2300 |
| | 900 | 1200 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | |
| இருப்புக்கள் | 825 | 1175 |
| கடன்பட்டோர் | 5200 | 5065 |
| காசும் வங்கியும் | 2350 | 2160 |
| | 9275 | 9600 |
| **உரிமை** | | |
| @ரூபா1/– ஆன சாதாரண பங்குகள் | 2800 | 3200 |
| பங்குவட்டம் | – | 400 |
| இலாபநட்டக்கணக்கு | 1400 | 1570 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| கடன்கொடுத்தோர் | 5000 | 4350 |
| பங்கிலாபம் | 75 | 80 |
| | 9275 | 9600 |

1. 30 யூன் 2001 இல் முடிவடைந்த வருட காலத்தில் ரூபா 230000 கிரயமுள்ள நிலையான சொத்துக்கள் ரூபா 145000க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இவ்விற்பனை மீதான நட்டம் இலாபநட்டக்கணக்கிற் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.
2. வருட காலத்தில் மொத்தப்பரப்பு விற்பனைக்கிரயம் என்பன முறையே ரூபா 1400000, 420000 ஆக இருந்தன.

30யூன் 2001 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்றைப் பின்வரும் முறைகளிற் கணிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. 30 யூன் 2001 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப் பாய்ச்சற்கூற்று

### நேர்முறை

| | "000" | "000" |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| கடன்பட்டோரிடம் பெற்றது | | 1535 |
| கடன்கொடுத்தோருக்குக் கொடுத்தது | | (1865) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | (330) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| நிலையான சொத்து விற்பனை | 145 | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | (730) | (585) |
| நிதி நடவடிக்கைக்கு முன்னராகத் தேறிய காசுப் பாய்ச்சல் | | (915) |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| பங்கு வழங்கல் (வட்டத்துடன்) | 800 | |
| பங்குலாபம் செலுத்தியது | (75) | (275) |
| வருடத்துக்கான தேறிய காசு அசைவு | | (190) |
| ஆரம்பத்திலுள்ள காசும், காசுக்குச் சமமானவையும் | | 2350 |
| வருட இறுதியிலுள்ள காசும், காசுக்குச் சமனானவையும் | | 2160 |

**செய்கைகள்**

### கடன்பட்டோர் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 5200 | காசு | 1535 |
| விற்பனை | 1400 | மீ/செ | 5065 |
| | 6600 | | 6600 |

### கடன்கொடுத்தோர் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 1865 | மீ/வ | 5000 |
| மீ/செ | 4350 | கொ/வு | 770 |
| | 6600 | வியாபாரச் செலவு | 445 |

### விற்பனைக் கிரயம் (இருப்பு)

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 825 | வியாபாரக் கணக்கு | 420 |
| கொ/வு | 770 | மீ/செ | 1175 |
| | 1595 | | 1595 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிலையான சொத்துக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 3000 | வி/னை | 230 |
| சேர்ப்பு | 730 | மீ/செ | 3500 |
| | 3730 | | 3730 |

### பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் க/கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 55 | மீ/வ | 2100 |
| மீ/வ | 2300 | பெ/தே | 255 |
| | 2355 | | 2355 |

### நிலையானசொத்துவிற்பனைக் க/கு

| | | | |
|---|---|---|---|
| சொத்து | 230 | காசு | 145 |
| | | பெ/தே | 55 |
| | | நட்டம் | 30 |
| | 230 | | 230 |

### பங்குலாபக் க/கு

| | | | |
|---|---|---|---|
| பங்குலாபம் செலுத்தியது | 75 | மீ/வ | 75 |
| மீ/செ | 80 | இ/ந | 80 |
| | 155 | | |

### நேரில் முறை

**30 யூன் 2001 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சற் கூற்று.**

| | "000" | "000" |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| வரி வட்டிக்கு முன் தேறிய இலாபம் | | 250 |
| சீராக்கங்கள் | | |
| பெறுமானத்தேய்வு | 255 | |
| நிலையான சொத்து விற்பனை நட்டம் | 30 | 285 |
| தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னரான செயற்பாடு | | |
| இலாபம் | | 535 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கையிருப்பு அதிகரிப்பு | (350) | |
| கடன்பட்டோர் குறைவு | 135 | |
| கடன்கொடுத்தோர் குறைவு | (650) | (865) |
| செயற்பாட்டிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | | (330) |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| நிலையான சொத்து விற்பனை | 145 | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | (730) | (585) |
| நிதி நடவடிக்கைகளுக்கு முன்னரான தேறிய காசுப்பாய்ச்சல் | | (915) |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| பங்கு வழங்கல் | 800 | |
| பங்கிலாபம் செலுத்தியது | (75) | 725 |
| வருடத்திற்கான தேறிய காசு அசைவு | | (190) |
| ஆரம்பத்திலுள்ள காசும், காசுக்குச் சமனானவையும் | | 2350 |
| வருட இறுதியிலுள்ள காசும், காசுக்குச் சமனானவையும் | | 2350 |

# Reference


1. Frank Wood, Business Accounting 1 & 2, Professional Limited:- 1994
2. Shukla. M.C, Crewal. T.S., Supta C.S, Advanced Accounting, New Delhi 1994
3. Walter.B.,Robert.F.Financial Accounting, MC Grew-Hill Book Company 1984
4. Paul Gee, Book Keeping and Accounting, Butter worth & Co.Ltd-1992
5. Daniel. G.Short, Financial Accounting, Richard Irwin INC:- 1993
6. Needles, Anderson, Coldwell, Principles of Accounting, Houghton Mifflin Company 1984
7. Arnold J.Pahler, Joseph. E.Mori, Advanced Accounting Concepts and practice, Harcour, Brace Jovanovich 1988.
8. Floyd.A.Beam, Advanced Accounting, American institute of Certified Public Accountants 1987
9. Richard J.Bristion, Introduction to Accountancy and Finance, Institute of Cost and Management Accountants:- 1981
10. Yorston, Smyth, Brwn, Advanced Accounting, The Law Book Company Limited 1983.
11. Guerrier, Haber, Hoyt, Turner, Advance Accounting, The Glencoe Division of Macmillon/MC Graw-Hill Publishing Company - 1983
12. Kapoor. N.D, Bharat Bushan, Principles and Practice of Accountancy, Volume I, Pitambar Publishing Company Limited:- 1993
13. Sri Lanka Accounting Standard, Chartered Institution of Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரப் பேரறிஞர் திரு.வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் (1855–1906)



திரு.கா . சிவபாலன்,
கணக்காளர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மல்லாகம் கொலொக் (Kellog) திரு.விசுவநாதப்பிள்ளை அவர்களுக்கு ஏகபுத்திரரான கனகசபைப் பிள்ளை 25.05.1855ம் ஆண்டு பிறந்தார். இவர் தமது ஆரம்பக்கல்வியைக் கற்றபின்னர்; சென்னை அரசாங்கக் கல்லூரியிற் கல்வியைப் பெற்றார். 1872ம் ஆண்டு இவரின் 17ம் வயதிலே B.A. பட்டம் பெற்ற பட்டதாரி ஆனார். இக் காரணத்தால் "பட்டதாரிப் பையன்" என்று அனைவராலும் அழைக்கப்பட்டு வந்தார். இவர் சென்னை அரசாங்கக் கல்லூரியிற் கற்ற காலத்தில் இவருடன் சைவப்பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதனும் கல்வி கற்றார்.

இவர் பட்டதாரி ஆகியதும் சென்னை தபால் பகுதி அலுவலகத்தில் கடமை ஆற்றி னார். இதில் இருந்து கொண்டே சட்டத் துறைக் கல்வியை பெற்று B.L. பட்டம் பெற்றார். ஒரு வருடம் லீவு பெற்று மதுரையில் சட்டத்தரணித் தொழிலையும் செய்தார்.

தமிழின் பெருமைபற்றி ஆங்கிலத்திற் பல கட்டுரைகளை எழுதினார். இவர் எழுதிய கட்டுரைகளிற் பெரும் புகழை ஈட்டிக் கொடுத் தது: "1806ம் ஆண்டுக்கு முந்திய தழிழர்கள்" என்னும் வரலாற்று நூலே ஆகும். இக்கட்டு ரைகள் யாவும் 1895ம் –1902ம் ஆண்டு காலப்பகுதியில் "MADRAS REVIEW" என்ற பத்திரிகையில் வெளிவந்தது. இக்கட்டுரைக்குப் பல அறிஞர்களின் பாராட்டும் கிடைத்தது. சேர் எஸ்.சுப்பிரமணியம் ஐயரின் தூண்டுதலின் பேரில் 1904 ம் ஆண்டு நூலாக (16.01.1904) வெளிவந்தது.

இந்நூல் வெளிவந்த காலத்தில் கனகசபையின் புகழ் அதிகமாகப் பரவியது. 1905ம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவை இவர் தலைமை தாங்கி நடாத்தினார். மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினராக இருந்து" "செந்தமிழ்" என்ற பத்திரிகையின் ஆரம்ப இதழிலிருந்து பல கட்டுரைகள் எழுதி வந்தார். மேலும் இலக்கிய நூல்களில் ஆராய்ச்சித் துறையிற் புகுந்து சில தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவற்றை "இந்திய புராதனக் கலைஞன்" என்ற பத்திரி கையில் வெளியிட்டு வந்தார். இந்நூல்களில் கலாவல்வி, கலிங்கத்துப்பரணி, விக்கிரம சோழன் உலா என்பன அடங்கும். யாழ்ப்பாணத் தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப்பட்டபோது முதன் முதலாக கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் படம் வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அறிஞர்கள் படங்கள் எல்லாம் அவர்களின் உறவினர்களாலும் அன்பர்களாலும் வழங்கப் பட்டன. இந்தச் சந்தர்ப்பத்திலே மல்லாகம் தந்த சரித்திரப் பேரறிஞர் வி.கனகசபைப் பிள்ளை யின் படமும் வைக்கப்பட்டது. இப்படத்தினை இந்துசாதனம் பத்திராதிபரும், பிரபல சட்டத் தரணியும் ஆன நமசிவப்பிரகாசம் குடும்பத்தின ரும் முன்னாள் மேலவை உறுப்பினரும் சட்டத் தரணியுமான செனற்றர் சு.நடராஜா குடும் பத்தினரும் முன் வந்து உதவினர்.

இவ்வேளையில் படத்தினை வழங்கிய தோடு பேரறிஞர் கனகசபைப்பிள்ளை பற்றிய சரித்திர நூல் ஒன்றையும் வெளியிடமுன் வந்தனர். இப்பொறுப்பினை ஏற்ற மல்லாகம் தமிழ்அறிஞர் ச.அம்பிகைபாகன் அவர்கள் வாழ்க்கைக் குறிப்பையும் எழுதித்தர முன் வந்தார். இப்பெருமக்களை நன்றி கூறாமல் இருக்க முடியாது. சரித்திரப் பேரறிஞர் வி.கனக சபைப்பிள்ளை அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் போற்றி வாழ்த்தும் என்பது உறுதி.

தமிழ் மொழிக்குப் பெரும் தொண் டாற்றிய பெருமை, சரித்திரப் பேரறிஞர் வி.கனகசபைப்பிள்ளை அவர்களைச் சாரும் என்பதில் மிகை ஒன்றும் இல்லை. இவர் 22.02.1906ம் ஆண்டு மகாசிவராத்திரி தினத்தன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் தமிழுக்கும், தமிழ் மொழிக்கும் செய்த தொண்டு என்றும் நினைவு கூரத்தக்க தாகும்.

- *தேவையற்ற வேலைகள் எங்களைக் களைப் படையச் செய்கின்றன. தேவையான வேலைகள் எங்களுக்கு மகிழ்வைத் தருகின்றன.*
- *ஆரோக்கியமாகவும் சந்தோசமாகவும் இருப்பவர் களின் உள்ளம் களைப்படைவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகள் சில...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகள் சில...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் முழுவதும் கல்வி
## LIFE LONG EDUCATION



திரு.பொ.அமிர்தலிங்கம் B.A.
PGDE,M.Phil .Edu.
அதிபர், யா/நடேஸ்வரக் கல்லூரி,
தெல்லிப்பழை.

மனிதனின் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான் என்னும் தத்துவக் கோட்பாடு தொன்றுதொட்டு தத்துவஞானிகளால் கொள்ளப்பட்ட கோட்பாடாகும். மனிதன் மனிதனாக வாழக்கல்வியே சிறந்த கருவி என்பதனை நாலடியார் பின்வருமாறு வலியுறுத்துகிறது.

**"குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமை யால்
கல்வி அழகே அழகு"**

என ஒருவனுக்குத் தலையலங்காரத்தினாலோ அழகு ஏற்படுவதில்லை, நெஞ்சத்தில் நடுவுநிலைமையைக் கொடுக்கும் கல்வியே உண்மையான அழகு எனச் சிறப்பிக்கின்றது. வாழ்வின் அச்சாணியாக, உலகம் போற்றும் கல்வியானது மனிதன் வாழ்வாங்கு வாழத் தயார்ப்படுத்த இளமைக்காலத்தில் கொடுத்தல் வேண்டும் எனும் கருத்தே பெருவழக்காகியுள்ளது.ஆனால் இன்று நவீன கல்வியாளரோ ஒருவன் வாழ்வு முழுவதும் கற்றல் வேண்டுமென வலியுறுத்திகின்றனர் "வாழ்வு முழுவதும் கல்வி" என்ற நவீன கல்வியியலாளர்கள் கருத்துப் புதிதாக இன்று தோன்றியதல்ல. முகமதுநபிகள், வள்ளுவன், மகாத்மா காந்தி போன்ற தத்துவஞானிகளிடம் இருந்து ஊற்று எடுத்துள்ளது.

கல்வியானது இளமைப்பருவத்துடன் பாடசாலையுடன் முடிந்துவிடக்கூடியது அல்ல. வாழ்க்கை முழுவதும் தொடரவேண்டிய தொன்றாகும் நம் மூதாதையர் "இளமையிற் கல்"* என ஆக்ஞையிட்டுள்ளனர். எனவே இளமைப் பருவேமே கல்விக்குரிய பருவம் எனக் கருதியுள்ளனர். இளமைப்பருவத்தில் ஒருவன் கட்டாயம் கற்க வேண்டும் என வற்புறுத்தி இருக்கிறார்களே ஒழிய முதுமையிற் கற்க வேண்டாம் எனத் தடுக்கவில்லை என்பதை முதலில் விளங்கிக் கொள்ளவேண்டும். இளமைக்காலம் கட்டாயமாகக் கல்விக்குரிய காலம் என அங்கு வற்புறுத்தப்பட்டதேயொழிய இளமையுடன் கல்வியை நிறுத்திக்கொள் எனும் பொருள் தரவில்லை என்பதை "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனும் முதுமொழி விளக்குகிறது.

கல்வி மனித அடிப்படை உரிமைகளிலிருந்து பெறப்படுகின்றது. அது வாழ்க்கை உரிமைகளில் முக்கியமானது. இக்கருத்தினை ஐக்கிய நாடுகளில் கல்வி அறிவியற் பண்பாட்டுக் கழகம் 1950ல் உருவாக்கிய சாசனம் வலியுறுத்துகிறது. இதே கருத்து மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைச் சாசனத்திலும் இடம்பெற்றது. ஆனால் காந்தியடிகள் 1931ம் ஆண்டில் இக்கருத்தினை முன்வைத்ததார். கல்வி எல்லோருக்கும் பொதுச் சொத்து. மனிதவளர்ச்சிக்கு அளிக்கப்படும் பெரும்வாய்ப்பு. எனவே, "கல்வி எல்லோருக்கும் பொதுச்சொத்து. எங்கும் அளிக்கப்பட வேண்டியதாகும் என்கின்றார்". எல்லோருக்கும் கல்வி என்பதன் மூலம் வாழ்க்கையில் எந்த நிலையில் உள்ளவரும் கல்வி பெறவேண்டும் என்பதனை வற்புறுத்துகிறார். 5 முதல் 14 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு மட்டும் கல்வியளித்தலோடு நின்று விடக்கூடாது. ஆதாரக்கல்வியானது கருவிலே குழந்தை உருவாகும் நாள்முதல் மரணநாள்வரை பரந்திருக்கும் என்று கூறுவதிலிருந்து வாழ்க்கை முழுவதும் கல்வி பயில வேண்டுமென்று அவர் கருதினார் என்பது தெளிவாகிறது. மகாத்மாகாந்தி வற்புறுத்தும் தொடர்கல்வியினை முதன் முதலாகக் கருவிலிருந்து கல்லறை வரை கல்வியவசியம் எனக்கருத்து வெளியிட்டவர் நபிகள்நாயகமாகும். ஒருவன் கற்பதற்கு அவனது வாழ்நாள் போதவில்லையே என வாழ்நாட் கல்வியை வற்புறுத்தும் பண்பு நாலடியாரில் சிறப்புறுகிறது. வள்ளுவனின் குறளோ கற்றவனுக்கு தன்னாடு, தன்னுயிரும் வேறு எதுவாயினும் நாடாகும் ஊராகும். ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமற் காலம் கழிப்பது ஏன்? என்ற வினாவை எழுப்பியுள்ளது. ஜோன்டூயி வாழ்க்கையே கல்வி என்ற உண்மையினை வற்புறுத்தியவர். கல்வியும் வாழ்க்கையும் ஒரேபொருளைக் குறிக்கும் இரு சொற்கள் என்றார்.

நபிகள்நாயகம் , வள்ளுவர், மகாத்மா காந்தி, ஜோண்டூயி போன்றவர்களால் வலியுறுத்தப்படும் வாழ்க்கை முழுவதும் கல்வியானது வாழ்வில் தொடர் நிகழ்ச்சியாக அமைதல் ஏன் அவசியம் என நோக்கல் சாலச்சிறந்தது. இன்று மனிதக்கல்வியின் நோக்கங்களில் முக்கியமானதொன்றாக தொழில் வாய்ப்பினைக் கருதுவர். இத்தொழில் வாய்ப்பினைப் பெற்றவர் அத்தொழிலில் மன நிறைவுடன் ஈடுபட வாழ்க்கைக் கல்வி இன்றியமையாததாக உள்ளது. ஒரு தொழில் தன்வாழ்வின் உயிர் நாடியாகப் பெற்றவர், நவீன தொழில்நுட்பம் இன்று எல்லாத் தொழில்துறையிலும் ஏற்படுத்திவரும் துரித முன்னேற்றத்தினைப் பின் தொடர்ந்து அத் தொழிலுக்குத் தகுதியானவராக மன நிறைவுடன் தொழிலாற்றும் தன்மைபெற அத்தொழில் பற்றிய அறிவுகளைப் பெறுதல் அத்தியாவசியமாகவுள்ளது. நவீனதொழில் நுட்ப முன்னேற்றத்தின் ஓட்டத்தில் ஒருவருக்குத் தொழில் பற்றிய அறிவு போதியளவு இல்லாதவிடத்து அவர் அத்தொழிலுக்கு தகுதியற்றவராக ஆக்கப்பட்டு மன முறிவிற்கு உட்பட வேண்டியவராகிறார். அவ்வாறன துரதிஷ்ட நிலையில் இடர்படாது வாழ விரும்புபவர் தொடர்ந்து கற்றுக் கொண்டிருத்தல் முக்கியமானதாகும்.[2] இதன் காரணமாகவே பெரும்பாலான நாடுகளில் தொழிலாளர்களுக்கு கருத்தரங்கு பயிற்சி வகுப்புக்கள் இடம் பெறுகின்றன. உதாரணமாக ஆசிரியர் துறையை எடுத்தால் முன்னைய சோவியத் ஒன்றியத்தில் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மீண்டும் ஆசிரியர் பயிற்சி பெறவேண்டியவராக ஆசிரியர்கள் காணப்பட்டனர்.[3] இன்று இலங்கையிலும் ஆசிரியர்களுக்குப் புத்தூக்க வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எனவே வாழ்நாள் முழுவதும் கல்வி இல்லாவிடில் தொழில் வாய்ப்பு என்னும் கல்வி இலக்கானது பயனளிக்காது போய்விடும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து கல்விமூலம் மக்களைத் தொழிலுக்குத் தயார்செய்வது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதுபோன்று அவர்களைச் சிறந்த குடிமக்களாக வாழ்வதற்குப் பயிற்றிவிப்பதும் இன்றியமையாதது. கல்வியின் சமூகப்பணிகளில் முதன்மையானது ஒரு நாட்டில் வாழும் மக்களை, அந்நாட்டுச் சமுதாயத்தின் பண்பட்ட குடிமக்களாக வாழ்வதற்கு உருவாக்குவதாகும். சமூகம் மாறாது நிலையாக தேக்க நிலையில் இருக்குமானால் இளமைப் பருவத்தில் கல்விமூலம் ஒருவனைத் தயார் படுத்தி விடலாம்.[4] எது மாற்றமடையாததோ அது வளரமுடியாது. அவ்வாறே சமூகம் வளர்ந்து கொண்டுபோதல் வேண்டும். வளரும் சமூகத்திற்கு ஏற்ப ஒருவரின் அறிவு வளர்ச்சியும் சமநிலையில் ஏற்பட்டாலே அவன் அச் சமூகத்திற்குரிய நற்பிரசையாக இருக்கமுடியும். இல்லாவிடில் சமூகப்பிராணியான மனிதன் சமூகத்தின் போக்கிலிருந்து பின்தங்கி சமூகத்திற்குப் பயனற்றவனாகி மற்றவர்களுக்குப் பாரமாகித் தனக்குத்தானே அடிமையாகி விடுகின்றான். கணினியுகமாகிய இன்றைய உலகுடன் இணைந்து வாழக் கல்வி என்ற தொடர்நிகழ்ச்சி மனித வாழ்வில் தொடர்ந்து இடம்பெறுமிடத்து முதுமையிலும் தன் சமூகத்திற்கு உதவுபவனாக நல்ல பொருத்தப்பாடு கொண்டவனாக வாழமுடியும்.

கல்வி, சமூகத்தில் நிலவும் இலட்சியங்கள், நம்பிக்கைகள், நிறுவனங்கள் என்பன தொடர்பாக மறுபரிசீலனைசெய்து புனரமைப்புச் செய்வதற்கு வேண்டிய மனப்பான்மையைத் தோற்றுவிப்பதாகும். புனரமைப்பு என்பது மாற்றங்களை ஏற்படுத்தும் அதே வேளையில் பழையவற்றுடன் தொடர்ச்சியும் கொண்டிருக்கும். புனரமைப்பின் முக்கிய நோக்கம் பொருத்தமானவற்றைப் பாதுகாப்பதும் மற்றவற்றை மாற்றியமைத்துப் பொருத்த முள்ளதாக ஆக்குவதுமாகும். இதனையே சென்ற காலத்து நமது முன்னோர்களின் அருஞ்செல்வங்களை இக்கால மாற்றங்களோடும் எதிர்காலச் சிந்தனைகளோடும் கல்வியை இணைக்கவேண்டும் என்பர் அறிஞர். எனவே, எம் மூதாதையரின் செல்வங்களாகிய கல்விக் களஞ்சியங்களை கற்ற புத்திஜீவிகள் தம் சமகால மாற்றங்களையும் கற்று, எதிர்கால சிந்தனைகளையும் பெறுதல்வேண்டும். இதன் மூலம் கற்றல் எனும் தொடர் நிகழ்ச்சி சமூக மாற்றத்துடன் மனிதனை இணைய வைக்கும் நீரோடையாகும்.

வயது முதிர்ந்தவர்கள் இளைஞர் எண்ணங்களை, அபிலாசைகளைப் புரிந்து கொள்ளாத நிலையும், இளைஞர்கள் முதியோர் சிந்தனைகளை, ஆலோசனைகளை ஏற்காது உதாசீனம் செய்யும் நிலையும் சமூகவியலிலும் சரி, குடும்ப வாழ்விலும் சரி ஓர் பெரும் பிரச்சினையாக உலக நாடுகளிளெல்லாம் தலைதூக்கியுள்ளது. இவ்வாறு இருதலைமுறைகளுக்குமான இடைவெளி தலைமுறை இடைவெளி எனப்படும். இவ்இடைவெளியால் ஏற்படும் பாரிய பிரச்சினைகளைத் தீர்க்க இளைஞர் உணர்வுகளை புரிந்து கொள்ள முதியோரும் தொடர்ந்து கல்வி கற்று நிகழ்கால உலகிற்குப் பொருத்தமானவர்களாக தம்மை ஆக்கிக் கொள்வதே ஒரே வழியாகும்.[5] தொடர்கல்வியானது ஒருவனது அறிவை வளர்த்து நிகழ் காலத்திற்குத் தகுதியானவனாக ஆக்குவதால் இளைஞர், முதியோர் இருபாலருக்குமிடையிலும் முரண்பாடுகள் நீங்கி ஒரே நோக்கு வளர்கிறது. ஆகவே இத்தலைமுறை இடைவெளியான பாரிய இடைவெளியை நிரப்ப வாழ்நாள் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானது. ஆசிய நாடுகளில் முதியோரை வீடுகளில் வைத்து பராமரிக்கும் முறை உண்டு. ஆனால் மேல் நாடுகளில் இவர்களை முதியோர் இல்லங்களில் விடுவதால் விரக்தியடைந்த முதியோர் கொலையில் ஈடுபட்ட சம்பவங்கள பல இடம் பெற்றுள்ளன. இதனைத் தீர்த்துவைக்கும் முகமாக 1919ல் பிரித்தானிய முதியோர் கல்வித் தலைவராக இருந்த ஏ.எல்.சிமித் "வாழ்நாள் முழுவதும் சர்வதேச ரீதியாக கல்வி வழங்கப்பட வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

ஒருவரின் நிலையைத் தீர்மானிப்பதில் ஆளுமை பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. வயதிற்குறைந்தவர் பலர் சமூகத்தில் ஒளி இழந்து நிற்பதையும், வயதில் முதிர்ந்தவர்கள் சிலர் நாட்டையே கட்டிக்காக்கும் அளவிற்கு ஆளுமை கொண்டவராகவும் இருப்பதைக் காண்கிறோம். வயது முதிர்ச்சியிலும் ஓர் இளைஞனைப்போல் நாட்டு நிர்வாகத்தையே பொறுப்பேற்கும் வகையில் ஆளுமையைக் கட்டி எழுப்புவது கல்வியே. தொடர் கல்வியே ஒருவனை அறிவுடையோனாக்கும். அவனவன் கற்ற கல்விக்கேற்பவே அவனது அறிவு வளரும். ஆளுமை வளரும்.[7] இதனையே திருவள்ளுவர் "கற்றனைத் தூறும் அறிவு" என்கிறார். எழுத வாசிக்கத் தெரிந்தால் மட்டுமே போதும் எனப் பாடசாலை விட்டு நீங்கிய பின்பு நூல்கள் தொடாது வாழ்கின்றனரே இக்கல்வி முறை கல்வியாகுமா? பதினைந்து வருடக்கல்வி முடிந்ததும் கல்வியை ஊட்டாதுவிடல் பதினைந்து வயதில் இளைஞனைக் கொல்வதோடு ஒக்குமல்லவா? கல்வியினை இளம் பருவத்தில் நிறுத்தினால் புத்தியை மங்கச்செய்து, மக்களை விலங்குகட்குச் சமமாக்கும். மூடர்பிணங்கட்குச் சமமாவர். மனிதன் மாக்களாகாது, மக்களாக வாழுதற் பொருட்டு ஒய்வு நேரத்தை வாசிப்பதிற் செலவழிப்பதன் மூலம் தன்னைப் பூரணப்படுத்த முடியும். எனவே வாழ்நாள் கல்வியானது அறிவை வளர்த்து ஆளுமை வளர்ப்பதுடன் நல்ல பொழுது போக்காகவும் அமைகிறது.

தொழிலில் மன நிறைவைத் தருவதற்கும், நாட்டிற்குகந்த பிரசைகளை உருவாக்குவதற்கும், சிறந்த ஆளுமையை வளர்க்கவும், ,தலைமுறை இடைவெளியை நிரப்பவும், சிறந்த பொழுது போக்கிற்கும், முதியோருக்கும் சமுதாயத்திற்கும் வாழ்நாள் முழுவதும் நடைபெறும் தொழிற்பாடாகக் கல்வி அமைதல் வேண்டும். இங்கு வாழ்நாள் கல்வி எனும்போது பாடசாலை, பல்கலைக்கழகக் கல்வி மாத்திரம் எனத் தவறாக எண்ணிவிடக் கூடாது. சமூகம், சமூக நிறுவனங்கள், குழுக்கள் ஆகியனவும் கல்வி நிலையங்களே என்பதனைக் கருத்திற் கொள்ளவேண்டும். இன்று வெகுஜன தொடர்புச் சாதனங்களின் பயன்பாடும் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகிறது என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.[8]

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பதனை உணர்ந்து எல்லோரும் கற்பவற்றைக் கற்றுச் சிறந்த வாழ்வு வாழத் தனிமனிதனும் அரசும் முயலவேண்டும். "எல்லோருக்கும் கல்வி" என்ற கல்வியாளர் கருத்தினை வேதவாக்காகக் கொண்டு எந்நிலையில் உள்ளோரும் வாழ்நாள் முழுவதும் இன்புற்றுக் கற்கும் சமூகமாக மாறும் நிலை ஏற்படல் வேண்டும். அமெரிக்காவில் பிள்ளைகள், பெற்றோர்கள், தாத்தா, பாட்டி என்ற மூன்று பரம்பரையினரும் கற்றலில் ஈடுபடுவதையும் டென்மார்க், சுவீடன், நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளில் வாழ்நாட் கல்வியை வற்புறுத்த மக்கள் பாடசாலைகளை அமைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவதையும் காணலாம் சீனாவிற் பாடசாலைகள் தொழிற்சாலைகளாகவும், தொழிற்சாலை பாடசாலைகளாகவும் இயங்கி முழுச் சமூகமுமே கல்வியில் ஈடுபடுவதால் கல்விப்பணி விருத்தி மூலம் நாட்டை முன்னேற்றப்படிக்குக் கொண்டு செல்கின்றனர். அவற்றை முன்னோடியாகக் கொண்டு சகலரும் சாந்தனையும் கற்றல் வேண்டும்.

## உசாத்துணை நூல்கள் :-


- சந்திரசேகரம் .ப,1975–கல்வித்தத்துவம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக் கழகம், ப–5.
- ஜெயராசா .ச, 2002 – கல்விச் சீர்மியம், பொஸ்கொ வெளியீடு, நல்லூர். ப– 49.
- யுனெஸ்கோ கூரியர் (நவம்பர் 1998), தென்மொழிகள் புத்தக நிறுவனம், 18,மேயர் இராமநாதன் சாலை, சென்னை. ப – 30.
- முத்துலிங்கம் .ச, 1974 – கல்வியல் ஓர் அறிமுகம், கீதாஞ்சலி அச்சகம், நல்லூர். ப – 30.
- சந்திரசேகரம். சோ, 1993– கல்வியும் மனித மேம்பாடும், கவிதா பதிப்பகம், மதுரை. ப– 37.
- யுனெஸ்கோ கூரியர் (நவம்பர் 1998), ப – 16.
- ஜெயராசா. ச, 2004– கல்விக் கோட்பாடுகளும், சன்சைன் கிரபிக்ஸ் நிறுவனம். ப – 5.
- சந்திரசேகரம். சோ, 1993– கல்வி வளர்சிச் சிந்தனைகள், கவிதா பதிப்பகம், மதுரை. ப – 23.
- தனலட்சுமி .வி 2003 ஐப்பசி, கல்வியியலாளர் கல்வியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம், ப – 76


### உலக அதிசயங்கள்

| | | |
|---|---|---|
| பிரமிட்டுக்கள் | - | எகிப்து |
| தாஜ்மகால் | - | இந்தியா (ஆந்திரா) |
| மாபெரும் சுவர் | - | சீனா |
| சுதந்திர சிலை | - | அமெரிக்கா (நியூயோக்) |
| நயகரா நீர்வீழ்ச்சி | - | வட அமெரிக்கா |
| சாய்ந்த கோபுரம் | - | இந்தாலி (பைசா) |
| தெங்குதோட்டம் | - | பபிலோனியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரும் சதமல்ல உற்றுப்பெற்ற பேரும் சதமல்ல



திரு.சீ.அமரசிங்கம்,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

உலக நியதி என்பது இறைவனது தீர்ப்பாகவே அமைவதனை ஆத்மீக ரீதியான இக்கதை உணர்த்துகின்றது. ஒருவருக்குரிய ஸ்தானம், பதவி என்பவை இறைவனாற் கொடுக்கப்படுவது. இந்நிலை ஒருவருக்குரியது அன்று. அதில் அவர் நிலைப்பதுமன்று. ஒருவரது நிலை பிறரை வருத்த, அவமதிக்க இறைவனாற் கொடுக்கப்பட்டதன்று. ஒருவரது நிலை உயரும் போது அவரிடம் பணிவும் பண்பும் காணப்படும் பட்சத்தில் அது புனிதமான நிலையாக ஏற்கப்படும். "வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்" இதனையாரும் மறந்து விடக்கூடாது என்பதனை அவதார புருஷனாகிய ஸ்ரீமத் நாராயணரின் வைகுந்தத்தில் நடந்த ஒரு சம்பவம் இங்கு சித்தரிக்கிறது.

படைப்புக் கடவுளாகிய பிரம்ம தேவனுக்கு நான்கு தலைகள். ஒவ்வொரு தலைக்கும் ஒவ்வொரு யுகமாக வகுத்த பிரம்மா, யுகங்களை; கிருத, திரேத, துவாபர, கலியுகங்கள் என நான்காக வகுத்து உயிர்களைப் படைத்து வருகின்றார். காத்தற் கடவுளாகிய ஸ்ரீமந் நாராயணயர் தீயோரைஅழித்து நல்லோரைக் காத்துத் தர்மத்தை நிலைநாட்ட யுகங்கள் தோறும் அவதாரம் எடுக்கிறார். இவ்வகையிற் கிருதயுகத்திற் பக்த பிரகலாதனின் பக்தி நெறிக்காக அவனது தந்தையாகிய இரணிய கசிபு என்னும் மன்னனை நரசிங்க அவதாரம் எடுத்து நகத்தால் உடல் கிழித்து அழித்தபின் பகவான் பாம்பணையிற் பள்ளிகொண்டிருக்கும் போது ஏற்பட்ட ஒரு சம்பவம் இங்கு நோக்கப் படுகின்றது.

பகவான் பாம்பணையிற் பள்ளிகொள்ளும்போது, தனது பாதணிகளை (செருப்புக்கள்) கழட்டாது, அதனுடன் சேர்ந்தே துயில் கொள்கின்றார், பகவானின் துயில் அறிதுயில் என்பதனை யாவரும் அறிந்ததே. பகவானுடன் அவரது பாதணிகளும் பாம்பணையிற் பள்ளி கொள்வதனை அவதானித்த பகவானின் தலையிலுள்ள முடி (கிரீடம்) பாதணிகளைப் பார்த்து "ஏ செருப்பே, உனக்கு எத்தகைய துணிவிருந்தால் பகவானின் திருப்பாதங்களுடன் சேர்ந்து வந்து பாம்பணையில் பள்ளி கொள்வாய்? நீயோ விலக்கக்கூடிய பொருள். வீட்டிற்கு வெளியே பிறர் காணாதவாறு ஒதுக்கிவைக்கப்படுபவர் இனம். துடைப்பம், விளக்குமாறு (கஞ்சல், குப்பை கூட்டும் கருவி), கால் மிதி இவைகளுடன் உன்னையும் முழிவியழத்திற்கு (முதல் தரிசனத்திற்கு) விலக்கழிக்கப்பட்டவர்கள் என்றே உலகத்தார் ஒதுக்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பர் என்று தெரிந்து கொண்டுமா இப்பாம் பணையில் நீயும் சேர்ந்து பள்ளிகொள்கிறாய்?" எனக்கோபமாகப் பாதணிகளைப்பார்த்துக் கூறியது. பாதணிகளோ "எனக்கு எதுவுமே தெரியாது. பகவானே என்னை (எங்களை) வெளியே கழட்டிவிடாது தம்திருப்பாதங்களுடன் சேர்த்துவந்து அறிதுயில் கொள்கின்றார். யாம் ஏது செய்வோம்? எங்களால் எதுவும் ஆகாது. அவர் திருக்கடாட்சமே அனைத்தும்" என்று அழுதவாறு கூறின ஆனால் முடியோ தன் பெருமைகளைக் கூறிப்பாதணிகளைத் தொடர்ந் தும் இழிவுபடுத்த முனைந்தது. இந்நிகழ்வில் முடியின் வாதங்கள் தற்பெருமைகள் சரிதான் என்றவாறு பகவானின் படைத்தல் தொழிலை யும், காத்தல் தொழிலையும் புரிகின்ற சங்கும் சக்கரமும் ஆமாம் போட்டன. அழித்தலையும் மறைத்தலையும் செய்கின்ற வாளும் கதாயுத மும் எங்களுக்கேன் சோலி? நாங்கள் பேசாமலே இருப்போம். நடப்பது நடக்கட்டும் பகவான் பார்த்துக்கொள்வார் என்ற எண்ணத்தில் வாளா விருந்தன (பேசாதிருந்தன). இவ்அநியாய நிகழ்வினைப் பார்த்த பாம்பணையோ சீறித் தனது எதிர்ப்பைக் காட்டியது. பகவானோ ஆதிசேடனான பாம்பை, தமது திருக்கண்களால் "நீ பொறுமையாக இரு. நடப்பதை யாம் பார்ப் போம்" எனத்தம் கண்சாடையால் அடக்கினார்.

பகவானின் முடியோ தனது தற் புகழ்ச்சியைத்தொடர்ந்து கூறத்தொடங்கியது. "ஏ செருப்பே கேள்! எமது வம்சமோ உயர் நிலை கொண்டது. எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பர். அச்சிரசே தலை எம்மை அணிவதால் பொறுமையும் புகழும் அந்தஸ்தும் பதவியும் அடைகிறது. வேந்தர்களை முடியுடை மன்னர் எனறும், முடிசூடிக்கொண்டான் என்றும் முடிக்குரிய இளவரசன் என்றும் அழைப்பதி லிருந்து எம் குலப்பெருமையை உலகறியு மன்றோ? வெறும் கால் செருப்பாகிய உனக் கேது விளங்கும். உன் தகைமை தெரிந்துமா பகவானின் பாதங்களோடு சேர்ந்து பாம்பணையில் பள்ளி கொள்கின்றாய்? அது மட்டுமா? இறைவனுக்கு பிரசாதப்படுகின்ற தேங்காய் முடியில்லாவிட்டால் அது விலக்கப் படுகின்றது. பூரண கும்பம் வைக்கும்போது முடியுள்ள தேங்காய் தேர்ந்தெடுக்கப்படுகின் றது. தேங்காய் முடியில் அலங்காரமாகப் பூவும் வைக்கிறார்கள். இத்தகைய குலப்பெருமைமிக்க என்னைப் பகவான் தமது தலையில் சூட்டியுள் ளார் என்றால் எத்தகைய பெருமைமிக்கவன் என்பதனை அனைத்து உலகங்களும் அறியும். நீயோ இழிவானவன் என்பதனை அறியாயோ என்று பாதணிகளைப் பார்த்து ஏளனம் செய்தது. பாதணிகளோ, தங்கள்மீது தவறேதும் இல்லை யென்றும், பகவானே தங்களைத் தம் திருப் பாதத்துடன் சேர்த்துவந்து பாம்பணையில் அறிதுயில் கொள்கின்றார் என அழுதவாறு கூறின. முடியோ தமது தற்புகழ்ச்சி நாடகத்தைத் தொடர்ந்தது. "ஏ செருப்பே இன்னும் கேள் ஒருவர் பிறருக்கு செருப்பால் அடிப்பேன் எனக் கூறுவதோ செருப்பால் அடிப்பதோ, செருப்பால் அடிவாங்குவதோ இழிநிலைச்செயல் என மானிடர் கூடக் கூறுவரன்றோ? இதிலிருந்து உனது தகுதிநிலை தெரியவில்லையே" என்று இழிவுபடுத்திக் கூறியது. பாதணிகளோ முடியின் இவ்வன்சொல் வைதலால் வெம்பியபடி பகவானே என்னால் இனிமேலும் இவ்வன் சொல்களையும், அவதூறுகளையும் தாங்க முடியவில்லை. பகவானே, தங்களைச் சரண டைந்தோம். அடைக்கலம் தாருங்கள்" என்று கண்ணீர் மல்க மண்டியிட்டன. பகவானோ தம்மைச் சரணடைந்தவர்களைப் பாதுகாப்பவ ராதலால் பாதணிகளுக்கு அடைக்கலம் கொடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருளினார். அது மட்டுமன்றி தற்பெருமை கூறிப் பாதணிகளை அவமதித்த முடியைப்பார்த்து "ஏ கிரீடமே, யாருக்கும் எந்த நிலையும் பதவியும் உறுதியானதும் நிலையானதுமல்ல. மேடுபள்ள மாகலாம், பள்ளம் மேடாகலாம். காடு நகரமா கலாம்; நகரம் காடாகலாம்; நீர்நிலை தரையா கலாம் தரையை நீர் கொள்ளலாம். இது யாவும் எம் சித்தமேயமின்றி பிறர் சித்தமன்று. அந்த வகையிற் பாதணிகள் அரசாளும் காலம் வரும். எமது அடுத்த அவதாரமாகிய ராம அவதாரத்தில் ஒரு தலைமுறைக்கு முடிக்குமேல் பாதணிகள் வைக்கப்பட்டு அரசாட்சி நடாத்தப்படும். அநியா யத்திற்கு ஒத்தாசைபோன சங்கு சக்கரங்களே, பரதன் சத்துருக்கனாக இச்செயலை நிகழ்த் துவர். அதுமட்டுமன்றி ஒரு தலைமுறைக்கு முடியாகிய உன்னை விலக்களிப்பேன். நீயோ பாதணிகளைச் சுமப்பாய். ஆக்கிரமிப்பு அநியா யத்தைக் கண்டும் காணாததுபோல் இருந்த கதாயுதம், வாள் உங்களை இராம அவதாரத்தில் தொடவேமாட்டேன். அது மட்டுமன்றி இவ் அநியாயத்தைக் கண்டு பொறுக்க முடியாது சீறிக் கொதித்தெழுந்த ஆதிசேடனே (பாம் பணையே) உன்னை அடுத்த அவதாரத்தில்– இராம அவதாரத்தில் என்றும் என்னைப் பிரியாத தம்பியாக ஏற்றுக்கொள்வேன்". என்று திருவாய் மொழிந்தார். திரேதாயுகத்தில் இராம அவதாரத்தில் இராமஇலட்சுமணர்களாக கருமலை, செம்மலை அனைய காட்சியர் என கம்பராழ்வாரால் வர்ணிக்கப்பட்ட அவதார புருஷர்களாகப் பகவானும் பாம்பணையும் அவதாரமெடுத்ததனை இராமாயணம் என்னும் இதிகாச நூலைக் கற்றவர்கள் அறிவர். அவதாரங்களிலே இராம அவதாரம் மேலான அவதாரம் என்பதனையும் யாவரும் அறிவர். நிலையற்ற வாழ்வில் எது நிலையானது என்பதனைப் புரிந்தவர்கள். தம்மைச் சதமாக எண்ணார்–இறைவா நின் தாள் சதம்.......... இவன்.

## நவாப் நாற்காலி

சிலர் நாற்காலியில் இருப்பதனாற் பெருமை அடைகிறார்கள். நாற்காலியில் பண்பாளர்கள், நீதிவான்கள்.அமர்வதனால் நாற்காலியே பெருமையடைகின்றது– நவாப்மன்னன் நீதி தவறாது ஆட்சிசெய்தமையால் நாற்காலி நவாப் நாற்காலி என்று இன்றும் பெருமை கொள்கின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியும் அதன் நோக்கமும்



திருமதி பாக்கியலக்ஷ்மி தவக்குமார்,
பிரதி அதிபர்,
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

ஒரு கட்டடத்தைக் கட்டி யெழுப்புதற்கு அத்திவாரம் பலமாக அமைய வேண்டியது எவ்வளவு முக்கியமானதோ, அந்தளவிற்கு அவசியமானது மாணவர்களின் அடிப்படைக் கல்வியாகிய ஆரம்பக் கல்வியாகும்.

ஆரம்பக் கல்வியின் அவசியம் குறித்து பிளேட்டோ. ரூசோ, ஜோண்டுயி, கேர்பட்ஸ். பென்சர் மொண்டசூரி போன்ற அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை ஆய்வுகளின் மூலம் நிரூபித்து முன்வைத்துள்ளனர். இந்த அறிஞர் களின் கருத்துப்படியும், எமது கல்வியின் புதிய சீர்திருத்தத்திற்கு அமைவாகவும் ஆரம்பக் கல்விக்கான ஆசிரியர், பெற்றோர், மாணவர் களின் பங்களிப்புக்கள் ஆழமானவையாகும்.

பாடசாலையின் முதன்நாள் அனுபவம் என்பது வாழ்க்கையில் மறக்கமுடியாததொரு அனுபவமாகும். முதன் முதலில்காலடி எடுத்து வைக்கும் பிள்ளையை ஆசிரியர் அன்புடன் அரவணைத்து வரவேற்கவேண்டும். பெற் றோரின் அரவணைப்பினாலும், அன்பினாலும் வளர்ந்த பிள்ளை ஆசிரியரிடம் அரவணைப் பையும் அன்பினையும் எதிர்பார்க்கின்றது. எனவே ஆசிரியரானவர் அம்மாணவர்களுக்கு சந்தோஷமாகப் பாடசாலைக்கு வந்து கற்கும் வகையில் கற்பிக்கவேண்டும்.

மாணவர்கள் தமது ஆசிரியரிலும் பாடசாலையிலும் பற்றும் பாசமும் வைத்த பின்பே ஆசிரியர் கற்பித்தலில் மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்கவேண்டும். ஆசிரியர் கற்பித்தலில் கவர்ச்சியும் செயலூக்கமும் கொண்டதாக அமையவேண்டும். ஆரம்பக் கல்வி மாணவர்கள் வித்திலிருந்து வெளிவரும் முளையினைப் போன்றவர்கள். வித்து முளையாகி, கன்றாகி, மரமாகிப் பல பயன் களைத் தருகின்றது. அதேபோல் மாணவர் களாகிய வித்துக்கள் முளைத்து, கன்றுகளாகி மரங்களாகி, விருட்சங்களாகப் பயன் கொடுக்க, வேண்டும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே நாம் இளமையிலேயே நல்ல விடயங்களைக் கற்க வழிகாட்ட வேண்டும். பிள்ளையின் மனதில் அது ஆழமாகப் பதியும். ஆசிரியர்கள் வகுப் பறையில் கூறும் விடயங்கள் அனைத்தும் சரியானவை, உண்மையானவை எனப் பிள்ளை உணர்வான். எனவே துடிப்பான செயல்களில் ஈடுபடுவதற்குரிய தனித்திறன்கள் உடையவர் கள் என்பதை உணர்ந்து அவர்களின் தேவைக் கேற்ப தமது கற்பித்தல் முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவரும் ஒரேவிதமான அறிவு, ஆற்றல், திறமை, கவர்ச்சி கொண்டவர்கள் அல்லர் பிள்ளைகளின் இயல்பூக்கங்கள், மனவெழுச்சிகள், நுண்ணறிவு என்பவற்றை அறிந்து கற்பிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். மீத்திறன் பிள்ளைகள் உள்ள வகுப்பில் ஆசிரியர் மாணவர்களின் உயர்தகைமையான செயல்களை விருப்புடனும், உற்சாகத்துடனும் வரவேற்கும் மனநிலையைக் கொண்டவராக இருத்தல்வேண்டும். அத்துடன் இம்மாணவர்களுக்கு ஆக்கத்திறன் மிக்க பல விடயங்களை அளிக்க ஆசிரியர்களுக்கு உதவி புரிதல் வேண்டும்.

ஆசிரியர் மாணவர் தொடர்பு மிக முக்கியமானது. ஆசிரியர் எல்லா மாணவர்களையும் ஒரேவிதக் கண்ணோட்டத்துடன் பார்த்தல் வேண்டும். 'ஆசிரியர் தம்மை வேறுபாடின்றி அவதானிக்கின்றார்'. என்ற எண்ணம் மாணவர் மனதில் எழுமாறு ஆசிரியர் நடத்தல்வேண்டும். மாணவர்களின் இயல்பான செயல்களுக்கேற்ப ஆசிரியர் அவர்களுடன் சேர்ந்து விளையாடி, விளையாட்டுடன் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் வழிகாட்டவேண்டும். மாணவர்களின் செயல்களைப் பாராட்டுவதும், அவர்களைத்தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதுவும் ஆரம்பக் கல்வி ஆசிரியரின் கடமையாகும்.

பிள்ளைகளின் செயற்பாடுகள் யாவும் குழுமுறையாக அமைதல்வேண்டும். அப்போதுதான் குழுவில் உள்ள மாணவர்கள் ஒருவரையொருவர் அறிவர். தெரிந்த மாணவன் தெரியாத மாணவனுக்குச் சொல்லிக் கொடுப்பதாக இருக்கும். இது நட்புறவுடனான கற்றலுக்கு வழிகாட்டும். ஒரே விதமான கற்பித்தல் மாணவர்களுக்குச் சலிப்பூட்டுவதனால் கற்பித்தல் முறையை அடிக்கடி மாற்றியமைத்தல் வேண்டும். வகுப்பறையினுள் முடங்கி இருக்காது வகுப்பறையின் வெளியே கூட்டிச் சென்று விளையாட்டு முற்றத்தில் அவர்களை விளையாடவிடல் வேண்டும். அப்போதுதான் தலைமைத்துவம், ஒற்றுமை, சகபாடியின் தொடர்பு என்பன உண்டாகும்.

எனவே ஆரம்பக்கல்வியின் நோக்கம் வெற்றிபெற ஆசிரியர்கள் சிறந்த மனித நேயம், பரந்த மனப்பான்மை, தளராதஆர்வம், நெகிழ்ச்சித்தன்மை கொண்ட ஒளிவிளக்குகளாகப் பிரகாசிக்க வேண்டும். ஆசிரியத் தொழில் மனித குலத்திற்குரிய மகத்தான சேவையாகத் தெய்வீகத் தன்மைகொண்ட மாண்புடைய தொழிலாகக் கருதப்படுகின்றபோது அது மாணவர்களின் எதிர்காலத்திற்கு வித்திடுகின்றது எனக்கூறினால் மிகையாகாது.

இவ்வாறு ஆரம்பக் கல்வியானது அவசியமானதும் அத்திவாரமானதுமாக இருப்பதால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். ஒரு நற்பிரஜையை உருவாக்க நல்லாசிரியரினாற்றான் முடியும். வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் நற்பிரஜையாக பிள்ளை வளருவதற்கு ஆரம்பக் கல்வி முக்கியமானது என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்திய உள்ளம்



திருமதி.நந்தினி தர்மதயாளன்,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

அன்று திங்கட்கிழமை. தரம் நான்கு வகுப்பறை. தமிழ் பாடவேளை. திருமதி குணவதி ஆசிரியை "பழமொழிகளும் அவற்றிற்கான கருத்துக்களும்" என்ற தலைப்பில் மிகவும் விளக்கமாகத் தமிழ் பாடத்தினைக் கற்பித்துக் கொண்டிருந்தார். "மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்" எனும் கருத்துக்குச் சரியான பழமொழி சொல்லத் தெரிந்தவர்கள் யாராவது கூறலாம் என்றார் ஆசிரியை.

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று மாலதி எழுந்து கூறினாள். "மிகவும் நல்லது, கெட்டிக்காரி", என்று மாலதியைப் பாராட்டினார் ஆசிரியை. "கோபம் வருமிடத்து நிதானம் குறைந்து விடுகின்றது என்ற கருத்துக்கு ஏற்ற பழமொழியை ஆதவன் கூறும் பார்க்கலாம்" என்றார் ஆசிரியை. "ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்" என்னும் பழமொழி தான் சரியானது என்று தெரிந்தும் ஆதவன் எழுந்து எதுவும் பேசாது நின்றான். ஆசிரியை திரும்பவும் கேட்டார். ஆதவன் பதில் கூறவில்லை. ஆதவனுக்குக் கண்கள் கலங்கி கண்ணீர் முத்துப் போல உதிரத் தொடங்கின.

சில சமயங்களில் சோர்வாக இருந்தாலும் வகுப்பிலே உற்சாகமாகவும், உடனடியாகவும் சரியான பதிலைக் கூறும் திறமையுள்ள ஆதவனா இப்படிக் கண்ணீர் வடிப்பது?

ஆசிரியருக்குப் பெரும் வேதனையை உண்டு பண்ணியது. ஆதவன் ஏதோ ஓர் இயலாமையால்தான் குழம்பி நிற்கின்றான் என உணர்ந்து கொண்ட ஆசிரியர், ஆதவனை அவனது இருக்கையில் உட்காரும்படி கூறிவிட்டுப் பாடத்தினை மேலும் தொடர்ந்தார். ஆனால் ஆசிரியராலும் மேலும் கற்பித்தலில் ஈடுபட முடியவில்லை. மாணவர்களுக்குச் சிறு பயிற்சிவேலையினைக் கொடுத்துவிட்டு ஆதவனை அழைத்துக்கொண்டு வகுப்புக்கு வெளியே மைதானத்துக்கு அருகேயுள்ள மலை வேம்பு மரத்தடிக்குக் கூட்டிச்சென்றார். ஆதவனுக்கு அப்போதும் அழுகை நிற்கவில்லை.

ஆசிரியர் ஆதவனின் அழுகைக்குக் காரணம் கேட்டார். ஆனால் ஆதவனாற் பதில் கூற முடியவில்லை. விம்மி விம்மி அழுதான். ஆசிரியர் ஆதவனைத் தனக்கு அருகே இருத்தி அவனது கண்ணீரைத் துடைத்து விட்டு" என்ன பிரச்சினை என்றாலும் துணிவாக என்னிடம் கூறும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் எதுவும் பேசாது ஆசிரியரின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்த ஆதவன் "எனக்கு அம்மா வேணும், அம்மா வேணும்" என்று ஆசிரியரைக் கட்டியணைத்த படியே கத்தினான்.

ஆதவனைத் தடவிக்கொடுத்து அவனுக்குச் சமாதானம் கூறி, அழுகையை நிறுத்தினார் ஆசிரியர். "அப்பா, அம்மாவுடன் சண்டையா?"என்று கேட்டார் ஆசிரியர். இதற்கு மேலும் ஆதவனால் மௌனமாக இருக்க முடியபடிவில்லை. அப்பா தினமும் வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது மது போதையில் வருவார். அப்பாவுக்கு அம்மா சாப்பாடு பரிமாறும்போது "சாப்பாடு சரியில்லை; ஏன் கதைக்காமல் ஊமை போல இருக்கிறாய்? மௌனவிரதமா? என்று கேட்டுக் கேட்டு அம்மாவுக்கு அடிப்பார்". அம்மாவும் எவ்வளவு அடித்தாலும் அடியை வாங்குவாரே தவிர ஒன்றுமே வாய்திறந்து கதைக்கமாட்டார். அழுதுகொண்டு இருப்பார். அம்மாவோடு சேர்ந்து நானும், தங்கை, தம்பி மூவரும் அழுவோம். அப்பா கொட்டிச் சிந்தி சாப்பிட்டுவிட்டுப் படுத்து உறங்கிவிடுவார். நாங்களும் அம்மாவும் பட்டினியாகப் படுத்து விடுவோம். மேலே கதைக்க முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது ஆதவனுக்கு.

இதே வேளை தகப்பனாரின் நல்ல பண்பைப் பற்றி ஏதாவது கேட்டால் ஆதவனின் கவலை சிறிதளவானது குறையும் என நினைத்த ஆசிரியர்.... "அப்பா உங்கள் மீது அன்பாய் இல்லையா?" எனக் கேட்டார்.

இதைகேட்ட ஆதவனின் முகத்திற் சிறுமலர்ச்சி தெரிந்தது. உடனே எழுந்து நின்ற ஆதவன் "காலையில் எங்களைக் குளிப்பாட்டி, பாடசாலை உடை அணிவித்து, பாடசாலை கொண்டுவந்து விடுவார். அம்மாவுக்கும் வேலைகள் செய்தும் கொடுப்பார். அம்மாவிடமும் அன்பாகத்தான் இருப்பார். காலையில் அன்பாகவும் மாலையில் வெறுப்பாகவும் இருந்த அப்பா – நேற்று 'ரீச்சர்'" மேலே சொல்ல முடியாது அழுதான்.

அழுகையின் மத்தியிலேயே "அப்பா இரவு அம்மாவின் தலையில் கட்டையாலே அடித்துப் போட்டார். அம்மா கத்திக்கொண்டு கீழே விழுந்துதிட்டா. நிலத்திலே ஒரே இரத்தம். நாங்கள் அம்மா! அம்மா! என்று கத்தினோம். அயல் வீட்டுக்காரர்கள் ஓடிவந்து அம்மாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். எங்கள் மூன்று பேரையும் – கமலா மாமிதான் கூட்டிப்போய் தங்கள் வீட்டிற் படுக்கவைத்தார்.

நாங்கள் மூவரும் அம்மாவைப் பார்க்க வேணும் என்று அழுதோம். கமலா மாமி எங்களை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றா. அங்கே அம்மா கண்மூடிப் பேசாமற்படுத்திருந்தார். தலையிலே கட்டுப்போட்டிருந்தது. அம்மா !அம்மா! என்ற நாங்கள் அழுதோம். இங்கு ஒருவரும் அழக்கூடாது என்று சொல்லி எங்களை வெளியே அனுப்பிவிட்டார்கள்.

கமலா மாமிக்கு டொக்டர் ஏதோ சொன்னவர். ஆனால் கமலாமாமி "அம்மாவுக்கு ஒன்றுமில்லை. சிறிய காயம்தான். விரைவில் குணமாகி வீட்டுக்கு வந்திடுவார். நாங்கள் வீட்டுக்குப் போவோம். என்று சொல்லி எம்மை கூட்டி வந்துவிட்டார்" என்று சொல்லிவிட்டு அழுதான் ஆதவன்.

இவ்வளவு மனச்சுமைகளைத் தாங்கிக் கொண்டு இந்தப்பிள்ளை பாடசாலைக்கு வந்திருக்கிறானே! என இன்னும் மனங்குழம்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், "ஆதவா! இன்று யாருடன் பாடசாலைக்கு வந்தீர்?" என்று கேட்டார்.

"அப்பாதான் என்னையும் தம்பியையும் கூட்டிவந்து விட்டார். தங்கச்சி கமலா மாமி வீட்டில் இருக்கிறா" என்று ஆதவன் விடை கூறினான். "ஆதவா! கவலைப்படாமல் அழாமல் இருக்கவேணும். அம்மா விரைவிற் குணமாகி வீட்டுக்கு வந்திடுவார்". என்று ஆசிரியர் சமாதானப்படுத்தினார். ஆசிரியரின் ஆறுதல் மொழியிற் சிறிது நிம்மதியடைந்த ஆதவன் தனது வகுப்புக்குச் சென்றான்.

ஆசிரியை அடுத்தநாள் காலை ஆதவனின் தாயாரை வைத்தியசாலையிற் சென்று பார்வையிட்டார். அப்போதுதான் ஆதவனின் தாயார் மயக்கநிலையிலிருந்து விடுபட்டுக் கண்களைத் திறந்து பார்த்தார். ஆசிரியையைக்கண்ட ஆதவனின் தாயார் கண்ணீர்விட்டு அழுதார். அவரைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தவேளை ஆதவனின் தகப்பனாரும் டொக்டரும் அவ்விடத்திற்கு வந்தனர். ஆதவனின் தகப்பனார் மனைவியின் கால்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு "ஓ" என்று அழுதார். "எனது கோபம் நிதானம் இழந்து போனமையால் எவ்வளவு பாதிப்பு என்பதனை இப்போது நன்றாக உணர்ந்து விட்டேன். என்னை மன்னித்து விடு" என்று அழுதார். "நீங்கள் இப்படிக் கூறியபோதே எனது வலியின் பெரும்பகுதி குறைந்துவிட்டது" எனக் கண்ணீரோடு கூறினார். ஆதவனின் தாயார்.

இதற்குப் பின்னர் அங்கு நிற்க வேண்டிய தேவை தனக்கு இல்லை என்று உணர்ந்த ஆசிரியை வைத்தியசாலையை விட்டு வெளியேறினார்.

சில நாள்கள் சென்றன. ஆதவன் இப்போது உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் புதுப்பொலிவு பெற்று விளங்கினான். படிப்பில் முழுக்கவனம் செலுத்தினான். பரீட்சையில், போட்டிகளில் திறமையுடன் பங்குபற்றி முதலிடம் பெற்றான்.

பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் வந்தது. பரிசளிப்பு விழாவில் அதிபர் தனது உரையில் "கல்வியிலே திறமைசாலியான ஆதவன், போட்டிகள் எல்லாவற்றிலும் பங்கு பற்றி முதலிடங்களைப் பெற்று, எமது பாடசாலைக்கும் தனது பெற்றோருக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளான். பெருமையையும், புகழையும் தேடித்தந்த மாணவனான ஆதவனைப் பாடசாலைச் சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது" என அறிவித்தபோது கரகோஷம் வானைப் பிளந்தது.

"பிள்ளைச்செல்வங்களின் சகல வளர்ச்சிப்படிகளிலும் பெற்றோர்களின் பங்களிப்பும் மிக மிக அவசியம். அந்த வகையில் ஆதவனுக்கும் அவனது பெற்றோர்களின் அன்பும் அரவணைப்பும் ஆதரவும் நிறையவே உண்டு என்பதை அறியக் கூடியதாகவுள்ளது" என அதிபர் கூறினார்.

பெற்றோர் வரிசையில் முன்னிரையில் அமர்ந்திருந்த ஆதவனின் பெற்றோர்களின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. ஆதவனின் வாழ்வில் "சந்தோஷம்" கொடி கட்டிப் பறக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வாண்மை

திரு.சி.சிவனேஸ்வரன்,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



வாண்மை என்பது, குறித்த துறை தொடர்பான சிறப்பான அறிவையும், சுதந்திர மாகச் செயற்படும் தன்மையையும், பொறுப் பேற்கும் திறனையும் கொண்டதாக விளங்கும். இந்த வகையில் ஆசிரிய வாண்மையில் மூன்று அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. வாண்மையாளர் எனப்படுவோர் தாம் மேற் கொள்ளும் தொழிற்துறையிற் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றிருத்தலும் அவசியமாகும். சாதாரண மக்களின் இயலுமைக்கு அப்பாற்பட்ட துறைகளே வாண்மைத்துறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

அறிவு தன்னியக்கத் தொழிற்பாடு, பொறுப்புணர்வு என்பவை வாண்மையின் அடிப்படைகளாகும். தன்னியக்கமாக முடிவு களை மேற்கொள்ளும்போது அத்தகைய தீர்மானங்கள் பொறுப்புடன் மேற்கோள்ளல் வேண்டும் என்பதுடன் அதற்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்பும் வாண்மையாளருக்குண்டு என்பதிற் கவனமாகச் செயற்பட வேண்டும்.

கல்வியானது தனியாள் விருத்திக்கும், சமூகவிருத்திருக்கும் அடிப்படைக் காரணியாக அமைவதால் அது தொடர்பாகத் தேசிய, சர்வதேசிய அடிப்படையிற் பல நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு குவிந்த நோக்கில் தனியாள் ஒவ்வொரு வரும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கும், கற்றவை வாழ்க்கையினதும், சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயன்முறை வடிவம் கொடுக்கும் முக்கிய பங்காளர்களாக ஆசிரியர்கள் கருதப்படு கின்றனர். சிக்கலான இப்பணியை நிறைவு செய்வதற்கு ஆசிரியர்களிடம் வாண்மை தொடர்பான உயர்நிலைத் தேர்ச்சி தேவைப்படு கின்றது. இப்பணியை நிறைவு செய்வதற்குரிய தேர்ச்சியைப் பெறும்போது ஆசிரியர்களால் தம்மிடம் கற்கவரும் இளம் தலைமுறையினரை உரியவாறு தயார் செய்வதோடு எதிர்காலத்தில் எழுகின்ற சவால்களைத் துணிச்சலோடு எதிர்கொள்ளவும் அவர்களின் கற்றலை இலக்குள்ளதாக்குவதற்கும், அவர்களின் கற்றலுக்கு அவர்களைப் பொறுப்புடையவர் களாக்கும் பணியும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியிலேயே தங்கியுள்ளது.

கல்வியின் வெற்றியானது வகுப்பறை யிற் கல்வி கற்கும் மாணவர்களின் வெற்றியி லேயே தங்கியுள்ளது. வகுப்பறையிற் கவின் நிலையை உயர்நிலையில் விருத்திசெய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதால் மாணவர்களின் கற்றல் விருத்தி யுறும் என்பதில் சந்தேகமில்லை. வகுப்பறையின் கவின்நிலை எனும்போது ஆசிரியர்களின் தகுதியும் நம்பகமும் முக்கியமாகக் கொள்ளப் படுவதோடு புதிய தகவல் தொழில்நுட்பத்தை ஆசிரியரும் மாணவரும் இயல்புநிலையிற் பயன்படுத்தும் தகைமையும் பெற்றிருந்தல் வேண்டும் எனப்படுகிறது.

## ஆசிரிய வாண்மையில் நடைமுறைப் பிரச்சனைகள்

ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தலில் ஈடுபடும்போது, பல்தரப்பட்ட நிலைமைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியவராக உள்ளனர். ஆசிரியர்கள் முறையாகச் செயற்படும்போது, தினமும் பெருந்தொகையான மாணவர்களைச் சந்திப்பர். அத்தோடு காலத்துக்குக் காலம் பெற்றோர் தொடர்பான கூட்டங்கள், ஆசிரியர் கூட்டங்கள், கலைத்திட்டம் தொடர்பான கலந் துரையாடல்கள், ஆசிரியவாண்மை விருத்திக் கான செயலமர்வுகள் கள வேலைகள் தொடர்பான சுற்றுலாக்கள், களச்செயற் பாடுகள் என இன்னோரன்ன விடயங்களை யெடுத்துச் செயற்பட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் மாணவர்கள் பொறுத்துத் தம்பணிகளின் பலவகைத் தன்மையை உணர்கின்றனர். இலங்கையில் மொழிவழி அடிப்படையிற் பாடசாலைகள் இயங்குவதால் இனரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளாதபோதும், வகுப் பறை தொடர்பான பல்வகைப் பிரச்சினை களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

கற்றல், கற்பித்தலில் முறையாக ஈடுபடும் ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றல் பேறுகளான அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதை உணரமுடிகின்றது. குறிப்பிட்ட விடயங்களை திருப்தியாக செய்வதில் தொழில் வாண்மைத்திறன் பெற்றிருத்தல் அவசியமாகும்.

ஆசிரியர்கள் பாடசாலை மட்டத்திற் செயற்படும்போது பல்வேறுபட்ட மனத்தாக்கங் களுக்கு உட்படுகின்றார்கள். அது பற்றிய அபிப்பிராயங்கள் பின்வருமாறு:

- நேரப்பிரச்சனை
- மாணவர்களின் ஒழுங்குப்பிரச்சினை
- மாணவர்களின் ஊக்கமின்மை
- நிர்வாக ரீதியாக உதவியின்மை
- திருப்தியற்ற வேலை நிலைமைகள்
- அதிகளவு மாணவர்களைக் கொண்ட வகுப்பறை
- பெற்றோர் ஆதரவின்மை

இலங்கையின் இன்றைய பாடசாலை களுக்கு இந்நிலை பொருந்துவதாக உள்ளது. ஆசிரியர்கள் தமது தொழிலைச் சிறப்பாகச் செய்வதற்கு வகுப்பறையின் கவின்நிலை பொருத்தமானதாக இருக்கவேண்டும்.

## ஆசிரிய வாண்மையில் வகுப்பறை

கற்றல், கற்பித்தல் செயன்முறையின் பிரதான களமாகக் கொள்ளப்படுவது வகுப் பறையாகும். வகுப்பறையில் ஆசிரியர்களும், மாணவர்களும் மேற்படி செயற்பாட்டில் ஈடுபடும் போது, பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. குறிப்பாக ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் காணுதல் வகுப்பறை ஒன்றின் வினைதிறனுக்கு அத்தியாவசியமானதாகும்.

## ஆசிரியரும் மாணவர் நடத்தையும்

வகுப்பறையிற் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அதாவது ஆசிரியரின் ஆளுமை தொடர்பானதோ அல்லது அவரின் கற்பித்தல் தொடர்பானதோ, மாணவரின் நடத்தை தொடர்பானதோ அல்லது மாணவரின் கற்றல் தொடர்பானதாகவோ அல்லது பெற்றோர் தொடர்பானதாகவோ, அல்லது சமூகத்தொடர்பானதாகவோ அமையலாம்.

வகுப்பறையிற் கற்பித்தலில் ஈடுபடும் போது மாணவர்களின் தவறான நடத்தைக் கோலங்களுக்குத் தண்டனை வழங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவ்வாறாயின் எப்போது தண்டனை வழங்க வேண்டும்? எவற்றிற்குத் தண்டனை வழங்க வேண்டும்? எவ்வகைத் தண்டனை பயனுறுதி வாய்ந்ததாக இருக்கும் போன்ற வினாக்கள் வினவப்படலாம். தண்டனையானது நேர்க்கணியமாக இருப்பதே பெறுமதியும் பயனுறுதி வாய்ந்ததாகவும் இருக்கும். கொடுக்கப்படும் தண்டனை எதிர்க் கணியமாக இருக்கும்போது, பிழையான விடயத்தை மீண்டும் வலியுறுத்துவதற்கான விதியாகவே தண்டனை அமையலாம். வகுப் பறையிற் பல்வகைப்பட்ட நடத்தைக் கோலங் களைக் கொண்ட மாணவர்கள் காணப்படுவர். இதனால் மாணவர் மத்தியில் முரண்பாடுகள் தோன்ற வழி ஏற்படும். அவ்வாறான சந்தர்ப்பங் களில் ஆசிரியர் வகுப்பை எவ்வாறு கொண்டு நடாத்துதல் வேண்டும் என்பது முக்கியமான தொரு விடயமாகும். ஆசிரியர்கள் மாணவர் களின் ஆளுமை தொடர்பான முரண்பாடுகளை சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சரியான ஆளுமையைப் பெற்றிருத்தல் அவசியமான தாகும்.

வகுப்பறை என்பது பல்வகைத் தன்மை கொண்ட மாணவர்கள் வீற்றிருக்கும் இடமாகும். குறிப்பாக உடல், உள, சமூகச் சூழல் போன்ற அம்சங்களால் வேறுபட்டுக் காணப்படுவர். இதனாற் பல்வகைத்தன்மை கொண்ட வகுப்பறையில் ஆசிரியர் எவ்வாறு கற்றல், கற்பித்தலை முன்னெடுத்துச் செல்லல் என்பதிலேயே ஆசிரியத்துவத்தின் வெற்றி தங்கியுள்ளது. ஆசிரியர்கள் தனியார் வேறுபாட்டையும் அவர்களின் விருப்பு வெறுப்புக் களையும் இனங்கண்டு அதற்கேற்ற வகையிற் கற்பித்தலை முன்னெடுத்துச் செல்லலே நல்ல ஆசிரிய வாண்மைக்கு அடிப்படையாகும்.

## ஆசிரியரும் மொழியறிவும்

ஆசிரிய வாண்மையில் முக்கியமான அம்சமாகக் காணப்படுவது தொடர்பாடலாகும். நல்ல மொழியாற்றலே கற்பித்தலுக்கு அடி அத்திவாரமாகக் கொள்ளப்படுகின்றது. கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் மொழியை ஊடகமாகக் கொண்டே தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்கள் ஈடுபடும்போது ஆசிரியர்களின் மொழியாற்றலுடன் வகுப்பறையிற் கற்கும் மாணவர்களின் மொழியாற்றலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. மாணவர்களின் சமூக சூழலைப் பொறுத்து அவர்களின் மொழியாற்றல்கள் வேறுபடுகின்றன. இலங்கையிற் சில பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் வீட்டிற் பயன்படுத்தும் மொழி, வகுப்பறையிற் பயன்படுத்தும் மொழியில் இருந்து வேறுபடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. தாய்மொழியில்லாத வேற்று மொழி களிற் கற்க வேண்டிய நிலைக்கு மாணவர்கள் உள்ளாகலாம். எனவே, இவ்வாறான சூழ்நிலை யில் ஆசிரியர்கள், மாணவர்களின் இயல்பை அறிந்து கற்பித்தல் பொருத்தமானதாகும்.

**மாணவர்களும் கற்றல் தொடர்பான வீட்டு வேலைகளும்**

ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றலை முன்னெடுப்பதற்கான முயற்சியில் ஒன்றாகக் கற்றல் தொடர்பான வீட்டுவேலைகள் அமைகின்றன. அவ்வாறாயின் எவ்வாறான கற்றல் தொடர்பான வீட்டுவேலைகளை மாணவர்களுக்குக் கொடுத்தல் நல்லது என்பது தொடர்பான அறிவை ஆசிரியர் பெற்றிருத்தல் முக்கியமானதாகும். மாணவர்களுக்குக் கற்றல் தொடர்பான வீட்டு வேலையை வழங்கும்போது வயது நிலை, விருப்பு வெறுப்பு, மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை அறிந்து வழங்குதல் வேண்டும். எனவே மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்படாத வகையில் அமைதல் அவசியமாகும்.

**ஒப்படையில் ஆசிரியர் பங்கு**

ஆசிரியர்கள் ஒப்படைகளை மதிப்பீடு செய்யும்போது நான்கு பணிகளை நிறைவு செய்யவேண்டும். மாணவர்களின் ஒப்படை களைத் திருத்துதல் வேண்டும். அதனை மதிப்பிடுதல் இவற்றைவிட ஒப்படை மூலம் வழிகாட்டல், ஊக்குவித்தல் போன்றவற்றை மேற்கொள்ளல் வேண்டும். மாணவர்கள் விடுகின்ற தவறுகளை இனங்கண்டு அவர்களின் கற்றலைப் பின்னடையச் செய்யாத முறையில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும். மாணவர்கள் குறித்த ஒப்படைக்குப் பெற்ற புள்ளிகள் முக்கியமல்ல. அவர்கள் பெற வேண்டிய புள்ளிகள் ஏன் பெறப்படவில்லை என்பதுதான் முக்கியம். ஆசிரியர்கள் அவர்கள் பெறவேண்டிய புள்ளிகளைப் பெறுவதற்கான வழிகாட்டலை வழங்குதல் முக்கியமானதாகும். அவர்கள் அப்புள்ளிகளைப்பெறக் கற்க வேண்டிய பகுதிகள் பற்றி எழுத்துமூலம் வழிகாட்டுதல் அவசியமாகும். ஒப்படை திருத்தும்போது சரி, அடையாளம் இடுதல், நன்று என எழுதுதல், கோடிட்டுக்காட்டுதல், குறிப்பெழுதுதல் போன்ற செயன்முறைகள் மாணவர்களை ஊக்குவிக்கலாம்.

**ஆசிரியரும் மாணவர் மையக்கல்வியும்**

ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும்போது, மாணவர் மையக்கல்வியை விளங்கி முன்னெடுத்தல் அவசியமாகும். மாணவர்கள் கற்றலைத் தனியாகவும், கூட்டாகவும் மேற் கொள்வர். மாணவர்கள் கற்பதற்கான வாய்ப்புக் களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் ஆசிரியரின் முக்கிய பணியாகும். அதுமட்டுமன்றி மாணவர்களின் கற்றலை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊக்குவிப் பாளராகச் செயற்படுபவரும் ஆசிரியரே ஆவார். மாணவர் சுயமாகச் சிந்திப்பதற்கும், அவனாகப் பிரச்சினைகளை இனங்காணுவதற்கும், அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தலே ஆசிரியப் பணியாக இருக்கும். வகுப்பறையில் மாண வர்கள் குழுக்களாகப் பிரிந்து செயற்பட விரும்புவர். மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கும்போது அந்நடவடிக்கை மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதாக இருத்தல் வேண்டும். மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கும்போது, அந்நடவடிக்கை மாணவர் களின் கற்றலை மேம்படுத்துவதாக இருத்தல் வேண்டும். மாணவர்களைக் குழுக்களாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, ஆசிரியர்கள் பாரபட்சம் காட்டாது, நடுநிலையிற் பிரிக்கும்போது வகுப்பறையிற் பௌதிக நிலையைக் கவனத்திற் கொள்ளல் அவசியமெனக் கருதப்படுகின்றது.

**ஆசிரியர்களும் பாடமுன் ஆயத்தமும்**

எவ்வகுப்பிற் கற்பிக்கும் ஆசிரியர்களாயினும் வகுப்பறைக்குள் நுழையும்போது, பாடமுன் ஆயத்தத்துடனேயே நுழைதல் வேண்டும். இடம், காலம், வகுப்பின் கவின்நிலை, மாணவரின் பல்வகைத்தன்மை என்பன கற்பித்தலிற் பாரிய செல்வாக்கைச் செலுத்தும் காரணிகளாகும். இவை யாவற்றையும் கருத்திற் கொண்டு கற்பித்தலுக்கு முன் ஆயத்தம் செய்தல் அவசியமாகும். குறிப்புக்களைக் கொடுத்துப்பிரதி பண்ணவிடல் கற்பித்தலாகாது. பாட அலகுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறையைக்கையாளும் ஆசிரியர்களின் பாட ஆயத்தத்தில் முக்கிய பங்கைச் செலுத்துகின்றது. வினைத்திறனுள்ள ஆசிரியன் என்பவன் தான் கற்பிக்கும்போது, பாடத்தின் இலக்கை அறிந்திருத்தல் அவசியமாகும். அவ்விலக்கை அடைவதற்கு முற்கூட்டியே திட்டமிடுதல் அவசியமானதாகும். ஆசிரியர்கள் மாறும் உலகின் முகவர்கள் எனவே, தமது கற்பித்தலின்போது புதியனவற்றைப் புகுத்தல் இன்றியமையாததாகும். எனவே, ஆசிரியர்கள் முன்கூட்டியே பாடத்தைத் திட்டமிடுதல் மூலம் பொருத்தமான புதிய விடயங்களை மாணவர்களுக்குக் கொடுக்க வாய்ப்புண்டு.

**மாணவர் வருகையின்மையும்ஆசிரியர் பங்கும்**

ஆசிரியர் பாடசாலைக்கு வருகை தராததுபோல் மாணவர்களும் பல்வேறு காரணங்களால் வருகைதருவதில்லை. ஆகவே மாணவரின் கற்றலுக்கு வழிசொல்ல வேண்டியவர்கள் ஆசிரியர்களே. இந்நிலையில் வருகை தராது பின்னர் வருகை தரும் மாணவர்களுக்குக் கற்கத்தவறிய விடயங்களைக் கற்பதற்கு வேண்டிய வழிவகைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டியது அவர்களின் கடமையாகும். இவ்விடத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமவயதுக்குழுவினரின் உதவியைப் பெற்று, மாணவர்களின் கற்றலுக்கு ஊக்குவிப்புச் செய்யலாம். எனவே, கற்கத் தவறிய இழப்பீட்டுக் கல்வியை உரியவாறு பெற்றுக்கொடுத்தல் ஆசிரியர் பணியாகும்.

**கற்க மறுக்கும் மாணவனுக்கு யாது செய்வது?**

வகுப்பறையில் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் ஒன்றாகக் கொள்ளப்படுவது இப்பிரச்சினையாகும். குறித்த தொகை மாணவர்கள் கற்றலில் ஈடுபடமறுப்பதாகும். முதலாவது நிலையில் ஆசிரியர், மாணவன் கற்றலில் ஈடுபடாமைக்குத் தனக்குள்ள தார்மீகக் கடமைகளைச் செய்கிறானோ என்று அவதானிக்க வேண்டும். சில சமயங்களில் ஆசிரியர்களின் தனிப்பட்ட நடத்தைக் கோலங்கள், மாணவர்கள் கற்றலில் ஈடுபட மறுப்பதற்குக் காரணமாக அமையலாம். சில சமயங்களில் ஆசிரியர்கள் வகுப்பறைகளிற் பாரபட்சம் காட்டும்போது, மாணவர்கள் குறித்த ஆசிரியர்கள் மீது வெறுப்புக் கொள்வதோடு அவர் கற்பிக்கும் பாடத்தின் மீதும் வெறுப்பு ஏற்பட்டுக் கற்கமறுக்கலாம்.

இரண்டாவது நிலையில் மாணவனின் வீட்டுச்சூழல் குறித்த விடயம் தொடர்பான வெறுப்பு, குறித்த பாடத்தைக் கற்பதற்கான ஆயத்த நிலையின்மை, சமவயதுக்குழுக்களின் தாக்கம், பாடம் தொடர்பாக அவன் கொண்டுள்ள எதிர்மறை எண்ணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியனவும் வகுப்பறையில் மாணவன் ஆர்வம் காட்டாமைக்கு காரணமாக இருக்கலாம். கற்க மறுக்கும் மாணவரின் சரியான காரணத்தை இனங்கண்டு கற்கச் செய்தல் நல்லாசிரியன் ஒருவனின் கடமையாகும்.

**ஆசிரியனும் தனியாள் வேறுபாடும்**

ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடும்போது கவனிக்கவேண்டிய பிரதான அம்சம், மாணவர்களிடம் காணப்படும் தனியாள் வேறுபாடாகும். ஆசிரியர் முழுமையாகக் கற்பித்தலில் ஈடுபடும்போது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை அறிந்து கற்பிக்கும்போதே, எல்லா மாணவர்களும் கற்றலில் ஈடுபடுகின்றனர். ஆசிரியர் மையமாக வகுப்பறை நிகழும்போது ஒரு தொகை மாணவர்கள் எவ்வகைக் கற்றலிலும் ஈடுபடுவதில்லை. இத்தகைய நிலையை ஆசிரியர்கள் பொருட்படுத்துவது மில்லை. ஆசிரியர்கள் தமது கற்பித்தலை வகுப்பறையில் முந்நிலை வகிக்கின்ற மாணவர்களின் கற்றலையே முன்னெடுத்துச் செல்வர். எனவே விளைதிறன் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது அடிப்படை அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. ஆசிரியர்கள் கற்பித் தலின்போது பல்வகையான உள்ளீடுகளைச் செய்யவேண்டும். அவற்றைப் பொருத்தமான வகையில் தனியாள் வேறுபாட்டை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது வளமான கற்பித்தலுக்கு வகை சேர்ப்பதாக அமையும். கற்க வரும் மாணவன் ஒவ்வொரு பாட இறுதியிலும் ஒவ்வொரு நாள் இறுதியிலும் தான் எதைக் கற்றுக்கொண்டான் என்பது முக்கிய மானதாகும். ஒவ்வொரு மாணவனையும் தனித்தனி நிலையில் நோக்குதல் வேண்டும். ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாகத் திருப்தி செய்யாத கல்விமுறை பொருத்தமான கற்பித்தலாக அமையமாட்டாது. வகுப்பறையை முழுமையாகக் கொண்டு கற்பித்தல் என்பது வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாக இருக்குமேயன்றிப் பொருத்தமான அறிவுறுத்தற் செயல்முறையாக இருக்கமாட்டாது. வகுப்பறைக் கற்பித்தலில் முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டியது ஒவ்வொரு மாணவனையும் ஆசிரியர் நேரடியாக, அன்புடன் கவனிக் கின்றார் என்பது உறுதிப்படுத்தப் படவேண்டும். எனவே, ஆசிரியர்கள், மாணவர்களின் உளவியல் தேவையைப் பூர்த்தி செய்தல் முக்கியமாதாகும். கற்றல், கற்பித்தலுக் காகப் பயன்படுத்தும் உபகரணங்கள் எல்லாமாணவர் களினதும் தேவையை நிறைவு செய்யக் கூடியதாக இருக்கிறதா என்பதை ஆசிரியர்கள் அவதானித்தல் வினைதிறன் உள்ள கற்பித் தலின் ஒரு முன் தேவையாகக் கொள்ளலாம்.

கற்பித்தல், கற்றல் செயன்முறையிற் செயற்பாடுகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. செயற்பாடுகளின் அமைப்பானது தனித்தனி மாணவர்களின் திறன்களை மதிப்பிடக் கூடியதாக இருத்தல் வேண்டும். பல்தரங்களை உள்ளடக்கிய வகுப்பறையில், மாணவர்களின் பல்தரங்களையும் மதிப்பிடக்கூடிய ஏறுநிலையில் அமைத்த செயற்பாடு பயன்தருவதாக அமையும். கற்றல், கற்பித்தல் செயன்முறையில் தார உறுதிப்பாடு அவசியமாகும். தர உறுதிப்பாடு என்பது வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவனும் அடைய வேண்டிய ஆகக் குறைந்த தேர்ச்சி மட்டத்தை அடையப் பெறுவதை உறுதிப்படுத்துவதாகும். கல்வி மறுசீரமைப்பிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட தேர்ச்சி அடிப்படையிலான கற்றல், கற்பித்தற் செயன்முறையானது தர உறுதிப் பாட்டின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும். தேர்ச்சி உரியவாறு அமைய வேண்டுமாயின், தனியாள் வேறுபாட்டைக் கருத்திற்கொண்டு பல்வகை உத்திகளைக் கையாண்டு கற்பித்த லாலேயே மாணவர்களிடம் வளர்க்க வேண்டிய திறன்களை உறுதி செய்ய முடியும்.

**ஆசிரியர்களின் கற்பித்தல் உபகரணங்கள்**

மாணவர்களின் கற்றலை வினைத் திறனுடையதாக்குவதற்கு, ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தலின்போது கற்பித்தல் உபகரணங் களைப் பயன்படுத்துவர். ஆசிரியர்கள் மாணவர்களின் புலன்களைக் கவரும் பொருட்டு பாடத்திற்குப் பொருத்தமான கற்பித்தல் உபகரணங்களைக் கையாளல் கற்றலைக் கவருவதற்கான நடவடிக்கையாக அமைகிறது.

**வகுப்பறையும் ஆடைகளும்**

வகுப்பறையில் ஆசிரியர்கள் எவ்வகை யான உடையை அணிவது என்பது ஒருவகைப் பிரச்சனையாகும். ஆசிரியர்களின் உடைகள் மாணவர்களை உளரீதியாகப் பாதிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. மாணவர்கள் ஒரே வகையான சீருடையை அணிவதால், மாண வர்கள் மத்தியில் அவர்களின் சமூக ஏற்றத் தாழ்வுகள் பிரதிபலிக்கப்படுவதில்லை. இதனால் பாடசாலை ஒரு சமத்துவ நிலையாகத் திகழ ஒரே தன்மையான ஆடையும் உதவுகின்றது. அத்துடன் வசதி வாய்ப்புக் குறைந்த பெற்றோரும் தமது பிள்ளைகளுக்குச் செலவு குறைந்த சீருடைகளை வழங்க வாய்ப்புண்டு.

**ஆசிரியர்கட்கு இடையிலான தொடர்பு**

ஆசிரியர் பயிற்சி தொடர்பான பாடத்திட்டத்தில் இத்துறைக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கிடையிலான நற்றொடர்கள் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் நேர்முகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஆய்வுகள் எடுத்து விளக்குகின்றன. அதுமட்டுமன்றி, மாணவர்கள் தொடர்பான விடயங்களைப் பரிமாறிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஆசிரியர்குழாத்தினுடைய கலந்துரையாடல்களினால் ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்தும் வாய்ப்பு ஏற்படுகிறது. அர்த்தமுள்ள இருவழித் தொடர்பே ஆசிரிய வாண்மையை விருத்திசெய்யப் பெரிதும் உதவும். அதிபர், ஆசிரியர்களிற்கிடையிலான கலந்துரையாடல், புதிய ஆசிரியர்களை ஏனைய ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்தல், ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்புமுறையில் முக்கியமானதாகும். இதனை ஒரு பாடசாலைக் கலாச்சார விழுமியமாகக் கருத்திற்கொண்டு செயற்படுவதன் மூலமே நல்லதொரு ஆசிரிய வாண்மையைப் பாடசாலை மட்டத்தில் உரு வாக்க முடியும்.

**ஆசிரிய பயிலுனர்களும் சிரேஷ்ட ஆசிரியர்களும்**

பாடசாலை மட்டத்திற் காலத்துக்குக் காலம் ஆசிரிய பயிலுனர்கள், பல்கலைக் கழகங்கள், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள், தேசியக் கல்வி நிறுவகம், தேசியக்கல்விக் கல்லூரிகள் ஆகியவற்றிலிருந்து வகுப்பறைக்கு வருகை தருவதுண்டு. ஆசிரியப் பயிலுனர் களுக்கான தொழில் வாண்மை தொடர்பான வழிகாட்டலையும், நெறிப்படுத்தலையும் சிரேஷ்ட ஆசிரியர்கள் முறையாக வழங்குவதன் மூலமே எதிர்கால நல்லாசிரியர்கள் உருவாக முடியும். இத்தகைய நன்முயற்சிக்கு அதிபர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய வகுப்பறை ஒன்றை ஆரம்பிப்பது எப்படி?**

ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் புதிய பாடசாலை ஒன்றுக்கு மாற்றலாகிச் செல்லலாம். அல்லது உள்ளகப்பயிற்சியின்போது புதிய வகுப்புக்களில் நுழையவேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்துகொள்ளல் என்பது முக்கியமாகும். எனவே முதலாவது சந்திப்பில் மாணவர்களின் உள்ளத்தில் நம்பகத்துக்குரியவரும், தகுதியானவரும் என்ற மனப்பாங்கை உருவாக்குதல் வேண்டும். பொதுவாக முதலில் ஆசிரியர் வகுப்பறைக்குச் செல்லும்போது, தன்னைப் பற்றிய ஓர் அறிமுகத்தைச் செய்யலாம். தனது பெயர், விருப்பம், பொழுதுபோக்குப் போன்ற விடயங்கள் மூலம் தன்னை அறிமுகம் செய்யலாம். இதன்பின் மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய குறித்த பாடம் தொடர்பான விருப்புக்களை வினாவி அறிமுகத்தை விருத்தி செய்யலாம். இவ்வகை இருவழித்தொடர்பானது ஆசிரியர்களுக்கு மாணவர்கள் அறிமுகமாவதோடு மாணவர்கள் ஆசிரியருடன் புரிந்துணர்வுடன் கற்றலில் ஈடுபடவும் வாய்ப்பை ஏற்படுத்தும்.

**வகுப்பறை ஒழுங்கு பேணல்**

வினைத்திறனான கற்பித்தலுக்குச் சீரான சூழல் அவசியமாகும். மாணவர்கள் ஒருவரை ஒருவர் குழப்புதல், மூர்க்கத்தனமான முறையில் தொழிற்படல், விரும்பியவாறு வகுப்பறையில் சுற்றித்திரிதல் போன்றவை நிகழும்போது, கற்றல் குறைந்தளவிலேயே நிகழும். எனவே மாணவர்களின் தொடக்க வகுப்பில் கற்கும் காலங்களில், ஒழுங்கை, நிலைநாட்டத்தவறும் ஆசிரியர்கள், தமது கற்பித்தல் தொழிலிற் குறைந்தளவில் வெற்றிபெற்றதாகக் கருதப்படுவர். எனவே ஆசிரியர்கள் கற்பித்தல், மதிப்பீடு தொடர்பாகப் பொருத்தமான முறைகளைப் பின்பற்றுவதன் மூலம், வகுப்பறை ஒழுங்கைப் பேணமுடியும். மாணவர்களைக் குழுக்களாகவும் தனித்தனியாகவும் கற்பிப்பதற்கான உத்திகளை ஆசிரியர்கள் கையாழுவதன் மூலம் வகுப்பறை இயக்க முள்ளதாகச் செயற்படலாம்.

**ஆசிரியர்களுக்கு எல்லாம் தெரியுமா?**

உலக வரலாற்றைப் பல்வேறு கோணங்களில் உற்றுநோக்கும்போது, அப்பரிமாணத்தை மூன்று வகையில் இனங்காணலாம். அவை:

1. விவசாய யுகம்
2. கைத்தொழில் யுகம்
3. தகவல் தொடர்பு யுகம்.

விவசாய யுகத்தில் மனிதன் நிலத்துடன் கட்டுப்பட்டு இருந்தான். அக்காலக் கற்றல் விவசாயக்கற்றலாகும். அக்கற்றலானது முறைசாரா முறையிற் காணப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

இரண்டாவது யுகம் விவசாயத்தில் இருந்து கைத்தொழில் சார்பானதாக விளங்கியது. இக்காலத்தில் கற்றல், கைத்தொழில் நோக்கியதாக அமைந்திருந்தது.

மூன்றாவது யுகம் தகவல் தொடர்புடையதாகக் கொள்ளப்படுகிறது. காலந்தோறும் விரிவடையும் அறிவின் பெருக்கம் கணக்கிட முடியாதுள்ளது. குறிப்பாக இணையம், மின்னஞ்சல், தொலைநகல் போன்றவற்றின் துணையுடன் உலகத்தில் எப்பாகத்திலும் இடம்பெறும் எந்தவொரு விடயத்தையும் உடனுக்குடன் பெறக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புண்டு. இதனால் ஆசிரியர்கள் பல இடர்ப் பாடுகளை எதிர்கொள்ளவேண்டியவர்களாக உள்ளனர். ஆசிரியர்கள் மாறும் உலக மாற்றங்களுக்கு ஏற்பக் கற்றுக் கொள்ளுதல் முக்கியமானதாகும். அவ்வாறு ஆசிரியர்கள் செய்ய மறுக்கும்போது, அவர்கள் பழமையில் முற்றுமுழுதாகத் தங்கியிருக்க வேண்டி ஏற்படும். இதனால் இத்தகைய ஆசிரியர்கள், மாண வர்கள் மத்தியிற் பல்வகைச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டி நேரிடும். பெருகிவரும் அறிவால் ஒருவருக்கு எல்லாம் தெரியவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் அறிவைப் பெறுவதற் கான மூலகங்களை அறிந்திருத்தல் அவசிய மாகும். புதிய தொழில் நுட்பவிருத்தியால் அறிவியல் உலகில் ஏற்பட்டிருக்கவேண்டிய மாற்றத்தை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லும் திறமை ஆசிரியருக்கு இருக்க வேண்டியது அவசியமாகும். புதிய கல்விச் சீரமைப்பில் க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒப்படைகளி னாலும், செயற்றிட்டங்களினாலும் ஆசிரியர்கள் பெருந்தொகையான விடயங்களை மாணவர்கள் மூலம் அறிந்து கொள்வதோடு, இதன் மூலம் தனது அறிவைக் காலத்துக்குப் பொருத்தமான வகையில் புத்தாக்கம் செய்துகொள்ளப் பெரிதும் உதவும்.

### ஆசிரியர்கள் மாணவர்களின் பெயர்களை அறிந்திருத்தல் அவசியம்.

கற்றல், கற்பித்தல் செயன்முறையிற் கற்போன் தொடர்பான முழுஅறிவைப் பெற்றி ருத்தல் ஆசிரியர்களுக்கு அவசியமானதாகும். ஆசிரியர்கள் மாணவர்களை அறிவது முன்னோடியாகக் கொள்ளப்படுவது அவர் களின் பெயர்களை அறிந்திருத்தலாகும். பொதுவாக ஒரு மாணவனை அவனின் பெயரைக் கொண்டு அழைக்கும்போது, அவன் தன்னைப் பற்றி ஆசிரியர் அதிகளவு அக்கறை கொண்டுள்ளார் என்பதை உணர்கின்றான். கற்பிக்கும் ஆசிரியர் பிள்ளைகளின் பெயர்களை ஞாபகத்தில் வைத்திருப்பது என்பது ஒரு பிரச்சனையாகும். ஆசிரியத்தொழிலில் ஈடுபடு வோர் காலத்துக்குக் காலம் புதிய வகுப்புக் களையும் மாணவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆசிரியர், மாணவர்களின் பெயர்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு அம்மாணவர்களின் பெயர்களை அவர்களுக்கு முன்னாற் பெரிய எழுத்துக்களிற் பொறிக்க ஆவன செய்தல் வேண்டும். அல்லது அவர் களின் சட்டைகளில் எழுதிவைப்பிக்கலாம். வகுப்பாசிரியரைப் பொறுத்தவரையில் தினவரவு இடாப்பைப் பதிவு செய்யும்போது அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதோடு, அவர்களின் முகத்தைப் பார்த்து வரவிடுவதன் மூலம் அவர்களின் பெயர்களை ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியும். மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிடுவதன் மூலமும் பெயர்களை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். மாணவர்களை அவர்களுக்குரிய மதிப்பைக் கொடுத்து அழைக்கவேண்டும். இதனால் மாணவர்களின் பெயர்கள் தெரியாதவிடத்து முன்னிலைப் பன்மையில் அழைத்தல் முக்கிய மானது. குறிப்பாக மாணவர்களை நீங்கள் என முன்னிலைப்பன்மையில் அழைத்தல் அவர் களுக்கு மரியாதை வழங்குவதாக இருக்கும்.

### ஆசிரியர்களும் பெற்றோர்களும்

கற்றல், கற்பித்தற் செயன்முறையில் முதன்னிலை நுகர்வோராகக் கொள்ளப் படுபவர்கள் பெற்றோராகும். பாடசாலை களுக்குப் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலிருந்து பெருந்தொகையான விடயங்கள் தமது பிள்ளைக்குக் கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அத்தோடு பாடசாலையும் ஆசிரியர்களும் தமது பிள்ளை யின் கற்றலுக்கு வகைகூறவேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியர்கள் தமது கற்றல், கற்பித்தலின்போது மாணவர்களிலும் பார்க்கப் பெற்றோரிடமிருந்தே பல நெருக்குதல்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்படலாம். மாணவர் கற்க மறுக்கும்போது, ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கம் இடையே பல முரண் பாடுகள் ஏற்படலாம். ஆசிரியர்கள் ஆரம்பத்தில் பிள்ளையின் கற்றலிற் காட்டும் அக்கறை, பிள்ளை மூலம் பெற்றோரைச் சென்றடையும். இச்செயன் முறையால் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையில் நல்லெண்ணம் தோன்ற இடமுண்டு. பிழையான கற்பித்தல் முறைகளும் பெற்றோர், ஆசிரியர்மீது வெறுப்பேற்படக் காரணமாக அமையலாம்.

ஆசிரியர்கள் வகுப்பறை மட்டத்திற் செயற்படும்போது, மாணவர்களில் பாரபட்சம் காட்டுதல் முக்கியகுறைபாடாகக் கொள்ளப் படுகிறது. கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டின்போது ஆசிரியர்களின் அகவயத்தன்மை மாணவர் களின் கற்றலை மட்டுமன்றி அவர்களின் நடத்தையையும் பெரிதும் பாதிக்கும். சில வேளைகளில் ஆசிரியர்கள் தொடர்பான நல்லெண்ணத்தைப் பெற்றோர் மத்தியில் இல்லாது செய்துவிடும்.

### வகுப்பறைக் கற்பித்தலும், வினாக்கள் தொடுத்தலும்

ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும்போது, மாணவர்களின் கவனத்தைத் தம்மால் ஈர்ப்பதற்கும், கற்பித்தலை விளைதிறனுடையதாக்குவதற்கும் வினாக்கள் தொடுத்தல் பெரிதும் உதவும். வினாக்கள் தொடுப்பதன் மூலம் ஆசிரியர்கள் எதிர்பார்த்த நோக்கங்களை மாணவர்கள் அடைந்துள்ளார் களா?–என்பதை உறுதி செய்துகொள்ள முடியும். மாணவர்களின் கற்றலில் துலங்கல் களை உருவாக்கவும் ஆசிரியர்கள் வினாக் களைப் பயன்படுத்தலாம். தொடுக்கப்படும் வினாக்கள் குறித்து ஒரு தொகுதி மாணவர் களை மட்டும் நோக்கி இருக்காது, முழு வகுப்பையும் கருத்தில் கொள்ளும் வகையில் அமைத்தல் முக்கியமானது. ஆசிரியர்கள் கடினமான வினாக்களைத் தொடுக்கும்போது மாணவர்களிடமிருந்து விடைகளைப் பெறுவதற் கான போதுமான கால அவகாசத்தைக் கொடுத்தல் வேண்டும்.

### மாணவர்கள் கற்றலும், பின்னூட்டலும்

கற்றல், கற்பித்தற் செயன்முறையில் ஆசிரியர்களுக்கு மாணவர்களின் அடைவு தொடர்பான அடிப்படை அம்சங்களைப் பின்னூட்டல் விளக்குகின்றது. மாணவர்களால் வழங்கப்படும் விடைகள் தொடர்பாகக் கொடுக் கப்படும் பின்னூட்டல் தெளிவானதாகவும், உடனடியானதாகவும், சரியானதாகவும் இருத் தல்வேண்டும். பின்னூட்டல் ஆசிரியர்களும் மாணவர்களும் கற்றலையும், கற்பித்தலையும் முன்னெடுத்துச்செல்லப் பெரிதும் உதவும். மாணவர்கள் பின்னூட்டலின் வாயிலாகத் தமது கற்றலின் நிலையையும், கற்றலையும் மேலும் மேம்படுத்திக் கையாள வேண்டிய முறைகளை யும் தெரிந்துகொள்ளத்துணை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வாழ்க்கைக்காக; சீவியத்திற்காக அல்ல.



திருமதி.ஜெகசோதி சிவசுப்பிரமணியம்,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

வேதங்கள்,உபநிடதங்கள், காப்பியங்கள், புராணங்கள் எல்லாம். இந்து சமயத்திற்கும், கல்வியறிவிற்கும் உள்ள தொடர்பின் தொன்மையையும், எழுத்தறிவில் தமிழுக்கு இருந்த ஆழ்ந்த சிந்தனையையும் பறைசாற்றுகிறது. பண்டைய காலத்தில் குருகுலவாசம் மூலம் கல்வி போதிக்கப்பட்டது. இதன்மூலம் ஆன்மீகமும், கல்வியும் ஒருங்கிணைக்கப்பட்டுப் போதிக்கப்பட்டன. கோள்களின் அசைவு, பல்வேறு வகையான அஸ்திகள், புஷ்பகவிமானம் போன்றவை புராண இதிகாசங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அந்தக் காலத்தின் அறிவின் ஆழத்தையும், இவற்றைப் போதித்த குருமாரின் ஆற்றலையும் விளக்குகின்றன.

கல்வியின் பெருமைபற்றி ஔவையார் கூறும்போது "நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம்" என்று கல்வி அறிவற்றவரை மரத்திற்கு ஒப்பிடுகிறார். திருவள்ளுவர் இன்னும் ஒருபடி மேலே சென்று கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்று கூறுகிறார். இதனை விடவும் ஔவையார் கல்வியின் சிறப்பைப் பற்றிப் பின்வரும் பாடல்கள் மூலம்,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"
"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகுமே"
"நாற்பாற் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே"
"எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரே மேல் வருக" என்பர்.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்
- மன்னற்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லைக்
கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு" என்றும்

கூறுவதில் இருந்தும் கல்வியின் பெருமையை அறியக் கூடியதாய் உள்ளது.

இப்படிப்பட்ட உயர்ந்த கல்வியை நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சமமாகவும், இலகுவாகவும் பெறவேண்டும் என்பதற்காக இலங்கை அரசு இலவசக் கல்வி முறையை இலங்கையில் 50 ஆண்டுகளுக்குமுன் அறிமுகப்படுத்தியது. வருமானத்தின் பெருமளவு நிதியைக் கல்விக்காக அரசாங்கம் செலவுசெய்து வருவது போற்றத்தக்க விடயம். உலகிலுள்ள செல்வந்த நாடுகள் கூடச் செய்யாத ஒரு செயலை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் கல்வியறிவிற் கூடிய சதவீதத்தைக் கொண்ட நாடு என்று இலங்கை போற்றப்படுகின்றது. இது எமக்குப் பெருமை தரக்கூடிய விடயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கல்வியின் இலக்கு எட்டப் பட்டதா என்பதை ஆராய்ந்து பார்த்தால் மிகவும் மோசமான விளைவுகளைத்தான் காண்கிறோம். கல்வி கற்றவர்களிடம் பணிவு, அன்பு, உதவி செய்யும் மனப்பாங்கு ஆகிய உயர்பண்புகள் வரண்டு காணப்படுகின்றன. கர்வம், பெருமை, அகங்காரம், சுயநலம், இலஞ்சம் போன்ற குணங்கள் மேலோங்கி நிற்பதைப் பார்க்கின்றோம். இது இன்றைய கல்வி முறையின் சீர்கேடா என நினைக்கத் தோன்றுகின்றது. இன்றைய கல்விமுறை தாய் தந்தையரை மதிக்க, முதியோரைக் கௌரவிக் கத் தனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் விசுவாச மாக இருக்கக் கற்றுக்கொடுக்கவில்லை. குடும்பங்களின் சீரழிவிற்கும் நாட்டின் மிக மோசமான நிலைக்கும் எமது கல்வி முறையின் தவறான வழிகாட்டலே காரணம் எனக் கூறலாம். கல்வி, நாட்டின் அமைதியையும் குடும்பங்களில் ஆனந்தத்தையும் ஏற்படுத்த வில்லை. மாறாகப் பயம், கவலை, அகங்காரம் மேலாதிக்கம் ஆகியவற்றையே தந்துள்ளது. ஆகவே எமது நாட்டிற் கல்வியின் சரியான இலக்கு எட்டப்படவில்லை.

இதன் காரணத்தை ஆராய்வோம். ஆதியிற் கல்வியும் ஆன்மீகமும் ஒன்றாகக் குருகுலத்திற் கற்பிக்கப்பட்டு வந்தன. மேலை நாட்டவர்களின் வருகையால் ஆன்மீகமும், கல்வியும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன. ஆன்மீகப் பகுதிக்குக் கோயில்களும், தேவால யங்களும், விகாரைகளும், மசூதிகளும் பொறுப் பேற்றன. கல்விப் பகுதிக்கு பாடசாலைகள். பல்கலைக்கழகங்கள் பொறுப்பேற்றன. இரண்டும் ஒன்றாக இருந்தபோது மனிதப் பண்புகளும், அறிவும் சேர்ந்திருந்தன. இரண் டாகப் பிரிந்த போது இவைகளும் வேறுபட்டன. கல்வியறிவை வளர்க்க முன்வந்த பாடசாலை, ,பல்கலைக்கழக அமைப்புக்கள் மிக வேகமா கவும் திறமை யாகவும் வளர்ச்சி கண்டுள்ளது. மனிதன் கண்டம்விட்டுக் கண்டம் பாயும் திறனும், வேறு கோள்களுக்குச் சென்று மீண்டு வரும் அறிவும் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவரைக் தேடிக் கண்டுபிடித்து உரையாடக் கூடிய தகவல் தொழில்நுட்பமும் மாபெரும் வளர்ச்சியைக் கண்டுவிட்டது. இன்னும் ஆராய்ச்சிகள் தொடர்கிறது.

ஆனால் ஆன்மீகப் பகுதியை வளர்ப் பதற்குப் பொறுப்பேற்ற எமது வணக்கஸ் தலங்கள் சரியான ஆன்மீக அறிவைக் கொடுக்கத் தவறிவிட்டன. அன்பு, தியாகம், உதவி செய்யும் மனப்பாங்கு, மனிதப்பண்புகளை மதித்தல் போன்ற குணங்களை ஆன்மீகத்தி னூடாக வரவேண்டியவை வரண்டுவிட்டன. எல்லாச்சமயங்களுக்கும் உட்பொருளாக விளங்கும் மேற்படி பண்புகளை மனிதன் உணரத் தவறிவிட்டான். அவை மேற்படி சமய நிறுவனங்களினால் சரியான முறையிற் போதிக்கப்படவுமில்லை. சமயஸ்தாபனங்கள் வெறும் வியாபார ஸ்தலங்களாகிவிட்டன. விளைவு என்ன? மனித நேயமற்ற விஞ்ஞானம் வளர்ந்து பெரிய பூதமாகக் காட்சியளித்து உலகை விழுங்கப் பார்க்கிறது. மனிதநேயப் பண்புகள் வரண்டு விட்டது. இன்றைய உலகின் சமனற்ற ஆபத்தான நிலைக்கு இதுவே காரணம்.

உலகின் கண்டுபிடிப்புக்கள் எல்லாம் மனிதகுல முன்னேற்றத்திற்கும், நன்மைக்கு மாகவே கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அந்தக் கண்டுபிடிப்புக்கள் எல்லாம் எதிர்மாறான வழிகளிலேயே பயன்படுத்தப்படுவதைப் பார்க்கி றோம். உதாரணமாக அணுவைப் பிளப்பதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அதற்குள்ளே இருக்கும் அபரிதமான சக்தியைக் கொண்டு உலகத்திற் குத் தேவையான சக்தியைப் பெறலாம் என்ற நோக்கத்தில் தான் மிகப் பெரிய ஆராய்ச்சி யாளர்கள் அணுவைப் பிளக்கும் வழிமுறையைக் கண்டுபிடித்தனர். ஆனால் அகங்காரம், பொறாமை, அவா போன்ற துர்க்குணங்கள் நிறைந்த விஞ்ஞானிகளிடம் அந்தத் தொழில் நுட்பம் அகப்பட்டு இன்று அணுகுண்டாக உலகத்தைப் பயமுறுத்துகிறது.

இவை கற்பாறைகளை உடைத்து நாட்டின் அபிவிருத்தி வேலைக்குப் பயன்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டன. வெடிமருந்து மனிதப் பண்புகள் அற்ற விஞ்ஞானிகள் கைகளில் அகப்பட்டுத் துவக்குகளாகவும், குண்டுகளாகவும், ஆபத்தான போர்க்கருவி களாகவும் மாறிவிட்டது. மேலும் நவீன கண்டு பிடிப்புக்களான தொலைக்காட்சிப்பெட்டி, செல்போன் என்பன மனித குல முன்னேற்றத் திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவைகளும் இன்று சமூகச் சீரழிவிற்கும், பண்பாட்டுச் சீரழிவிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வருங்காலத்தில் இன்னும் மோசமான விளைவு களை ஏற்படுத்துமோ எனப்பயத்தை ஏற்படுத்து கிறது.

ஆகவே கல்வியுடன் ஆன்மீகமும் இணையும்போதுதான் மனித குலத்திற்கு மேன்மையும் தனிமனிதனுக்குச் சாந்தியையும் கொடுக்கும். மனிதப்பண்புகள் இல்லாத கல்வி, பயம், கவலை, சுயநலம், பேராசை என்பனவற் றையே வளர்க்கும். ஆகவேதான் இன்றைய கல்விச் சிந்தனையாளர்கள் மனித விழுமியங் களையும் கல்வியுடன் இணைத்துக் கற்பிக்க படவேண்டும் என்று உணர்ந்து, பல நாடுகளில் மனித மேம்பாட்டுக் கல்வி முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட கல்விதான் மனிதனின் பூரணமான வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும். இன்றைய கல்வி சான்றிதழ் பெற்று ஓர் உத்தியோகத்தைப் பெற்றுச் சீவியத்தை நடாத்தத்தான் உதவுகிறது. மனித மேம்பாடுகளை அடைய இவை உதவமாட்டாது. இன்றைய உலகின் அவலநிலை இதற்கு உதாரணம்.

-கல்வியின் விளைவு ஒழுக்கம்-

- பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.
- நீ உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவது தான் நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கானமுதல் அறிகுறியாகும்.
- கண்ணுக்கு புலப்படும் கடவுளாக விளங்கும் ஒரு சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும். இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் பயிற்சியின் முக்கியத்துவம்



செல்வி .ஜெயரதி தங்கராசா,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

உடற்பயிற்சியானது அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றில் தங்கியுள்ளது. ஒருவனின் அன்றாட வாழ்க்கையில் நோய் நொடியின்றி வாழவும், தனது உடல், உளத்தை விருத்தியடையச் செய்வதற்கும், உடலைச் சீரான நிலையில் வைத்திருக்கவும், உடலுறுதி பெறவும், சீரான இரத்த ஓட்டத்தைப் பெற்றுத் தருவதற்கும் உறுதுணையாக அமைகிறது. இவ் உடற்பயிற்சியைச் சிறுவயதிலிருந்தே விரும்பிச் செய்வோமாயின் கட்டமைப்பான உடலமைப் பைப்பெற்று அழகுறத் திகழலாம் என்பது உறுதியானது.

உடற்பயிற்சிகளில் பல்வேறு வித மானவை உண்டு. எமக்கு ஏற்ற பயிற்சிகளைச் செய்தல் போதுமானதாகும். "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" எனும் பழமொழிக் கிணங்க உடற்பயிற்சியை அளவாகச் செய்ய வேண்டும். இப்பயிற்சிகள் மூலம் நெகிழுமை, ,தசைவிருத்தி, உடலின் எடையைப் பேணல் போன்ற பல அம்சங்களை விருத்திசெய்ய முடியும்.

இவ் உடற்பயிற்சியானது பாடசாலைக ளிலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் செய்யப்பட்டு வருகிறது. காலைப்பிரார்த்தனை முடிவுற்றவுடன் இப்பயிற்சியில் ஈடுபடுவது வழக்கமாகிவிட்டது. இதன்மூலம் மாணவ ரிடையே, அறிவு, திறன், மனப்பாங்கு போன்றன விருத்தி செய்யப்படுகின்றன. "ஆள்பாதி ஆடை பாதி" என்று கூறுவதுபோல் கல்வியோடு உடற்பயிற்சியும் பின்னிப் பிணைந்துள்ளது. முக்கியமாகப் பாடசாலைகளில் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டியின்போது இடைவேளை யில் உடற்பயிற்சி காண்பிக்கப்பட்டு வருவதோடு கோட்டமட்டம், வலயமட்டம் எனப் போட்டியும் வைக்கப்படுகின்றது. இது மாணவரிடையே ஊக்கத்தையும், உற்சாகத்தையும் விடாமுயற்சி யையும், வெற்றி தோல்வியைச் சமமாக ஏற்கும் மனப்பாங்கையும் ஏற்படுத்துகின்றது.

உடற் பயிற்சியில் ஈடுபடும்போது பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிப் பயிற்சியில் ஈடுபடுவது நல்லது. அவை வருமாறு:

- பயிற்சியை மெதுவாக ஆரம்பித்துப் படிப்படியாக வேகத்தை அதிகரித்தல்.
- அதிக வேகத்தில் உடனடியாகப் பயிற்சியில் ஈடுபட்டால் சில விபத்துக்கள் நேரிடும்.
- எவ்வேளையும் எளிதாகச் சுவாசித்தல்.
- மகிழ்ச்சியைத் தரக்கூடிய பயிற்சிகளில் ஈடுபடல்.
- காலநிலை பற்றிக் கவனம் செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் கருத்திற்கொண்டு செயற்பட்டால் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்காது. மேலும் நோய்கள் உள்ளவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டோர் உடற்பயிற்சியில் ஈடுபடமுன்னர் வைத்திய ஆசோசனைகளைப் பெற்றுக் கொள்ளல் நன்று.

உடல்தகைமையுடன்,உளத்தகைமையும் விருத்தி செய்யும் உடற்பயிற்சி முறையைக் கைக்கொண்டால் வாழ்வில் ஒளிமயமாகத் திகழலாம். இதற்குச் சிறப்பான பயிற்சியான, தியானம், யோகாசனம் போன்றவற்றிலும் ஈடுபடலாம். உடலும், உள்ளமும் ஒரு நிலைப்படுவதனால் யோகாசனப் பயிற்சி முக்கிய இடம் பெறுகின்றது.

இவ் உடற்கல்விப் பயிற்சி பற்றிப் பல உளவியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். கொலம்பியா பல்கலைக் கழக J.F.Williams Foder Heloy, J.P. Nash போன்ற பல அறிவுப் பெருந்தகைகள் ஆவர், இவ்வகையில் உடற்பயிற்சி மூலம் துரித தசைகளின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதும் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் ஊக்கம் கொடுத்து விவேகமுள்ளவனாக்குவதுடன், உடற்றகைமைகளைப் பெற்றுக்கொள்வர். இதன் மூலம் உடல், உளத்தகைமைகளை விருத்திசெய்து "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் பழமொழிக்கிணங்க நோய் நொடியின்றிச் சுகதேகியாக வாழலாம் என்பதில் ஐயமில்லை.

- நீ எல்லை அற்றவன். மரணமற்றவன். பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால் நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு! விழித்துக் கொள். எழுந்து நின்று போராடு.
- மக்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு, அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில் தான் அடங்கியிருக்கிறது.
- நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்துவிடு.
- மனிதனே மேலானவன், எல்லா மிருகங்களை விடவும் எல்லாத் தேவர்களை விடவும் மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர் யாருமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனது பூரண வளர்ச்சியிற் பாடசாலையின் பங்கு



திருமதி. தவனேஸ்வரி சிவகுமார்,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

"மனிதனுள் ஆழ்ந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி" என்பது சுவாமி விவேகானந்தர் கூற்றாகும். உலகத்திலுள்ள நல்லவனற்றைத் தேடல்மூலம் பெறும் முயற்சி கற்றல் ஆகும். "கற்றல் என்பது எம்மைச் சுற்றியுள்ள உலகின் கோலங்களைப் பார்த்தலாகும். கற்பித்தல் என்பது எமது கூட்டான புரிந்துணர்வின் மூலம் மாணவர் களைப் பார்க்கச் செய்வதற்கான நிலைமை களை உருவாக்குதலாகும்" என்கிறார் நோபல் பரிசு பெற்ற ஜோன் போலனி. (John Polony) ஆம்! மனிதர்களின், இயலறிவையும். திறன் களையும், ஆற்றல்களையும், விவேகபுத்தியை யும், மனப்பாங்கையும் வெளிக்கொணர்வது கல்வியாகும். வாழ்க்கையில் உயருதல் என்னும் குறிக்கோள் கல்வி மூலமே எய்தப்பெறுகிறது. பண்புகளையும், திறன்களையும் உயர்த்தி வளர்ப்பதன்மூலம் மனிதனின் பூரணமான ஆளுமை வளர்ச்சிக்கு கல்வி வழிசெய்கிறது. அதேவேளை சமுதாய கலை கலாச்சார, ஆன்மீக, பொருளதார வளர்ச்சிக்கும் கல்வி உயிர் நாடியாக உள்ளது. விஞ்ஞானம் தொழில் நுட்பம், கவின்கலை, விழுமியம், பண்பாடு, சமூகம், உடற்கல்வி, ஆன்மீகம் எனப் பல்வேறு கூறு களும் இணைந்த கல்வியாகக் கல்வியை வழங்கும்போது, ஒரு தேசத்தின் நலன், உறுதி நிலை. சுபீட்சம் என்பன வலுப்பெறும். ஏற்றத் தாழ்வுகள் அற்ற, வேற்றுமை பேதங்கள் இல்லாத, சமத்துவம், சகோதரத்துவம், நீதி, சத்தியம், நேர்மை என்னும் விழுமியங்கள் நிறைந்த ஒரு உலகை நிர்மாணிக்கக் கல்வி கருவியாக உள்ளது.

இத்தகைய கல்விச் செல்வத்தை வழங்கும் பாடசாலை ஒரு பிள்ளையினுடைய வளர்ச்சியில் பெரும் பங்கினை வகிக்கின்றது. என்றால் மிகையில்லை. இப்பாடசாலைச் சூழலே மாணவன் ஒருவனைத் திறமையுடையவனாக வும், அறிவுடையவனாகவும் ஆக்குகின்றது. பிள்ளையின் உளநல விருத்திக்கும், அறிவு மேம்பாட்டிற்கும், பாடசாலையே பெரும் பங்காற்றுகிறது. மாணவனது எதிர்காலத்தைத் திட்டமிடுவதில் பாடசாலைக் கல்வியே கணிச மான பங்கினை வகிக்கின்றது. ஒருபிள்ளை எத்தகைய குடும்பச் சூழலில் இருந்து வந்தாலும் அவனிடம் உள்ள ஆற்றல்களையும் நற்பண்பு களையும் விருத்தி செய்வது பாடசாலையே ஆகும். "என்னிடம் உடல் நலமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள். அவர்கள் எத்தகையவர்கள் ஆகவேண்டும் என்று முன்னரே கூறுங்கள். பரம்பரை பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை" என்ற வாட்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Watson) கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது. இப்பாட சாலையானது கற்றல் செயற்பாட்டையும், ஒழுங்கச் செயற்பாட்டையும் ஒரு சேர வலுப் படுத்துகிறது. தனியே கல்வியில் மட்டுமல்லாது பூரணமான நிறைவான மனிதனை உருவாக்கும் நிறுவனமாகப் பாடசாலை விளங்குவது கண்கூடு.

இக்கல்விசார் செயற்பாட்டை முன் னெடுப்பவர்களாக அறிவுசார் வழிகாட்டிகள். அனைவரும் இதில் அடங்குவர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார் ஊழியர் கள், கல்வி அதிகாரிகள் ஆகிய உயிரினம்சார் சூழலும் பௌதீக வளங்களான பாடசாலை அழகு, கவர்ச்சி, பூங்காக்கள், நூலகம் மைதானம் ஆகியனவும் இவற்றுள் அடங்கும். இவ்வாறான வழிகாட்டிகள் அனைத்தும் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிப்பனவாக அமையும். இவர்களின் செயற்பாட்டிலேயே மாணவர்களின் முன்னேற்றம் அமையும். இவர்களிடத்தே அசிரத்தை காணப்பட்டால் மாணவர்களும் அசிரத்தை உடையவர்களாகவே காணப்படுவர். இத்தகைய கல்விச் செயற்பாட்டை முன்னெ டுத்து மாணவனை வழிப்படுத்தும் பணியில் அதிபர், ஆசிரியர்களின் பணி மிகவும் முக்கிய மானதாகும். அதிபர் தெளிந்த அறிவு. சமநிலை, தொடர்பாடற்றிறன், நடுநிலை, பிறருக்காகச் சிந்தித்தல், முயற்சிகளில் முன்நிற்றல், வழிகாட்டுதல், நலன்களுக்காக இடர்களைத் துணிவுடன் எதிர்கொள்ளல் போன்ற தலை மைத்துவப் பண்புடையவராக இருப்பது சாலச்சி றந்தது என்பது யாவரும் கண்ட உண்மை. இத்தகைய தலைமைத்துவத்தின் கீழ்வளரும் மாணவர்களும் இவ்வாறான சில பண்புகளை யாவது கைக்கொள்பவனாக வளருவான் என்பதில் ஐயமில்லை. கற்றலை மேம்படுத்தல் தொடர்பாக வகுப்பறையின் சமூகச்சூழல் முக்கி யமானது. பாடசாலை முகாமைத்துவத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இதனை உருவாக்குவதில் பாரிய பொறுப்புடையவர்களாகின்றனர். மாணவர்கள் கற்கக்கூடிய சூழலை உரு வாக்குதல் பாடசாலையின் பொறுப்பாகும். இத்தகைய கொள்கைகளை நடைமுறைப் படுத்தினால் மாணவன் நல்லதொரு தலை மைத்துவமுடையவனாக மிளிர்வான்.

ஆசிரியர் எனப்படுவர்கள் தேவையான திறன்களை வளர்ப்பவர்களாகவும், நம்பிக்கை ஊட்டுபவர்களாகவும், நல்மனப்பான்மையை வளர்ப்பவர்களாகவும் இருத்தல்வேண்டும். கற்பித்தல் தொழிலில் ஈடுபடுவோர் அத்தொழில் தொடர்பாக எழுகின்ற சமூகச் சவால்களை எதிர்கொள்ளவும், அதற்கு முகம் கொடுக்கக் கூடிய கல்விசார் திறன்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தனியே பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதிலும் பார்க்க அவர்களின் அக நலன்களிலும் கரிசனை கொள்ளவேண்டிய கட்டுபாடுடையவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். தம்மிடம் கற்கும் மாணவர்களின் கற்கைக்கு வகை கூறும் பொறுப்பும் ஆசிரியர் களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஆசிரிய ரானவர் வினைத்திறன் கொண்டவ ராகவும், மாணவர்களை மகிழ்வுடன் வைத்திருப்பவ ராகவும் வாழ்நாள் முழுவதும் மாணவர்கள் கற்க விரும்பும் மனப்பான்மையை வளர்ப்பவர் களாகவும் ஆசிரியர் கற்பித்தால் ஒரு மாணவன் முழு மனிதானாக நிறைவடைவான். கற்போனின் தேவையைப் பூர்த்தி செய்பவராக ஆசிரியர் மிளிர்வாரேயாகில் மாணவன் சிறந்த நிலையை அடையமுடியும்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவர்களின் முன்மாதிரியாக (Model)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினால், அதுவே மாணவனைக் கற்றற் செயற்பாட்டில் மகிழ்வுடன் ஈடுபட வழி சமைக்கும் எனலாம். நிறைவான கல்வியறிவுடை யராகவும் தெளிவான சொல்லும் செயலுமுடை யவராகவும் மனிதாபிமானத்துடன் நோக்குப வராகவும் அறிவையும் ஆற்றலையும் மாணவர் உயர்ச்சிக்காகப் பயன்படுத்துபவராகவும் அமைந்தால் மாணவர்கள் திறமையுடைவர் களாக வளருவார்கள். மாணவர்களை ஊக்கு வித்தலும் ஆசிரியர்களது மிகமுக்கியமான பணி ஆகும். மாணவர்களைப் பாராட்டுதல், கூட்டுக் கல்வி, கல்விச்செயற்பாடுகளில் ஆர்வத்தைத் தூண்டுதல், கற்கும் விடயங்களுக்கான பின் னூட்டல், சுயநம்பிக்கையை வளர்த்தல். துணி வாற்றலை வளர்த்தல் முதலானவை மாண வனின் ஆளுமையை மேலும் வலுப்படுத்து வதாக அமையும்.

பாடசாலைக்கற்றல் பயன்பாடுடையதாக இருக்கவேண்டும். கணிப்பீட்டின் நோக்கங் களை விளங்குதலும் அந்நோக்கங்களில் மாற்றங்களைக் கொண்டுவருதலும் அவசிய மானது. கணீப்பீடு கற்றலோடு இணையும் போது அவற்றினூடாக ஆசிரியர்கள், மாணவர்க ளைப் பற்றிச் சிந்திப்பதற்கும் பின்னூட்டலை வழங்கிக் கற்றலை மேம்படுத்துவதற்கும் வழி செய்யும்.

இத்தகைய கல்வியை வழங்குவதோடு மட்டுமல்லாது உளவளக் கல்வியின் முக்கியத்து வத்தை அறிவதும் ஆசிரியரது கடமையாகும். கற்பிப்பது மாத்திரம் இல்லாது மாணவர்களின் நிலையினை விளங்கி அதற்கேற்ற வகையில் கற்பித்தலை அமைப்பது ஆசிரியரின் முற்று முழுதான கடமைகளில் ஒன்றாகும். மாணவர் களின் உளநிலையை அறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த நிலையில் கற்பிக்கும்போது திறனை மேலும் உயர்த்த முடியும்.

பல்வேறுபட்ட அறிவினையும் திறனையும் மேம்படுத்துக்கூடிய வகையில் கற்பித்தல் அமையவேண்டும். புவியியல், சூழலியல், சமாதானம், மனிதஉரிமை போன்ற அனைத்து வகையான எண்ணக்கருக்களையும் அறிய வைத்தலே உண்மையான கல்வியின் நோக்க மாகும். தொலைநோக்குடைய புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்பும் வகையிற் கல்வி அமைதல்வேண்டும். இத்தகைய கல்வியை வழங்குவது அனைத்துப் பாடசாலைகளினதும் கடமையாகும்.

பிள்ளைகள் வாழ்க்கைக்காலம் முழுவதும் கற்க வேண்டியவர்கள். அவர்களுடைய மொழித்திறனை வளர்த்தல், புலன்களைத் தொழிற்பட வைத்தல், பரந்த அறிவை ஏற்படுத்தல், உறவாடல் திறனை வளர்த்தல், சமூகத் திறன்களை வளர்த்தல், பிரச்சனை களைத் தீர்க்கும் திறனை வளர்த்தல் ஆகிய ஆறு அம்சங்களும் மிக முக்கியமானவையாகும். சமூகச் சூழலோடு பொருத்தி வாழக் கற்பித் தலும் அதற்கேற்ப வழிநடத்தலும் பாடசாலை யின் கடமையாகும்.

- அறிவதற்காகக் கற்றல்
- செய்வதற்காகக்கற்றல்
- ஒன்றுகூடி வாழ்வதற்காகக் கற்றல்
- வாழக்கற்றல்

ஆகிய நான்கு தூண்களைப் பாடசாலைக் கற்றல் மூலம் மாணவன் பெற வழிசெய்யப்பட்ட வேண்டும். இத்தகைய நல்வழி நடத்தல்களோடு ஒரு மாணவன் வழிப்படுத்தப்படுவானேயானால் அவன் அச்சமூகத்தின் நற்பிரசையாக விளங்குவது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் முக்கிய கடமை மாணவனை விளையாட்டினூடாகக் கற்பித்தலை முன்னெடுத்துச் செல்வதாகும். வகுப்பறையையும், விளையாட்டு மைதானத்தையும் இதற்காக பயன்படுத்தலாம். உடல் ஆரோக்கியத்திற்கும், உடற்சமநிலைக்கும் இவ்விளையாட்டு மாணவர்களுக்கு உதவும். விளையாட்டுப் போட்டிகளூடாக மாணவர்களுக்குச் சில நற்பண்புகளையும் வளர்க்கமுடியும். பொறுமை, விட்டுக் கொடுத்தல், வெற்றியையும் தோல்வியையும் சமனாக மதிக்கும் பண்பு ஆகியனவற்றை இதிலிருந்து பெறலாம்.

அடுத்து பாடசாலையில் நடைபெறும் காலை நேரப்பிரார்த்தனைகளும், கூட்டங்களும் மாணவர்களுக்கு முக்கியமானவை. இப்பிரார்த்தனையின்போது மாணவர் ஒழுங்கைப்பேணும் தன்மை அதிபர், ஆசிரியர்கள் கூறும் நற்சிந்தனைகளைக் கிரகிக்கும் தன்மை சக மாணவருடன் நட்புறவாகும் தன்மை ஆகியனவற்றைப் பெறமுடியும்.

மாணவர்களுக்கான பாடசாலை நூலகம் மிகவும் முக்கியமானதொரு வளர்ச்சிப்படியாகும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பதற்கிணங்க இந்நூலகத்தின் பயன்பாடு அமைதல் வேண்டும். சிறுவயதிலிருந்தே வாசிப்பதற்கு தூண்டுவதன் மூலம் கல்வியில் மேன்மையுற வழிகாட்டலாம்.

பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் முக்கியமானதொன்றாகும். ஏனெனில் மாணவர்களது நிலைமைகளை இவ்விரு பகுதியினரும் அறிந்திருப்பது திண்ணம். இவ்விருபகுதியினரும் கலந்துரையாடும்போது பிள்ளைகளில் உள்ள குறை நிறைகளை அறிந்து அதற்கேற்ப வழிநடத்த முடியும்.

பாடசாலைக் கற்றலில் முக்கியமானது. ஒழுக்கமுடைய மாணவனை உருவாக்குவதாகும். அன்பு, நீதி, சத்தியம், தூய்மை, உண்மை, ஜீவகாருண்யம், பெரியாரைக் கனம்பண்ணல், மனிதாபிமானம் பேணல் போன்ற நற்குணங்களை வளர்த்தலும் முக்கிய கடமையாகும். கல்வி மனித ஈடேற்றத்துக்குக் கருவியாக உள்ளது. இத்தகைய ஒழுக்கக் கல்வி தான் ஒருவனை வாழ்க்கையில் உயர்ச்சியடைச் செய்யும். நல்ஒழுக்கம். நன்நடத்தை என்பனவே சமூகத்தில் ஒருவனை உயர்ந்தவனாகக் கருத வைக்கின்றது. அத்தகைய வாழ்வுதான் ஒருவன் நல்லவன் என்பதை ஏற்றுக்கொள்ளும்.

பாடசாலையின் முக்கியமான பணியாக அமைவது சமயநெறி வழிகளில் மாணவர்களை வழிப்படுத்துவதாகும். இதற்கு காலைப் பிரார்த்தனையும், சமய வழிபாடுகளும், பெரியோர்கள் தினங்களும், குருபூசைத்தினங்களும் இவற்றுக்கு உதவும். மனித நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது சமயம். மனித ஈடேற்றத்துக்கான மனித விழுமியங்களையும், வாழ்க்கைப் பெறுமானங்களையும் அடையவைப்பது சமயமாகும். ஒருவரை ஒருவர் மதித்து அன்பு பேணும் பண்பைத் தோற்றுவிப்பது சமய நெறியாகும். அன்பு, உண்மைநீதி, நடு நிலைமை, பொறுமை, சுயநலமின்மை, கருணை, அகிம்சை ஆகிய மனிதப்பண்புகளை வளர்ப்பதும் சமயமாகும். இத்தகைய கருத்துக்களை மாணவர் மனதில் பதிய வைப்பதும் பாடசாலையின் கடனாகும். சாந்த வழிமுறை சார்ந்த பயிற்சிகளினூடாகவும் மாணவர்களை வழிப்படுத்த முடியும்.

இத்தகைய மாணவர்களை வழிப்படுத்தும் பொறுப்பும் கடமையும் பாடசாலைச் சமூகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கே உண்டு. மாணவர்களின் தேவைகளைக் கவனிப்பவர்களாகவும் இவர்கள் பிரச்சினைக் குள்ளாகும்போது அவர்களைப் புரிந்து செயற்படுபவராகவும் அவர்கள் கற்பதற்கு ஏற்ற வகையிலான உதவிகளை வழங்கக்கூடிய உறவுகளைப் பேணுபவர்களாகவும் அமைந்தால் அதுவே அவர்களுக்கு நாம் செய்யும் கடமையாகும். கல்வியென்பது சூழ்நிலைக்கேற்ப வாழக்கற்றுத் தருவது மட்டுமல்ல; சிறந்த சீரிய விழுமியங்களைப் பேணி உயர்ந்த முறையில் மனிதர்களை ஒழுகச் செய்யவும் வேண்டும். இதுவே கல்வியின் பண்பும் பயனுமாகும். உலகில் மானுடத்தைப் பேணும் உயரிய முழு மனிதனை ஆக்குவதிற் பாடசாலையின் பங்கு பெரும்பங்காக அமையும் என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

## நாடுகளின் தேசியப்பறவை

| | நாடுகள் | | தேசியப்பறவை |
|---|---|---|---|
| ☞ | இலங்கை | - | காட்டுக்கோழி |
| ☞ | இந்தியா | - | ஆண்மயில் |
| ☞ | கனடா | - | வாத்து |
| ☞ | அமெரிக்கா | - | கழுகு |
| ☞ | அவுஸ்திரேலியா | - | சவாலோ பறவை |
| ☞ | தென் ஆபிரிக்கா | - | நீலக் கொக்கு |
| ☞ | டென்மார்க் | - | வானம்பாடி |
| ☞ | ஜேர்மனி | - | வெள்ளைக் கொக்கு |
| ☞ | ஆஸ்திரியா | - | தலையில்லாக் கோழி |
| ☞ | பிலிப்பைன்ஸ் | - | ராபின் |
| ☞ | லக்சம்பேர்க் | - | கோல்ட்கிரால்ட் |
| ☞ | மலேசியா | - | மாயா |
| ☞ | பர்மா | - | மயில் (பெண்) |
| ☞ | இங்கிலாந்து | - | ரொபின் பறவை |
| ☞ | வடஅமெரிக்கா | - | வான்கோழி |
| ☞ | வெனிசுலா | - | ட்ருப்பியால் |
| ☞ | ஜப்பான் | - | ப.கொ.காட்டுக்கோழி |
| ☞ | வட அயர்லாந்து | - | முத்துச் சென்னிப் பறவை |
| ☞ | ஹவாய் | - | குள்ளவாத்து |
| ☞ | கொலம்பியா | - | பருந்து |
| ☞ | நேட்டோ | - | நெருப்புக்கோழி |
| ☞ | பெல்ஜியம் | - | செல்புதுன் பறவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்திட்டச் செயற்பாட்டினூடாக மாணவனின் வாசிப்புத் திறனை வளர்த்தெடுக்கலாம்



திருமதி.மகேந்திரராசா வாசுகி,
ஆசிரியர்,
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

ஒரு பரம்பரை, தனது அறிக்கைக் களஞ்சியத்தை அடுத்த பரம்பரைக்கு அறிக்கை செய்கிறது.

ஒரு சமூகத்தின் அனுபவங்கள் மொழி மூலங்களான நூல்களாகவும், பத்திரிகைகளாகவும் இருக்கின்றன. அவற்றை அனுகும் வாயிலாக விளங்குவது வாசிப்பே. தற்காலத்தில் விரிவடைந்துவரும் அறிகைக் களஞ்சியத்தைப் பெற்றுக்கொள்ளும் இலகுவான முறை வாசிப்பு என்பதனால், வாசிப்புத்திறனை வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

தாய்மொழி மட்டுமன்றி, பாடசாலையில் கற்கும் ஏனைய பாடங்களிலும் அறிவைப் பெற்றுத்தரும் முக்கிய ஊடகம் மொழியாகும். பிள்ளை வயதிலும், அறிவிலும் முதிர்ச்சியடையும் போது வாசித்தலின் முக்கியத்துவம் மேலும் உணரப்படும். "அறிவைப் பெற்றுக்கொள்ளும் ஒரே ஒரு வழி வாசித்தல்" என்று கூறும் அளவிற்கு உயர்கல்வியின் வாசிப்பின முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

வாசிப்புத் திறனானது ஒருவனுடைய அறிக்கை, அமைப்பு, வயது வேறுபாடு, இடைவினைவேறுபாடு, அனுபவத்திரளமைப்பு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு மாறுபாடடைகின்றது.

வாசிப்பு நெருக்கடி என்பது கல்வியியலில், உளவியல், சமூகவியல் தொடர்பாடற் கற்கை ஆகிய புலன்களில் ஓர் எழுபொருளாக முன்வைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

மாணவரின் அறிவுக் கிரகிப்பும், உள்வாங்கலும், அடைவுகளும் மட்டுமன்றிக் கூட்டுமொத்த ஆளுமை வளர்ச்சியும், தலைமைத்துவ வளர்ச்சியும் வாசிப்பு ஆற்றலுடனேயே தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

ஒரு பிள்ளையின் வாசிக்கும் ஆற்றலில் உடற்காரணிகள், உளக்காரணிகள், மனவெழுச்சிக் காரணிகள், சுற்றாடற் காரணிகள் என்பன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உடற்காரணிகளாக உச்சரிப்பு, கேட்டல், பார்த்தல், தொடர்பான உறுப்புக்கள் கருதப்படுகின்றன. இவ் உறுப்புக்கள் நன்றாகச் செயற்படும்போது வாசிப்பைக் கற்பது இலகுவாகும். உளக்காரணியாக நுண்மதி குறிப்பிடப்படுகின்றது. சொற்களஞ்சியத்திறனை நுண்மதியின் ஒரு காரணியாக உளவியலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். பிள்ளையின் கற்றலின் தாக்கத்தை ஏற்படுத்தும் சுற்றாடல் காரணிகள் பலவும் வாசிப்பிலும் தாக்கத்தை உண்டாக்கும்.

வாசித்தல் என்பது உரத்த வாசிப்பு, மௌன வாசிப்பு, ஆற்றுகை வாசிப்பு என மூன்று பிரிவுகளாக்கப்பட்டுள்ளன. ஆரம்ப வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் அநேகமாக உரத்தவாசிப்பிற்கும் மேல் வகுப்புகளில் மௌன வாசிப்பிற்கும் முக்கிய மளிக்கப்படுகின்றது. செய்திகளைவாசித்தல், நிகழ்ச்சித் தொகுப்புகளை வாசித்தல், விளம்பரங்களை வாசித்தல் முதலியவை ஆற்றுகை வாசிப்புக்கு எடுத்துக்காட்டுக்கள் ஆகும். மாணவர்களுடைய வாசிப்பு ஈடுபாட்டை மேம்படுத்தவும், குதூகலத்தை ஏற்படுத்தவும் ஆற்றுகை வாசிப்புத் துணைசெய்யும்.

இத்தகைய வாசிப்புக்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிகழுகின்றது.

**1.பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல்**

- ✪தெளிவான உச்சரிப்பு, விளக்கம் ,குறிகள், ஒலிபேதங்கள் உயிர்க்குறிகள் என்ப வற்றை அனுசரித்து வாசிப்பர். மெய்ப்பாடுகளுடன் வாசிப்பர்.

**2. கிரகித்தலுக்காக வாசிப்பர்.**

- ✪ வெளிப்படுத்தலுக்காக உரத்து வாசிப்பர் (அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், துண்டுப் பிரசுரங்களை வாசிப்பர்).
- ✪ உள்வாங்கலுக்காக மௌனமாக வாசிப்பர். உ+ம்: பல்வேறு மொழி வடிவங்கள்.
- ✪ வாசித்தவற்றை விமர்சித்துக் கிரகிப்பர்.

**3.சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பர்.**

- ✪ பரிச்சயமான சொற்கள், அறிமுகமான சொற்கள், புதிய சொற்கள் ஆகியவற்றை அவதானித்து வாசிப்பர்.
- ✪ ஏனைய பாடவிடயங்கள் மூலம் சொல்வளம் பெறுவதற்காக வாசிப்பர்.
- ✪ சொற்களின் சரியான பிரயோகத்தை அறிதலுக்காக வாசிப்பர்.

**4. இரசித்தலுக்காக வாசித்தல்.**

- ✪பலவகைப் பாடல்கள் செய்யுள்களை வாசிப்பர்.
- ✪கதைகள் நாடகங்கள போன்ற உரைப் பகுதிகளை வாசிப்பர்.
- ✪சித்திரக்கதைகள், கேலிச்சித்திரங்கள், விகடத் துணுக்கள் போன்றவற்றை வாசிப்பர்.

**5.கற்றலுக்காக வாசித்தல்**

- ✪ பாடநூல்களை வாசிப்பர்.
- ✪ துணை வாசிப்பு நூல்களை வாசிப்பர்.
- ✪ பொதுஅறிவு விருத்திக்கான பல வகை நூல்களை வாசிப்பர்.
- ✪ தகவல் பெறுவதற்காகத் தெரிவு செய்து வாசிப்பர்.

**6.வாசித்தலுக்காகக் கற்றல்.**

- ✪பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பர்.
- ✪கதைள், உரையாடல்கள்,நாடகங்களை வாசிப்பர்.
- ✪துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றை வாசிப்பர்.
- ✪ பாடல்கள், கவிதைகளை வாசிப்பர்.

இவ்வாறாக இந்நோக்கங்களில் எல்லாவற்றையும் நிறைவேற்றத்தக்க வகையில் மாணவர்களுக்கான வாசித்தல் தொடர்பான கலைத்திட்டம், செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

இன்றைய கல்விச்சூழலில் வாசிப்புப் பழக்கத்தின் குறைபாட்டிற்கான பல காரணிகள் பின்பற்றப்படுகின்றன. பாட அளவுகளில் மிகையான அழுத்தம், பரந்த வாசிப்பு இன்றியே தேர்வுகளில் அதிக புள்ளிகளைப் பெறக்கூடிய தாக இருத்தல், ஓய்வு நேரத்தில் கணிசமான பகுதியைத் தொலைகாட்சியில் தொலைத்தல், வாசிப்பை ஊக்குவிக்கும் முயற்சிகள் குறைவாக உள்ளமை ஆகிய காரணிகள் மத்தியில் வாசிப்பு நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் கல்வியில் வாசிப்பின் இன்றியமையாப் பண்பு இயங்கிக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் நூலகங்களின் பயன்பாடு



செல்வி. திபாஜினி நாகலிங்கம்,
ஆசிரிய நூலகர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

ஒரு நாட்டின் பாடசாலை மாணவர்களே அந்நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் ஆவர். அத்தகைய மாணவர்கள் கல்வியினூடாகச் சிறந்த மனிதவளமாக உருவாக்கப் படுகின்றார்கள். நாம் எமது வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடாத்துவதற்கு எமது சொந்த அறிவும், எம் முன்னோர்களது அனுபவங்களும், அவர்களுடைய கருத்துக்களும் எமக்கு நல்வழிகாட்டிகளாக அமைகின்றன. இன்றைய நவீன உலகில் ஒவ்வொருவரும் கல்வி அறிவை வளர்ப்பதற்குப் பல நூல்களைக் கற்பது அவசியமாக அமைகின்றது.

இன்று பாடசாலைகளில் மாணவர்களிடையே காணப்படவேண்டிய பண்புகளில் ஒன்றாக நூல்களை வாசித்தலும், வாசித்த நூல்களிலிருந்து விடயங்களைத் தேடிப் பெறுதலும் என்ற இரண்டு விடயங்களும் அடங்குகின்றன. மாணவர்கள் நாளாந்தம் உலகில் நடைபெறும் விடயங்களை உடனுக்குடன் அறிவதற்குப் பத்திரிகைகள் உதவுகின்றன. இன்றைய விஞ்ஞான உலகில் இன்ரநெற், கணினி எனப் பல தகவல் ஊடகங்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் நூலகங்கள் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. விடயங்களைத் தேடிப்பெறுதல், வாசித்தல் என்ற முறைகளிற் பாடசாலைகளில் மாணவர்களுக்குப் பெரிதும் உதவுவது நூல்நிலையங்களே ஆகும்.

இன்றைய நவீன உலகில் மாணவர்கள் தமது கற்றலுக்கான தகவல்களை வெறுமனே பாடநூல்களின் (Text Book) வாயிலாகப் பெற்றுக்கொள்ளமுடியாது. மாணவர்களின் அறிவுப்பசிக்குப் பாடநூல்கள் மட்டும் போதிய உணவை அளிக்கப் போவதில்லை. பாடசாலை நூலகங்களில் உள்ள நூல்கள்தான் அதற்குத் தகுந்த உணவாக அமைகின்றன. அதனாலே தான் கல்வி அமைச்சுப் பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் நூலகங்களை நிறுவிப் போதிய அளவு நூல்களையும் தளபாடங்களையும் வழங்கிவருகின்றது.

நூல் நிலையத்திற் சிறந்த முறையில் வாசிப்பு நிகழ்வதற்கு அமைதியான சூழல், சிறந்த மனஒடுக்கம், பொறுமை, என்பன அவசியமானவை. அங்கு மன ஒருமைப் பாட்டைக் குலைக்கும் வானொலி, தொலைக் காட்சி, தொலைபேசி போன்றவை இல்லாது இருத்தல்வேண்டும். இவ்வாறாக வாசிப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்த சூழல் எவ்வாறு அவசியமோ அதேபோன்று அங்கு நூல்களை வாசிப்பவர் களும் சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது வாசிப்பதில் ஆர்வம், பொறுமை உடையர்களாகவும் அருகில் உள்ள வர்களைக் குழப்பாது அமைதியாக வாசிப்ப வராகவும் நூலகத்தின் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

பாடசாலைகளில் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை படிப்படியாக விரிவாக்கு வதன் மூலம், மாணவர்கள் பல்வேறுதுறை களிலும் நூல்களை ஆர்வத்தோடு வாசிக்கப் பழகும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வர். வாசிப்பதன்மூலம் சிறந்த மொழியறிவு, எழுத்தாற்றல், மொழியின் நுணுக்கங்களை அறிந்து அவற்றைத் தமது ஆக்கங்களிற் பயன்படுத்தும் ஆற்றல், சிந்தனைக் கிளர்ச்சி, சுய கற்றலுக்கு ஊக்கமளித்தல் போன்ற பல இன்னோரன்ன பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அந்த வகையில் மொழித்தேர்ச்சிக்கு வாசிப்பு மிகவும் இன்றிமையாததாக அமைகின் றது. வாசித்தல் என்பது வரிவடிவத்தை அறிதல், ஒலித்தல், பொருள் உணர்தல் ஆகிய மூன்று கூறுகள் அடங்கிய செயலாக அமைகின்றது. பொருள் உணர்வதற்கு தொடர்ச்சியான வாசிப்புப் பயிற்சி அவசியம். நூல்களை வாசிப்பதனால் ஏற்படுகின்ற சிந்தனைப்பாங்கு வாழ்வில் எதனையும் எதிர்கொள்ளும் வல்லமை யைக் கொடுக்கின்றது.

இன்றைய கல்வித்திட்டத்தில் தேடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக் கின்றது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆசிரியர்களால் எல்லாப்பாடங்களுக்கும் ஒப்படைகள் வழங்கப்படுகின்றன. தனியாள் செயற்றிட்டம், குழுச் செயற்றிட்டம் எனப் பல தொடர் மதிப்பீட்டு ஒப்படைகள் வழங்கப்படுகின் றன. அவற்றை மாணவர்கள் சுயதேடலின் மூலம் ஆய்வுசெய்து வாசித்து அறிவதற்குப் பல்வேறு நூல்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. அவற்றைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்படாது சிந்தனைக்கிளறலுடன் வாசித்துத் தேடிப் பெற்றுக்கொள்ளப் பாடசாலை நூலகங்களிற் காணப்படும் நூல்கள் மாணவர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன.

நூல் நிலையத்தைப் பயன்படுத்திப் பல்வேறு நூல்களை வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்வது இளஞ்சந்ததியினரின் தலையாய கடமையாகும். நூல்களை வாசிப்பதனால் நாம் விரும்பிய அறிஞர்களுடன் தொடர்பு கொள்ளலாம். சுயதேடல் மூலம் நாம் பெற்ற கல்வியே எமது எதிர்கால வாழ்விற்கு நல் வழிகாட்டியாக அமையும். அதிக நூல்களை வாசித்து சிந்தனையை விரிவுபெறச் செய்பவனே முழு மனிதனாவான்.

எனவே நூலகங்களின் முக்கியத்து வத்தையும், அவற்றின் பயன்பாட்டையும் நாம் ஒவ்வொருவரும் அறிந்து பாடசாலைகளிற் காணப்படும் நூலக வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தி எமது அறிவை வளர்த்துக் கொள்வோமாக.

*"வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்"*
*"தண்டிக்காமல் கற்பிக்கும் ஆசான் நல்ல நூல்நிலையங்களே"*
*"நல்ல நூல் நிலையமே நமக்குச் சிறந்த நண்பன்"*
*"நல்ல புத்தகம் இன்றும் என்றும் மாறா நண்பனே"*

உங்கள் உள்ளம் உயர்ந்து இருந்தால், உங்கள் உயர்வை யாரும் தடைசெய்ய முடியாது.

—பொன்மொழி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நல்லாசிரியருக்கு இருக்கவேண்டிய பண்புகள்



செல்வி.ம.ஜெயகவிதா,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

உலகளாவிய ரீதியில் நாம் எந்தவொரு துறையை எடுத்து நோக்கினாலும் அந்தந்த துறைகளுக்கு உரித்தான சில பண்புகள் காணப்படுவதை நாம் காணலாம். அந்த வகையில் 'குரு' எனப்பட்டவர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள் என இந்த உலகமே போற்றுகின்ற அளவுக்கு மேன்மையுடைய ஆசிரியத்துறையில், நல்லாசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றி நோக்குவோம்.

அதாவது ஓர் ஆசிரியர் இப்படித்தான் இருப்பவர் என்ற இலக்கணம் இருத்தல் வேண்டும். குறிப்பாக தமது நடை, உடை, பாவனைகளில் அத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். முதலில் ஆசிரியர் வகுப்பறைக்கு கற்பிக்கச் செல்கின்றவேளை அவ் வகுப்பறைக்கு சூழலையும் மாணவர்களையும் கற்பிப்பதற்கு ஏதுவான சூழல் பொருத்தப்பாட்டையும் உற்று நோக்கி அதற்கேற்றவாறு அமைத்து செயற்படவேண்டும். ஆசிரியர்களுக்கு மிகவும் முக்கியமான நேர முகாமைத்துவத்தைப் பேணவேண்டும். அதாவது பாடசாலைக்கு நேரத்தோடு செல்லவேண்டும். அந்தந்த நேரத்திற்குரிய பாடங்களை ஒழுங்காக செயற்படுத்தவேண்டும்.

ஆசிரியருக்கு கடுமையான உழைப்பில் அக்கறை இருந்தாலும் மாணவர்கள் மீது அன்பு காட்டும் பக்குவம் இல்லையானால் அவர்கள் மேற்கொண்ட கற்பித்தல் செயற்பாடு பிரயோசனமற்றதாகிவிடும். ஆகவே ஆசிரியர்கள் எப்பொழுதும் கனிவுள்ளவர்ளாகவும், புன்சிரிப்புடனும், இதமான வார்த்தையுடனும் பழகுதல் வேண்டும். மாணவர்கள் மீது கட்டுப்பாடுகளை பிரயோகிக்கலாம் என்று நினைக்கக் கூடாது. ஏனெனில் மாணவர்கள் பயப்படவும், பாடசாலைக்குச் செல்ல விருப்பம் அற்றவர்களாக இருப்பதற்கும் அதுவே வழிவகுத்து விடும். எனவே ஆசிரியர் கண்டிப்பானவராக, அதாவது ஒரு மாணவனுக்கும் ஆசிரியருக்குமிடையில் கைநீட்டும் அளவு தூரம் இடைவெளி இருக்கத்தான் வேண்டும். அதற்காக அற்ப விடயங்களுக்குக் கூடக் கோபப்படாமல் உணர்ச்சி வசப்படாமல் நியாயமாகவும், நம்பிக்கைக்குரியவராகவும் நிதானமாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

அடுத்து மாணவர்கள் ஒவ்வொருவரினதும் உணர்வுகள், அபிலாசைகள், மனநிலை என்பவற்றைப் புரிந்துகொண்டு ஆசிரியர்கள் குழந்தைகளாகவே மாறி இவர்களோடு சரிசமமாக நின்று ஆடிப்பாடி விளையாடி அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான செயற்பாட்டு முறையைத்தான் மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றார்கள். ஏனென்றால் நீண்ட கற்பித்தலின் போது அவர்களுக்கு ஏற்படும் சலிப்புத்தன்மை, சோம்பல் போன்றவற்றை நீக்கி இச்செயற்பாடுகளில் ஈடுபடவைப்பதன்மூலம் மாணவர்களை சந்தோசப்படுத்தினால் அந்நிலையில் அவர்களுக்கு உருவாகும் அந்த நிர்மலமான தூய்மையான உள்ளத்தில் கற்பித்தல் செயற்பாட்டை இலகுவாக கிரகித்து உணர்ந்துகொள்ள வழி வகுக்கும்.

மாணவர்களை ஒரே மாதிரியாக நடத்தல் வேண்டும். அதாவது தமக்குப் பிடித்தமான மாணவர்கள் என்று யாரையும் கொண்டிருக்கக் கூடாது. மேலும் ஏழைகளையும் பணக்காரர்களையும் பிரித்துப் பார்க்கக்கூடாது. புத்திசாலி மாணவர்களை அறிவில்லாத மாணவர்களிடமிருந்து வேறுபடுத்தக்கூடாது. இவ்வாறு செயற்படுத்துவதன்மூலம் மாணவர்களிடம் ஏற்படுகின்ற உளத்தாக்கம், தாழ்வு மனப்பாங்கு எந்தவொரு நிகழ்ச்சியின்போதும் பின் நின்று ஒதுங்கும்நிலை போன்றவற்றிலிருந்து விடுவித்து அவர்களிடையே நட்புடைமையை ஏற்படுத்தி ஆசிரியர்களும் நட்புடையவர்களாக உறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்கின்றவேளை தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை மறந்து திறந்த மனதுடன் தூய்மையான உள்ளத்துடனும் மாணவர்களுக்குக் கற்பிப்பது மட்டுமல்லாது மாணவர்களின் கருத்துக்களை செவிமடுப்பவராகவும், விளங்கிக் கொள்பராகவும் அவர்களிடமிருந்து கற்பவராகவும், இருப்பதே தவிர மாணவர்களை துன்புறுத்துபவராகவும், வகுப்பறையில் தூங்குபவராகவும் இருத்தல் கூடாது. அத்துடன் ஒவ்வொரு மாணவரினதும் தேவைகளைப் புரிந்து கொண்டு மாணவர்களிடையே செயன்முறை செயற்பாடுகளை மேற்கொண்டு அவர்களை அதில் ஈடுபட வைத்து அவர்களை சுயமாக சிந்திப்பவர்களாக ஆக்குவதற்கும் வழிவகுக்க தெரிந்தவர்களாகவும் இருப்பதுடன் செயலிலும் கற்பித்து ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் மிகச்சிறப்பான செயலாற்றலை வெளிக்கொணர்பவராகவும் இருத்தல்வேண்டும். ஏனெனில் எதிர்காலத்திற்கான விடைகளை ஒருவன் தனது மாணவப் பருவத்திலேதான் பெற்றுக் கொள்கின்றான்.

எனவேதான் ஆசிரியர் பாடங்களைப் போதிப்பவர் மட்டுமல்லாது அதற்கு மேலாக பொறுமையுடன் செயற்பட்டுப் பலவற்றை சேகரித்து, புதிய நுட்பமுறைகளைக் கையாண்டு மாணவர்களைக் கவரச்செய்கின்ற அளவிற்கு கற்பித்தல் செயற்பாட்டில் தமது பாவனை முறைகளை வெளிப்படுத்தி புதிய கருத்துக்களை தெரியப்படுத்துபவராகவும் அவர்களது சந்தேகங்களை விளக்குபவராகவும் இருப்பதுடன் மாணவர்கள் சிந்திப்பதற்கும் வினாக்களுக்கு சுயமாகவே விடையைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவுபவராக இருத்தல் வேண்டும். அத்துடன் மாணவர்கள் எப்பொழுதும் எங்கே கால் வைக்கிறார்கள் என்பதனை அவதானித்து தவறவிடும்பொழுதெல்லாம் அவர்களைத் திருத்தி அவர்களின் சூழ்நிலையை அறிந்து இதற்கேற்றவாறு தாயாக, தந்தையாக, நண்பனாக, தெய்வமாக தமது பாவனை முறையை இடத்துக்கிடம் மாற்றி செயற்பட்டு மாணவர்கள் தத்தமது இலக்குகளை அடைவதற்கு அவர்களைச் சரியான பாதையில் வழிநடத்துபவராக இருப்பதுடன் அவர்கள் உயர்நிலையை அடைய அவர்களுக்கு உதவுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் எப்பொழுதும் தங்கள் உயர்வுகளின் கட்டுப்பாட்டை இழந்துவிடக் கூடாது. மாணவர்கள் வாழ்க்கைப் பாதையைக் கடக்க ஆசிரியர்கள் ஒரு வழிகாட்டியாகத் திகழவேண்டும். ஏனென்றால் மாணவர்கள் யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். ஆசிரியர் சொற்படிதான் நடப்பார்கள். அவர்கள் சொல் வதைத்தான் வாக்காக கொள்வார்கள். எனவே தான் மாணவர்கள் பெரியவர்களாக வந்தும் கூட அவர்கள் ஆசிரியர்களை மறந்துவிடாமல் இருக்கும் அளவிற்கு நல்லவர்களாக இருக்க வேண்டுமே தவிர ஆசிரியர்கள் தமக்குள்ளே இருக்கின்ற கெட்ட குணங்களை மாணவர்கள் முன்னிலையில் எச்சந்தர்ப்பத்திலும் வெளிப் படுத்தக்கூடாது.

குறிப்பாக ஆசிரியர்கள் தமக்குரிய கடமைகளை அந்தந்த வேளையில் நிறைவேற்று பவராக இருத்தல் வேண்டும். அதாவது அந்தந்த தவணைக்குரிய பாடங்களை கற்பித்து அதற்குரிய பாடக்கலைத்திட்ட செயற்பாட்டு முறையை எழுதி முடித்து அவ்வறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும். வகுப்பறைக்கு கற்பிக்கச் செல்கின்ற வேளை தம்மைத் தயார் நிலைக் குட்படுத்திச் செல்லவேண்டும். மாணவர்களது செயற்பாடுகளில் காரணங்களை அறிந்து கொள்பவராக இருப்பதுடன் தொடர்பாடல் திறனை விருத்தி செய்யவேண்டும். அதாவது மாணவர்களின் சூழ்நிலை பற்றிய பிரச்சினை களைப் பெற்றோர்களுடன் கலந்தாலோசித்து அதற்கேற்றவாறு அவர்களை செயற்படுத்த அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மொத்தத்தில் ஆசிரியர் களை மாணவர்கள் பின் பற்றி நடக்கும் அளவிற்கு நல்லவர்களாக அதாவது முன் மாதிரியானத் திகழ வேண்டும்.

நீ எந்த அளவிற்கு இறைவனை நாடுகிறாயோ அந்த அளவிற்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப் போகும். நீ செய்ய வேண்டியதை முழுமனதோடு செய்து விட்டுப் பயனை இறைவனிடம் விட்டுவிடு.

யாரேனும் குறைகூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைமட்டக் கலைத்திட்டமும் அபிவிருத்தியும்



திருமதி . தேவராஜா ஜெனிஸ்மலசோதி,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

கலைத்திட்டம் என்பது ஒரு கல்வி நிறுவனத்திற் கற்பிக்கப்படும் பாடத்தொகுதி எனச் சம்பிரதாய ரீதியாகக் கருதப்பட்டது. பண்டைய காலத்தில் கலைத்திட்ட அபிவிருத்தி செயல்கள் சாஸ்திர ரீதியாக அமையவில்லை. ஆனால், பிற்பட்ட காலத்தில் கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பயனாக நோக்கங்களுக்கும், இலக்குகளுக்கும் ஏற்ப அறிவுத் தொகுதியிலிருந்து பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து கற்பவர்களுக்கு வழங்கி மதிப்பீடு செய்யும் வரையுள்ள சகல செயல்களையும் கலைத்திட்ட அபிவிருத்தி அடக்கியுள்ளது.

கலைத்திட்டத்துறையிற் கடந்த நான்கு தசாப்தங்களாகப் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அம்மாற்றங்களின் விளைவாகக் கலைத்திட்ட அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டு அதற்கு அனுசரணையாகக் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரி உருவானது. இதனை உருவக்குறிப்பு தயாரிக்கப்பட்ட ஓர் உருவப்படிமுறை அமைப்பு, ஒரு திட்டம், ஒழுங்குமுறை எனவும் பெயரிடலாம். இத்தகையதான கலைத்திட்ட அபிவிருத்தியிலே இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இடைநிலைப் பாடசாலை மட்டத்திலே பயன்படுத்தப்படும் கலைதிட்டமானது அதனை அபிவிருத்தி செய்வதிற் கலைத்திட்ட அபிவிருத்திக் கோட்பாடுகள் எவ்வளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றி நோக்குவோம்.

கலைத்திட்டம் திட்டமிடுவோர் கலைத் திட்டத் திட்டமிடலின்போது பயன்படுத்தும் பல கோட்பாடுகள் உள்ளன. அவ்வாறு பயன்படுத்தப்படும் சில கோட்பாடுகள் தொடர்பாகக் கலைத்திட்டம்; திட்டமிடலின் கலைத்திட்டம் தயாரித்தலின் முக்கியத்துவம்பெறும் நான்கு கோட்பாடுகள் சீதாராமு என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையிலே இடைநிலைப் பாடசாலைமட்டக் கலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதில் கல்வி இலக்குகளுக்கு அமைவாக கலைத்திட்டத்தைத் தயார்செய்தல் மிகவும் பயன்பாடுடையதாகும். கலைத்திட்ட அபிவிருத்திச் செயன்முறை மிகச் சிக்கலான ஒன்று என்பது "டாபா" என்பவரது கருத்தாகும். பாடசாலையின் பொது இலக்குகள் கற்பித்தலுக்கான சிறப்பு நோக்கங்கள், கற்பிக்க வேண்டிய பாடங்கள், மாணவர்களுக்கு வழங்கவேண்டிய அனுபவங்கள், மதிப்பீடு ஆகிய பல்வேறு விடயங்கள் தொடர்பான பல தீர்மானங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கவேண்டி ஏற்படுகின்றமையால் கலைத்திட்ட அபிவிருத்தியானது ஒரு சிக்கலான பணியாக மாறியுள்ளது.

கலைத்திட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்யும்போது இலக்குகளும், நோக்கங்களும் காட்டப்படல் வேண்டும். உள்ளடக்கம் தெரிவு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். கற்றல், கற்பித்தல் கோலம் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அதன் மதிப்பீடும் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமான தொன்றாகும். மாணவரில் ஆதிக்கம் செலுத்தும் வகையிற் பாடசாலையில் நடைமுறையிலுள்ள சகலகருமங்களும் கலைத்திட்டமாகக் கருதப் படும். பாடசாலையின் பாடசாலைக் கற்பித்தல், வகுப்பறைக் கற்பித்தலை அடிப்படையாகக் கொண்ட முறைமையான கற்பித்தல் பாடசாலையில் மாணவர்களுக்கான சங்கங்கள், கழகங்கள், விளையாட்டுவிழாக்கள் போன்றவை அடங்கிய பாட இணைச்செயற்பாடுகள் மாணவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துகின்ற பாடசாலையின் சட்ட திட்டங்கள், வழமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியவை பாடசாலையின் பண்பாட்டுக் கோலங்கள் ஆகும்.

கலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்யும்போது கல்வி எந்தளவுக்குப் பயன்படுத்தப் படவேண்டும்? பாடசாலைச் சூழலில் கல்வி எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக மாணவர் – ஆசிரியர் பாடவிடயங்கள் ஆகியவற்றுக் கிடையே நிலவும் இடைத்தொடர்பு கலைத் திட்டத்தினுள்ளடங்கும். எனவே, ஆசிரியர், மாணவர் இடையே இடைத்தொழிற்பாட்டை உருவாக்கும் பொறுப்பும் கலைத்திட்டத்தையே சாருகின்றது.

அடுத்து இடைநிலைப்பாடசாலை மட்டக் கலைத்திட்டத்தினைத் தெரிவு செய்யும்போது, மாணவர்களது தேவைகள், விருப்பங்கள், அவர்களது ஆற்றல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவேண்டும். பாடசாலையிற் கல்வி கற்கும் பிள்ளைகள் தமது முதிர்ச்சி நிலைக்கும், தாம் வாழும் சூழலுக்கும் அமைய வெவ்வேறு பரப்புக்களைச் சேர்ந்த அறிவைப்பெற விரும்புகின்றனர். அதற்கான வழிகாட்டலை எதிர்பார்க்கின்றனர். எனவே பாடசாலை மாணவர்களுக்காகத் தயாரிக்கப் படும் கலைத்திட்டத்தில் அவர்கட்குப் பொருத்தமான வெவ்வேறு அறிவுக் கூறுகளும் அவற்றைப் பெறக்கூடிய வெவ்வேறு முறைகளும் முன் வைக்கப்படவேண்டியது அவசியமா கின்றது.

மேற்கூறப்பட்டவை தொடர்பாகக் கவனம் செலுத்தாமையினாற் பாடசாலைக் கலைத்திட்டத்தை மாணவர்கள் வெறுக்கும் நிலை உருவாகின்றமையினைக் காண முடிகிறது. வகுப்பில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு வகையான அறிவையும், அனுபவங்களையும் தொழிற்பாடுகளையும் வழங்கமுயற்சிக்கும் கலைத்திட்டம் காரணமாக மாணவர் சித்திபெற இடைவிலகல், ஒரே வகுப்பில் மீண்டும் மீண்டும் தங்கியிருத்தல் போன்ற துர்விளைவுகள் ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. எனவே கலைத்திட்டம் ஒன்றைத் தயார் செய்கையில் மாணவர்களது தேவைகள், விருப்பங்கள், ஆற்றல்கள் தொடர் பாகக் கவனம் செலுத்துவதால் அவர்களிடம் இருந்து அதிகளவிலான மாற்றங்களையும் பயன்பாடுகளையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

அடுத்து கலைத்திட்டத்தை அபிவி ருத்திசெய்யும்போது சமுதாயத்தின் தேவைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் பயன்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய ஒன்றாகும். பாடசாலைக்கும், சமூகத்துக்கும் இடையில் நிலவும் தொடர்பை உறுதிப் படுத்தும் ஒரு சங்கிலியாகக் கலைத்திட்டத்தை அறிமுகம் செய்யலாம். சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழுகின்ற ஒரு பொதுச்சமூகமுறையைச் சேர்ந்த சிறுவர், வளர்ந்தோர் சமூகமயமாக்கலுக்குட்டப்பட்ட அல்லது உட்படாத சகலரையும் குறிக்கும் கல்வி முறை, சமூகத்திலிருந்து உருப்பெறுகின்றது. .அது சமூகத்தினுள் செயற்படுத்தப்படுவதுடன் சமூகத்தின் இயல்புக்கு ஏற்ப அதன் நோக்கமும் கலைத்திட்டமும் நிச்சயிக்கப்படுகின்றன. சமுதாயத்தின் அங்கத்தவர்களாவதற்கு ஆயத்தப்படுத்தும் பணியில் பிரதான இடம் கல்வியைச் சார்ந்தாகும்.

பாடசாலைக்குள்ளும், வெளியிலும் மாணவர் பெறும் அனுபவங்களுக்கிடையில் ஓர் ஒத்த தன்மை இருக்கவேண்டும். இக்கலைத் திட்ட நடைமுறைகளை மேற்கொள்வதனால் இவ்விரண்டிற்கும் இடையே தொடர்புகளைப் பயன்படுத்தி அதிகளவான பயன்பாடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் தேவைகள் இருவகைப்படும். உயிரியற் தேவைகள், உளத் தேவைகள் என்பனவே அவையாகும். வளி ,நீர், உணவு, வெதுவெதுப்பு, ஓய்வு, உடற்பயிற்சி ,கழிவகற்றல் போன்றவை உயிரியற் தேவை களாகும். காப்பு, அன்பு, கணிப்பு, சுதந்திரம். பொறுப்பு, கௌரவம் போன்றவை உளத் தேவைகளாகும்.

இத்தேவைகளைத் தணித்துக் கொள்ள ஒவ்வொருவரும் முயற்சி செய்கின் றனர். இத்தேவைகள் தவிர்ந்தவிடத்து ஒவ்வொரு சமூகத்திலும் அதன் அமைதியான நிலவுகைக்கு இன்றியமையாத சமூகத் தேவைகளும் உள்ளன. அபிவிருத்தி, பண்பாடு, பெறுமானங்கள், விழுமியங்கள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள். அமையங்கள் போன்றன இதிலடங்கும். எனவே இவற்றைக் கலைத்திட்ட உருவாக்கத்தில் இணைத்துக்கொள்வதனாற் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

தனியானதும், சமூகத்தினதும் தேவைகள் பரஸ்பரம் தொடர்புடையவை. கூட்டாகச் செயற்படுபவை. எனவே ஒவ்வொரு சமூகமும் தமது உயிரியல் தேவைகள், உளத் தேவைகள், சமூகத்தேவைகள் ஆகியவற்றை நிறைவுசெய்துகொள்ள முயற்சிக்கின்ற மையைக் காணமுடிகின்றது. கலைத்திட்ட அபிவிருத்தியின் போதும். தேவைகள் தொடர் பாகக் கவனம் செலுத்தப்படும் நிலையைக்காண முடிகிறது. கலைத்திட்டமானது தற்போது தேவைக்குப் பொருத்தமானதாயும் அத்தேவை களை நிறைவு செய்து உதவுவதாயும் இருப்பின் மட்டுமே கற்போர் அதனை விரும்புவர். கற்போர் அதை விரும்பினால் மாத்திரமே அதனை நன்கு நடைமுறைப்படுத்தமுடியும். எனவே கலைத் திட்டமானது சனத்தொகையினதும் அது நடைமுறைப்படுத்தும் சமூகத்தினதும் தேவை களைக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும் என்பது முக்கிமான தேவையாகும்.

கலைத்திட்டத்தின் பயன்பாடுகளைப் பற்றி ஆராயும்போது, கலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதில் இதுவும் அதிகளவிற் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. மனிதன் இடையறாது இயற்கைச் சூழல் பௌதிகச் சூழல் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்து அறிவுத்திறன்கள், மனப்பாங்குகள் ஆகியவற்றை வளர்த்து வருகின்றான். அவன் பெறும் அறிவும், திறன்களும், மனப்பாங்குகளும் அவனுக்கும் சமுகத்திற்கும் பயன்படும் அளவுக்கு அமைய அவை பொருளுடையவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கருதப்படுகின்றது. கலைத்திட்டத்தி னூடாக வழங்க முயற்சிக்கப்படுபவற்றின் மூலம் தனியாளுக்கும் சமூகத்திற்கும் உகப்பான அறிவும், மனப்பாங்குகளும், திறன்களும் கிடைக் கப்பெறின் அக்கலைத்திட்டம் பொருளுடைய தாகின்றது. கலைத்திட்டம் பொருளுடைய தாயின் பயன்பாடு பற்றிய கொள்கை அதில் அடங்குகின்றது. எனவே யாரேனும் பருவத்துக் காகவோ, தரத்துக்காகவோ தயாரிக்கப்படும் கலைதிட்டத்தில் அப்பருவத்திலே, தரத்திலே தனியாளுக்கோ கட்டாயமாக வழங்கவேண்டிய அளவுக்கும் அத்தனியாளினால் உள்வாங்கக் கூடிய அளவுக்கும் அறிவு மனப்பாங்குகள் திறன்கள் ஆகியவற்றை வழங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறாக வழங்கப்படும் அறிவு மனப்பாங்குகளும், திறன்களும் அவனுக்கும் சமூகத்திற்கும் நன்மை பயப்பனவாக அமைதல் வேண்டும். தனியாளுக்கும், சமூகத்திற்கும் நன்மைபயக்கக் கூடியதும், பயனளிக்கக் கூடியதுமான அறிவையும், மனப்பாங்கு களையும், திறன்களையும் வழங்கக்கூடிய அனுபவங்களும் கலைத்திட்டத்திலே பயன்படுத் தப்படுகின்றன.

இவ்வாறாகக் கலைத்திட்ட அபிவிருத் திக் கொள்கையில் கூறப்பட்ட நான்கு கோட்பாடுகளும் அதிகளவில் தற்காலக் கல்விப் பயன்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் காணக்கூடியதாயுள்ளது.

### பழங்களும் அதன் பிறப்பிடங்களும்

| | | | |
|---|---|---|---|
| ☞ | திராட்சை | - | கஸ்பியன் கடல்பகுதி |
| ☞ | அன்னாசி | - | பிரேசில் |
| ☞ | வாழை | - | தென்கிழக்கு ஆசியா |
| ☞ | கொய்யா | - | மத்திய அமெரிக்கா |
| ☞ | பப்பாளி | - | மெக்சிக்கோ |
| ☞ | முந்திரிகை | - | பிரேசில் |
| ☞ | மாம்பழம் | - | தென்கிழக்கு ஆசியா |
| ☞ | பலாப்பழம் | - | இந்தியா |
| ☞ | தோடம்பழம் | - | சீனா |
| ☞ | நெல்லி | - | இந்தியா |
| ☞ | எலுமிச்சை | - | இந்தியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில் நுட்பத்தின் இணையம்



செல்வி சி.சிவலோஜினி,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

தொழில்நுட்ப வளர்ச்சி இந்த நூற்றாண்டைப் போன்று என்றும் இருந்தது கிடையாது. நவீன யுகத்தில் நாம் மற்றுமொரு வியக்கத்தக்க கண்டுபிடிப்பின் மூலம் உலகை ஒரு குறுகிய கிராமத்தைப் போன்று உணருகின்றோம். அதுதான் இணையம். தகவல் யுகத்தின் வளர்ச்சியின் புதிய மைல்கல்.

**இணையம் என்பது என்ன?**

கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதனை (NET WORK) (வலை) எனப்படுகின்றது. இந்த (NET WORK) ஒவ்வொன்றையும் இன்னொரு Net work வலை உடன் இணைக்கும் போது Internetரைப் பெறுகின்றோம். பொதுவாக இதனை Network of Networks எனப்படுகின்றது. உலகத்தில் உள்ள மில்லியன் கணக்கான கணினிகள் இவ்வாறு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுகின்றன.

**இதனால் எமக்கு ஏற்படும் நன்மைகள் என்ன?**

இவ்வாறு இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கணினியிலும் பல்வேறு வகையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது. உலகில் உள்ள ஒருவர் எந்தொரு தகவல்களை அறிந்து கொள்ளவேண்டுமாயினும் அத்தகவல் இருக்கும் விலாசம் தெரிந்தால் இணையத்துடன் இணைத்து, அதனைத் தமது கணினியில் இருந்து பார்க்கலாம்.

**இணையத்தில் இருந்து தகவல் பெறுவதற்கு எமக்குத் தேவையானவை எவை?**

எமக்கு ஒரு கணினி தேவை. தொலைபேசி இணைப்பு அவசியம். தொலைபேசியையும் கணினியையும் இணைக்கும் மோடோம் (Modem) என்னும் உபகரணங்கள் தேவை, மேலே குறிப்பிட்டவை ஒரு சிறிய சாதரண தனிநபர் அலுவலகத்திற்குப் போதுமானதாகும்.

**எவ்வாறு இணைப்பைப் பெறலாம்?**

ஒரு நாட்டில் இன்டர்நெட் இணைப்பை வழங்குவதற்கு அந்நாட்டின் தொலைத்தொடர்பு அமைச்சில் பதிவுசெய்த நிறுவனங்கள் இருக்கின்றன. இந்நிறுவனங்கள் ISP (Internet Services Providers) என்று அழைக்கப்படுகின்றன. இந்நிறுவனங்கள் தனியார் அல்லது அரசுசார்ந்த நிறுவனங்களாக இருக்கலாம். தனியார் அல்லது அரசுசார்ந்த நிறுவனங்களாக இருக்கலாம். இலங்கையில் தனியார் நிறுவனங்கள் இன்டர்நெட் சேவையை வழங்குகின்றன. Lanka internet, Ceycom, Ltmin, Pan lanka, Srilanka telecom இன்டர் நெட்டில் தகவலைப் பெறவோ, பரிமாறவோ பின்வரும் வழிமுறைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WWW (World wide Web)
- Ftp (File Tranfer Protocol)
- Telnet
- Gopher
- E Mail
- Archie

பிரசித்தி பெற்ற WWW (World wide web) 1990 உருவெடுத்தது. இன்ரநெட்டில் எவ்வகையான தகவல்கள் உள்ளன?

எண்ணிலடங்காத தகவல்களை நாம் இன்டர்நெட்டில் பெறலாம். பத்திரிகைகள், கல்வி சம்பந்தப்பட்ட தகவல்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் இன்டர்நெட் மூலம் தகவல்களை அறியமுடியும். FTP (File Transfer Prorocol) மிகப்பெரிய தகவல்களை ஒரேயடியாகப் பெறுவதற்குப் பயன்படுகின்றது. இதன்மூலம் பெறப்படும் தகவல்கள் எந்த வடிவங்களிலும் இருக்கலாம்.

மின் அஞ்சல் – E- Mail (electronic mail) இணையத்தின் ஒரு அங்கமாக (E-Mail) மாறிவிட்டது. பயனுள்ள தொடர்புசாதன முறையாகும். ஒரு கணினியில் இருந்து இணையத்தில் உள்ள எந்தவொரு கணினிக்கும் தகவலை அனுப்பவோ, பெறவோ உதவும் முறை E.Mail. E.Mail இல் குறிப்பிட்ட கணினியிற் பலர் தமது பிரத்தியேக (E.Mail Box) என்னும் அஞ்சல் பெட்டியை வைத்துக்கொள்ளலாம் என்பவை (Storagedisk) பொதுவாக (Hard Disk) ஒரு பகுதியாகும்.

ஒவ்வொரு தனிநபரும் E.Mail விலாசத்தைக் கொண்டிருக்கவேண்டும். யாரேனும் ஒருவர் கணினிமூலம் E.Mail அனுப்பும்போது, அவை எமது Mail Box இல் வந்து பதியப்படும். நாம் தேவையான Mail box ஐப் பரிசோதிப்பதன் மூலம் எமக்கு (Mail) வந்திருக்கிறதா என்பதை அறியலாம்.

தகவல் தொழில் நுட்பத்தின் பயன்களையும், நுட்பங்களையும் அறியவேண்டும். நாளுக்கு நாள் மாறிவரும் வேகத்தோடு நாமும் சேராவிட்டால் இந்நூற்றாண்டின் வியத்தகு முன்னேற்றங்களிற் பங்கேற்காத துர்அதிர்ஷ்டசாலிகளாகிவிடுவோம்.

### நாட்டின் தேசிய விளையாட்டுக்கள்

| | | | |
|---|---|---|---|
| ☞ | அவுஸ்திரேலியா | - | கிரிக்கட் |
| ☞ | இலங்கை | - | எல்லே / கரப்பந்தாட்டம் |
| ☞ | பாகிஸ்தான் | - | ஹொக்கி |
| ☞ | துருக்கி | - | மல்யுத்தம் |
| ☞ | ஜப்பான் | - | கராத்தே/ யூடோ |
| ☞ | ஸ்கொட்லாண்ட் | - | கால்பந்து |
| ☞ | கனடா | - | பனி ஹொக்கி |
| ☞ | இந்தியா | - | ஹொக்கி / கபடி |
| ☞ | ஐக்கிய அமெரிக்கா | - | பேஸ்போல் |
| ☞ | ஸ்பெயின் | - | ஜல்லிக்கட்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயக் கலைமகள் முன்பள்ளியின் தோற்றமும் வளர்ச்சியும்



செல்வி இ.பரம்சோதி
முதன்மை ஆசிரியர்,
கலைமகள் முன்பள்ளி

யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயக் கலைமகள் முன்பள்ளியின் தோற்றமானது, முன்னாள் அதிபர் செல்வி சி. கெங்காமலர்தேவி அவர்களும், பிரதி அதிபர் திரு.அ.இரத்தின சிங்கம் அவர்களும் திருமதி சி.நவரத்தினம் ஆசிரியர் அவர்களும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். அன்று அவர்கள் விதைத்த விதை இன்று பெரிய ஆலமரம்போல் விழுதுவிட்டு வளர்ந்திருக்கிறது என்று கூறினால் மிகை யாகாது.

1997 ஆம் ஆண்டு மீளக் குடியமர்வுக்கு வந்த மக்கள், தங்கள் சிறுவர்களை முன்பள்ளிக்கு விடமுடியாது அவதியுற்றனர். அந்நிலையில் அதிபரிடம் வந்து ஆலோசனை கேட்டனர். அதிபர் அவர்கள் முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி, திரு. அ. கமலநாதன் அவர்களிடம் அனுமதிபெற்று, இம்முன் பள்ளியை ஆரம்பித்து வைத்தார். 1997.03.05 ஆம் திகதி ஆரம்பித்த இம்முன்பள்ளிப் பாடசாலை, இன்றுவரை பாடசாலையின் ஒரு பகுதியாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இம் முன்பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களை எடுத்து நோக்குவோமாயின் முன்னாள் வலிகாம வலய முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. சிவநேசன் அவர்களும், தற்போதைய முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் திரு.S.குகனேசன் அவர்களும், சனசமூக உத்தியோகஸ்தர்களான திரு.S.தவநாயகம், திருM.ஞானவேல்ராஜா அவர்களும் ஆவர். இவர்கள் இம்முன்பள்ளிப் பதிவு இலக்கம் கிடைப்பதற்கு அரும்பாடுபட்ட வர்கள். இம் முன்பள்ளியின் பதிவு இலக்கங்கள் பின்வருமாறு

உள்ளூர் ஆட்சித் திணைக்களப் பதிவு இலக்கம் I/G/D/J/P.S/07/0416
வடக்கு கிழக்கு மாகாண சபைப் பதிவு இலக்கம் N.E.P/P.S/J/V/L/103 என்பன பதிவு இலக்கங்கள் ஆகும்.

முன்பள்ளியின் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்த ஏனைய பிரமுகர்களை எடுத்துநோக்குவோமாயின் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், முன்னாள் பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் அவர்களும், முன்னாள் இலங்கை வங்கி முகாமைபாளர், யாழ்ப்பாணம் திரு S.விக்கினராஜா அவர்களும், மல்லாகம் வடக்கு கிராம அலுவலகர், திரு மு.கலியுகவரதன் அவர்களும், நிறுவனங்களான சிறுவர் பாதுகாப்பு நிதியம் U.N.H.C.R, Forut போன்றவை முன்பள்ளியின் வளர்ச்சிக்குப் பணமாகவும் விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகரணங்களாகவும் தந்துதவி உள்ளார்கள். இவர்களுடன் தெல்லிப்பழை முன்பள்ளி பிரதேசத்தலைவர் திரு.S.செல்வநேசன் அவர்களும், இணைப்பாளர்களான திருமதி க. சந்திரவதனி, திருமதி S. செல்வறஞ்சனா அவர்களும் ஆவர். 1997 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கல்விபயிலும் முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

எமது முன்பள்ளியின் வளர்ச்சிக்கு அதிபர்களின் ஒத்துழைப்பு மிக முக்கிய காரணமாக விளங்கியது. அதிபர், செல்வி சி. கெங்காமலர்தேவி அவர்களைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டு அதிபராக இருந்த திரு.S.சிவானந்தராஜா அவர்களும் குறுகிய கால சேவையிலிருந்தாலும் எமது முன்பள்ளியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கினர். அவரைத் தொடர்ந்து அதிபராக வந்த திரு.M.ஆனந்தகுமார் அவர்கள் காலத்தில், முன்பள்ளியின் வளர்ச்சி மேலும் விருத்தியடைந்து வருகின்றது. ஆசிரியர்களின் வேதனம் முதல் சிறுவர்களின் கல்வி வரை விருத்தியடைந்து வருகிறது. சிறுவர்களுக்கு ஆங்கிலக்கல்வி அவசியம் என்ற பெரு நோக்குடன் ஆங்கில ஆசிரியரை நியமித்துள்ளார். இது மட்டுமல்லாது முன்பள்ளியில் நடைபெறும் நிகழ்வுகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகிறார். அதிபருடன் இணைந்து பிரதி அதிபர் திருமதி பா.தவக்குமார் அவர்களும் ஏனைய ஆசிரியர் குழாமும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம் முன்பள்ளியிற் கல்விபயிற்றுவிக்கும் ஆசிரியர்களை எடுத்து நோக்குவோமாயின் 1997 ஆம் ஆண்டு செல்வி வாசுகி துரைராஜா அவர்கள் முதன்மை ஆசிரியராகக் கடமையாற்றினார். 1998 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை செல்வி இளையதம்பி பரம்சோதி அவர்கள் முதன்மை ஆசிரியராகக் கடமைபுரிந்து வருகிறார். அவர்களுக்கு உதவி ஆசிரியராக 2000 ஆம் ஆண்டு செல்வி மகாலிங்கம் ஊர்மிளா அவர்களும், 2004 ஆம் ஆண்டு செல்வி மகாலிங்கம் கலைவாணி அவர்களும் 2005 ஆம் ஆண்டு செல்வி தர்மராஜா றங்கேஸ்வரியும் கடமைபுரிகின்றார்கள். தற்பொழுது செல்வி இளையதம்பி பரம்சோதி அவர்களும், செல்வி தர்மராஜா றங்கேஸ்வரியும், செல்வி மகாலிங்கம் ஊர்மிளா அவர்களும் கடமைபுரிகின்றனர். ஆங்கில ஆசிரியர்களாக 2006 ஆம் ஆண்டில் செல்வி சோமசுந்தரம் சத்தியா அவர்களும் 2007 ஆம் ஆண்டில் செல்வி S. ஜஜிதா அவர்களும் கடமை புரிகின்றனர்.

இம் முன்பள்ளி ஆரம்பித்த ஆண்டு தொடக்கம் இன்றுவரை விளையாட்டு விழா கலைவிழா, ஆசிரியர்தினவிழா, சிறுவர்தினம், முதியோர்தினம் ஆகியன கொண்டாடப்பட்டு வருகின்றன. இவற்றைவிடக் கண்காட்சி, பேச்சுத்திறன் போட்டி போன்றவற்றிலும் பிரதேச மட்டத்திற் பங்குகொள்கின்றனர். 2004 ஆம் ஆண்டு பிரதேச மட்டத்தில் நடந்த கண்காட்சியில் முதலாம் இடம் கிடைத்தது. விளையாட்டுப் போட்டியிலும் குடும்ப மட்டத்தில் மூன்றாம் இடமும், பிரதேச மட்டத்தில் முதலாம் இடம், இரண்டாம் இடம் ஒவ்வொன்று கிடைக்கப் பெற்றன. 2006 ஆம் ஆண்டு நடந்த பேச்சுத் திறன் போட்டியிற் செல்வன் பவானந்தன் நிவேதன் குடும்ப மட்டம், பிரதேச மட்டத்திலும் முதலாமிடத்தையும், 2007 ஆம் ஆண்டு செல்வி ஜெயக்குமார் விதுர்ஷிகா குடும்ப மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இடத்தையும் பெற்றனர், 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையான மாணவர்களின் புள்ளி விபரம் பின்வருமாறு:

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1997 | 13 | 12 | 25 |
| 1998 | 16 | 14 | 30 |
| 1999 | 15 | 18 | 33 |
| 2000 | 16 | 14 | 30 |
| 2001 | 18 | 19 | 37 |
| 2002 | 17 | 18 | 35 |
| 2003 | 20 | 19 | 39 |
| 2004 | 23 | 20 | 43 |
| 2005 | 23 | 22 | 45 |
| 2006 | 30 | 25 | 55 |
| 2007 | 30 | 20 | 50 |

யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் கலைமகள் முன்பள்ளியின் வரலாற்றினை மேலே கூறியிருந்தேன். முன்பள்ளி மாணவர்களுக்குரிய அனைத்து வசதிகளுடனும் எமது முன்பள்ளி இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயம் ஆகும். இதற்கு உறுதுணை வழங்கிவரும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

### பூர்வ குடியிருப்புக்களும் நாடுகளும்

- மரவீடு - பிலிப்பைன்ஸ்
- குகை - ஆபிரிக்கா
- புல்வீடு - ஹவாய்
- பனிக்கட்டி வீடு - கிறீன்லாந்து
- மூங்கில்வீடு - கலிபோர்னியா
- செங்கட்டி வீடு - சீனா
- பற்றை வீடு - அவுஸ்திரேலியா
- காகித வீடு - ஜப்பான்
- சுரங்க வீடு - சைபீரியா
- குடிசை வீடு - வட அமெரிக்கா
- மரக்குற்றி வீடு - நியூ கினியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கமும் கல்வியும்

திருமதி கிறேசிலின் மரீனா தவலிங்கம்,
ஆசிரியர்,
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.



மனித உருவாக்கத்திலும் ஆளுமை விருத்தியிலும் மனிதரின் நல்லொழுக்கம், நன்னடத்தை, நற்பண்புகள் என்பன மிகவும் முக்கியம் பெறுகின்றன. தற்காலத்திற் கல்வி யின் நிலை மேலோங்கிக் கொண்டு செல்ல மனிதப் பண்புகள் கீழ் நோக்கி அருகிப் போவதை நாம் காணலாம் குறிப்பாக இளம் சமூகத்தினரிட மிருந்து இப் பண்புகள் இல்லாமற் போவது மிகுந்த வேதனைக்குரியதாகவும் ஜீரணிக்க முடியாததாகவும் காணப்படுகின்றன. இன்று ஒழுக்கக்கேடுகள் என்னும் பாதாளத்தில் எமது மாணவ சமூகத்தினர் தவறி விழுந்து கொண்டிருக்கின்றனர். எனவே நாம் ஒன்றி ணைந்து கல்வி என்னும் பாலத்தால் மாணவ சமூகத்தை நல்வழியிற் செல்ல வழி வகுக்க வேண்டும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி, சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் மனிதப் பண்புடைய வராக வாழவேண்டியது மிகவும் அவசிமானது. கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடைய வனாகவும் நற்குடிமகனாகவும் உருவாக்கும்.

கல்வியும் ஒழுக்கமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது என்பதனைத் திருவள்ளுவர் பின்வரும் குறளினூடாக எடுத்துக் கூறியுள்ளார்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்" அதாவது இடம், சமயம் இவைகளுக்குத் தக்கவாறு நடந்து கொள்ளாதவர் பல சாஸ்திரங்களைக் கற்றாலும் அறிவாளிகளாக மாட்டார்கள்.

நல்லொழுக்கம், பணிவு, நன்னடத்தை போன்ற நற்பண்புகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும். கல்வியினூடாக ஒழுக்கம், பணிவு, கட்டுபாடு, அகிம்சை, ஈகை, இன்சொல், தியாகம் போன்ற பண்புகளிற் கற்றல் முக்கியமானது. கல்வியென்னும் பேராற்றலின் ஒரு கிளையே ஒழுக்கம். கல்வியினின்றும் பிரிக்கமுடியாத பெறுமதியும், பெறுமானமும் பெருமதிப்பும் கொண்ட இந்நல் மனிதப் பண்புகளையும், வாழ்க்கை விழுமியங்களையும் இன்றைய காலத்தில் உதாசீனம் செய்வது பெரும் மனவருத்தத்துக்குரியதாகவுள்ளது.

இன்றைய மாணவச் செல்வங்களுக்கு அறநெறிச் சிந்தனைகள், அறநெறிப் போதனை கள் இன்றியமையாதன. கால நீரோட்டத்தில் இன்றைய தலைமுறையினர் தமது சமய கலாச்சார விழுமியங்களை அறியாது நிலை தடுமாறும் நிலை காணப்படுகின்றது. நாம் எமது முன்னோர்கள் அளித்த அறநெறிகளை வழுவாது கைக்கொண்டொழுகுதல் சாலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தது. கல்வியுடன் ஒழுக்க நெறிகளை வளர்க்கக் கல்விமான்கள், மானிடவியலாளர்கள், உளவியற் சிந்தனையாளர்கள், ஒலி, ஒளி பரப்புச் சேவை நிறுவனங்கள் முன்னின்று செயற்படுவது மிகவும் நன்று.

மேலும் மாணவர்களை நல்வழிப் படுத்துவதில் ஆசிரியர்களினதும், பெற்றோர் களினதும் பண்பே முக்கியமானது. சிறுபராயத்திற் பழகிய பழக்கம் நல்லதோ, கெட்டதோ சீவிய பரியந்தம் தொடரும். அதனால் இளமையிலே பிள்ளைகள் நற்பழக்க வழக்கத்தைப் பழகிக் கொள்ளவேண்டும். அதற்குப் பெற்றோர், ஆசிரியர், பெரியோர், பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டும். "வழிகாட்டுதல் என்றால் வாழ்ந்து காட்டுதல்" என்பது கருத்து எனலாம்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்கிறார் திருவள்ளுவர். தொகுத்து நோக்கின் சமூக– அரசியல்– பொருளாதார விருத்திக்கும், மனித விழுமியங்களை மதிக்கின்ற மனிதவளம் வேண்டும். இவ்வுலக வாழ்க்கையை ஒழுக்க நெறியில் வாழ்ந்தால், இன்பங்களைத் தரவல்லன என்பதை நாம் உணர்ந்து, நாளும் எம் வாழ்க்கையில் நல்ல பண்புகளைக் கடைப் பிடித்துதொழுகி நல்வாழ்வு வாழ்வோமாக.

## பெரும் பாலைநிலங்களும் நாடுகளும்

| பாலைவனம் | | நாடுகள் |
|---|---|---|
| ☞ சஹாரா | - | வட ஆபிரிக்கா |
| ☞ லிபியா | - | வட ஆபிரிக்கா |
| ☞ ஆஸ்திரேலியன் | - | ஆஸ்திரேலியா |
| ☞ விக்டோரியா | - | ஆஸ்திரேலியா |
| ☞ சிரியா | - | அரேபியா |
| ☞ அரேபியன் | - | அரேபியா |
| ☞ கோபி | - | மாங்கோலியா |
| ☞ ரூபால்காலி | - | அரேபியா |
| ☞ கலஹாரி | - | போத்ஸ்வானா |
| ☞ பெருமணல் | - | ஆஸ்திரேலியா |
| ☞ தக்ளா மக்கான் | - | சீனா |
| ☞ அருந்தா | - | ஆஸ்திரேலியா |
| ☞ கராகும் | - | தென் மேற்கு துருக்கிஸ்தான் |
| ☞ நுபியா | - | வட ஆபிரிக்கா |
| ☞ தார் | - | வடமேற்கு இந்தியா |
| ☞ கிஸில்கும் | - | மத்திய துருக்கிஸ்தான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசான்



த. சங்கவி
தரம் 1B

என் அறிவை வளர்த்த
என் அருமை ஆசான் அவர்
